தமிழ்நாடு சட்டப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2041 – ஐப்பசி 26

2010 நவம்பர் 12, வெள்ளிக்கிழமை

சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சட்டமன்றம்-தலைமைச் செயலக வளாகத்தில் உள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"ஒறுத்தாற்றும் பண்பினார் கண்ணுங் கண்ணோடிப்
பொறுத்தாற்றும் பண்பே தலை"

அழிக்க நினைத்திடும் இயல்புடையவரிடத்திலும் பொறுமை காட்டுவது மிக உயர்ந்த பண்பாகும்.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிடாத வினாக்கள்

(1 முதல் 7 வரை)@

பட்டியல் 1

1—

மகளிர் காவல் நிலையம்

வினா எண் 48766—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

@ இப்பட்டியல்களில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதலளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

[2010 நவம்பர் 12

(அ) சட்டமன்றத் தொகுதி வாரியாக மகளிர் காவல் நிலையங்கள் துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் 244 காவல் உட்கோட்டங்கள் உள்ளன. அவற்றில், 196 காவல் உட்கோட்டங்களில் தற்போது மகளிர் காவல் நிலையங்கள் இயங்கி வருகின்றன. எனவே, சட்டமன்றத் தொகுதி வாரியாக மகளிர் காவல் நிலையங்கள் துவக்க கருத்துரு ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

2—

அலுவலகம்

வினா எண் 73416—திரு. ஜா. ஜான் ஜோசப்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறையில் காவல் துறை உதவி கண்காணிப்பாளர் அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறையில் காவல் துறை உதவி கண்காணிப்பாளர் அலுவலகம் அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

3—

தீயணைப்பு நிலையம்

வினா எண் 73800—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2010 நவம்பர் 12]

(அ) தருமபுரி மாவட்டம், கடத்தூர் பேரூராட்சியில் தீயணைப்பு நிலையம் துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், கடத்தூர் பகுதியைச் சுற்றி 25 கி.மீ. தொலைவிற்குள் 2 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. அங்குள்ள ஊர்திக்ளைக் கொண்டே இப்பகுதியில் ஏற்படும் தீ விபத்து மற்றும் மீட்புப் பணி அழைப்புகளை மேற்கொள்ள இயலும் என்பதால் இவ்விடத்தில் புதிதாக ஒரு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.

4—

தீயணைப்பு நிலையம்

வினா எண் 76857—திரு. விடியல் எஸ். சேகர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஈரோடு மாவட்டம், சென்னிமலையில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், சென்னிமலை பகுதியைச் சுற்றி 25 கி.மீ. தொலைவிற்குள் 2 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. அங்குள்ள ஊர்தியைக் கொண்டே இப்பகுதியில் ஏற்படும் தீ விபத்து மற்றும் மீட்புப் பணி அழைப்புகளை மேற்கொள்ள இயலும் என்பதால் இவ்விடத்தில் புதிதாக ஒரு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.

5—

புறக்காவல் நிலையம்

வினா எண் 83591—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, வெள்ளாளப்பட்டி புறக்காவல் நிலையத்தை விரிவுபடுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

ஓமலூரில் ஒரு முழுக் காவல் நிலையமும் ஒரு மகளிர் காவல் நிலையமும் செவ்வனே இயங்கி வருகின்றன. இச்சூழ்நிலையில் ஓமலூர் தொகுதி வெள்ளாளப்பட்டியில் புறக்காவல் நிலையம் அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

6—

மகளிர் காவல் நிலையம்

வினா எண் 83620—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறையில் மகளிர் காவல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

புதிதாக உருவாக்கப்பட்ட வால்பாறை உட்கோட்டத்திற்கு ஒரு மகளிர் காவல் நிலையம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்சமயம் பரிசீலனையில் இல்லை.

7—

போக்குவரத்துக் காவல் நிலையம்

வினா எண் 87859—திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2010 நவம்பர் 12]

ஆலங்குடி தொகுதி, ஆலங்குடியில் போக்குவரத்துக் காவல் நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

ஆலங்குடி தொகுதி, ஆலங்குடியில் போக்குவரத்துக் காவல் நிலையம் அமைப்பது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

8—

தரம் உயர்த்துதல்

வினா எண் 87862—திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குடி தொகுதி, மழையூரில் துணை புறக்காவல் நிலையத்தை முழுநேரக் காவல் நிலையமாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

தமிழகத்தில் தற்போதுள்ள புறக்காவல் நிலையங்களை முன்னுரிமை அடிப்படையில் படிப்படியாக முழுக் காவல் நிலையங்களாக நிலை உயர்த்துவதே அரசின் கொள்கையாகும். அதன்படி ஆலங்குடி தொகுதி, மழையூர் புறக்காவல் நிலையத்தை முழுநேரக் காவல் நிலையமாகத் தரம் உயர்த்துவது குறித்து உரிய நேரத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

9—

தீயணைப்பு நிலையம்

வினா எண் 87869—திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குடி தொகுதி, கீரமங்கலத்தில் தீயணைப்பு நிலையம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

ஆலங்குடி தொகுதி, கீரமங்கலம் பகுதியைச் சுற்றி 25 கி.மீ. தொலைவிற்குள் நான்கு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. அங்குள்ள ஊர்திகளைக் கொண்டே இப்பகுதியில் ஏற்படும் தீ விபத்து மற்றும் மீட்புப் பணி அழைப்புகளை மேற்கொள்ள இயலும் என்பதால் இவ்விடத்தில் புதிதாக ஒரு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.

10—

தீயணைப்பு நிலையம்

வினா எண் 92519—திரு. ஆர்.கே. பாரதி மோகன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாளில் தீயணைப்பு நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் பகுதியைச் சுற்றி 25 கி.மீ. தொலைவிற்குள் 2 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. அங்குள்ள ஊர்திகளைக் கொண்டே இப்பகுதியில் ஏற்படும் தீ விபத்து மற்றும் மீட்புப் பணி அழைப்புகளை மேற்கொள்ள இயலும் என்பதால் இவ்விடத்தில் புதிதாக ஒரு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.

11—

காவல் நிலையம்

வினா எண் 96835—திரு. வை. காவேரி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், சிரகப்பாடியில் காவல் நிலையம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

2010 நவம்பர் 12]

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

சேலம் மாவட்டம், சிரகப்பாடியில் காவல் நிலையம் துவக்குவது குறித்த கருத்து ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

12—

காவல் நிலையம்

வினா எண் 96836—திரு. வை. காவேரி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியத்தில் காவல் நிலையம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியத்தில் காவல் நிலையம் துவக்குவது குறித்த கருத்துரு ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

13—

புதிய காவல் நிலையம்

வினா எண் 97653—டாக்டர் இ.எஸ்.எஸ். ராமன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், அம்மையார்குப்பம் கிராமத்தில் புதிய காவல் நிலையம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

தமிழகத்தில் ஏற்கெனவே பரிந்துரைக்கப்பட்ட வழிமுறைகளுக்கு/ அளவுகோலுக்கு இணங்கவும் மக்கள்தொகைப் பெருக்கம், நிலப்பரப்பு, குற்ற நிகழ்வுகளின் எண்ணிக்கை, பதட்ட

சூழ்நிலைக்கேற்பவும் 1452 காவல் நிலையங்கள் அமையப்பெற்று செயலாற்றி வருகின்றன. எனவே, திருவள்ளூர் மாவட்டம், அம்மையார்குப்பம் கிராமத்தில் புதிய காவல் நிலையம் அமைப்பது குறித்து கருத்துரு தற்சமயம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

14—

தீயணைப்பு நிலையம்

வினா எண் 97740—திரு. வீ.ஏ.டி. கலிவரதன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகையூர் தொகுதி, முகையூர் மற்றும் மணலூரில் தியணைப்பு நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருக்கோவிலூர் தாலுகா, முகையூர் பகுதியைச் சுற்றி 25 கி.மீ. தொலைவிற்குள் 4 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்களும் மற்றும் மணலூர் பகுதியைச் சுற்றி ஒரு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையமும் செயல்பட்டு வருகின்றன. அங்குள்ள ஊர்திகளைக் கொண்டே இப்பகுதியில் ஏற்படும் தீ விபத்து மற்றும் மீட்புப் பணி அழைப்புகளை மேற்கொள்ள இயலும் என்பதால் இவ்விடங்களில் புதிதாக தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் அமைக்க வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.

15—

போக்குவரத்துக் காவல் நிலையம்

வினா எண் 98272—திரு. வை. காவேரி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடியில் போக்குவரத்துக் காவல் நிலையம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 நவம்பர் 12]

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடியில் ஏற்படும் போக்குவரத்து நெரிசல் தற்பொழுது எடப்பாடி சட்டம் மற்றும் ஒழுங்கு காவல் நிலைய காவலர்களைக் கொண்டு சரி செய்யப்பட்டு வருகிறது. எனவே எடப்பாடியில் புதிதாக போக்குவரத்துக் காவல் நிலையம் அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

16—

தீயணைப்பு நிலையம்

வினா எண் 98322—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், நடுவீரப்பட்டு பகுதியில் புதிய தீயணைப்பு நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், நடுவீரப்பட்டு பகுதியைச் சுற்றி 25 கி.மீ. தொலைவிற்குள் நான்கு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. அங்குள்ள ஊர்திகளைக் கொண்டே இப்பகுதியில் ஏற்படும் தீ விபத்து மற்றும் மீட்புப் பணி அழைப்புகளை மேற்கொள்ள இயலும் என்பதால் இவ்விடத்தில் புதிதாக ஒரு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.

17—

போக்குவரத்துக் காவல் நிலையம்

வினா எண் 98336—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டியில் போக்குவரத்துக் காவல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டத்தில் உள்ள திருத்துறைப்பூண்டியில் புதிதாக போக்குவரத்துக் காவல் நிலையம் அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

18—

புறக்காவல் நிலையம்

வினா எண் 98339—திருமதி ரா. லீமா ரோஸ்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு தொகுதி, சாமியார் மடத்தில் புறக்காவல் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

தமிழகத்தில் தற்போதுள்ள புறக்காவல் நிலையங்களை முன்னுரிமை அடிப்படையில் படிப்படியாக முழுக் காவல் நிலையங்களாக நிலை உயர்த்துவதே அரசின் கொள்கையாகும். அதற்குரிய அரசாணையும் நிலை எண் 733, உள் (கா-14) துறை, நாள் 27-06-2008-ல் வழங்கப்பட்டுள்ளது. எனவே, அரசின் கொள்கையின்படி, கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு தொகுதி, சாமியார் மடத்தில் புறக்காவல் நிலையம் துவக்குவது குறித்து கருத்துரு ஏதும் பரிசிலனையில் இல்லை.

19—

தீயணைப்பு நிலையம்

வினா எண் 98343—திரு. எஸ். ராஜகுமார்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மயிலாடுதுறை தொகுதி, மணல்மேட்டில் தீயணைப்பு நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 நவம்பர் 12]

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மயிலாடுதுறை தொகுதி, மணல்மேடு பகுதியைச் சுற்றி 25 கி.மீ. தொலைவிற்குள் மூன்று தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. அங்குள்ள ஊர்திகளைக் கொண்டே இப்பகுதியில் ஏற்படும் தீ விபத்து மற்றும் மீட்புப் பணி அழைப்புகளை மேற்கொள்ள இயலும் என்பதால் இவ்விடத்தில் புதிதாக ஒரு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.

20—

காவல் நிலையம்

வினா எண் 103022—திரு. துரை. மணிவேல்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரியலூர் தொகுதி, கண்டக்குடி மற்றும் ஏலாக்குறிச்சியில் காவல் நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

அரியலூர் தொகுதி, கண்டக்குடி மற்றும் ஏலாக்குறிச்சியில் புதிய காவல் நிலையம் துவக்குவது குறித்த கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

21—

தொழிற்சாலை

வினா எண் 5058—திரு. குத்தாலம் க. அன்பழகன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யத்தில் சோடா ஆஷ் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யத்தில் சோடா ஆஷ் தயாரிக்கும் தொழிற்சாலை அமைப்பது குறித்த செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. இருப்பினும், தகுந்த தொழில் முனைவோர்கள், 5 கோடி ரூபாய்க்கு மேலான நிதி முதலீட்டுடன் புதிய தொழில் திட்டங்களைச் செயல்படுத்த முன்வந்தால் அவர்களுடன் இணைந்து திட்ட சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து திட்டத்தைச் செயல்படுத்த தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் முயற்சிகள் மேற்கொள்ளும்.

22—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 6729—திரு. மு. அப்பாவு: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், விஜயாபதி ஊராட்சி, காமனேரி கிராமத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், விஜயாபதி ஊராட்சியிலுள்ள காமனேரி குடியிருப்பில், சுனாமியால் பாதிக்கப்பட்ட 113 கடற்கரை கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலைத் தொட்டி ஒன்று கட்டப்பட்டு, அதன்மூலம் 6-10-2009 முதல் பொது மக்களுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

2010 நவம்பர் 12]

23—

புதிய கட்டடம்

வினா எண் 12565—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், பத்துப்பட்டி கிராம மகளிர் குழுவிற்கு புதிய கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பத்துப்பட்டி கிராமம், சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், மேலச்சொரிக்குளம் ஊராட்சியைச் சார்ந்தது. ஊராட்சிக்கு ஒரு சுய உதவிக் குழுக் கட்டடம் கட்ட வேண்டும் என்ற அடிப்படையில், மேலச்சொரிக்குளத்தில் சுய உதவிக் குழுக் கட்டடம் கட்டப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருவதால், பத்துப்பட்டி கிராம சுய உதவிக் குழு உறுப்பினர்கள் அதனைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

24—

தொழில்நுட்பப் பூங்கா

வினா எண் 12860—திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தளி தொகுதி, கெலமங்கலம் மற்றும் தேன்கனிக்கோட்டையில் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

தளி தொகுதி, கெலமங்கலம் மற்றும் தேன்கனிக்கோட்டையில் தொழில்நுட்பப் பூங்கா அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

25—

தொழில்நுட்பப் பூங்கா

வினா எண் 32573—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதியில் அரசு தொழில்நுட்பப் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

மேல்மலையனூரில் அரசு தொழில்நுட்பப் பூங்கா அமைக்க செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசிலனையில் இல்லை. இருப்பினும், அங்கு, தகுந்த தொழில் முனைவோர்கள், பெரிய தொழில் திட்டங்கள் நிறுவுவதற்கு புதிய திட்ட செயல்குறிப்புகளுடன் செயல்படுத்த முன்வந்தால் அவர்களுடன் இணைந்து திட்ட சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து செயல்படுத்த தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் முயற்சிகளை மேற்கொள்ளும்.

26—

தொழில்நுட்பப் பொருளாதார மண்டலம்

வினா எண் 40058—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு ஒருங்கிணைந்த தொழில்நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு ஒருங்கிணைந்த தொழில்நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

2010 நவம்பர் 12]

27—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 41568—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதி, அதியமான்கோட்டை ஊராட்சி, அதியமான் கோட்டை, ஏலகிரியான் கொட்டாய் கிராமத்திற்கு கூடுதலாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

தருமபுரி தொகுதி, அதியமான்கோட்டை ஊராட்சியைச் சேர்ந்த ஏலகிரியான் கொட்டாய் குடியிருப்பின் மக்கள் தொகைக்கேற்ப மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய குடிநீர் திட்டத்தின்மூலம் தற்போது போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருவதால் கூடுதலாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் அவசியம் தற்போது இல்லை.

28—

தெரு விளக்குகள்

வினா எண் 55602—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, காஞ்சமலை பேருந்து நிலையம், வெள்ளமலைமட்டம் பகுதி, வெள்ளமலை மேல் பகுதி, வெள்ளமலை சோலைப்பாடி, கவர்கல் குடியிருப்பு, பச்சைமலை, நடுமலை, கருமலை மற்றும் சேத்துமடை பகுதிகளில் தெரு விளக்குகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை நகராட்சிக்குட்பட்ட காஞ்சமலை பேருந்து நிலையத்தில் 2 குழல் விளக்குகளும், வெள்ளமலைமட்டம் பகுதியில் 1 சோடியம் ஆவி விளக்கும், வெள்ளமலை மேல்

பகுதியில் 4 அடி கொண்ட 1 குழல் விளக்கும், வெள்ளமலை சோலைப்பாடி பகுதியில் ஒரு சோடியம் ஆவி விளக்கும் மற்றும் 4 அடி கொண்ட 1 குழல் விளக்கும், பச்சைமலை பகுதியில் 6 குழல் விளக்குகளும், நடுமலை பகுதியில் 5 குழல் விளக்குகளும், கருமலை பகுதியில் 4 குழல் விளக்குகளும், வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சிக்குட்பட்ட சேத்துமடை பகுதியில் 4 அடி கொண்ட 50 குழல் விளக்குகளும் மற்றும் 5 சோடியம் விளக்குகளும் ஏற்கெனவே அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன.

29—

பணி நியமனம்

வினா எண் 63609—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்போரூர் தொகுதியில் தொழிற்சாலை அமைக்க நிலம் வழங்கிய உரிமையாளரின் வாரிசுகளுக்கு தொழிற்சாலைகளில் பணி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தால் (சிப்காட்) காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், திருப்போரூர் தொகுதிக்குட்பட்ட சிறுசேரியில் 782 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு தொழிற்பூங்கா தகவல் தொழில்நுட்பப் பூங்காவாக உருவாக்கப்பட்டுள்ளது. இங்கு ஒதுக்கீட்டிற்குரிய நிலப்பரப்பில் இதுவரை 500 ஏக்கர் நிலம் தகவல் தொழில்நுட்பத் துறையைச் சார்ந்த 79 நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நில ஒதுக்கீடு பெற்ற தொழில் நிறுவனங்கள் உருவாக்குகின்ற நேரடி வேலைவாய்ப்புகளில் 10 விழுக்காட்டினை நிலம் வழங்கிய உரிமையாளர்களின் வாரிசுகளுக்கு அவர்களின் தகுதியின் அடிப்படையில் அளித்திட வகை செய்யப்பட்டுள்ளது. இதுகுறித்த நிபந்தனை நில ஒதுக்கீடு ஒப்பந்தத்திலேயே தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இதனை உறுதிப்படுத்தும் வகையில் எல்லா தொழில் நிறுவனங்களுக்கும் இந்நிபந்தனையை நிறைவேற்ற தனியே கடிதம்

2010 நவம்பர் 12]

அனுப்பப்பட்டுள்ளது. எனவே அனைத்து தொழில் நிறுவனங்களும் தங்களது உற்பத்தியைத் துவங்கும் நிலையில் நிலம் வழங்கிய உரிமையாளர்களின் வாரிசுகளுக்கு தகுதியின் அடிப்படையில் வேலைவாய்ப்பு அளிப்பதற்கு வகை செய்யப்பட்டுள்ளது.

2. இது தவிர, அரசின் அறிவிப்பிற்கிணங்க, 2006 ஆம் ஆண்டுக்குப்பின் சிப்காட் தொழில் வளாகங்கள் அமைப்பதற்காக ஒரு ஏக்கர் மற்றும் அதற்கு மேல் நிலம் வழங்கிய குடும்பங்களில் ஒருவருக்காவது இவ்வளாகங்களில் அமையப்பெறும் தொழிற் சாலைகளில் வேலை வழங்கிட சிப்காட் நிறுவனம் ஆவன செய்து வருகிறது. இதற்காக, அக்குடும்பங்களில் தகுதி படைத்த இளைஞர்கள் பற்றிய கணக்கெடுப்பு முடிவுற்று மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், சிப்காட் நிறுவனம், இளைஞர்களின் திறனை மேம்படுத்துவதற்காக, மூன்று திறன் மேம்பாட்டு மையங்களை திருநெல்வேலி மாவட்டம், கங்கைகொண்டான் தொழில் வளர்ச்சி மையம், திருவள்ளூர் மாவட்டம், தேர்வாய்க்கண்டிகை தொழில் வளாகம், காஞ்சிபுரம் மாவட்டம், ஒரகடம் தொழில் வளர்ச்சி மையம் ஆகிய இடங்களில் ஏற்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறது. இத்திறன் மேம்பாட்டு மையங்களில் பயிற்சி பெறும் இளைஞர்களுக்கு அவர்களின் திறமைக்கேற்ப பணி வழங்க பரிந்துரைக்கப்படும்.

30—

தொழில்நுட்பப் பூங்கா

வினா எண் 68955—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டியில் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டியில் தொழில்நுட்பப் பூங்கா அமைப்பது குறித்த செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. இருப்பினும், அங்கு

தகுந்த தொழில் முனைவோர்கள், பெரிய தொழில் திட்டங்கள் நிறுவுவதற்கு புதிய திட்ட செயற்குறிப்புகளுடன் செயல்படுத்த முன்வந்தால் அவர்களுடன் இணைந்து திட்ட சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து செயல்படுத்த தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் முயற்சிகளை மேற்கொள்ளும்.

31—

தொழிற்கூடம்

வினா எண் 61969—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதியில் சிப்காட் தொழிற்கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் தமிழகத்தில் பெரிய மற்றும் நடுத்தர தொழில்கள் தொடங்க ஏதுவாக தொழில் வாய்ப்புள்ள பகுதிகளில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய தொழில் வளாகங்கள்/பூங்காக்களை ஏற்படுத்தி வருகிறது. இந்நிறுவனம் இதுவரை 12 மாவட்டங்களில் 19 தொழில் வளாகங்கள்/பூங்காக்களை உருவாக்கியுள்ளது. இவை ஒவ்வொன்றும் சராசரியாக சுமார் 1,000 ஏக்கர் நிலப்பரப்பை கொண்டவையாகும்.

2. திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதிக்கு அருகில் செய்யாறு தொகுதியில் மாத்தூர், மாங்கால் மற்றும் செல்லப்பெரும்புலிமேடு ஆகிய கிராமங்களில் சிப்காட் நிறுவனம் ஏற்கெனவே ஒரு தொழில் வளாகத்தை 631 ஏக்கர் நிலப்பரப்பில் உருவாக்கியுள்ளது. இங்கு ஒதுக்கீட்டிற்குரிய நிலப்பரப்பு முழுவதும் பல்வேறு தொழில் நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், இப்பகுதியில் தொழில்மனைத் தேவை அதிகரித்ததன் காரணமாக இத்தொழில் வளாகத்தை மேலும் 2,300 ஏக்கர் (மாத்தூர், மாங்கால் மற்றும் 6 கிராமங்கள்) கூடுதல் நிலப்பரப்பில் உருவாக்க விரிவாக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு

2010 நவம்பர் 12]

வருகிறது. இவ்விரிவாக்கப் பகுதி அதிகப்படியான தொழில் நிறுவனங்கள் அமையும் வகையில் இருக்கும். இது திருவண்ணாமலை மாவட்டத்தைச் சார்ந்த அனைத்து தொழில் முனைவோர்களின் தொழில்மனைத் தேவைகளையும் பூர்த்தி செய்யும். எனவே, பெரணமல்லூர் தொகுதியில் தனியாக ஒரு தொழிற்பேட்டையை ஏற்படுத்தும் உத்தேசம் அரசிற்கு தற்போது இல்லை.

32—

எரிசாராயம்

வினா எண் 88552—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் கழிவுப் பாகுமூலம் எரிசாராயம் தயாரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் கழிவுப் பாகுமூலம் எரிசாராயம் தயாரிக்கும் கருத்துரு ஏதும் அரசிடம் இல்லை.

33—

மாம்பழக் கூழ் தொழிற்சாலை

வினா எண் 87819—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதியில் மாம்பழக் கூழ் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதியில் மாம்பழக் கூழ் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது டிட்கோ வசம் இல்லை. இருப்பினும், தகுந்த தொழில் முனைவோர்கள், சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதியில்

மாம்பழக் கூழ் தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவுவதற்குத் தேவையான நிதி முதலீடுகளுடன், புதிய திட்ட செயல்குறிப்புகளுடன் செயல்படுத்த முன்வந்தால் அவர்களுடன் டிட்கோவும் இணைந்து திட்ட சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து திட்டத்தை செயல்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

34—

உரத் தொழிற்சாலை

வினா எண் 101071—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் புதிதாக உரத் தொழிற்சாலை துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் புதிதாக உரத் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் தற்போது அரசிடம் இல்லை. இருப்பினும், தகுந்த தொழில் முனைவோர்கள், உரத் தொழிற்சாலை நிறுவுவதற்குத் தேவையான நிதி முதலீடுகளுடன் புதிய திட்ட செயல்குறிப்புகளுடன் செயல்படுத்த முன்வந்தால் அவர்களுடன் டிட்கோவும் இணைந்து திட்ட சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து திட்டத்தைச் செயல்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

35—

சர்க்கரை ஆலை

வினா எண் 103038—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, அமராவதி சர்க்கரை ஆலையில் மதுபான பாட்டில் யூனிட் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 நவம்பர் 12]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை தொகுதி, அமராவதி சர்க்கரை ஆலையில் மதுபான பாட்டில் யூனிட் அமைக்க செயல் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

36—

வணிக வளாகம்

வினா எண் 103069—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, இராஜகம்பீரம், திருப்பாச்சேத்தியில் மகளிர் சுய உதவிக் குழு உற்பத்தி செய்யும் பொருட்களை விற்க வணிக வளாகம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, இராஜகம்பீரம், திருப்பாச்சேத்தியில் மகளிர் சுய உதவிக் குழுவினர் உற்பத்தி செய்யும் பொருள்களை விற்பதற்கான வணிக வளாகம் கட்டுவதற்கு எத்திட்டத்திலும் வழிவகை இல்லை.

37—

சிறப்புப் பொருளாதார மண்டலம்

வினா எண் 103150—திருமதி ஜி. லதா: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குடியாத்தம் தொகுதியில் சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குடியாத்தம் தொகுதியில் சிறப்புப் பொருளாதார மண்டலம் துவங்கும் திட்டம் ஏதும் தற்போது அரசிடம் இல்லை. இருப்பினும், தகுந்த தொழில் முனைவோர்கள், இத்தகைய சிறப்புப் பொருளாதார மண்டலம் நிறுவுவதற்குத் தேவையான நிதி முதலீடுகளுடன் புதிய திட்ட செயல்குறிப்புகளுடன் செயல்படுத்த முன்வந்தால் அவர்களுடன் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) இணைந்து திட்ட சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து திட்டத்தைச் செயல்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

38—

சமத்துவபுரம்

வினா எண் 103636—திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரூர் தொகுதியில் பெரியார் நினைவு சமத்துவபுரம் கட்டும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

2009-10 ஆம் ஆண்டு ஒதுக்கீட்டில், அரூர் ஊராட்சி ஒன்றியம், செட்ரப்பட்டி ஊராட்சி, சுண்டாங்கிபட்டி கிராமத்தில் பெரியார் நினைவு சமத்துவபுரம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

39—

புதிய பேருந்து நிலையம்

வினா எண் 104220—திரு. ரா. வரதராஜன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விருதுநகர் சாலையில் அமைந்துள்ள புதிய பேருந்து நிலையத்தினைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

2010 நவம்பர் 12]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

விருதுநகர் கர்மவீரர் காமராஜர் பேருந்து நிலையம் தொடர்பாக தமிழ்நாடு மாநில போக்குவரத்துத் தீர்ப்பாணையத்தில் 2-12-2008-ல் தனியார் பேருந்து உரிமையாளர்கள் தொடர்ந்த வழக்கு முடிவுக்கு வந்த பிறகு பேருந்துகள் இயக்கம் குறித்து வட்டாரப் போக்குவரத்து அலுவலர், காவல் துறை உயர் அலுவலர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக அலுவலர்கள், தனியார் பேருந்து உரிமையாளர்கள் ஆகியோரை அழைத்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் முன்னிலையில் கூட்டம் நடத்தி கலந்தாலோசனை செய்து, அதன்படி 1-7-2009 முதல் பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

40—

தரம் உயர்த்துதல்

வினா எண் 104955—திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தளி தொகுதி, தேன்கனிக்கோட்டை பேரூராட்சியை நகராட்சியாகத் தரம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

தேன்கனிக்கோட்டை பேரூராட்சியை நகராட்சியாகத் தரம் உயர்த்துவது தொடர்பாக உரிய வழிமுறையிலான கருத்துரு ஏதும் வரப்பெறவில்லை. எனவே, மேற்சொன்ன பேரூராட்சியை நகராட்சியாகத் தரம் உயர்த்திட செயற்குறிப்பு ஏதுமில்லை.

41—

வழிகாட்டி நிறுவனம்

வினா எண் 108088—திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழில் துறையில் அனைத்து வழிகாட்டுதல்கள் மற்றும் தகவல்களை அறிய தனி அமைப்பு ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் தொழில்கள் தொடங்குவதற்கான வாய்ப்புகள், நடைமுறைகள், ஊக்க உதவிகள், சலுகைகள் உள்ளிட்ட அனைத்து தகவல்களை வழங்குவதற்கும், தொழில் முனைவோர்களுக்கு வழிகாட்டுதல்களை அளித்து தொழில் தொடங்கத் தேவையான அனுமதிகள் மற்றும் ஒப்புதல்களை, ஒற்றைச் சாளர முறையில் பெற்றுத் தருவதற்கும், "தமிழ்நாடு தொழில் வழிகாட்டி மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி நிறுவனம்" என்ற அமைப்பு 1992 ஆம் ஆண்டில் அரசால் அமைக்கப்பட்டு, செவ்வனே இயங்கி வருகிறது.

42—

அலுவலகம்

வினா எண் 101386—திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொரப்பூர் தொகுதி, பயர்நத்தத்தில் இளநிலை மின் உதவியாளர் அலுவலகம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

மொரப்பூர் தொகுதி, பயர்நத்தம் கிராமத்தில் உதவிப் பொறியாளர் (இயக்குதலும் & பராமரித்தலும்) பிரிவு அலுவலகக் கட்டடம் கட்ட செயற்குறிப்பு உள்ளது.

43—

கட்டடம்

வினா எண் 109495—திரு. வை. காவேரி: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2010 நவம்பர் 12]

எடப்பாடி தொகுதி, வைகுந்தத்திலுள்ள மின்சார வாரிய அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

எடப்பாடி தொகுதி, வைகுந்தத்திலுள்ள மின்சார வாரிய அலுவலகத்திற்குட்பட்ட பகுதிகளில் மின்சார வாரியத்திற்குச் சொந்தமான நிலம் ஏதும் இல்லை. மேலும் பிரிவு அலுவலகங்களுக்குக் கட்டடம் கட்டும் திட்டச் செயற்குறிப்பு ஏதும் நிலுவையில் இல்லை.

44—

உரக் குடோன்

வினா எண் 104106—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் தொகுதி, கொளத்தூரில் வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கு உரக் குடோன் மற்றும் சேமிப்புக் கிடங்கு கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேட்டூர் தொகுதியில் கொளத்தூர் வட்டாரத்தில், கொளத்தூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் செயல்பட்டு வருகிறது. இச்சங்கத்திற்கு ஏற்கெனவே 100 மெ.டன் கொள்ளளவு கொண்ட கிடங்கு ஒன்று உள்ளது. இது தற்போது முழுவதும் உபயோகப்படுத்தப்பட்டு வருவதால், சங்க நலன் மற்றும் உறுப்பினர் நலன் கருதி இச்சங்கத்திற்கு மேற்கொண்டு ஒரு கிடங்கு கட்ட உத்தேசிக்கப்பட்டு அதற்கான திட்ட மதிப்பீடு ரூ. 7.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு நிதி வசதி கோரி ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்ட பொது மேலாளர், சேலம் அவர்கட்கு கோரிக்கை அனுப்பப்பட்டு 10-11-2009-ல் சேலத்தில் நடைபெற்ற ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்ட செயலாக்க முகமைக் குழுக் கூட்டத்தில் 100 மெ.டன் கொள்ளளவுக்

கொண்ட கிடங்கு கட்டிக்கொள்ள ரூ. 3.80 இலட்சம் நிதி உதவி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. மீதித் தொகை ரூ. 3.20 இலட்சத்தை சங்கம் தனது பொது நிதியிலிருந்து செலவிட உள்ள நிலையில் சங்கம் இது தொடர்பான கட்டுமானப் பணியைத் துவக்க உள்ளது.

45—

கூட்டுறவு வங்கி

வினா எண் 104275—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், பொட்டனேரி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியை இரண்டாகப் பிரித்து, கோனூர் ஊராட்சியில் புதிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோனூர் கிராமம், பொட்டனேரி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் விவகார எல்லையிலுள்ளது. இச்சங்கத்தின் செயல்பாட்டு விவரம் பின்வருமாறு:—

வ. எண்	பொருள்	பொட்டனேரி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கப் பகுதியில்	கலம் 3-ல் கோனூர் கிராமப் பகுதியில்
1.	பயிரிடக்கூடிய நிலப்பரப்பு	10593 ஹெக்டேர்	5490 ஹெக்டேர்
2.	மொத்த உறுப்பினர்கள்	6691 நபர்கள்	3090 நபர்கள்
3.	கடன் பெறும் உறுப்பினர்கள்	441 நபர்கள்	227 நபர்கள்
4.	நகைக்கடன் வழங்கியது	ரூ.581.56 இலட்சம்	ரூ.315.10 இலட்சம்

2010 நவம்பர் 12]

2. பொட்டனேரி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கடந்த 10 ஆண்டு கால வரவு, செலவு விவரம்.

(ரூ. இலட்சத்தில்)

ஆண்டு	வரவு			செலவு			நிகர லாபம்	நிகர நட்டம்	குவிந்த நட்டம்
	வட்டி வருவாய்	இதர வருவாய்	கூடுதல்	வட்டி செலவு	இதர செலவு	கூடுதல்			
1999-00	64.15	5.70	69.85	55.66	20.69	76.35	-	7.30	17.51
2000-01	78.19	5.69	83.88	62.36	21.76	84.12	0.58	-	16.93
2001-02	82.04	5.33	87.37	68.54	22.25	90.79	-	3.09	20.02
2002-03	78.84	6.52	85.36	72.75	22.37	95.12	-	10.98	31.00
2003-04	79.50	7.70	87.20	71.90	22.99	94.89	-	6.69	37.69
2004-05	146.23	8.32	154.55	76.31	18.74	95.05	-	6.89	44.58
2005-06	77.40	9.80	87.20	67.15	17.70	84.85	1.02	-	43.56
2006-07	116.55	8.66	125.21	50.27	21.33	71.60	35.26	-	8.30
2007-08	85.97	10.32	96.29	65.16	25.21	90.37	3.93	-	4.37
2008-09	122.18	19.59	141.77	80.84	24.51	105.35	5.36	-	-

3. பொட்டனேரி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் 1999-2000 முதல் 2007-2008 முடிய தொடர்ந்து குவிந்த நட்டத்தில் செயல்பட்டு வருகிறது. மேலும் பொட்டனேரி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் சேவை மையம் கோனூரில் கடந்த 12 ஆண்டுகளாகச் செயல்பட்டு வருவதுடன், கோனூர் கிராம மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து வருகிறது.

[2010 நவம்பர் 12

4. அரசாணை (டி) எண் 376, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 3-10-2006-ன்படி புதிய சங்கம் துவக்க மொத்த உறுப்பினர்களில் 60 விழுக்காடு கடன் பெறும் உறுப்பினர்கள் இருக்க வேண்டும் என்ற நிபந்தனை பூர்த்தி செய்யப்படவில்லை என்பதாலும், பொட்டனேரி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் தொடர்ந்து குவிந்த நட்டத்தில் செயல்பட்டு வரும் நிலையில் இச்சங்கத்தை இரண்டாகப் பிரித்தால், இச்சங்கத்தின் வாழ்திறன் பாதிக்கப்படும் என்பதாலும், கோனூர் கிராமத்தில் புதிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் துவக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

46—

சுற்றுச் சுவர்

வினா எண் 104456—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் வேலாயுதர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கு சுற்றுச் சுவர் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் (வேலாயுதர்) தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் தற்போது அரசு நிலத்தில் இரும்பு முள் வேலியுடன் கூடிய பாதுகாப்பான சுற்றுப்புறத்தில் உள்ளது. அதனால் சங்கத்தின் பெயரில் பட்டா மற்றும் சிட்டா அடங்கல் இல்லாத காரணத்தினால், நிதியுதவி பெற்று சுற்றுச் சுவர் கட்ட இயலாத நிலை உள்ளது. மேலும் இச்சங்கம் குவிந்த நட்டத்தில் செயல்பட்டு வருவதால், சொந்த நிதியிலிருந்து சுற்றுச் சுவர் கட்ட இயலாத நிலையில் உள்ளது. இச்சங்கத்திற்கு பட்டா மற்றும் அடங்கல் பெற வருவாய் துறையை நாடி, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேற்படி ஆவணங்கள் கிடைக்கப் பெற்றவுடன் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின்மூலம் சுற்றுச் சுவர் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

2010 நவம்பர் 12]

47—

சட்ட விழிப்புணர்வு

எண் 108459—திரு. வை. காவேரி: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அடிப்படை உரிமையாக அனைவருக்கும் சட்டக் கல்வி குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) தமிழகத்தில் உள்ள அரசு சட்டக் கல்லூரிகளில் ஆண்டுதோறும் சட்ட விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்படுகின்றன. அதன்மூலம் சட்ட வல்லுநர்கள், சட்ட ஆசிரியர்கள் மற்றும் சட்ட மாணவர்கள் ஆகியோரைக் கொண்டு கிராமங்களுக்குச் சென்று அனைவருக்கும் சட்ட விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

(ஆ) வினா எழவில்லை.

48—

தொலைக்காட்சிப் பெட்டி

வினா எண் 111805—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

அ) அனைத்து சிறைச்சாலைகளுக்கும் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) அனைத்து மத்திய சிறைகள், ஒரு இணைப்புச் சிறை மற்றும் 9 பெண்கள் கிளைச் சிறைகள் ஆகியவற்றிற்கு தொலைக்காட்சிப்

பெட்டிகள் மற்றும் வானொலிப் பெட்டிகள் வழங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. மேலும், அனைத்து ஆண் கிளைச் சிறைச்சாலைகளுக்கும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் மற்றும் வானொலிச் சாதனங்கள் வழங்குவது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது.

49—

பேருந்து வசதி

வினா எண் 91269—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, தரங்கம்பாடியிலிருந்து மாணிக்கப்பங்கு, சின்னங்குடி, வானகிரி, பூம்புகார், திருவெண்காடு வழியாக சீர்காழி வரை கடற்கரைச் சாலை வழியாக நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வினாவில் கோரப்பட்ட வழித்தடத்தின் நீளம் 45.0 கி.மீ. ஆகும். கோரிக்கை தடத்தில் வானகிரியிலிருந்து சின்னங்குடி வரை உள்ள 6 கி.மீ. பகுதியிலிருந்து 4.5 கி.மீ. தடப்பகுதியும் மற்றும் சின்னங்குடி-வேப்பஞ்சேரி இடைப்பட்ட சுமார் 2.0 கி.மீ. தடப்பகுதியும் தற்போது பேருந்து வசதி பெறாத தடப்பகுதிகளாக அமைந்துள்ளன. எஞ்சிய பகுதிகள் அனைத்தும் பகுதி/பகுதியாக பேருந்து வசதி பெற்றவையாகும். வானகிரியிலிருந்து சின்னங்குடி செல்லும் சாலையில் 2 கி.மீ. தூரம் தார்ச் சாலையாகவும், அதன் பிறகு சின்னங்குடி இணைப்புச் சாலையில் 2.5 கி.மீ. தூரம் கப்பிச்சாலையாகவும் உள்ளது. சின்னங்குடி-வேப்பஞ்சேரி பகுதி முற்றிலும் சாலை இல்லாத பகுதியாகவும், இப்பகுதியில் அம்மனாற்றின் குறுக்கே பாலம் இல்லாத நிலையில் பாலம் கட்டப்பட வேண்டிய நிலையிலும் உள்ளது. எனவே, மேற்கண்ட பகுதிகளில் சாலை வசதி செய்யப்பட்ட பின்னர் பேருந்து இயக்க இயலும்.

2010 நவம்பர் 12]

50—

பேருந்து வசதி

வினா எண் 107410—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை-தாம்பரம்-செங்கல்பட்டு-திருக்கழுக்குன்றம்-நெரும்பூர்-புதுப்பட்டினம் வழியாக இயக்கப்படும் தடம் எண் 108D பேருந்தை சென்னை வரை நீட்டித்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தற்பொழுது பேருந்து தடம் எண் 108D, புதுப்பட்டினத்திலிருந்து தாம்பரத்திற்கு 8 நடைகளும், செங்கல்பட்டிற்கு 2 நடைகளும் இயக்கப்படுகின்றன. தாம்பரம் வரை இயக்கப்படும் நடைகளை சென்னை கோயம்பேடு வரை நீட்டித்து இயக்கினால் தற்போதைய புதுப்பட்டினம், தாம்பரம் நடைகள் குறைந்துவிடும் என்பதுடன் போக்குவரத்து நெரிசல் காரணமாக சரியான நேரத்திற்கு இயக்க இயலாது.

51—

பேருந்து வசதி

வினா எண் 115125—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையிலிருந்து சிவகங்கை மற்றும் இளையான்குடிக்கு இரவு நேரங்களில் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரையிலிருந்து சிவகங்கைக்கு இரவு 22-30 மணிக்கும், மானாமதுரையிலிருந்து இளையான்குடிக்கு

இரவு 20-30 மணிக்கும் தற்போது பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இதில் பயணிகளின் பயன்பாடு மிக மிகக் குறைவாக இருப்பதால், இதுவே போதுமானதாகும்.

52—

பேருந்து வசதி

வினா எண் 115340—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையிலிருந்து மதுரை பெரியார் பேருந்து நிலையம், ஆரப்பாளையம், திருப்பரங்குன்றம், பழங்காநத்தம் மற்றும் திருவனந்தபுரம் ஆகிய பகுதிகளுக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* மானாமதுரையிலிருந்து ஆரப்பாளையத்திற்கும், மதுரைக்கும் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், மதுரையிலிருந்து கோரிக்கையிலுள்ள அனைத்து ஊர்களுக்கும் பகுதி பகுதியாக நகர் மற்றும் புறநகர்ப் பேருந்துகள் அதிக அளவில் இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, இதுவே போதுமானதாகும்.

53—

மனநலக் காப்பகம்

வினா எண் 41280—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் மனநலக் காப்பகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 நவம்பர் 12]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் மனநலக் காப்பகம் அமைப்பது குறித்த கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) பதில் எழாது.

54—

பிறப்புச் சான்றிதழ்

வினா எண் 108206—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் பிறக்கும் குழந்தைகளுக்கு அங்கேயே பிறப்புச் சான்றிதழ் வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் பிறக்கும் குழந்தைகளுக்கு, அக்குழந்தையின் தாய் அம்மருத்துவ மனையிலிருந்து சிகிச்சை முடிந்து செல்லும் முன்னர் அல்லது சிகிச்சை முடிந்து சென்றிருந்தால், அத்தாயின் இருப்பிடத்தில் பிறப்புச் சான்று இலவசமாக வழங்கிட அரசாணை (நிலை) எண் 138, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 6-5-2009-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

55—

மருத்துவ முகாம்

வினா எண் 110138—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2010 நவம்பர் 12

சேலம் மாவட்டத்தில் அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் வருமுன் காப்போம் திட்டத்தின்மூலம் மருத்துவ முகாம் நடத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தமிழகமெங்கும் கிராமப்புறம் மற்றும் நகர்ப்புறங்களில் வருமுன் காப்போம் திட்ட மருத்துவ முகாம் நடத்தப்பட்டு வருகிறது. இந்த நிதியாண்டில் 4,500 மருத்துவ முகாம்கள் நடத்த திட்டமிடப்பட்டு, இதுநாள்வரை 20-11-2009-ல் 2,100 முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. அப்பகுதியில் வாழும் மக்கள் பிற்படுத்தப்பட்டோர், ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் சிறப்பு முகாம்களில் தங்க வைக்கப்பட்டோர் ஆகியோர்களுக்கு வருமுன் காப்போம் திட்ட மருத்துவ முகாம்களில் உரிய சிகிச்சை அளிக்கப்படுகிறது. நோய் கண்டவர்களுக்கு உடனுக்குடன் அரசு பொது மருத்துவமனைகள் மூலமாக சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. அறுவை சிகிச்சை தேவைப்படும் நபர்களுக்கு உயிர் காக்கும் உயர் சிகிச்சை கலைஞர் காப்பீட்டுத் திட்டம்மூலம் அறுவை சிகிச்சை நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பள்ளிக் குழந்தைகளைப் பொறுத்தவரையில், தனியாக பள்ளிக் குழந்தைகள் நலத் திட்டத்தின்கீழ் (School Health Programme) அவர்களுக்கு உரிய முறையில் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

56—

நவீன சுகாதார வளாகம்

வினா எண் 110801—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம், அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவமனையில் தீவிர அறுவை சிகிச்சைப் பிரிவு மற்றும் நவீன சுகாதார வளாகம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

2010 நவம்பர் 12]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

சேலம், அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவமனையில் தீவிர அறுவை சிகிச்சைப் பிரிவு மற்றும் நவீன சுகாதார வளாகத்திற்கான கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

57—

தொழிற்பேட்டை

வினா எண் 63361—திரு. வை. காவேரி: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி பகுதியில் புதிய தொழிற்பேட்டை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி பகுதியில் புதிய தொழிற்பேட்டை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை. மேலும், போதுமான நிதி ஆதாரங்களோடு தொழிற் திட்டங்களுடன் தொழில் துவங்க ஆர்வமுள்ள குறைந்தபட்சம் 20-க்கும் குறையாமல் தொழில் முனைவோர் திரும்பப் பெறாத ஒப்புவிப்பு தொகையுடன் முன்வந்தால் மாவட்ட ஆட்சியாளருடன் கலந்தாலோசித்து புதிதாக தொழிற்பேட்டை அமைப்பது குறித்துப் பரிசீலிக்கப்படும்.

58—

தொழிற்பேட்டை

வினா எண் 98348—திரு. கு. சின்னதுரை: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தலைவாசல் தொகுதி, ஆட்டுப்பண்ணையில் தொழிற்பேட்டை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தலைவாசல் தொகுதி, ஆட்டுப்பண்ணையில் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை. இருப்பினும் போதுமான நிதி ஆதாரங்களோடு தொழிற்திட்டங்களுடன் தொழில் துவங்க ஆர்வமுள்ள குறைந்தபட்சம் 20-க்கும் குறையாத தொழில் முனைவோர் திரும்பப் பெறாத ஒப்புவிப்பு தொகையுடன் முன்வந்தால் மாவட்ட ஆட்சியாளருடன் கலந்தாலோசித்து புதிதாக தொழிற்பேட்டை அமைப்பது குறித்துப் பரிசிலிக்கப்படும்.

59—

தொழிற்பேட்டை

வினா எண் 102816—திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதி, அரூரில் அரசு தொழிற்பேட்டை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரூர் தொகுதி, அரூரில் அரசு தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசிலனையில் இல்லை.

2010 நவம்பர் 12]

தருமபுரி மாவட்டத்தில் கீழ்க்கண்ட இடங்களில் தொழிற்பேட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன:

தொழிற் பேட்டையின் பெயர்	தொடங்கப் பட்ட வருடம்	மொத்த		காலியாக உள்ள	
		மனைகள்	தொழிற் கூடங்கள்	மனைகள்	தொழிற் கூடங்கள்
தருமபுரி	1974	21	19	இல்லை	இல்லை
கடகத்தூர்	2008	25	-	8	-

அரூர் தொகுதி, அரூரில் தொழிற்பேட்டை அமைக்க போதுமான நிதி ஆதாரங்களுடனும், தொழிற்திட்டங்களுடனும் தொழில் துவங்க ஆர்வமுள்ள தொழில் முனைவோர் கணிசமான அளவில் முன்வந்தால், புதிதாக தொழிற்பேட்டை அமைப்பதற்கான நிலம், தொழில் முனைவோர் தேவை ஆகியவற்றின் அடிப்படையில் மாவட்ட ஆட்சியருடன் கலந்தாலோசித்து கருத்தாய்வு செய்து மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

60—

தொழிற்பேட்டை

வினா எண் 103149 திருமதி ஜீ. லதா: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், வாணியம்பாடி பகுதியில் அரசு தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், வாணியம்பாடி பகுதியில் அரசு தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

வேலூர் மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள தொழிற்பேட்டையின் விவரங்கள்:

தொழிற் பேட்டை	தொழிற்கூடங்கள்		மேம்படுத்தப்பட்ட தொழில் மனைகள்	
	அமைக்கப் பட்டவை	ஒதுக்கப் பட்டவை	அமைக்கப் பட்டவை	ஒதுக்கப் பட்டவை
காட்பாடி	9	9	42	42
அரக்கோணம்	13	13	119	98
இராணிப்பேட்டை	162	162	71	71
முகுந்தராயபுரம்	30	30	38	38
வன்னிமேடு	—	—	7	7
விண்ணமங்கலம்	—	—	38	38

வேலூர் மாவட்டம், வாணியம்பாடி பகுதியில் தொழில் துவங்க போதுமான நிதி ஆதாரங்களுடனும், தொழிற்திட்டங்களுடனும் ஆர்வமுள்ள தொழில் முனைவோர் கணிசமான அளவில் முன்வந்தால், புதிதாக தொழிற்பேட்டை அமைப்பதற்கான நிலம், தொழில் முனைவோர் தேவை ஆகியவற்றின் அடிப்படையில் மாவட்ட ஆட்சியருடன் கலந்தாலோசித்து கருத்தாய்வு செய்து மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

61—

தொழிற்பேட்டை

வினா எண் 103167—திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டத்தில் தொழிற்பேட்டை அமைக்கும் பணியை விரைந்து நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டத்தில், தருமபுரி மற்றும் கடகத்தூர் ஆகிய இடங்களில் தொழிற்பேட்டைகள் அமைக்கப்பட்டு இயங்கி

2010 நவம்பர் 12]

வருகின்றன. தருமபுரி மாவட்டத்தில் தற்போது வேறு இடத்தில் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. போதுமான நிதி ஆதாரங்களுடனும், தொழிற்திட்டங்களுடனும் தொழில் துவங்க ஆர்வமுள்ள தொழில் முனைவோர் முன்வந்தால், புதிதாக தொழிற்பேட்டை அமைப்பதற்கான நிலம், தொழில் முனைவோர் தேவை ஆகியவற்றின் அடிப்படையில் மாவட்ட ஆட்சியருடன் கலந்தாலோசித்து கருத்தாய்வு செய்து மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

62—

தொழிற்பேட்டை

வினா எண் 108943—திருமதி ஜி. லதா: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆம்பூர், பேரணாம்பட்டு, வாணியம்பாடி பகுதிகளில் தோல் பொருட்கள் உற்பத்தி செய்யும் தொழிற்பேட்டைகள் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

(அ) மற்றும் *(ஆ)* ஆம்பூர், பேரணாம்பட்டு, வாணியம்பாடி பகுதிகளில் தோல் பொருள் உற்பத்தி செய்யும் தொழிற்பேட்டைகள் அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

போதுமான நிதி ஆதாரங்களுடன், தொழிற்திட்டங்களுடனும் தொழில் துவங்க ஆர்வமுள்ள தொழில் முனைவோர் கணிசமான அளவில் முன்வந்தால், தோல் பொருள் உற்பத்தி செய்யும் தொழிற்பேட்டை அமைப்பதற்கான நிலம், தொழில் முனைவோர் தேவை ஆகியவற்றின் அடிப்படையில் மாவட்ட ஆட்சியருடன் கலந்தாலோசித்து கருத்தாய்வு செய்து மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

[2010 நவம்பர் 12

63—

தனி வட்டம்

வினா எண் 33826—திரு. தி. இராமசாமி: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு ஒன்றியத்தை உள்ளடக்கி தனி வட்டம் உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு ஒன்றியத்தை உள்ளடக்கி தனி வட்டமாக உருவாக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

64—

ஆக்கிரமிப்பு

வினா எண் 37153—திரு. க.ப. வேலுமணி: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூர் தொகுதி, நாச்சிபாளையம் ஊராட்சி, பச்சாபாளையம் ஆதி திராவிடர் காலனியில் மதுரைவீரன் கோயில் இடத்திலுள்ள ஆக்கிரமிப்பை அகற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோவை தெற்கு வட்டம், நாச்சிபாளையம் கிராமத்தில் அமைந்துள்ள மதுரைவீரன் பட்டத்தரசியம்மன் கோயில் க.ச. 95 மஜரா பச்சாபாளையம் நத்தமாகும். நத்தம் நிலவரி திட்டத்தின்கீழ் புதிய க.ச. 174 ஆகும். இக்கோயில் மற்றும்

2010 நவம்பர் 12]

கன்னிமார் கோயில்களை விரிவுபடுத்திக் கட்ட இடையூறாக இருந்த புல எண் 174/5-ல் திருமதி ரகுபதி தேவி என்பவரின் தகப்பனாருக்கு வீட்டுமனைப் பட்டா கொடுக்கப்பட்டிருந்த இடத்தில் வீடு அமைத்து குடியிருந்தால் மேற்படி கோயில்களுக்கு இடையூறு ஏற்படும் எனத் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, மேற்படி நபருக்கு வேறு இடத்தில் (174/12) இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் பட்டா பூமிகளுக்குச் செல்லும் பாதையில் தற்போது இடையூறு இல்லை. மதுரைவீரன் பட்டத்தரசியம்மன் கோயில் மற்றும் கன்னிமார் கோயில்களில் ஏற்படுத்தப்பட்ட ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு வழிபாடு செய்ய போதிய இட வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

65—

ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்

வினா எண் 37843—திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, லட்சுமிநாராயணபுரம் ஏரிக்கரை வாய்க்காலிலுள்ள தனியார் ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி வட்டம், லட்சுமிநாராயணபுரம் கிராமம், சர்வே எண் 65-2-ல் உள்ள கந்தன்பாளையம் ஏரி புறம்போக்கு பொதுப் பணித் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளதாகும். எனவே, இதில் உள்ள ஆக்கிரமணங்களை அகற்ற பொதுப் பணித் துறைமூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

66—

நவீன கழிப்பிட வசதி

வினா எண் 43853—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2010 நவம்பர் 12

ஓமலூர் தொகுதி, ஓமலூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் பொது நவீன கழிப்பிட வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

வட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ள கழிப்பிட கட்டடம் கடந்த 1986 ஆம் ஆண்டு கட்டப்பட்டு, ஸ்திரத்தன்மையுடன் உள்ளது. எனவே, நவீன கழிப்பிடம் கட்ட அவசியம் எழவில்லை.

67—

கட்டடம்

வினா எண் 59321—திரு. பெ.சு. விஜயகுமார்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் தொகுதி பொத்தரை கிராமத்தில் கிராம நிருவாக அலுவலர் அலுவலகக் கட்டடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

(அ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், செங்குணம் குரூப் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகக் கட்டடம் புல எண் 34/1 நத்தம் புறம்போக்கில் சுமார் 5 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்டுள்ளது. செங்குணம் குரூப்பைச் சேர்ந்த பொத்தரை கிராமத்தின் தலைமையிடம் செங்குணம் என்பதால் அங்கு கிராம நிருவாக அலுவலகக் கட்டடம் கட்டப்பட்டுள்ளதால், பொத்தரை கிராமத்தில் கிராம நிருவாக அலுவலர் அலுவலகக் கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

(ஆ) வினா எழவில்லை.

68—

சொந்தக் கட்டடம்

வினா எண் 98353—திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2010 நவம்பர் 12]

வேலூர் மாவட்டம், வேலூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

வேலூர் மாவட்டம், வேலூர் வட்டாட்சியர் அலுவலகம் கட்டுவதற்கு அரசாணை (நிலை) எண் 592, வருவாய்த் துறை, நாள் 15-10-2008-ல் ரூ.138.00 இலட்சம் (ரூபாய் நூற்று முப்பத்தெட்டு இலட்சம் மட்டும்) திட்ட மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணி 2010 செப்டம்பரில் நிறைவடையும்.

69—

புதிய கட்டடம்

வினா எண் 104801—திரு. வே. மணிமுத்து: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

நாகப்பட்டினம் வட்டாட்சியர் அலுவலகம் 2008-2009 ஆம் ஆண்டிற்கான வருவாய் கட்டடங்கள் பழுது மற்றும் பராமரிப்பு பணிகளில் முன்னுரிமை அடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பராமரிப்பு வசதிகள் அனைத்தும் ஒருங்கே அமையப் பெற்று, மக்கள் வந்து செல்வதற்கு சிரமம் ஏதுமின்றி உள்ளது. எனவே, இதனை வேறு இடத்திற்கு மாற்றவோ புதிய கட்டடம் கட்டவோ அவசியம் எழவில்லை.

[2010 நவம்பர் 12

70—

ஓய்வூதியம்

வினா எண் 105846—திரு. வை. காவேரி: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வயது முதிர்ந்த ஏழை, நடுத்தர விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்கு கருணையின்பேரில் ஓய்வூதியம் அளிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் விவசாயக் கூலித் தொழிலாளர்களின் நலனுக்காக தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள்-விவசாயிகள் (சமூக பாதுகாப்பு மற்றும் நலம்) திட்டம், 2006 தொடங்கப்பட்டு, இத்திட்டத்தின்மூலம் 60 வயதினைக் கடந்த உறுப்பினர்களுக்கு வாரிசுகள் இருப்பினும் ஆதரவற்றவர்களாக இருந்தால் முதியோர் உதவித் தொகையாக மாதம் ஒன்றுக்கு ரூ.400/- வீதம் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும் முதியோர் ஓய்வூதியம் வழங்க, பின்வரும் ஓய்வூதியத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

வ.எண்	திட்டம்
1.	இந்திரா காந்தி தேசிய முதியோர் ஓய்வூதியத் திட்டம்
2.	ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர் ஓய்வூதியத் திட்டம்
3.	ஆதரவற்ற விதவை ஓய்வூதியத் திட்டம்
4.	கணவனால் கைவிடப்பட்ட/ ஆதரவற்ற பெண்கள் ஓய்வூதியத் திட்டம்
5.	50 வயதினை எட்டி, திருமணம் ஆகாத ஏழைப் பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம்.

2010 நவம்பர் 12]

71—

நஷ்ட ஈடு

வினா எண் 117373—திரு. எம்.என். கந்தசாமி: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கவுண்டம்பாளையம், இடையர்பாளையம் பகுதியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் கையகப்படுத்தப்பட்ட நிலத்திற்கு நஷ்ட ஈடு வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் கோவை மாவட்டம், கவுண்டம்பாளையம் பகுதியில் கையகப்படுத்தப்பட்ட நிலத்திற்கு அதிக இழப்பீடு (நஷ்ட ஈடு) கோரி நில உடமைதாரர்களால் தொடர்ந்துள்ள எல்.ஏ.ஓ.பி. வழக்குகள் கோவை மாவட்ட சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன. நீதிமன்ற தீர்ப்புக்குப் பின் வாரியத்தால் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

72—

கட்டடம்

வினா எண் 103583—திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் நகரில் வாடகைக் கட்டடத்தில் இயங்கும் சார்பதிவாளர் அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தனியார் கட்டடங்களில் இயங்கும் சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு அரசுக் கட்டடம் கட்ட முடிவெடுக்கப்பட்டு, படிப்படியாக ஆண்டுதோறும் கட்டடங்கள் கட்டப்பட்டு வரும் சூழ்நிலையில், நிதி நிலைமைக்கேற்ப காஞ்சிபுரம் நகரில் ஒருங்கிணைந்த கட்டட வளாகம் கட்டுவதற்கு தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

73—

புதிய கட்டடம்

வினா எண் 105748—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை பதிவாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

தனியார் கட்டடங்களில் இயங்கும் சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு அரசுக் கட்டடம் கட்ட முடிவெடுக்கப்பட்டு, படிப்படியாக ஆண்டுதோறும் கட்டடங்கள் கட்டப்பட்டுவரும் சூழ்நிலையில், மானாமதுரை சார்பதிவாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவது தொடர்பாக நிதி நிலைமைக்கேற்ப முடிவெடுக்கப்பட்டு செயல்படுத்தப்படும்.

74—

சொந்தக் கட்டடம்

வினா எண் 104792—திரு. விடியல் எஸ். சேகர்: *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஈரோடு சென்னிமலையில் உள்ள தொழிலாளர் மத்திய ஈட்டுறுதி மருத்துவமனைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட முடிவு செய்வது தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகமாகும். காப்பீட்டு நபர்கள் எண்ணிக்கை 3,000-க்கும் மேல் உள்ள மருந்தகத்திற்கு நிரந்தரக் கட்டடம் கட்ட தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். ஈரோடு சென்னிமலையில் உள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகத்தில் தற்போது 500-க்கும் குறைவான காப்பீட்டு நபர்களே பதிவு செய்துள்ளதால் காப்பீட்டு நபர்களின் எண்ணிக்கை 3,000-க்கும் மேல் உயரும்பட்சத்தில் நிரந்தரக் கட்டடம் கட்ட தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்தாரால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

75—

கட்டடம்

வினா எண் 106927—திருமதி ஜி. லதா: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூரில் உள்ள தொழிலாளர் ஆய்வாளர் அலுவலகத்திற்குக் கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) வேலூரில் உள்ள தொழிலாளர் ஆய்வாளர் அலுவலகத்திற்குக் கட்டடம் கட்டுவது தொடர்பான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

(ஆ) எழாது.

[2010 நவம்பர் 12

76—

அன்னதானத் திட்டம்

வினா எண் 37599—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருக்கழுக்குன்றம், அருள்மிகு வேதகிரீஸ்வர் திருக்கோயிலில் அன்னதானத் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம், அருள்மிகு வேதகிரீஸ்வரர் திருக்கோயில், இந்து சமய அறநிலையத் துறையின் ஆளுகையின்கீழ் உள்ள திருக்கோயில் ஆகும். இத்திருக்கோயிலில் செயல் அலுவலரும், அறங்காவலர் குழுவும் நிருவாகம் பார்த்து வருகின்றனர். இத்திருக்கோயிலின் ஆண்டு வருமானம் ரூ.37.00 இலட்சம் ஆகும். இத்திருக்கோயிலின் நித்தியபடி பூஜை, திருவிழாக்கள், பணியாளர் சம்பளம், மின் கட்டணம் மற்றும் இதர செலவுகள் ஆண்டிற்கு ரூ.36.00 இலட்சம் ஆகிறது. அன்னதானத் திட்டம் செயல்படுத்தக்கூடிய அளவில் நிதி வசதி இல்லாததால் தற்சமயம் இத்திருக்கோயிலில் அன்னதானத்தைச் செயல்படுத்தத் திட்டம் ஏதும் இல்லை.

77—

குடில்கள்

வினா எண் 102275—திரு. கோ. அரி: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி தொகுதி, திருவாலங்காடு ஒன்றியம், திருவாலங் காட்டில் வடாரண்யேஸ்வரர் திருக்கோயிலுக்கு குடில்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

2010 நவம்பர் 12]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

திருவாலங்காடு அருள்மிகு வடாரண்யேஸ்வரசுவாமி திருக்கோயில், திருத்தணி அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலின் உபகோயிலாகும். இது தொண்டை நாட்டு பாடல் பெற்ற திருத்தலங்களுக்குள் 15 ஆவதாகப் போற்றப்படும் திருத்தலம். சிவபெருமான் திருநடனம் புரியும் சபைகளுள் இங்கு அமைந்துள்ள இரத்தின சபையே முதற்சபையாகும். இவ்வாலயத்தில் தற்போது சுற்றுலா நிதியுதவியுடன் திருக்குள நடைபாதை அமைக்கும் பணி, வாகனங்கள் நிறுத்துமிடம், தண்ணீர் கீழ்நோக்குத் தொட்டி கட்டுதல், உயர் மின்விளக்கு அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. தற்போது பக்தர்கள் தங்குவதற்கு குடில்கள் கட்டுவதற்கு உத்தேசம் ஏதுமில்லை.

78—

அலுவலர் நியமனம்

வினா எண் 108694—திரு. அ. [illegible]: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாநகரம், நரசோதிப்பட்டி சென்றாயப் பெருமாள் திருக்கோயிலுக்கு செயல் அலுவலர் நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

சேலம் மாநகரம், நரசோதிப்பட்டி அருள்மிகு சென்றாயப் பெருமாள் திருக்கோயில் மலை உச்சியில் அமைந்துள்ளதால் வாரம் ஒரு நாள் சனிக்கிழமை மட்டும் பூசை செய்யப்படுகிறது. வருடத்திற்கு வரும் சுமார் ரூ.20,000/- வருமானம், திருவிழாவிற்குச் சரியாகி விடுகிறது. இத்திருக்கோயில் பரம்பரை அறங்காவலர், இலாகா சட்ட திட்டங்களுக்குட்பட்டு நிருவகித்து வருவதால்

இத்திருக்கோயிலுக்கு செயல் அலுவலர் நியமனம் செய்து நிருவாகம் பார்க்கும் அளவிற்கு கணிசமான வருமானமோ, நிருவாகத்தில் நிர்ப்பந்தமோ இல்லை என்பதால் மேற்படி திருக்கோயிலுக்கு இந்து சமய அறநிலைக் கொடைகள் சட்டப்பிரிவு *45(1)*-ன்கீழ் செயல் அலுவலர் நியமனம் செய்யும் அவசியம் எழவில்லை.

79—

கோவில் திருப்பணி

வினா எண் 11449—திரு. கி. ஆறுமுகம்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மாமல்லபுரம், அருள்மிகு தலசயனப் பெருமாள் திருக்கோயில் திருத்தேர் திருப்பணியை விரைந்து முடிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு தொகுதி, மாமல்லபுரம் அருள்மிகு தலசயனப் பெருமாள் திருக்கோயிலுக்குப் புதிதாக மரத்தேர் ரூ.*14.00* இலட்சம் மதிப்பீட்டில் உபயதாரர்கள் மூலம் செய்யப்பட்டுள்ளது. விரைவில் புதிய திருத்தேரினை வெள்ளோட்டம் விட உரிய ஏற்பாடுகள் திருக்கோயில் நிருவாகத்தால் செய்யப்பட்டு வருகின்றன.

80—

சுற்றுச் சுவர்

வினா எண் 80142—திரு. இல. வேலுசாமி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரி தொகுதி, டொக்குபோதனஅள்ளி ஊராட்சி, கெட்டுப்பட்டி நடுநிலைப் பள்ளிக்கு சுற்றுச் சுவர் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி தொகுதி டொக்குபோதனஅள்ளி ஊராட்சி, கெட்டுப்பட்டி நடுநிலைப் பள்ளிக்கு சுற்றுச் சுவர் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

81—

நூலகம்

வினா எண் 97[illegible]—திரு. அ. [illegible]: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நீலகிரி மாவட்டம், உதகை நகரின் மையப் பகுதியில் நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

நீலகிரி மாவட்டம், உதகை நகரின் மையப் பகுதியில் நூலகம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

82—

தண்ணீர்த் தொட்டி

வினா எண் 115303—திரு. இல. வேலுசாமி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரி ஒன்றியம், வெள்ளோலை ஊராட்சி, நரசிங்கபுரம் கோம்பை நடுநிலைப் பள்ளிக்கு சிறிய தண்ணீர்த் தொட்டி வசதி செய்யவும், சுற்றுச் சுவர் கட்டவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி ஒன்றியம், வெள்ளோலை ஊராட்சி, நரசிங்கபுரம் கோம்பை நடுநிலைப் பள்ளிக்கு சுற்றுச் சுவர் கட்டவும், தண்ணீர்த் தொட்டி வசதி செய்யும் கருத்துரு ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

83—

மண்வளப் பாதுகாப்பு

வினா எண் 8529—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) உடுமலைப்பேட்டை வட்டம், மேற்குத் தொடர்ச்சி மலை பழங்குடியினர் வாழும் தளிஞ்சி, கோடந்தூர், மாவடப்பு போன்ற இடங்களில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ள அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை வட்டம், மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் பழங்குடியினர் வாழும் தளிஞ்சி மற்றும் மாவடப்பில் 2009-2010 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட மண்வளப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:

மாவடப்பு பகுதி:

(i) *ரூ.2,70,000 செலவில் தடுப்பணை கட்டி குழாய்கள் அமைத்து குடிநீர் வசதி செய்து தர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.*

2010 நவம்பர் 12]

(ii) ரூ.1,00,000 செலவில் தடுப்பணை கட்டப்பட்டுள்ளது.

(iii) ரூ.1,00,000 செலவில் மண் சரிவினை தடுக்க ஏதுவாக தடுப்புச் சுவர் கட்டப்பட்டுள்ளது.

தளிஞ்சி பகுதி:—

தளிஞ்சி பகுதியில் ஜம்பு மலை அடிவாரத்தில் ரூ.50,000 செலவில் தடுப்பணையில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும் தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் மாவடப்பு, தளிஞ்சி, கோடந்தூர் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்பு பணிகள் மேற்கொள்வது குறித்து செயற்குறிப்புகள் ஆய்வில் உள்ளன.

84—

தார்ச் சாலை

வினா எண் 113182—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, கூ. குட்டப்பட்டி ஊராட்சி, காஞ்சேரியில் உள்ள வனத் துறைக்குச் சொந்தமான சாலையை தார்ச்சாலையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி, கூ. குட்டப்பட்டி ஊராட்சி, காஞ்சேரியில் உள்ள வனத் துறைக்குச் சொந்தமான சாலை என்பது டேனிஷ்பேட்டை முதல் சேலம் வரையிலான காஞ்சேரி, குரும்பப்பட்டி கிராமங்கள் வழியாகச் செல்லும் பாதையாகும். இப்பாதை சேலம்-ஏற்காடு சாலையிலிருந்து பிரிந்து குரும்பப்பட்டி உயிரியல் பூங்கா, குரும்பப்பட்டி கிராமம் வழியாக காஞ்சேரி வரை காப்புக்காட்டினூடே சுமார் 10.50 கி.மீ. தூரம் செல்கிறது. காஞ்சேரி முதல் டேனிஷ்பேட்டை வரையுள்ள சாலை காப்புக்காட்டின் வெளியே அமைந்துள்ளது. மேற்காணும் 10.50 கி.மீ. தூரம் உள்ள சாலை, கப்பிச் சாலையாக அமைக்கப்பட்டுள்ளது.

இது குரும்பபப்பட்டி, பன்னிக்கரடு மற்றும் காஞ்சேரி காப்புக்காடுகளில் வனப் பாதுகாப்பிற்காக ரோந்து செல்ல வனப் பணியாளர்களின் உபயோகத்திற்காக உள்ளது. இதில் 4.00 கி.மீ. தூரத்திற்கு 2006-2007 ஆம் நிதியாண்டில் சாலை மேம்பாட்டுப் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. மீதமுள்ள 6.50 கி.மீ. தூரத்திற்கு மேம்பாட்டுப் பணி மேற்கொள்வது, வனப் பாதுகாப்புச் சட்ட விதி முறைகளுக்கு உட்பட்டு பரிசீலிக்கப்படும்.

85—

குரங்குத் தொல்லையைத் தடுத்தல்

வினா எண் 117403—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், சென்னிமலையில் குரங்குகளினால் ஏற்படும் தொல்லையினைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னிமலையில் குரங்குகளால் ஏற்படும் தொல்லைகளைத் தடுக்க தக்க நடவடிக்கைகள் வனத் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பொது மக்களிடமிருந்தும், காவல் துறையிடமிருந்தும் குரங்குத் தொல்லை பற்றி புகார்கள் வரும்பொழுதெல்லாம் ஈரோடு வனச் சரகப் பணியாளர்கள்மூலம் தொல்லை தரும் குரங்குகள் அவ்வப்போது கூண்டு வைத்து பிடிக்கப்பட்டு அந்தியூர் வனச் சரகப் பகுதியில் கொண்டு விடப்படுகின்றன.

86—

அடிகுழாய்

வினா எண் 12215—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம் அ.வெள்ளைக்கரை அருந்ததியர் குடியிருப்புக்கு அடிகுழாய் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 நவம்பர் 12]

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், அல்லிநகரம் ஊராட்சியைச் சேர்ந்த அ. வெள்ளக்கரை கிராமத்தில் உள்ள அருந்ததியர் குடியிருப்பில் தற்போது ஒரு கைப்பம்பும், சிறு விசைப்பம்பும், மேல்நிலைத் தொட்டியின்மூலம் பொதுக் குழாய் இணைப்புகளும் வழங்கப்பட்டுள்ளன. இக்குடியிருப்பின் மக்கள் தொகைக்கு ஏற்ப குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது.

87—

குடிநீர் வசதி

வினா எண் 12216—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, கலியனேந்தல் கிராம ஆதி திராவிடர் குடியிருப்புக்குக் குடிநீர் வசதி செய்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை ஊராட்சி ஒன்றியம், அரசகுளம் ஊராட்சி, கலியனேந்தல் கிராமத்தில் ஆதி திராவிடர் குடியிருப்பில் ஒரு கைப்பம்பும், ஒரு சிறு விசைப்பம்பும் செயல்பட்டு வருகிறது. மேலும் இக்குடியிருப்பின் அருகிலுள்ள பொட்டப்பச்சேரி மேல்நிலைத் தொட்டி கூட்டுக் குடிநீர் திட்டத்தில் பொதுக் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

88—

சிமெண்ட் சாலை

வினா எண் 12218—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2010 நவம்பர் 12

(அ) மானாமதுரை தொகுதி, குவளைவேலி ஆதி திராவிடர் காலனியில் சிமெண்ட் சாலை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி. ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, குவளைவேலி ஆதி திராவிடர் காலனியில் ஊரக கட்டமைப்பு திட்டம் 2008-09-ன்கீழ் ஊராட்சி ஒன்றியப் பங்கிலிருந்து சிமெண்ட் சாலை அமைக்கப்பட்டுள்ளது.

89—

சிமெண்ட் சாலை

வினா எண் 12219—திரு. ப. குணசேகரன்: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, மானம்பாக்கி ஆதி திராவிடர் குடியிருப்புக்குள் சிமெண்ட் சாலை அமைத்துத் தர அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, மானம்பாக்கி ஆதி திராவிடர் நல குடியிருப்பு பகுதிக்கு 2006-2007 ஆம் ஆண்டு கனிம வள நிதித் திட்டத்தின்கீழ் சிமெண்ட் சாலை அமைக்கப்பட்டுள்ளது.

90—

நடைபாதை

வினா எண் 12262—திரு. ப. குணசேகரன்: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2010 நவம்பர் 12]

(அ) மானாமதுரை தொகுதி, மேலப்பிடாவூர் ஆதி திராவிடர் குடியிருப்பிற்கு நடைபாதை வசதி அமைத்துத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மாநில நிதிக் குழு மானியம் 2008-2009 திட்டத்தின்கீழ் (மாவட்ட ஊராட்சி பங்கு) மேலப்பிடாவூர் ஆதி திராவிடர் நல காலனியில் சிமெண்ட் சாலை அமைக்கப்பட்டுள்ளது.

91—

குடிநீர் விசைப்பம்பு

வினா எண் 12263—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, விளத்தூர் ஆதி திராவிடர் காலனியில் குடிநீர் விசைப்பம்பு அமைத்துத் தர அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை ஊராட்சி ஒன்றியம், விளத்தூர் ஊராட்சியை சேர்ந்த விளத்தூர் ஆதி திராவிடர் காலனியில் 2001 ஆம் ஆண்டின் மக்கள்தொகைப்படி 113 பேர்கள் வசித்து வருகின்றனர் எனவும், இக்குடியிருப்பில் ஒரு கைப்பம்பும், ஆவரங்காடு கூட்டுக் குடிநீர் திட்டத்தின்மூலம் 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலைத் தொட்டியும் தற்போது செயல்பட்டு வருகிறது. எனவே, மக்கள்தொகைக்கு ஏற்ப குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

[2010 நவம்பர் 12

92—

மயானச் சாலை

வினா எண் 33054—திரு. த.அ. மேகநாதன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பரா—

(அ) காவேரிப்பட்டினம் தொகுதி, பண்ணந்தூர் கிராமத்தில் ஆதி திராவிடர்களுக்கு மயானச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் தொகுதி, பண்ணந்தூர் கிராமத்தில் புல எண் 368 அரசுப் (மேய்ச்சல் தரை) புறம்போக்கு நிலத்தை ஆதி திராவிட மக்கள் மயானமாகப் பயன்படுத்தி வருகின்றனர். மேற்காணும் மயானத்திற்கு புல எண்கள் 372/23, 373/8, 374/4 ஆகிய புலங்களின் வழியாக 2008 ஆம் ஆண்டு மயானப் பாதை அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. அப்பாதை பயன்பாட்டில் உள்ளது.

93—

சுற்றுச் சுவர்

வினா எண் 75556—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதி, நெரும்பூர் அரசு ஆதி திராவிடர் நடுநிலைப் பள்ளிக்குச் சுற்றுச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 நவம்பர் 12]

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 70, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 13-6-2008-ன்படி செங்கல்பட்டு தொகுதிக்குட்பட்ட நெரும்பூர் ஆதி திராவிடர் நடுநிலைப் பள்ளி உயர்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்தப்பட்டுள்ளது. அவ்வரசாணையில் இப்பள்ளிக்கு சுற்றுச் சுவர் கட்ட ரூ. 6.00 இலட்சம் அனுமதித்து கட்டுமானப் பணிகள் தாட்கோமூலம் நடைப்பெற்று வருகின்றன.

94—

தரம் உயர்த்துதல்

வினா எண் 75906—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவாரூர் மாவட்டம், சவளக்காரன் ஆதி திராவிடர் நல உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், சவளக்காரன் ஆதி திராவிடர் நல உயர்நிலைப் பள்ளி, அரசாணை (நிலை) எண் 76, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 16-7-2009-ன்படி மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்டு, மேல்நிலைப் பள்ளியாகச் செயல்பட்டு வருகிறது.

95—

விட்டுமனைப் பட்டா

வினா எண் 97885—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2010 நவம்பர் 12

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டத்திலுள்ள ஆதி திராவிடர்களுக்கு நிலம் கையகப்படுத்தி பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், வேதியரேந்தல் கிராமத்தில் சர்வே எண் 58/1பி-ல் 3.540 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்தப்பட்டு, 2008-2009 ஆம் நிதியாண்டில் 114 பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

96—

மீன் விற்பனை நிலையம்

வினா எண் 75820—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூரில் மீன் விற்பனை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூரில் மெயின் ரோட்டில் உள்ள வீட்டு வசதி வாரிய குடியிருப்புக்கு அருகில் மீன் வறுவல் விற்பனை அங்காடி ஒன்றும், வட்டாட்சியர் அலுவலகத்திற்கு அருகில் ஒரு மீன் வறுவல் விற்பனை அங்காடியும், ஆக மொத்தம் திருப்பத்தூரில் இரண்டு மீன் வறுவல் விற்பனை அங்காடிகள் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின்மூலம் நடத்தப்பட்டு வருகின்றன. இவ்விரண்டு விற்பனை அங்காடிகளும், திருப்பத்தூர் மக்களின் மீன் தேவையைக் கூடுமானவரை பூர்த்தி செய்கின்றன. எனவே, இவ்விரண்டு மீன் விற்பனை அங்காடிகளையும். மீன் விற்பனை நிலையங்களாகக் கருதலாம். எனவே, வேலூர் மாவட்டம். திருப்பத்தூரில் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் மற்றும் மீன்வளத் துறை மூலம் மீண்டும் தனியாக மீன் விற்பனை நிலையம் அமைக்க அரசிடம் திட்டம் ஏதுமில்லை.

2010 நவம்பர் 12]

97—

மீன் வளர்ப்பு

வினா எண் 107721—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நன்நீர் உயர் ரக மீன் வளர்ப்பு முறையை ஊராட்சிதோறும் நடைமுறைப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

தமிழக அரசு, நன்னீர் உயர் ரக மீன் வளர்ப்பு முறையை, ஊராட்சிதோறும் நடைமுறைப்படுத்த அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின்மூலம் ஆவன செய்துள்ளது. இத்திட்டத்தின்மூலம், அனைத்து கிராமங்களிலுள்ள, கிராம ஊராட்சி, சிறு பாசன ஏரிகள் மற்றும் குளங்கள் மீன் வளர்ப்புக்கென தேர்வு செய்யப்பட்டு, ஊராட்சிதோறும் ரூ.25,000/- செலவிடப்பட்டு வருகின்றது. இத்திட்டம், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தில் குளங்களைத் தேர்வு செய்வது, மீன் குஞ்சுகளை இருப்பு செய்தல் போன்ற பணிகளில் மீன் துறை அலுவலர்கள் ஈடுபட்டு வருகின்றனர். இத்திட்டம், கடந்த 2007 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. மேலும், தேசிய மீன்வள அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் 2009-2010 ஆம் ஆண்டில் கொளவாய் ஏரியில் 8.40 இலட்சம் மீன் குஞ்சுகள் இருப்பு செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, அதில் 10,00,000 சிறு மீன் குஞ்சுகள் மிதவைக் கூடுகளில் வளர்த்தெடுக்க நிருவாக அனுமதி வழங்கப்பட்டு, தற்போது பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில், மொத்தம் உள்ள 129 ஊராட்சிகளில், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் ஊராட்சித் தலைவர்களுடன் சேர்ந்து கூட்டாய்வு செய்து குளங்களில் மீன் வளர்ப்புக்கென போதிய நீர் உள்ளதா என்று ஆராய்ந்த பின்னர் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

[2010 நவம்பர் 12

98—

எருமைப் பால்

வினா எண் 106947—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி, கன்னியாகுமரி, நாகர்கோவில், தருமபுரி, நீலகிரி, இராமநாதபுரம், திருநெல்வேலி, கோயம்புத்தூர், திருப்பூர், தேனி ஆகிய மாவட்டங்களில் பொதுமக்கள், எருமைப் பால் அதிகமாக வாங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை-

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எருமைப் பால் உற்பத்தியில் உள்ள அனுகூலங்களை விளம்பரப்படுத்துதல் மற்றும் உற்பத்தியின் அவசியம் குறித்து பிரச்சாரம் செய்ய கீழ்க்கண்டவாறு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

எருமைப் பாலின் உற்பத்தியைப் பெருக்கும்பொருட்டு, பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு கிராமப்புற மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் அமைக்கப்படும் ஒருங்கிணைந்த பால் பெருக்குத் திட்டத்தின்கீழ் வாங்கப்படும் கறவை மாடுகளில் 30 சதவிகிதம் எருமை மாடுகளாக வாங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2007-2008 முதல் தேசிய விவசாய மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் எருமைக் கன்றுகள் வளர்க்கும் பிரத்தியேக திட்டம் அமல்படுத்தப்பட்டு பால் உற்பத்தியாளர்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது.

தமிழக அரசு, கடந்த 3 ஆண்டுகளில், எருமைப் பாலின் விலையை ஆண்டுதோறும் படிப்படியாக உயர்த்தி உத்தரவிட்டதன் பேரில் தற்போது கொள்முதல் விலையாக லிட்டருக்கு ரூ.23.00 வழங்கப்பட்டு வருகிறது.

எருமைப் பாலில் உள்ள அனுகூலங்களை விளம்பரப்படுத்திட சங்கத்தில் அறிவிப்புப் பலகைகள் வைக்கப்படுகின்றன. கிராமங்களில் இது குறித்து அறிவிப்புகளும் வழங்கப்படும். பிரதம பால் உற்பத்தி கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு, பயிற்சிக் காலங்களில், எருமைப் பால் உற்பத்தி செய்வதில் உள்ள

2010 நவம்பர் 12]

அனுகூலங்கள், திடமான பால்பொடி, வெண்ணெய், ஏற்றுமதித் தரமுள்ள நெய் போன்றவை பற்றி எடுத்துரைக்கப்படுகிறது.

99—

எருமைப் பாலின் பலன்கள்

வினா எண் 107114—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம், திருநெல்வேலி, கோயம்புத்தூர், திருப்பூர், தேனி, கரூர், அரியலூர், தஞ்சாவூர், பெரம்பலூர், மதுரை, விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் எருமைப் பாலில் உள்ள பலன்களை பொதுமக்களுக்கு விளம்பரத்தின்மூலம் பிரச்சாரம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எருமைப் பால் உற்பத்தியில் உள்ள அனுகூலங்களை விளம்பரப்படுத்துதல் மற்றும் உற்பத்தியின் அவசியம் குறித்து பிரச்சாரம் செய்ய கீழ்க்கண்டவாறு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

எருமைப் பாலின் உற்பத்தியைப் பெருக்கும்பொருட்டு பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு கிராமப்புற மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் அமைக்கப்படும் ஒருங்கிணைந்த பால் பெருக்குத் திட்டத்தின்கீழ் வாங்கப்படும் கறவை மாடுகளில் 30 சதவிகிதம் எருமை மாடுகளாக வாங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2007-2008 முதல் தேசிய விவசாய மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் எருமைக் கன்றுகள் வளர்க்கும் பிரத்தியேக திட்டம் அமல்படுத்தப்பட்டு பால் உற்பத்தியாளர்களிடம் நல்ல வரவேற்பினைப் பெற்றுள்ளது.

தமிழக அரசு, கடந்த 3 ஆண்டுகளில், எருமைப் பாலின் விலையை ஆண்டுதோறும் படிப்படியாக உயர்த்தி உத்தரவிட்டதன் பேரில் தற்போது கொள்முதல் விலையாக லிட்டருக்கு ரூ.23.00 வழங்கப்பட்டு வருகிறது.

[2010 நவம்பர் 12

எருமைப் பாலில் உள்ள அனுகூலங்களை விளம்பரப்படுத்திட சங்கத்தில் அறிவிப்புப் பலகைகள் வைக்கப்படுகின்றன. கிராமங்களில் இது குறித்து அறிவிப்புகளும் வழங்கப்படும். பிரதம பால் உற்பத்தி கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு, பயிற்சிக் காலங்களில், எருமைப் பால் உற்பத்தி செய்வதில் உள்ள அனுகூலங்கள், திடமான பால் பொடி, வெண்ணெய், ஏற்றுமதித் தரமுள்ள நெய், எருமைப் பாலில் செய்யப்படும் பால் பொருட்களின் வரவேற்பு போன்றவைபற்றி எடுத்துரைக்கப்படுகிறது.

100—

எருமைப் பால்

வினா எண் 107125—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு, சென்னை, விருதுநகர், திருவாரூர், நாகப்பட்டினம், நாமக்கல், ஈரோடு, திருச்சிராப்பள்ளி, கடலூர், சேலம், திருவள்ளூர், காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களில் எருமைப் பாலில் உள்ள பலன்களை பொதுமக்களுக்கு விளம்பரத்தின்மூலம் பிரச்சாரம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* எருமைப் பாலின் உற்பத்தியைப் பெருக்கும் பொருட்டு, பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு கிராமப்புற மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் அமைக்கப்படும் ஒருங்கிணைந்த பால் பெருக்குத் திட்டத்தின்கீழ் வாங்கப்படும் கறவை மாடுகளில் 30 விழுக்காடு எருமை மாடுகளாக வாங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2007-2008 ஆம் ஆண்டு முதல் தேசிய விவசாய மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் எருமைக் கன்றுகள் வளர்க்கும் பிரத்தியேக திட்டம் அமல்படுத்தப்பட்டு, இத்திட்டம் பால் உற்பத்தியாளர்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2010 நவம்பர் 12]

பால் உற்பத்தியாளர்களுக்கு கடந்த 3 ஆண்டுகளில், எருமைப் பாலின் விலையைப் படிப்படியாக உயர்த்தி தற்போது கொள்முதல் விலையாக லிட்டருக்கு ரூ. 23.00 வழங்கப்பட்டு வருகிறது.

மாவட்ட ஒன்றியங்களின் பொது மேலாளர்கள் எருமைப் பாலில் உள்ள அனுகூலங்களை விளம்பரப்படுத்திட அறிவுறுத்தப் பட்டுள்ளனர். பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்படும் பயிற்சிக் காலங்களில், எருமைப் பால் உற்பத்தி செய்வதில் உள்ள அனுகூலங்கள், திடமான பால்பொடி, வெண்ணெய், ஏற்றுமதித் தரமுள்ள நெய் மற்றும் எருமைப் பாலில் செய்யப்படும் பால் பொருட்களின் வரவேற்பு போன்றவை பற்றி எடுத்துரைக்கப்படுகின்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பட்டியல் 2

1—

காவல் நிலையம்

வினா எண் 38119—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இளையான்குடி வட்டம், தாயமங்கலத்தில் காவல் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இளையான்குடி வட்டம், தாயமங்கலம் சிறிய கிராமமாகும். இக்கிராமத்தில் மூன்று குக்கிராமங்கள் மட்டுமே உள்ளடங்கியுள்ளன. கடந்த ஐந்தாண்டுகளில் பதிவான குற்ற நிகழ்வுகள் மிக மிகக் குறைவு. இவ்விவரத்தினைக் கருத்தில் கொண்டு தற்போது தாயமங்கலம் கிராமத்தில் காவல் நிலையம் அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

2—

புறக்காவல் நிலையம்

வினா எண் 76826—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, சென்னிமலை—ஊத்துக்குளி சாலையில் ஆலமரம் பகுதியில் புதிய புறக்காவல் நிலையம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காங்கேயம் தொகுதி, சென்னிமலை-ஊத்துக்குளி சாலையில் ஆலமரம் பகுதியில் புறக்காவல் நிலையம் துவக்குவது குறித்த கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

3—

மகளிர் காவல் நிலையம்

வினா எண் 81351—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிபட்டி வட்டத்தில் அனைத்து மகளிர் காவல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

தருமபுரி மாவட்டத்தில் 3 உட்கோட்டங்களுக்கு முறையே 3 மகளிர் காவல் நிலையங்கள் அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றன. அதில் ஹரூர் உட்கோட்டத்தில் பாப்பிரெட்டிபட்டி வட்டம் உள்ளது. அவ்வுட்கோட்டத்தில் மகளிர் காவல் நிலையம் இயங்கி வருகிறது. எனவே, பாப்பிரெட்டிபட்டியில் ஒரு மகளிர் காவல் நிலையம் துவங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

2010 நவம்பர் 12]

4—

புறக்காவல் நிலையம்

வினா எண் 87861—திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குடி தொகுதி, ஆவணத்தாங்கோட்டையில் புறக்காவல் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

ஆலங்குடி தொகுதி, ஆவணத்தாங்கோட்டையில் புறக்காவல் நிலையம் அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

5—

காவல் நிலையம்

வினா எண் 92608—திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், அனுமந்ததீர்த்தத்தில் காவல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், அனுமந்ததீர்த்தத்தில் காவல் நிலையம் அமைப்பது குறித்த கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2010 நவம்பர் 12

6—

காவல் நிலையம்

வினா எண் 93283—திரு. கே. பொன்னுசாமி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை ஒன்றியம், செங்கரையில் காவல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை ஒன்றியம், செங்கரையில் காவல் நிலையம் அமைப்பது குறித்த கருத்துரு ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

7—

பரிவுத் தொகை

வினா எண் 107741—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அர்த்தநாரீஸ்வர வர்மா, வரலாற்று ஆசிரியர் சதாசிவப் பண்டாரத்தார் ஆகியோரின் நூல்களை நாட்டுடைமையாக்கி, அதற்கு உரிய தொகையை அவர்களின் குடும்பத்திற்கு வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

வரலாற்றுப் பேராசிரியர் சதாசிவப் பண்டாரத்தார் அவர்களின் நூல்கள் 2006-2007 ஆம் ஆண்டில் நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்தம் மரபுரிமையர்களுக்குப் பரிவுத் தொகை ரூ.6.00 இலட்சம் அரசால் வழங்கப்பட்டுள்ளது. திரு. அர்த்தநாரீஸ்வர வர்மா அவர்களின் மரபுரிமைகள் அவரின் நூல்களை நாட்டுடைமையாக்கக் கோரும் நிலையில் அரசால் நாட்டுடைமையாக்கப்பட கருதிப் பார்க்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY ... ALONE TRIUMPHS

2010 நவம்பர் 12]

8—

கச்சா விடுகள்

வினா எண் 2801—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன்புதூர் சிறப்பு ஊராட்சிக்கு கச்சா வீடுகள் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கோட்டூர் பேரூராட்சியில் கச்சா வீடுகள் கட்டித் தரும் திட்டம் தற்போது ஏதுமில்லை.

9—

குடிநீர்

வினா எண் 3678—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர் சிறப்பு ஊராட்சி, ஆர்.கே. நகர் பகுதிகளில் கூடுதல் குடிநீர் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு கொள்ளளவு குடிநீர் வழங்க இயலும்?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் பேரூராட்சிக்குட்பட்ட ஆர்.கே. நகரில் சுமார் 143 குடும்பங்கள் உள்ளன. இதன் மக்கள்தொகை சுமார் 575 பேர் ஆகும். இப்பகுதிகளில் உள்ள 143 குடும்பங்களில் 80 குடும்பங்களுக்கு

காவிரிக் குடிநீர், வீட்டு இணைப்புகள்மூலம் வழங்கப்பட்டுள்ளது. அப்பகுதியில் உள்ள 575 நபர்களுக்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 130 லிட்டர் வீதம் நாள் ஒன்றுக்கு 0.75 இலட்சம் லிட்டர் காவிரிக் குடிநீர் நல்ல முறையில் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

10—

குடிநீர் இணைப்பு

வினா எண் 6871—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமலூர் வார்டு எண் 10-ல் சுகந்தம் நகரில் கூடுதலாக இரண்டு குடிநீர்க் குழாய் இணைப்புகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் பேரூராட்சிக்குட்பட்ட 10-வது வார்டு சுகந்தம் நகர் பகுதியில் 171 குடும்பங்கள் உள்ளன. இதன் மக்கள்தொகை சுமார் 685 ஆகும். இப்பகுதியில் உள்ள 171 குடும்பங்களில் 120 குடும்பங்களுக்கு காவிரிக் குடிநீர் வீட்டு இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. தற்போது ஒரு நாள் விட்டு ஒரு நாள் 100 இலட்சம் லிட்டர் வீதம் காவிரிக் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இது தவிர இப்பகுதியில் ஏற்கெனவே ஒரு ஆழ்துளைக் கிணறு மற்றும் சின்டெக்ஸ் டேங்க் அமைக்கப்பட்டு அதன்மூலம் குடிநீர் விநியோகம் நல்ல முறையில் செய்யப்பட்டு வருகிறது.

11—

ஆழ்துளைக் கிணறு

வினா எண் 6872—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமலூர் வார்டு எண் 11-ல் ஆழ்துளைக் கிணறு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 நவம்பர் 12]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் பேரூராட்சிக்குட்பட்ட 11-வது வார்டு பகுதியில் சுமார் 332 குடும்பங்கள் உள்ளன. இதன் மக்கள்தொகை சுமார் 1,420 ஆகும். இப்பகுதியில் உள்ள 332 குடும்பங்களில் 110 குடும்பங்களுக்கு காவிரிக் குடிநீர் வீட்டு இணைப்புகள் வழங்கப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. மேலும், இப்பகுதியில் தற்போது ஒரு நாள் விட்டு ஒரு நாள் 1.90 இலட்சம் லிட்டர் வீதம் காவிரிக் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இது தவிர இப்பகுதி மக்களுக்காக மேட்டூர் - ஆத்தூர் கூட்டுக் குடிநீர் திட்டத்திலிருந்து போதுமான அளவு குடிநீர் விநியோகம் நல்ல முறையில் செய்யப்பட்டு வருகிறது. இருப்பினும், நடப்பாண்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு பெற்று மேற்படி பகுதியில் புதியதாக ஆழ்துளைக் கிணறு அமைத்துக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

12—

விழுக்காடு மானியம்

வினா எண் 13881—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் வட்டத்தை தொழிலில் பின்தங்கிய பகுதியாக அறிவித்து தொழில் தொடங்குவோருக்கு 25 விழுக்காடு மானியம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

தமிழக அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான புதிய தொழில் கொள்கை (அரசாணை எண் 14), 7-5-2008-ல் அறிவிக்கப்பட்டுள்ளது. அதில் அரசின் ஊக்கத் தொகை மற்றும் இதர சலுகைகள் குறித்தும் சலுகைகள் பெறுவதற்கான பின்தங்கிய பகுதிகள் குறித்தும் அரசு அறிவித்துள்ளது. காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள திருக்கழுக்குன்றம் பின்தங்கிய பகுதியாக மேற்கூறிய அரசாணையில் அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே, அதன்படி திருக்கழுக்குன்றத்தில் தொழில் தொடங்குவோருக்கு இயந்திர தளவாடங்களின் விலையில் 15 விழுக்காடு மானியமாக (ரூ.30 இலட்சத்திற்கு மிகாமல்) வழங்கப்படும்.

[2010 நவம்பர் 12

13—

அடிப்படை வசதிகள்

வினா எண் 23088—திரு. கே.வீ. ராமநாதன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானி தொகுதி, ஓடத்துறை கிராமம், அண்ணா நகர் ஆதி திராவிடர் மக்களுக்கு குடிநீர் வசதியும், கழிப்பிட வசதியும், ரங்கன்காட்டூர் ஆதி திராவிடர் காலனியில் வடிகால் வசதியும், பாலப்பாளையத்திற்கு வடிகால் வசதியும் ஏற்படுத்த அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள பணிகளான 1. அண்ணா நகர் ஆதி திராவிட மக்களுக்கு குடிநீர், கழிப்பிட வசதி, 2. ரங்கன்காட்டூர் ஆதி திராவிடர் காலனி வடிகால் வசதி, 3. பாலப்பாளையத்தில் வடிகால் வசதி ஏற்படுத்துதல் போன்றவை 2010-2011 ஆம் நிதி ஆண்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்மூலம் மேற்கொள்ள முன்னுரிமைப் பட்டியல் தயாரிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

14—

அடிப்படை வசதிகள்

வினா எண் 30760—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, சென்னிமலை ஒன்றியம், முகாசிபிடாரியூர், மின்னகாடு, சக்தி நகர், மாரியப்பா நகர் ஆகிய பகுதிகளுக்கு சாலை, சாக்கடை மற்றும் மின் விளக்கு வசதிகள் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 நவம்பர் 12]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னிமலை ஊராட்சி ஒன்றியம், முகாசிபிடாரியூர் ஊராட்சியில் பழுதடைந்துள்ள சாலைகள் 12-வது நிதிக் குழு மானியத் திட்டம் அல்லது நபார்டு திட்டத்தில் விதிமுறைகளுக்கு உட்பட்டு தேர்வு செய்து, சீர் செய்து கொடுக்கப்படும். மேலும், சாக்கடை மற்றும் மின் விளக்குப் பணிகளை அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் தேர்வு செய்து, வரும் நிதியாண்டில் (2010-2011) செய்து கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

15—

அடிப்படை வசதிகள்

வினா எண் 30764—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னிமலை ஒன்றியம், ஒட்டப்பாறை பஞ்சாயத்து, கொளத்துப்பாளையம் பகுதிக்கு மேல்நிலை குடிநீர்த் தொட்டி, தார்ச்சாலை, சாக்கடை வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒட்டப்பாறை ஊராட்சி, கொளத்துப்பாளையத்தில் மேல்நிலைத் தொட்டி கட்டும் பணி தற்போது முடிவுற்றது. ஒரு வார காலத்திற்குள் குடிநீர் விநியோகம் செய்யப்படும். பொது நிதியில் தற்போது போதுமான நிதி வசதி பெற்றதும், விதிமுறைகளுக்கு உட்பட்டு, 2010-2011 ஆம் ஆண்டு அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில், முகாசிபிடாரியூர் ஊராட்சியில் தார்ச்சாலைகள் மேம்பாடு செய்யும் பணிகள் தேர்வு செய்யப்படும் பொழுது, மேற்குறிப்பிட்ட சாலை ஒட்டப்பாறை மற்றும் முகாசிபிடாரியூர் ஊராட்சியினைச் சார்ந்து வருவதால் விதிமுறைகளின்படி முன்னுரிமை அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[2010 நவம்பர் 12

16—

அடிப்படை வசதிகள்

வினா எண் 30819—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, சென்னிமலை ஒன்றியம், மைலாடி ஆதி திராவிடர் காலனி பகுதிக்கு தெரு விளக்கு, சாக்கடை, தொலைக்காட்சி பெட்டி அறை அமைக்கவும், எக்கட்டாம்பாளையம் ஊராட்சி, தட்டாங்காட்டுப்புதூர் ஆகிய பகுதிகளுக்கு சாக்கடை வசதியும் செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னிமலை ஊராட்சி ஒன்றியம், குமார வலசு ஊராட்சி, மைலாடி ஆதி திராவிடர் காலனியில் வரும் 2010-2011 நிதியாண்டில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் தேர்வு செய்யப்பட்டு, தெருவிளக்கு அமைக்கப்படவும், சாக்கடை வசதி செய்து கொடுக்கவும் நிதி ஒதுக்கீடு கிடைத்தவுடன் நடவடிக்கை எடுக்கப்படும். தொலைக்காட்சி அறை ஊராட்சி நிதியின்மூலம் கட்டித்தர நடவடிக்கை எடுக்கப்படும். எக்கட்டாம்பாளையம் ஊராட்சியில் தட்டாங்காட்டுப்புதூரில் 2010-2011 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியப் பொது நிதியில் நிதி வசதி அபிவிருத்தி ஏற்பட்டதும் சாக்கடை வசதிப் பணியினை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

17—

கட்டட வசதி

வினா எண் 31242—திரு. பெ.சு. விஜயகுமார்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், எடப்பிறை ஊராட்சி, சோமந்தபுத்தூர் பள்ளிக்குக் கூடுதல் கட்டடமும், சுற்றுச் சுவரும் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 நவம்பர் 12]

விடை.—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் ஊராட்சி ஒன்றியம், எடப்பிறை ஊராட்சி, சோமந்தபுத்தூர் பள்ளி சுற்றுப்புறச் சுவர் ஊரக கட்டமைப்புத் திட்டத்தின்கீழ் ரூ.4,00,000/- மதிப்பீட்டில் எடுத்துச் செய்து, பணிகள் முடிக்கப்பட்டு, தற்பொழுது பயன்பாட்டில் உள்ளன. மேலும், மேற்படி பள்ளிக்கு கூடுதல் கட்டடம் கட்ட அனைவருக்கும் கல்வி இயக்கத் திட்டத்தின்கீழ் 2010-2011 ஆம் ஆண்டில் முன்னுரிமை அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

18—

கட்டட வசதி

வினா எண் 44378—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, முத்துநாய்க்கன்பட்டி ஊராட்சி, புதூர்காடம்பட்டி ஊராட்சி ஒன்றியப் பள்ளிக்கு கூடுதல் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, முத்துநாய்க்கன்பட்டி ஊராட்சி, புதூர்காடம்பட்டி ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் தற்பொழுது பயிலும் மாணாக்கர்களின் எண்ணிக்கைக்கேற்ப போதுமான கட்டடங்கள் உள்ளதால், மேற்படி பள்ளிக்கு கூடுதல் கட்டடம் கட்ட அவசியம் எழவில்லை.

19—

கட்டட வசதி

வினா எண் 52625—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, செம்பனார்கோவில் ஒன்றியம், கழனிவாசல் துவக்கப் பள்ளிக்கு கான்கிரீட் கூரையுடன் கூடிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, செம்பனார்கோவில் ஊராட்சி ஒன்றியம், அன்னவாசல் ஊராட்சி, கழனிவாசல் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியின் ஓட்டுக் கூரை கொண்ட கட்டடம் ரூ. 30,000/- மதிப்பீட்டில் மேம்பாடு செய்யப்பட்டுள்ளது. தற்பொழுது பயிலும் மாணவர்களின் எண்ணிக்கைக்கு இந்தக் கட்டடம் போதுமானதாகையால், கான்கிரீட் கூரை கொண்ட கட்டடம் கட்ட அவசியம் எழவில்லை.

20—

அடிப்படை வசதி

வினா எண் 59628—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பாறை தொகுதி, கோட்டூர் பேரூராட்சி, நெல்லித்துறை மன்னம் பகுதியிலுள்ள மலை ஜாதியினர் வீடுகளுக்கு மின் விளக்குகள் மற்றும் தெரு விளக்குகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, நெல்லித்துறை மன்னம் பகுதியில் உள்ள குடிசை வீடுகளுக்கு இலவச மின் விளக்கு வசதி செய்யும் திட்டம் பேரூராட்சியில் நடைமுறையில் இல்லை. மேலும், அப்பகுதியில் வரும் நிதியாண்டில் மன்ற அனுமதி பெற்று உரிய விதிமுறைகளின்படி தெரு விளக்கு வசதி, செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

2010 நவம்பர் 12]

21—

சமையல் கூடம்

வினா எண் 101385—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், எம். காளிப்பட்டி ஊராட்சி, குக்கல்பட்டி, பிச்சைக்காரனூர், அமரத்தானூர் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிகளில் சமையல் கூடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், எம். காளிப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள அமரத்தானூர் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் 2008-2009 ஆம் ஆண்டு ஒன்றியப் பொது நிதியிலும், பிச்சைக்காரனூர் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் 2009-2010 ஆம் ஆண்டு ஊரக கட்டமைப்புத் திட்ட நிதியிலும், சமையற்கூடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. குக்கல்பட்டி ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் 2010-2011 ஆம் ஆண்டு ஒன்றியப் பொது நிதியிலிருந்து சமையற்கூடம் கட்டும் பணியை எடுத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

22—

உரத் தொழிற்சாலை

வினா எண் 103576—திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் தொகுதியில் உரத் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2010 நவம்பர் 12

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் தொகுதியில் உரத் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) இருப்பினும், தகுந்த தொழில் முனைவோர்கள், காஞ்சிபுரம் தொகுதியில் அரசு உரத் தொழிற்சாலை நிறுவுவதற்குத் தேவையான நிதி முதலீடுகளுடன், புதிய திட்டச் செயற்குறிப்புகளுடன் செயல்படுத்த முன்வந்தால், அவர்களுடன் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் இணைந்து, திட்ட சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து, திட்டத்தைச் செயல்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

23—

கழிவுநீர் கலப்பதைத் தடுத்தல்

வினா எண் 104386—திரு. கு. சீனிவாசன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பூங்கா நகர் தொகுதியில், புளியந்தோப்பு பகுதி குடிநீரில் கழிவுநீர் கலப்பதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

புளியந்தோப்பு பகுதியில் குடிநீரில் கழிவுநீர் கலப்பதாகப் புகார் வந்தால், உடனடியாக ஆய்வு செய்து கழிவுநீர் கலக்குமிடத்தைக் கண்டறிந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு சரி செய்யப்படுகிறது. பழுது சரி செய்யும்பொழுது, அப்பகுதிகளுக்கு லாரிகள்மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது.

மேலும், புளியந்தோப்பு பகுதியில் கீழ்க்கண்ட தெருக்களில் பழுதடைந்த பழைய குடிநீர்க் குழாய்களை மாற்றி புதிய குழாய்கள் பதிக்கப்பட்டு, தரமான குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

(1) திரு. வி. க. நகர் பிரதான தெரு
(2) திரு. வி. க. நகர் 2-வது தெரு
(3) நரசிம்ம நகர் 2-வது தெரு
(4) நரசிம்ம நகர் 3-வது தெரு

2010 நவம்பர் 12]

(5) லால் சிங் தெரு
(6) பார்த்தசாரதி தெரு
(7) குட்டி தம்பிரான் தெரு
(8) திருவேங்கடம் தெரு
(9) நாச்சரம்மாள் லேன்
(10) காஜா சாகிப் தெரு
(11) சேட் ஜஸ்வத்தம்மாள் தெரு
(12) சேட் பகத்வம்மாள் தெரு
(13) சேட் மோகன்லால் தெரு
(14) சந்தியப்பா தெரு
(15) கோவிந்தாச்சாரி தெரு
(16) முனுசாமி தெரு
(17) குழந்தை தெரு

24—

குடிநீர் வசதி

வினா எண் 108795—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பேரூராட்சி, 2-வது வார்டில் குடிநீர் வசதி செய்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் தேர்வுநிலை பேரூராட்சியில், 2-வது வார்டு பகுதிக்கு 6 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட கோட்டை உயர் தேக்கத் தொட்டியிலிருந்து குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. இது தவிர அப்பகுதியில் இரு அடிபம்புகளும், 1000 லிட்டர் கொள்ளளவு கொண்ட 3 சின்டெக்ஸ் டேங்குகளும் அமைக்கப்பட்டு நாள் முழுவதும் பொதுமக்களின் பயன்பாட்டிற்குக் குடிநீர் டேங்குகளிலிருந்து பைப் லைன் விஸ்தரிப்பு செய்யப்பட்டு, அனைத்து வீதிகளுக்கும் பொதுக்குழாய் வசதியும் செய்துதரப்பட்டு,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

மேற்படி வார்டுக்கு போதிய அளவு குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. தனி நபருக்கு நாள் ஒன்றுக்கு 70 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, கூடுதலாக குடிநீர் வசதி செய்து தர இயலாது.

25—

தொழிற்சாலை

வினா எண் 111484—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கோயம்புத்தூரில் காருக்குத் தேவையான உதிரி பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலையை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூரில் காருக்குத் தேவையான உதிரி பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

26—

மின் அழுத்தம்

வினா எண் 5139—திரு. பே. சின்னப்பன்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

விளாத்திகுளம் தொகுதி, விளாத்திகுளம் கிராமத்தில் உள்ள குறைந்த மின் அழுத்தத்தை சரி செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

விளாத்திகுளம் தொகுதிக்குட்பட்ட கிராமங்களில் குறைந்த மின்னழுத்தத்தை நிவர்த்தி செய்யும்பொருட்டு, மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, தற்போது சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

2010 நவம்பர் 12]

27—

மின் கம்பிகள்

வினா எண் 52109—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்பாச்சேத்தியில் புதிய மின் கம்பிகள் மற்றும் புதிய மின் கம்பங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்பாச்சேத்தியில் பழுதான மின் கம்பங்களுக்குப் பதிலாக ரூ.45,000/- செலவில் 5 எண்ணம் புதிய மின் கம்பங்கள் மற்றும் பழைய மின் கம்பிகளுக்குப் பதிலாகப் புதிய மின் கம்பிகள் 320 மீட்டர் தூரத்திற்கு மாற்றி அமைக்கப்பட்டுள்ளன.

28—

மின் வசதி

வினா எண் 62281—திரு. ஆர்.கே. பாரதி மோகன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஒன்றியம், கஞ்சனூர், கோட்டூர் காவேரி படுகை கரை சாலையில் மணலூர் குமணந்துறை வரை மின் வசதி செய்து தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஒன்றியம், கஞ்சனூர், கோட்டூர் காவேரி படுகை கரை சாலையில் மணலூர் குமணந்துறை வரை ஏற்கனவே 1x40 வாட்ஸ் குழல் விளக்குகள் 14-ம்,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

இரண்டு 250 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகளும் அமைக்கப்பட்டுள்ளன. மேற்கண்ட பகுதிக்குக் கூடுதல் தெரு விளக்கு வேண்டி விண்ணப்பம் ஏதும் பெறப்படவில்லை. விண்ணப்பம் பெறப்பட்டால் தெரு விளக்கு அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

29—

மின் உற்பத்தி நிலையம்

வினா எண் 97014—திரு. மு.க. பெரியசாமி: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பூம்புகார் தொகுதி, தரங்கம்பாடி பகுதியில் மின் உற்பத்தி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தரங்கம்பாடியிலுள்ள மிகப் பழமையான டச்சுக் கோட்டை, தொல்பொருள் ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளதால், தரங்கம்பாடி பகுதியில் அனல் மின் நிலையம் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை.

30—

சூரிய ஒளியில் மின்சாரம்

வினா எண் 107806—திரு. கி. ஆறுமுகம்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழகத்திலுள்ள அனைத்து அரசு அலுவலகக் கட்டடக் கூரைகளிலும் சூரிய ஒளியில் மின்சாரம் எடுக்கும் தகடுகளை அமைத்து, அரசு அலுவலக மின்சாரப் பயன்பாட்டைக் குறைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

சூரிய ஒளிமூலம் மின்சாரம் தயாரிக்க ஆகும் செலவானது, மின்வாரியத்தில் இருந்து பெறக்கூடிய மின்சாரச் செலவைவிட

2010 நவம்பர் 12]

அதிகமாகும். மின் பற்றாக்குறை காரணமாக டீசல் ஜெனரேட்டர் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்து பயன்படுத்துவோர், அதற்கு மாற்றாக சூரிய ஒளியில் இருந்து மின்சாரத்தைத் தயாரிப்பது, டீசல் செலவை ஒப்பிடும்போது இலாபகரமாக இருக்கும். டீசல் பயன்பாட்டைக் குறைக்கும் நோக்கத்தோடு மத்திய அரசு சூரிய ஒளி மின் தகடுகளை மேற்கூரையில் அமைக்க 40 சதவீதம் வரை முதலீட்டு மானியம் வழங்குகிறது.

மேலும், சூரிய சக்திப் பயன்பாட்டைப் பெருமளவில் ஊக்குவிக்க மத்திய அரசு தற்போது ஜவஹர்லால் நேரு தேசிய சூரிய கொள்கையை அறிவித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் பெரிய அளவில் சூரிய சக்தியில் இருந்து உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்திற்கு உற்பத்தி அடிப்படையிலான கவர்ச்சிகரமான ஊக்கத்தொகையும் மற்றும் சிறிய அமைப்புகளுக்கு முதலீட்டு மானியமும் அறிவித்துள்ளது. இத்திட்டம் செயல்படுத்தப்படும் போது அனைத்துக் கட்டடங்களின் மேற்கூரைகளிலும் சூரிய ஒளி மின் தகடுகளை அமைத்து மின்சாரத்தை மிச்சப்படுத்த ஏதுவாகும்.

31—

கட்டட வசதி

வினா எண் 109436—திரு. வை. காவேரி: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரத்திலுள்ள மின்சார வாரிய அலுவலகத்திற்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரத்திலுள்ள மின்சார வாரிய அலுவலகத்திற்குட்பட்ட பகுதிகளில் மின்சார வாரியத்திற்குச் சொந்தமான நிலம் ஏதும் இல்லை. மேலும் பிரிவு அலுவலகங்களுக்குக் கட்டடம் கட்டும் திட்டச் செயற்குறிப்பு ஏதும் நிலுவையில் இல்லை.

32—

மின் விளக்கு

வினா எண் 109628—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், பல்பாக்கி ஊராட்சி, பல்பாக்கி மேம்பாலம் அருகில் மின் கம்பம் அமைத்து, தெரு விளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், பல்பாக்கி ஊராட்சி, பல்பாக்கி மேம்பாலம் அருகில் சுமார் 20 மீட்டர் தூரத்தில் ஏற்கெனவே இரண்டு 1x40W குழல் விளக்குகள் இயக்கத்தில் உள்ளன. மேலும், ஊராட்சியின்மூலம் விண்ணப்பமும் அதன் பேரில் வரும் மதிப்பீட்டுத் தொகையினைச் செலுத்தும்பட்சத்தில் கூடுதல் மின் விளக்கு அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

33—

கட்டட வசதி

வினா எண் 102047—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேல்மலையனூர் தொகுதி, நல்லான்பிள்ளைபெற்றாள் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் சட்டமன்றத் தொகுதியில் செயல்படும் நல்லான்பிள்ளைபெற்றாள்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2010 நவம்பர் 12]

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் வாடகைக் கட்டடத்திலேயே இயங்கி வருகின்றது. இதற்கு சொந்தமாகக் கட்டடம் கட்ட ஊர் மக்கள் 25 செண்ட் நிலத்தினைத் தானமாக வழங்கியுள்ளனர். எனினும், கட்டடம் கட்டுவதற்கு சங்கத்தில் போதிய நிதியாதாரம் இல்லாததால் சொந்தக் கட்டடம் கட்டப்படவில்லை.

எனவே, இதற்காக, தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கியில் பராமரிக்கப்பட்டு வரும் தொடக்கக் கூட்டுறவு வங்கி நிதியிலிருந்தோ, இதர நிதியிலிருந்தோ நிதியுதவி பெற்று கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

34—

சிறு வணிகக் கடன்

வினா எண் 104256—திரு. மை. காவேரி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவு வங்கிகளில் சிறு வணிகக் கடன் திட்டத்தை மீண்டும் செயல்படுத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2-8-2006 அன்று கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கை விவாதத்தின்போது வெளியிட்ட அறிவிப்பினைச் செயல்படுத்தும் வகையில், மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகரக் கூட்டுறவு வங்கிகள், 2006 ஆகஸ்ட் முதல் சிறு வணிகக் கடன்கள் வழங்கி வருகின்றன. இதன்படி 2007-2008 வரை சிறு வணிகக் கடனாக ரூ.2,000/- வரை வழங்கப்பட்டது. 2008-2009 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை விவாதத்தின்போது வெளியிட்ட அறிவிப்பின்படி, கடன் தொகை ரூ.5,000/- ஆக உயர்த்தப்பட்டு, கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், இத்தகைய கடன்கள் சிறு வணிகர்களை உறுப்பினர்களாகக் கொண்ட கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்கும் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு, 2008-2009 முதல் கூட்டுப் பொறுப்புக்

குழுக்களுக்கும், சிறு வணிகக் கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன. 2006-2007 ஆம் ஆண்டு முதல் இத்தகைய கடன்கள் வழங்குவதிலான முன்னேற்றத்தின் விவரம் பின்வருமாறு:—

(ரூபாய் கோடியில்)

ஆண்டு	தனி நபர்கள்		கூட்டுப் பொறுப்புக் குழுக்கள்			மொத்தம்		
	பயனாளிகள்	தொகை	கூட்டுப் பொறுப்பு குழுக்கள்	உறுப் பினர்	தொகை	கூட்டுப் பொறுப்பு குழுக்கள்	உறுப் பினர்	தொகை
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)
2006-07	13578	2.55	—	—	—	—	13578	2.55
2007-08	32238	8.41	—	—	—	—	32238	8.41
2008-09	46969	21.52	10410	61631	31.53	10410	108600	53.05
2009-10 (31-12-09 வரை)	41691	20.45	11132	71267	35.54	11132	112958	55.99

35—

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வங்கிக் கடன்

வினா எண் 104281—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் தொகுதியில் விவசாயிகளுக்கு கூட்டுறவு வங்கிகள் மூலம் கிணறுகள் வெட்ட மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 நவம்பர் 12]

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) சேலம் மாவட்டத்தில், ஓமலூர் துணைப் பதிவாளர் சரகத்தில் மேட்டூர் தொகுதியில் மேட்டூர் தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி, மேட்டூரைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. மேட்டூர் தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி, மேச்சேரி, கொளத்தூர் மற்றும் நங்கவள்ளி ஆகிய வட்டாரங்களை விவகார எல்லையாகக் கொண்டுள்ளது.

மேற்படி வங்கியில், உறுப்பினர்களுக்கு திறந்தவெளிக் கிணறு அமைத்திட ஏற்கெனவே கடன்கள் வழங்கப்பட்டு வந்தன. தற்போது தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்மூலம் (டாப்செட்கோ) ஆழ்துளைக் கிணறு அமைக்கும் பொருட்டு வங்கியின் கொளத்தூர் பகுதி உறுப்பினர்களுக்கு 50% மானியத்துடன் மொத்தம் ரூ.1 இலட்சம் வரை கடன் வழங்கப்பட்டு வருகிறது. அரசாணை (நிலை) எண் 51, பொதுப் பணித் துறை, நாள் 11-2-2004-ன்படி, மேச்சேரி மற்றும் நங்கவள்ளி பகுதிகள் **"Over exploited"** *பகுதி என வகைப்படுத்தப்பட்டுள்ளதால், அப்பகுதிகளில் மேற்படி திட்டங்களின் கீழான கடன்கள் வழங்கப்படுவதில்லை.*

(ஆ) கேள்வி எழவில்லை.

36—

புதுப்பித்தல்

வினா எண் 104836—திரு. பெ. கண்ணன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாரமங்கலம் தொகுதி, முத்துநாய்க்கன்பட்டி ஊராட்சி, மஞ்சளாயூர் வெங்கடாசலபதி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

11-335—7

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் தொகுதி, முத்துநாய்க்கன்பட்டி ஊராட்சி, மஞ்சுளாயூரில் கே. வெங்கடாசலபதி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தின் அலுவலகக் கட்டடம் மிகவும் பழுதடைந்துள்ளதால், இந்தக் கட்டடத்தைப் புதுப்பிப்பதற்குப் பதிலாக அந்த இடத்திலேயே உள்ள காலி நிலத்தில் மேற்படி சங்கத்திற்கு புதியதாக ஒரு கட்டடம் கட்டத் தீர்மானிக்கப்பட்டு ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ.8.92 இலட்சத்திற்கு மதிப்பீடு பெறப்பட்டு 1-8-2009 முதல் கட்டுமானப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தற்போது மேற்படி வெங்கடாஜலபதி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் மஞ்சுளாயூரிலிருந்து 2 கி.மீ. தொலைவில் உள்ள முத்துநாய்க்கன்பட்டியில் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. கட்டுமானப் பணி முடிவு பெற்றவுடன், மேற்படி சங்கம் மஞ்சுளாயூர் புதிய அலுவலகக் கட்டடத்திற்கு மாற்றப்படும்.

37—

கடன் வழங்குதல்

வினா எண் 108846—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாவட்டத்தில் வசிக்கும் மலைவாழ் மக்களுக்கு, ஆடு, மாடுகள் வளர்க்க வங்கிகளின்மூலம் கடன் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டத்தில் வசிக்கும் மலைவாழ் மக்களுக்கு ஆடு, மாடுகள் வளர்க்க தகுதியின் அடிப்படையில் கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன. 2007-2008, 2008-2009 மற்றும் 2009-2010 நவம்பர் திங்கள் வரை சேலம் மாவட்டத்தில் மலைவாழ் மக்களுக்கு வழங்கப்பட்ட மத்திய காலக் கடன் மற்றும் ஆடு, மாடு வளர்க்க வழங்கப்பட்ட கடன்களின் விவரம் பின்வருமாறு:—

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2010 நவம்பர் 12]

(ரூ. இலட்சத்தில்)

ஆண்டு	மலைவாழ் மக்களுக்கு வழங்கப்பட்ட மத்திய காலக் கடன்கள்		ஆடு, மாடுகள் வளர்க்க வழங்கிய கடன்கள்	
	கடன் பெற்ற பயனாளிகள்	கடன் தொகை	கடன் பெற்ற பயனாளிகள்	கடன் தொகை
(1)	(2)	(3)	(4)	(5)
2007-08	94	29.47	29	4.28
2008-09	231	50.37	152	36.57
2009-10 (நவம்பர் 2009 வரை)	178	33.77	20	8.00

மேற்கண்டவாறு சேலம் மாவட்டத்தில் மலைவாழ் மக்களுக்கு மத்திய காலக் கடன்கள் மற்றும் ஆடு, மாடுகள் வளர்க்க கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், தகுதியின் அடிப்படையில், தொடர்ந்து வழங்கப்படும்.

38—

கண்காணிப்பு

வினா எண் 105097—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக கல்லூரிகளில் ராகிங்கைத் தடுக்க கண்காணிப்பு கேமரா அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழக கல்லூரிகளில் ராகிங்கைத் தடுக்க கண்காணிப்பு கேமரா அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

39—

சுழற்சிமுறை வகுப்புகள்

வினா எண் 107228—திருமதி ஜி. லதா: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள கல்லூரிகளில் விண்ணப்பித்துள்ள மாணவர்கள் எண்ணிக்கைக்கு ஏற்ப பாடப் பிரிவுகளில் கூடுதல் எண்ணிக்கையில் மாணவர்களைச் சேர்க்கும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டிலுள்ள அரசு கலை, அறிவியல் கல்லூரிகளில் அதிகளவில் மாணவர்கள் சேர்ந்து பயில ஏதுவாக அனைத்து அரசு கலை, அறிவியல் கல்லூரிகளிலும் ஏற்கெனவே சுழற்சி முறை (Shift System) அறிமுகப்படுத்தப்பட்டு வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

40—

அரசுக் கல்லூரி

வினா எண் 107319—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொகுதிக்கு ஒரு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தொகுதிக்கு ஒரு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

2010 நவம்பர் 12]

41—

பேருந்து வசதி

வினா எண் 104180—திரு. வை. காவேரி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் லீ பஜார், வின்சென்ட் வழியாக (4 ரோடு செல்லாமல்) கன்னங்குறிச்சி, கோரிமேடுக்கு புதிய பேருந்து அல்லது வழித்தட நீட்டிப்பு செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்: (அ) மற்றும் (ஆ) தாரமங்கலத்திலிருந்து ஜங்சன், அஸ்தம்பட்டி வழியாக கன்னங்குறிச்சி/கோரிமேடு பகுதிகளுக்கு செல்லும் வழித்தடம் நேரடி வழித்தடமாகும். கேட்கப்பட்டுள்ள வழித்தடம் சுற்று வழித்தடம் என்பதால் பயணிகள் எவரும் பயணிக்க மாட்டார்கள். இருப்பினும், கேட்கப்பட்டுள்ள வழித்தடத்தில் தாரமங்கலம்—ஜங்சன்—லீ பஜார்—சேலம் நகரப் பேருந்து நிலையம் வரை 15 நிமிட இடைவெளியில் பேருந்து வசதியும், சேலம் நகரப் பேருந்து—வின்சென்ட்—அஸ்தம்பட்டி—கன்னங்குறிச்சி/கோரிமேடு பகுதிகளுக்கு 10 நிமிட இடைவெளியில் பேருந்து வசதியும் உள்ளது.

42—

பேருந்து நிறுத்தம்

வினா எண் 104819—திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாம்பரம் தொகுதி, புனித தோமையார் மலை ஊராட்சி ஒன்றியம், வெங்கப்பாக்கம் கிராமம் வழியாகச் செல்லும் 517, 515, 566, 115, 55K, 555, 55D, 55T மற்றும் 55V ஆகிய பேருந்துகள் வெங்கப்பாக்கத்தில் நின்று செல்ல அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

மாநகரப் போக்குவரத்துக் கழகம் இயக்கும் கீழ்க்காணும் தடப் பேருந்துகளுக்கு வெங்கப்பாக்கம் பேருந்து நிறுத்தம் ஏற்கெனவே பயன்பாட்டில் உள்ளது.

515	தாம்பரம்	—	மாமல்லபுரம்
517	பல்லாவரம்	—	வடநெமிலி
566	குன்றத்தூர்	—	திருப்போரூர்
555	தாம்பரம்	—	திருப்போரூர்
55டி	தாம்பரம்	—	கீரப்பாக்கம்

வெங்கப்பாக்கம் வழியாக தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் காஞ்சிபுரம் மண்டலப் பேருந்துகள் *55T, 55K, 115* மற்றும் 55V தடப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. இவை அனைத்தும் வெங்கப்பாக்கம் பேருந்து நிறுத்தத்தில் நிறுத்தி பயணிகளை ஏற்றி, இறக்கிச் செல்கின்றன.

43—

பேருந்து வசதி

வினா எண் 108683—திரு. கே.எஸ். விஜயகுமார்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை வட்டம், அயிஞ்சிவாக்கம் மற்றும் பூரிவாக்க ஊராட்சிப் பகுதிகளிலிருந்து பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

அயிஞ்சிவாக்கம், கோயம்பேட்டிலிருந்து தடா செல்லும் சாலையில் பஞ்செட்டி அருகில் உள்ளது. இக்கிராமத்தின் வழியாக இயக்கப்படும் அனைத்து சாதாரண மற்றும் நகரப் பேருந்துகள் அயிஞ்சிவாக்கம் பேருந்து நிறுத்தத்தில் நிறுத்தி பயணிகளை ஏற்றி, இறக்கிச் செல்கின்றன. தற்பொழுது கோயம்பேட்டிலிருந்து வெங்கலுக்கு தடம் எண் 58டி, பூரிவாக்கம் வழியாக இயக்கப்படுகின்றது. இத்தடத்தில் இயக்கப்படும் 10 நடைகளும் பூரிவாக்கத்தில் நிறுத்தி பயணிகளை ஏற்றி, இறக்கிச் செல்கின்றன.

44—

பேருந்து வசதி

வினா எண் 108963—திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாம்பரம்-குமிழி-கன்னிவாக்கம் வழியாக இயக்கப்பட்டு வந்த தடம் எண் 60K பேருந்தை மீண்டும் அதே தடத்தில் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

நகரத் தடம் எண் 60K தாம்பரத்திலிருந்து கூடுவாஞ்சேரி-ஊரப்பாக்கம்-காரணைப்புதுச்சேரி-அருங்கால்-கீரப்பாக்கம்-குமிழி-ஒத்திவாக்கம் என இயக்கப்பட்டது. இத்தடத்தில் ஊரப்பாக்கத்திலிருந்து குமிழி வரையிலான சாலை சேதமடைந்து பேருந்து இயக்கத்திற்குத் தகுதி அற்றதாகிவிட்டது. எனவே, மேற்கண்ட தடம் மாற்றுப் பாதையில் கூடுவாஞ்சேரியிலிருந்து கன்னிவாக்கம்-நெல்வாய்-குமிழி-கீரப்பாக்கம் என இயக்கப்பட்டு வந்தது. தற்பொழுது சாலை சரி செய்யப்பட்டுவிட்டதால், அத்தடம் மீண்டும் ஊரப்பாக்கம் காரணைப்புதுச்சேரி வழியாக அதற்குரிய தடத்தில் இயக்கப்படுகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

45—

பேருந்து வசதி

வினா எண் 108985—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுப்பட்டினத்திலிருந்து-விட்டிலாபுரம்-நெரும்பூர்-திருக்கழுக்குன்றம்-செங்கல்பட்டு-சிங்கப்பெருமாள் கோயில்-ஒரகடம் வழியாக ஸ்ரீபெரும்புதூர் வரை பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கோரிக்கை வழித்தடத்தின் நீளம் 68.0 கி.மீ. ஆகும். புதுப்பட்டினத்திலிருந்து செங்கல்பட்டு வரையிலான 33.0 கி.மீ. தூரத்திற்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட் புறநகர் பேருந்துகள்மூலம் தினசரி 16 நடைகளும், தனியார் பேருந்துகள்மூலம் 17 நடைகளும் இயக்கப்படுகின்றன. செங்கல்பட்டிலிருந்து ஸ்ரீபெரும்புதூர் வரையிலான 35.0 கி.மீ. தூரத்திற்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், காஞ்சிபுரம் மண்டலம்மூலம் தினசரி 62 நடைகளை இயக்குகின்றன. இத்தடத்தில் நேரிடையாக பயணம் செய்வோர் குறைவு. புதுப்பட்டினத்திலிருந்து ஸ்ரீபெரும்புதூர் செல்பவர்களும், ஸ்ரீபெரும்புதூரிலிருந்து புதுப்பட்டினம் செல்பவர்களும் செங்கல்பட்டு சென்று அங்கிருந்து உடனடியாகப் பயணம் செய்கின்றனர்.

46—

பேருந்து வசதி

வினா எண் 111764—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருவாடனை அல்லிக்கோட்டை வழியாக கூடுதலாக ஒரு நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது இராமநாதபுரம் மாவட்டம், திருவாடனையிலிருந்து அல்லிக்கோட்டை கிராமம் வழியாக நாள் ஒன்றிற்கு நகரப் பேருந்துகள்மூலம் 10 நடைகள் இயக்கப்பட்டு வருகிறது. மேலும், பயணிகளின் அடர்வு விகிதம் குறைவாக இருப்பதால் இதுவே போதுமானதாகும்.

2010 நவம்பர் 12]

47—

பேருந்து நிறுத்தம்

வினா எண் 111880—திரு. எஸ்.ஆர். இராஜா: , மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, ஒக்கியம் துரைப்பாக்கம், ஒக்கியம்பேட்டை மற்றும் சிவரம் பகுதிகளில் 21H, 519, 19B டீலக்ஸ் பேருந்துகள் மேற்படி நிறுத்தத்தில் நின்று செல்ல அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோரிக்கையில் குறிப்பிட்டுள்ள நிறுத்தங்களில் தடம் எண் 19B, 21H மற்றும் 519 ஆகிய பேருந்துகள் சொகுசு மற்றும் நீண்ட தூரப் பேருந்துகள் ஆகும். சிவரம்/ஒக்கியம் துரைப்பாக்கம் (டீ கடை) பேருந்து நிறுத்தம், பழைய மாமல்லபுரம் சாலையில் பெருங்குடி மற்றும் டி.பி. ஜெயின் கல்லூரி நிறுத்தங்களுக்கிடையே உள்ளது. பெருங்குடி மற்றும் டி.பி. ஜெயின் கல்லூரி நிறுத்தங்களின் வழியாகச் செல்லும் சொகுசுப் பேருந்து உட்பட அனைத்துப் பேருந்துகளும் நின்று செல்கின்றன. ஒக்கியம்பேட்டை நிறுத்தம், மூட்டைக்காரன் சாவடி மற்றும் காரப்பாக்கம் நிறுத்தங்களுக்கிடையே உள்ளது. இதன் அருகிலுள்ள காரப்பாக்கம் நிறுத்தத்தில் சொகுசு உட்பட அனைத்துப் பேருந்துகளும் நின்று செல்கின்றன. இத்தடப் பேருந்துகள் நீண்ட தூர சொகுசுப் பேருந்துகள் ஆகும். எனவே, கூடுதல் பேருந்து நிறுத்தங்கள் ஏற்படுத்த வாய்ப்பு இல்லை.

48—

பேருந்து நிறுத்தம்

வினா எண் 111881—திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, பழைய பெருங்களத்தூர், காந்தி நகர் பேருந்து நிறுத்தத்தில் அவ்வழியாகச் செல்லும் அனைத்து மாநகரப் பேருந்துகளும் நின்று செல்ல அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காந்தி நகர் பேருந்து நிறுத்தம், கிருஷ்ணா நகர் மற்றும் பெருங்களத்தூர் செக் போஸ்ட் ஆகிய நிறுத்தங்களுக்கு இடையே உள்ளது. கிருஷ்ணா நகர் பேருந்து நிறுத்தத்தில் அவ்வழியாகச் செல்லும் அனைத்துப் பேருந்துகளும் நின்று செல்கின்றன. காந்தி நகர் பேருந்து நிறுத்தம் வழியாக இயக்கப்படும் அனைத்து சாதாரண மற்றும் "எம்" பேருந்துகள் இந்நிறுத்தத்தில் நின்று பயணிகளை இறக்கியும், ஏற்றியும் செல்கின்றன.

49—

பேருந்து வசதி

வினா எண் 115128—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையிலிருந்து தெ. புதுக்கோட்டை வழியாக பரமக்குடி நயினார்கோயில் வரை காலை 8-00 மணி மற்றும் இரவு 10-00 மணிக்கு ஒரு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரையிலிருந்து தெ. புதுக்கோட்டை வழியாக பரமக்குடிக்கு நாள் ஒன்றுக்கு 24 நடைகள் பேருந்து இயக்கப்படுகிறது. மேலும், பள்ளிக் குழந்தைகளுக்காக காலை 8-00 மணிக்கும், மாலை 4-00 மணிக்கும் கூடுதலாக பேருந்து இயக்கப்படுகிறது. பரமக்குடியிலிருந்து நயினார்கோயிலுக்கு நாள் ஒன்றுக்கு 80 நடைகள் இயக்கப்படுகிறது. மானாமதுரையிலிருந்து பரமக்குடிக்கும், பரமக்குடியிலிருந்து நயினார்கோவிலுக்கும் என பகுதி, பகுதியாகப் பேருந்துகள் அதிக அளவில் இயக்கப்பட்டு வருகின்றன.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

2010 நவம்பர் 12]

50—

விரைவுப் பேருந்து

வினா எண் 115130—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையிலிருந்து திருநெல்வேலி மற்றும் நாகப்பட்டினத்திற்கு விரைவுப் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரையிலிருந்து மதுரைக்கும், மதுரையிலிருந்து திருநெல்வேலி மற்றும் நாகப்பட்டினத்திற்கும் எனப் பகுதி, பகுதியாக அதிக அளவில் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இவை இப்பகுதி பயணிகளுக்குப் போதுமானதாக உள்ளது.

51—

பேருந்து வசதி

வினா எண் 115133—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையிலிருந்து சின்னக்கண்ணனூருக்குக் கூடுதலாக புதிய வழித்தடத்தில் நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரையிலிருந்து மேலப்பசலை வழியாக சின்னக்கண்ணனூர் வரை 10 நடைகள் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், பயணம் செய்யும் பயணிகளின் அடர்வு விகிதம் மிகவும் குறைவாக இருப்பதால் இதுவே போதுமானதாகும். பயணிகளின் அடர்வு விகிதம் அதிகரிக்கும்பட்சத்தில் கூடுதல் பேருந்து இயக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

52—

பேருந்து நிறுத்தம்

வினா எண் 115358—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாட்டுத்தாவணியிலிருந்து புறப்படும் வெளியூர் பேருந்துகள் திருப்புவனம்புதூர், பள்ளிவாசல் பேருந்து நிறுத்தத்தில் நின்று செல்ல அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை மாட்டுத்தாவணி பேருந்து நிலையத்திலிருந்து மதுரை, மானாமதுரை வழித்தடத்தில் இயக்கப்படும் பேருந்துகள் திருப்புவனம்புதூர், பள்ளிவாசல் பேருந்து நிறுத்தத்தில் நின்று செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டு, பேருந்துகள் நின்று பயணிகளை ஏற்றி, இறக்கிச் செல்கின்றன.

53—

பேருந்து வசதி

வினா எண் 115359—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையிலிருந்து பார்த்திபனூர், பீர்க்கன்குறிச்சி, கீழப்பருத்தியூர் வழியாக வீரசோழன் வரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரையிலிருந்து பார்த்திபனூருக்கும், பார்த்திபனூரிலிருந்து பீர்க்கன்குறிச்சிக்கும் அரசுப் பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. அரசுப் பேருந்து இல்லாத வழித்தடத்தில்

2010 நவம்பர் 12]

சிற்றுந்துகள் இயக்க அரசு அனுமதி வழங்கப்பட்டு, பார்த்திபனூரிலிருந்து கீழப்பருத்தியூர் வழியாக வீரசோழன் வரை சிற்றுந்து நாள் ஒன்றுக்கு 12 நடைகள் இயக்கப்பட்டு வருகிறது.

54—

பேருந்து வசதி

வினா எண் 115360—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையிலிருந்து சின்னக்கண்ணனூருக்குக் கூடுதலாக நகரப் பேருந்தை இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரையிலிருந்து மேலப்பசலை வழியாக சின்னக்கண்ணனூர் வரை 10 நடைகள் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், பயணம் செய்யும் பயணிகளின் அடர்வு விகிதம் மிகவும் குறைவாக இருப்பதால் இதுவே போதுமானதாகும். பயணிகளின் அடர்வு விகிதம் அதிகரிக்கும்பட்சத்தில் கூடுதல் பேருந்து இயக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

55—

பேருந்து வசதி

வினா எண் 115364—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையிலிருந்து பழையனூருக்கு இயக்கப்பட்டு நிறுத்தப்பட்ட பேருந்துகளை மீண்டும் அதே வழித்தடத்தில் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரையிலிருந்து பழையனூருக்கு அதிகாலை நேரத்தில் இயக்கப்பட்டு வந்த நடையில் பயணிகளின் பயன்பாடு மிக மிகக் குறைவாக உள்ளது. மாலை நேரத்தில் இயக்கப்பட்ட நடை தொடர்ந்து இயக்கப்பட்டு வருகிறது.

56—

நகரப் பேருந்து

வினா எண் 115366—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையிலிருந்து தாயமங்கலம் வழியாக கன்னமங்கலம் மற்றும் இண்டாங்குளம் பகுதிக்கு நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரையிலிருந்து தாயமங்கலத்திற்கும், தாயமங்கலத்திலிருந்து கன்னமங்கலத்திற்கும், கன்னமங்கலத்திலிருந்து இண்டாங்குளத்திற்கும் எனப் பகுதி, பகுதியாக நகரப் பேருந்து இயக்கப்பட்டு வருகிறது.

57—

விரைவுப் பேருந்து

வினா எண் 115451—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையிலிருந்து மதுரை வழியாக வேலூர், ராஜபாளையம் வழியாக தென்காசி மற்றும் ஒகேனக்கல் ஆகிய பகுதிகளுக்கு விரைவுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 நவம்பர் 12]

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரையிலிருந்து மதுரைக்கு அதிக அளவில் விரைவுப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், மதுரையிலிருந்து வேலூர், ராஜபாளையம், தென்காசி மற்றும் ஓகேனக்கல் ஆகிய ஊர்களுக்கும் பகுதி, பகுதியாக அதிக அளவில் விரைவுப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

58—

விரைவுப் பேருந்து

வினா எண் 115481—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையிலிருந்து மதுரை வழியாக சேலம், திருப்பூர், தஞ்சாவூர், ஈரோடு, நாகப்பட்டினம் ஆகிய பகுதிகளுக்கு விரைவுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை வழியாக சேலம், திருப்பூர், ஈரோடு, தஞ்சாவூர் ஆகிய ஊர்களுக்கு நேரிடையாக விரைவுப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், மானாமதுரையிலிருந்து மதுரைக்கும், மதுரையிலிருந்து நாகப்பட்டினத்திற்கும் எனப் பகுதி, பகுதியாக அதிக அளவில் விரைவுப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

59—

பேருந்து வசதி

வினா எண் 115491—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையிலிருந்து சிவகங்கை, திருப்பத்தூர், புதுக்கோட்டை வழியாக திருச்சிராப்பள்ளிக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரையிலிருந்து சிவகங்கை, திருப்பத்தூர், புதுக்கோட்டை வழியாக திருச்சிராப்பள்ளிக்கு நேரடியாக நாள் ஒன்றுக்கு 20 நடைகள் அரசுப் பேருந்து இயக்கப்படுகிறது. மேலும், மானாமதுரை-சிவகங்கைக்கும், சிவகங்கை-திருப்பத்தூருக்கும், திருப்பத்தூர்-புதுக்கோட்டைக்கும், புதுக்கோட்டை-திருச்சிக்கும் எனப் பகுதி பகுதியாக அதிக அளவில் பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

60—

பேருந்து வசதி

வினா எண் 115495—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையிலிருந்து பார்த்திபனூர் வழியாக நரிக்குடிக்கு கூடுதலாக காலை மற்றும் மாலையில் நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரையிலிருந்து பார்த்திபனூர் வழியாக நரிக்குடிக்கு நாள் ஒன்றுக்கு அரசுப் பேருந்துகள்மூலம் 10 நடைகளும், தனியார் பேருந்துகள்மூலம் 10 நடைகளும் ஆக மொத்தம் 20 நடைகள் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், பயணம் செய்யும் பயணிகளின் அடர்வு விகிதம் மிகவும் குறைவாக இருப்பதால் இதுவே போதுமானதாகும்.

61—

பேருந்து வசதி

வினா எண் 115497—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையிலிருந்து காரைக்குடிக்கு நேரடியாக கூடுதலாக ஒரு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 நவம்பர் 12]

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை வழியாக காரைக்குடிக்கு நாள் ஒன்றுக்கு 10 நடைகள் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், மானாமதுரையிலிருந்து திருப்பத்தூருக்கும், திருப்பத்தூரிலிருந்து காரைக்குடிக்கும் எனப் பகுதி, பகுதியாக அதிக அளவில் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

62—

கட்டட வசதி

வினா எண் 46698—திரு. கி. ஆறுமுகம்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் வட்டம், பேரம்பாக்கம் கிராம துணை சுகாதார மையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சைதாப்பேட்டை சுகாதாரப் பகுதி மாவட்டம், செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் வட்டம், பேரம்பாக்கம் துணை சுகாதார நிலையம் வாடகைக் கட்டடத்தில் செயல்படுகிறது. பேரம்பாக்கம் கிராமத்தில் புதிய புல எண் 490/1பி1 (பழைய புல எண் 140/2 இல் 004.0 ஹெக்டேர்) நிலம் தேர்வு செய்யப்பட்டு, நிலமாற்ற ஆணை பெறப்பட்டுள்ளது. தற்போது துணை சுகாதார நிலையங்களுக்குக் கட்டடம் கட்ட அரசின் நிதி ஒதுக்கீடு ஏதும் பெறப்படாத நிலையில் திரு கி. ஆறுமுகம், சட்டமன்ற உறுப்பினர், செங்கல்பட்டு தொகுதி, அவர்களுக்கும், மாவட்ட ஆட்சித் தலைவர், காஞ்சிபுரம் அவர்களுக்கும், மாவட்ட ஆட்சியர் நிதி அல்லது சட்டமன்ற உறுப்பினர்/பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்து தரும்படி கோரப்பட்டுள்ளது. அவ்வாறு நிதி பெறப்படின் பேரம்பாக்கம் துணை சுகாதார நிலையத்திற்குக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். தற்சமயம் பேரம்பாக்கம் துணை சுகாதார நிலையத்திற்குக் கட்டடம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

[2010 நவம்பர் 12

63—

தரம் உயர்த்துதல்

வினா எண் 59348—திரு. ஏ.கே. போஸ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பரங்குன்றம் தொகுதி, திருப்பரங்குன்றத்தில் அமைந்துள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் தொகுதி, திருப்பரங்குன்றம் ஆரம்ப சுகாதார நிலையத்தினை 24 மணி நேரமும் செயல்படக்கூடிய மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரமுயர்த்திட, பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் மூலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எனவே, தற்போது திருப்பரங்குன்றம் ஆரம்ப சுகாதார நிலையத்தினை மருத்துவமனையாகத் தரமுயர்த்திடுவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை.

64—

வயது முதிர்வு சிகிச்சை மையம்

வினா எண் 102770—திரு. ஏ.கே. போஸ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையில் வயது முதிர்வு சிகிச்சை மையம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 நவம்பர் 12]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனை மருத்துவப் பிரிவில் 12-1-1989 முதல் வயது முதிர்வு சிகிச்சை மையம் அறை எண் 23-ல் வாரத்தில் மூன்று நாட்களென செவ்வாய், வியாழன், சனிக்கிழமைகளில் காலை 10.30 மணி முதல் 12-30 வரை சிகிச்சை நடைபெற்று வருகிறது. எனவே, தனியே வயது முதிர்வு சிகிச்சை மையம் அமைக்க வேண்டிய அவசியம் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை

65—

சான்றிதழ்

வினா எண் 106246—டாக்டர் க. நெடுஞ்செழியன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் திருமணத்திற்கு முன் எய்ட்ஸ் பரிசோதனை சான்றிதழ் பெற கட்டாயப்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

திருமணத்திற்கு முன் எய்ட்ஸ் பரிசோதனைச் சான்றிதழ் பெற கட்டாயப்படுத்தும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

66—

பணி நியமனம்

வினா எண் 106894—திருமதி ஜி. லதா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மருத்துவப் பதிவேடு அலுவலர் பணியிடத்தை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) வேலூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மருத்துவப் பதிவேடு அலுவலர் பணியிடம் நிரப்பப்பட்டு விட்டது.

(ஆ) கேள்வி எழாது.

67—

தொழிற்சாலை

வினா எண் 63981—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதியில் பலாப்பழத்திலிருந்து ஜாமுன் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்களூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதியில், பலாப்பழத்திலிருந்து ஜாமுன் தயாரிக்கும் தொழிற்சாலை அரசு சார்பில் அமைத்திட சாத்தியக் கூறுகள் இல்லை. தொழிற்சாலை துவங்க ஆர்வமுள்ள தொழில் முனைவோர் முன்வந்தால், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் கொள்கை 2008-இல் அறிவிக்கப்பட்டுள்ள மானியங்கள் விண்ணப்பத்தின் பேரில், தகுதியினடிப்படையில் வழங்கப்படும்.

68—

கால்நடைக் கிளை மருந்தகம்

வினா எண் 105642—திரு. சபா. இராஜேந்திரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லிக்குப்பம் தொகுதி, திருமாணிக்குழி ஊராட்சியில் கால்நடைக் கிளை மருந்தகம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 நவம்பர் 12]

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) கடலூர் மாவட்டம், அன்னகிராமம் ஊராட்சி ஒன்றியத்தில் ஒரு கால்நடை மருத்துவமனையும், மூன்று கால்நடை மருந்தகங்களும், ஒரு தரம் உயர்த்தப்பட்ட கால்நடைக் கிளை நிலையமும் மற்றும் மூன்று கால்நடைக் கிளை நிலையங்களும் தற்பொழுது செயல்பட்டு வருகின்றன. அக்கிராமத்தினைச் சுற்றியுள்ள கால்நடைகளின் எண்ணிக்கை அலகுகள் குறைவாக உள்ளதால், அருகில் செயல்படும் கால்நடை நிலையங்களின்மூலம் அளிக்கப்படும் சிகிச்சைப் பணிகளே போதுமானதாகக் கருதப்படுவதால், திருமாணிக்குழி ஊராட்சியில் கால்நடைக் கிளை மருந்தகம் துவக்க தற்போது சாத்தியமில்லை.

(ஆ) கேள்வி எழாது.

69—

பழரசத் தொழிற்சாலை

வினா எண் 111437—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் பழரசம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதியில் பழரசம் தயாரிக்கத் தேவையான பழங்கள் பயிரிடப்படுவதில்லை. தொழிற்சாலையினை அரசு அமைப்பது என்பது குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான தொழிற் கொள்கையில் இல்லை. எனவே, அங்கு பழரசம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

[2010 நவம்பர் 12

70—

சுற்றுச் சுவர்

வினா எண் 117010—திரு. ஓ.கே. சின்னராஜ்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் தொகுதி, இரும்பறை மற்றும் தாயனூரில் உள்ள கால்நடை மருத்துவமனைகளுக்கு சுற்றுச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) "நமக்கு நாமே" திட்டத்தின்கீழ் இரும்பறை மற்றும் தாயனூரில் உள்ள கால்நடை மருந்தகங்களுக்கு சுற்றுச் சுவர் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(ஆ) நிதி ஒதுக்கீடு பெறப்பட்டவுடன் சுற்றுச் சுவர் கட்டப்படும்.

71—

ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்

வினா எண் 17244—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், கோட்டகவுண்டம்பட்டி ஊராட்சி காலனி வழியாகச் செல்லும் பாதையில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

கோட்டகவுண்டம்பட்டி, குரூப் புளியம்பட்டி கிராமம் புதுக்காலனியைச் சேர்ந்த ஆதி திராவிட பொது மக்கள் சென்று

2010 நவம்பர் 12]

வர தனி வழித்தடம் ஆதி திராவிடர் நலத் துறையினரால் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. மேற்படி பொது மக்கள் புளியம்பட்டி கிராமம் புல எண்கள் 17-15பீ2, 20-1, 20-2டி, 20-3, 20-4 ஆகிய பட்டா நிலங்கள் வழியாகச் சென்று வர அனுமதி கோரியது தொடர்பாக சம்மந்தப்பட்ட பட்டாதாரர்களால் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு எண் டபிள்யூப்பி. 23989/2001 மற்றும் டபிள்யூப்பி. 35488/2001 இல் வழக்கு தொடுத்து மேற்படி நிலத்தில் பொது மக்கள் பாதையாக உபயோகப்படுத்தக் கூடாது என 19-12-2001-இல் தடையாணை பெற்றுள்ளதால் பொது மக்களுக்கு மாற்றுப் பாதை வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

72—

வீட்டு வசதி

வினா எண் 53662—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் நரிக்குறவர் இனத்தவருக்கு வரும் நிதியாண்டில் வீடு கட்டி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் இன மக்களுக்கு நேரடிப் பேச்சுவார்த்தைமூலம் நிலம் கையகப்படுத்தி வீட்டுமனைப் பட்டா தகுதியுள்ளவர்களுக்கு வழங்கப்படுகிறது. மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் இடம் பெற்றுள்ள நரிக்குறவர் இன மக்களுக்கும் தகுதியின் அடிப்படையில் வீட்டுமனைப் பட்டா வழங்கப்படுகிறது. எனினும், வீடு கட்டித் தரும் திட்டம் ஏதும் இத்துறையில் நடைமுறையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2010 நவம்பர் 12

73—

பணி நியமனம்

வினா எண் 108316—திரு. இ. மகேந்திரன்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, பூச்சிப்பட்டி, கள்ளப்பட்டி, வகுரணி மற்றும் கோவிலங்குளம் அரசு கள்ளர் உயர்நிலைப் பள்ளிகளில் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

உசிலம்பட்டி தொகுதி, பூச்சிப்பட்டி, கள்ளப்பட்டி, வகுரணி மற்றும் கோவிலங்குளம் அரசு கள்ளர் உயர்நிலைப் பள்ளிகளில் காலியாக இருந்த பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் யாவும், தற்போது முழுமையாக நிரப்பப்பட்டு ஆசிரியர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

74—

பணி நியமனம்

வினா எண் 108320—திரு. இ. மகேந்திரன்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, கள்ளப்பட்டி, மற்றும் பூச்சிப்பட்டி அரசு கள்ளர் உயர்நிலைப் பள்ளிக்கு கணினி ஆசிரியர் பணி நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

தற்போதைய பாடத் திட்டத்தில், மேல்நிலைப் பள்ளிகளில் மட்டுமே +1 மற்றும் +2 வகுப்புகளுக்குக் கணினிப் பாடப் பிரிவு

உள்ளதால், மேல்நிலைப் பள்ளிகளுக்கு மட்டுமே, கணினி ஆசிரியர் பணியிடம் அரசால் ஒப்பளிக்கப்பட்டு வருகிறது. உயர்நிலைப் பள்ளிகளில் கணினி பாடப் பிரிவுகள் இல்லாததால், உசிலம்பட்டி தொகுதி, கள்ளப்பட்டி மற்றும் பூச்சிப்பட்டி அரசு கள்ளர் உயர்நிலைப் பள்ளிகளுக்குக் கணினி ஆசிரியர் பணி நியமனம் செய்யும் சூழல் எழவில்லை.

75—

அடிகுழாய்கள்

வினா எண் 22658—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், தாயமங்கலம், ஸ்ரீமுத்துமாரியம்மன் கோயிலுக்குக் கூடுதலாக அடிகுழாய்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், தாயமங்கலம், அருள்மிகு ஸ்ரீமுத்துமாரியம்மன் திருக்கோயிலில் தற்சமயம் இரண்டு ஆழ்துளைக் குழாய்க் கிணறுகள் இயங்கி வருகின்றன. மேலும், ஒரு ஆழ்துளைக் குழாய்க் கிணறு அமைக்கும் பணி துவங்கப்படவுள்ளது. மேற்கண்ட ஆழ்துளைக் குழாய்க் கிணறுகளின்மூலம் சேவார்த்திகளுக்குப் போதுமான அளவில் தண்ணீர் கிடைக்க வாய்ப்பு உள்ளதால் கூடுதலாக அடிகுழாய் அமைக்கும் உத்தேசம் ஏதும் தற்போதைக்கு இல்லை.

[2010 நவம்பர் 12

76—

மின் விளக்கு வசதி

வினா எண் 55255— திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், சொக்கனாதிருப்பு ஆதி திராவிடர் காலனியில் உள்ள மதுரை வீரன் கோயிலுக்கு மின் விளக்கு வசதி செய்து தர அரசு முன்வருமா?

ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை சட்டமன்றத் தொகுதியில், திருப்புவனம் ஒன்றியம், சொக்கனாதிருப்பு ஆதி திராவிடர் காலனியில் உள்ள மதுரை வீரன் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத திருக்கோயில். ஆகையால், இத்துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத திருக்கோயில்களுக்கு மின் விளக்கு வசதி செய்து தர தற்போது திட்டம் எதுவும் இல்லை.

77—

வணிக வளாகம்

வினா எண் 102569—திரு. போ. சின்னப்பன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயிலின் மேல்புறம் வணிக வளாகம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 நவம்பர் 12]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் வட்டம், அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறை ஆளுகையின்கீழ் உள்ள, சட்டப் பிரிவு 46(1)-ன்கீழ் பட்டியலில் சேர்ந்த திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலின் மேற்குப் பக்கம் சுமார் 26 செண்ட் பரப்பளவில் காலியிடம் உள்ளது. மேற்படி காலியிடம் முழுவதிலும் வணிக வளாகம் அமைப்பதற்கும், வணிக வளாகத்திற்கு கடைகளை வாடகைக்கு எடுப்பதற்கும் வணிகர்கள் முன்வராத சூழ்நிலை உள்ளது. எனவே, இத்திருக்கோயிலின் மேற்குப்புறம் வணிக வளாகம் கட்டுவதற்கான திட்டம் ஏதுமில்லை.

78—

துவக்கப் பள்ளி

வினா எண் 106636—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதியில் மூடப்பட்டுள்ள இராஜாக்கள் குடியிருப்பில் உள்ள துவக்கப் பள்ளியை மீண்டும் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், மேலப்பசனை ஊராட்சிக்குட்பட்ட இராஜாக்கள் குடியிருப்புப் பள்ளியை மீண்டும் துவக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[2010 நவம்பர் 12

79—

செயல்வழிக் கற்றல் அட்டை

வினா எண் 109481—திரு. ஞா. ஜான் ஜோசப்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் மலையாள மொழி பயிலும் மாணவர்களுக்கு மலையாள செயல்வழிக் கற்றல் (ABL) அட்டை வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டத்தில் மாணவர்களுக்கு மலையாள மொழி செயல்வழிக் கற்றல் அட்டைகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

80—

சுற்றுச் சுவர்

வினா எண் 115302—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, ஆலிவாயன் கொட்டாய் நடுநிலைப் பள்ளிக்குச் சுற்றுச் சுவர் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) தருமபுரி தொகுதி, ஆலிவாயன் கொட்டாய் நடுநிலைப் பள்ளிக்கு 2010-2011 ஆம் கல்வியாண்டில் சுற்றுச் சுவர் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

2010 நவம்பர் 12]

81—

கட்டட வசதி

வினா எண் 115527—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டம், மயிலாபுரம் நடுநிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டம் மயிலாபுரம் நடுநிலைப் பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறைக் கட்டடம் கட்டும் கருத்துரு ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

82—

கட்டட வசதி

வினா எண் 117436—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், சென்னிமலை ஒன்றியம், உப்பிலிபாளையம் கஸ்தூர்பா நிதி உதவி துவக்கப் பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறைக் கட்டடம் கட்டவும், விளையாட்டு உபகரணங்கள் வழங்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) அனைவருக்கும் கல்வி திட்டத்தின்கீழ் உதவி பெறும் துவக்கப் பள்ளிகளுக்கு கட்டடம் கட்ட மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வழங்க இயலாது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[2010 நவம்பர் 12

83—

ஈப்பு வசதி

வினா எண் 113183—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி ஒன்றியத்தில் உள்ள மலைக் கிராமங்களுக்குச் செல்ல ஈப்பு வசதி ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

வனத் துறை மூலம் கிராமங்களுக்கு ஈப்பு வசதி செய்வது எந்த ஒரு பகுதியிலும் தற்போது நடைமுறையில் இல்லை. பொதுவாக, பொது மக்களுக்கு போக்குவரத்து வசதிகள் செய்ய வேண்டிய பொறுப்பு போக்குவரத்துத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள போக்குவரத்துக் கழகங்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

2. வனம், வன உயிரினங்கள் பாதுகாப்பு மேம்பாடு ஆகியவை வனத் துறையின் முக்கியப் பணிகள் ஆகும். வனப் பாதுகாப்பு என்பது 24 மணி நேரப் பணியாகும். இரவு பகல் பாராது வனப் பாதுகாப்புப் பணியைச் செய்துவரும் இத்துறையால், மலைவாழ் மக்களுக்கு ஈப்பு வசதி செய்து கொடுத்துக் கண்காணிப்பது இயலாததாகும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

84—

சாலை வசதி

வினா எண் 46779—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் நகராட்சி, பார்வதிபுரம் வட்ட பேருந்து நிலையத்திலிருந்து எஸ்.எஸ். நகர் காலனி வழியாக ஆசாரிப்பள்ளம் மருத்துவக் கல்லூரி செல்லும் சாலையை விரிவுபடுத்த அரசு முன்வருமா?

2010 நவம்பர் 12]

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

ஆம். கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் நகராட்சி, பார்வதிபுரம் வட்டப் பேருந்து நிலையத்திலிருந்து எஸ்.எஸ். நகர் வழியாக ஆசாரிப்பள்ளம் மருத்துவக் கல்லூரி செல்லும் சாலையின் ஒரு பகுதி ஊராட்சி கட்டுப்பாட்டில் உள்ளது. மீதப்பகுதியான நெடுஞ்சாலைத் துறையின்கீழ் உள்ள பெருவிளை (0/0-2/0 கி.மீ.) சாலையை ஒருவழித்தடத்தில் இருந்து இடைவழித்தடமாக அகலப்படுத்தி மேம்படுத்தும் பணி ரூ.48 இலட்சம் மதிப்பில் சி.ஆர்.ஐ.டி.பி. 2008-2009 (Phase II)-இன்கீழ் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

85—

பாலம்

வினா எண் 51939—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, தென்சித்தூரிலிருந்து தென்சங்கம் பாளையம் செல்ல பாலம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி தென்சித்தூர் கிராமமானது, ஆனைமலை-பூலாங்கிணறு-சாலையில் கி.மீ.6/8-ல் பிரிந்து சோமந்துறை, சித்தூர் (தென்சித்தூர்) வழியாக மீண்டும் ஆனைமலை-பூலாங்கிணறு-சாலையில் 3/8-ல் இணையும் இதர மாவட்டச் சாலையில் கி.மீ. 2/4-லும், தென்சங்கம்பாளையம் கிராமமானது கி.மீ. 0/2-லும் அமைந்து பயனடைந்து வருகின்றன. இவற்றுக்கிடையில் பாலம் அமைக்கும்படியான ஆறு அல்லது ஓடை ஏதுமில்லாததால், இக்கேள்விக்கு இடமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

86—

தடுப்புச் சுவர்

வினா எண் 52358—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் மாவட்டம், திருச்சுழி அருகே மீனாட்சிபுரம் செல்லும் சாலையோரம் உள்ள திறந்தவெளிக் கிணற்றைச் சுற்றி உயரமாக தடுப்புச் சுவர் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) விருதுநகர் மாவட்டம், திருச்சுழி அருகே மீனாட்சிபுரம் செல்லும் சாலையோரம் உள்ள திறந்தவெளிக் கிணறானது, விருதுநகர் (நெ) கோட்டப் பராமரிப்பில் உள்ள திருப்புவனம், புல்வாய்க்கரை-நரிக்குடி சாலை கி.மீ. 7/512-33/8 எனும் ஒருவழித்தடச் சாலையான மாவட்ட முக்கிய சாலையில் கி.மீ. 25/8-ல் வலதுபுறத்தில் தார்ச் சாலையின் விளிம்பிலிருந்து 15.0 மீட்டர் தூரத்தில் தனி நபர் பட்டா இடத்தில் அமைந்துள்ளதால் நெடுஞ்சாலைத் துறையின்மூலம் தடுப்புச் சுவர் கட்ட இயலாது. மேற்படி கிணற்றின் சொந்தக்காரரிடம் சுற்றுச் சுவர் கட்ட அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

87—

தரம் உயர்த்துதல்

வினா எண் 57158—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர்—ஊத்துக்குளி சாலையில் நொய்யல் ஆற்றின் குறுக்கேயுள்ள தரைப்பாலத்தினை மேம்பாலமாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 நவம்பர் 12]

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) திருப்பூர்-ஊத்துக்குளி சாலையில் நொய்யல் ஆற்றின் குறுக்கேயுள்ள தரைப்பாலத்தினை மேம்பாலமாகக் கட்டக் கோரும் இடமானது, கோபி நெடுஞ்சாலைக் கோட்டத்தினைச் சார்ந்த மாநில நெடுஞ்சாலையான கோபி-ஊத்துக்குளி-படியூர் (எண்.81) சாலை கி.மீ. 40/2 இல் உள்ள பகுதியாகும். இங்குள்ள தரைமட்டப் பாலத்தை உயர்மட்டப் பாலமாக மாற்ற நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் கோட்டம் ஈரோடு மூலம் நபார்டு வங்கி உதவியுடன் (RIDF 15 திட்டங்கள் 122) ரூ.217.00 இலட்சத்திற்கு மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டு உயர்மட்டப் பாலம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

88—

சாலையைச் சீரமைத்தல்

வினா எண் 63760—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ராதாபுரம் தொகுதி, ராதாபுரம்-நக்கனேரி நெடுஞ்சாலையைச் சீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

ஆம். ராதாபுரம்-நக்கனேரி நெடுஞ்சாலையைச் சீரமைக்கக் கோரும் பகுதியானது, திருநெல்வேலி (நெ) கோட்டப் பராமரிப்பில் உள்ள மாவட்ட இதர சாலையான ராதாபுரம் இருக்கன்துறை சாலை கி.மீ. 0/0—12/2 வரை ஆகும்.

[2010 நவம்பர் 12

இச்சாலையில் கி.மீ. 5/4-ல் நக்கனேரி உள்ளது. இச்சாலையில் கி.மீ. 0/0-6/0 வரை மேம்பாடு செய்வதற்கு வரும் 2010-2011 ஆம் ஆண்டு அரசின் நிதிநிலைமைப்படி திட்டப் பணிகளில் சேர்த்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும். கி.மீ. 6/0-12/2 வரை சுனாமி மறுவாழ்வுத் திட்டத்தின்கீழ் (2007-2008) ரூ.186 இலட்சம் மதிப்பில் மேம்பாடு செய்யப்பட்டு போக்குவரத்து சீராக நடைபெறுகிறது.

89—

பாலங்களைச் சீரமைத்தல்

வினா எண் 93292—திரு. செ.ம. வேலுசாமி: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், பல்லடம் தொகுதி, சோமனூர், ராமயச்சிபாளையம், வண்ணத்தங்கரை பாலங்களைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நெடுஞ்சாலைத் துறை பொது அலகின்மூலம் பராமரிக்கப்பட்டு வரும் மாவட்ட முக்கிய சாலையான, சின்னையம்பாளையம்-சோமனூர் (வழி) ராவத்தூர் சாலை கி.மீ. 18/8-ல் உள்ள தரைமட்ட குழாய்ப் பாலமாகும். இச்சாலையினை கி.மீ. 12/2-19/4 வரை ஒரு வழிப் பாதையிலிருந்து இருவழிப்பாதையாக அகலப்படுத்தி, உறுதிப்படுத்த நபார்டு ஆர்.ஐ.டி.எப். XV, திட்டம்-125-ன்கீழ் (சூலூர்-சோமனூர் சாலை கி.மீ. 2/4-4/0 மற்றும் 4/0-9/6 எனும் பெயரில்) நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டு, பணி செயலாக்கம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது சாலை அகலப்படுத்துதல் பணி நடைபெற்று வருகின்றது. மேலும் வண்ணத்தங்கரை ஓடையில் நபார்டு ஆர்.ஐ.டி.எப். XII, திட்டம் 122-ன்கீழ் காமநாயக்கன்பாளையம்-அன்னூர் சாலை கி.மீ. 28/4-ல் பாலம் திரும்பக் கட்டுதல் மற்றும் பல்லடம்-அவினாசி கி.மீ. 13/10-ல் பாலம் திரும்பக் கட்டுதல் ஆகிய இரு பாலங்களும் கட்டி முடிக்கப்பட்டு, பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளன.

2010 நவம்பர் 12]

90—

பாலம்

வினா எண் 101578—திருமதி ரா. லீமா ரோஸ்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவட்டாறு தொகுதிக்குட்பட்ட ஆரல்வாய்மொழி—நெடுமங்காடு சாலையில் பெருவழிக்கடவில் புது பாலம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

தக்கலை (நெ) உட்கோட்டப் பராமரிப்பில் உள்ள மாநில நெடுஞ்சாலையான ஆரல்வாய்மொழி-நெடுமங்காடு சாலை கி.மீ. 28/6 இல் உள்ள பாலமாகும். மேற்படி பாலத்தைப் புதுப்பித்துக் கட்டுவதற்கு ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாடுத் திட்டம் 2009-2010 இல் சிறு பாலம் புதுப்பித்துக் கட்டுதல் 27/8, 28/6, மற்றும் பாதுகாப்புச் சுவர் கட்டும் பணி கி.மீ. 24/6, 32/2, 34/4, 34/6-ற்கு ரூ.70.00 இலட்சம் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு 12-2-2010 அன்று கண்காணிப்புப் பொறியாளர் (நெ) திருநெல்வேலி அவர்களால் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்து விரைவில் பணி துவங்கப்படும்.

91—

தியானப் பயிற்சி மையம்

வினா எண் 44119—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையில் முதியோர்களுக்கு தியானப் பயிற்சி மையம் துவக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்:

(அ) மானாமதுரையில் முதியோர்க்கான தியானப் பயிற்சி மையம் துவங்குவதற்கான திட்டம் அரசிடம் தற்போது ஏதும் இல்லை.

(ஆ) எழவில்லை.

92—

சமுதாயக் கூடம்

வினா எண் 11559—திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொரப்பூர் தொகுதி, காளிப்பேட்டையில் பழங்குடியினருக்கு சமுதாயக் கூடம் கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டம், மொரப்பூர் தொகுதி, காளிப்பேட்டையில் பழங்குடி மக்களுக்காக சமுதாயக் கூடம் கட்ட இடம் தேர்வு செய்ய புலத்தணிக்கை செய்யப்பட்டதில் அக்கிராமத்திலோ, அக்கிராமத்தை ஒட்டியோ சமுதாயக் கூடம் கட்டத் தகுதியான புறம்போக்கு நிலம் ஏதுமில்லை என தருமபுரி மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் தெரிவித்துள்ளார். ஆயினும், அப்பகுதி பழங்குடியினர்களுக்கு சமுதாயக் கூடம் கட்டுவதற்கான அவசியம் குறித்து நேரில் சென்று அதற்கான சாத்தியக் கூறுகளை ஆய்வு செய்ய பழங்குடியினர் நல இயக்குநரைக் கேட்டுக் கொள்ளலாம் எனவும், மேலும், தேவை ஏற்படும் எனில், அப்பகுதியில் காலியாக அரசு புறம்போக்கு நிலம் உள்ளதா என மேலும் ஆய்வு செய்ய அல்லது சமுதாயக் கூடம் கட்ட நிலம் கையகப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவரைக் கேட்டுக் கொள்ளலாம் எனவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2010 நவம்பர் 12]

93—

சாதிச் சான்றிதழ்

வினா எண் 56977—திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மாநகரின் மகபூப்பாளையப் பகுதியில் காட்டுநாய்க்கன் இன மக்களுக்கு சாதிச் சான்றிதழ்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

பழங்குடியின சாதிச் சான்றிதழ்கள் வழங்கக் கோரும் மனுதாரர்கள் தாம் சார்ந்துள்ள இனத்தினை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்களைச் சாதிச் சான்று வழங்கும் அலுவலர்களிடம் அளிக்கும்பட்சத்தில் மாவட்ட நிர்வாகம் ஆய்வு செய்து பழங்குடி இனத்தவர்களுக்கு ஒரு வார காலத்திற்குள் சாதிச் சான்றிதழ் வழங்க வேண்டும் எனவும், ஐயம் ஏற்படும் இனங்களில் தீவிர விசாரணை மேற்கொண்டு 15 நாட்களுக்குள் உரிய சாதிச் சான்றிதழை மனுதாரருக்கு வழங்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மதுரை மாநகரின் மகபூப்பாளையப் பகுதியில் காட்டுநாய்க்கன் இன மக்கள் சாதிச் சான்றிதழ் கேட்டு விண்ணப்பிக்கும் கோரிக்கைகளின்மீது வருவாய்த் துறை அலுவலர்களால் விசாரணை மேற்கொள்ளப்படும்போது மனுதாரர் பழங்குடியினத்தைச் சார்ந்தவர்தான் (காட்டுநாய்க்கன்) என்பது உறுதி செய்யப்பட்டால் அவர்களுக்கு பழங்குடியினர் (காட்டுநாய்க்கன்) சாதிச் சான்றிதழ் வழங்கப்படும்.

94—

சாதிச் சான்றிதழ்

வினா எண் 58104—திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், அரக்கோணம் வட்டம், மூதூர் கிராமத்தில் வசிக்கும் இருளர் பழங்குடியின மக்களுக்கு சாதிச் சான்றிதழ் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பழங்குடியின சாதிச் சான்றிதழ்கள் வழங்கக் கோரும் மனுதாரர்கள் தாம் சார்ந்துள்ள இனத்தினை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்களைச் சாதிச் சான்றிதழ் வழங்கும் அலுவலர்களிடம் அளிக்கும்பட்சத்தில் மாவட்ட நிர்வாகம் ஆய்வு செய்து பழங்குடி இனத்தவர்களுக்கு ஒரு வார காலத்திற்குள் சாதிச் சான்றிதழ் வழங்க வேண்டும் எனவும், ஐயம் ஏற்படும் இனங்களில் தீவிர விசாரணை மேற்கொண்டு 15 நாட்களுக்குள் உரிய சாதிச் சான்றிதழை மனுதாரருக்கு வழங்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. வேலூர் மாவட்டம், அரக்கோணம் வட்டம், மூதூர் கிராமத்தில் வசிக்கும் இருளர் பழங்குடியின மக்கள் சாதிச் சான்றிதழ் கேட்டு விண்ணப்பிக்கும் கோரிக்கைகளின்மீது வருவாய்த் துறை அலுவலர்களால் விசாரணை மேற்கொள்ளப்படும்போது மனுதாரர் பழங்குடியினத்தைச் சார்ந்தவர்தான் (இருளர்) என்பது உறுதி செய்யப்பட்டால் அவர்களுக்கு பழங்குடியினர் (இருளர்) சாதிச் சான்றிதழ் வழங்கப்படும்.

95—

சாதிச் சான்றிதழ்

வினா எண் 63979—திரு. அரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், ஜவ்வாது மலையில் வாழ்கின்ற மலைவாழ் மக்களுக்கு சாதிச் சான்றிதழ்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

மலைவாழ் மக்களுக்கு சாதிச் சான்றிதழ்கள் வழங்கக் கோரும் மனுதாரர்கள் தாம் சார்ந்துள்ள இனத்தினை உறுதிப் படுத்துவதற்கான ஆவணங்களை சாதிச் சான்றிதழ் வழங்கும் அலுவலர்களிடம் அளிக்கும்பட்சத்தில் மாவட்ட நிர்வாகம் ஆய்வு செய்து பழங்குடி இனத்தவர்களுக்கு ஒரு வார காலத்திற்குள்

2010 நவம்பர் 12]

சாதிச் சான்றிதழ் வழங்கப்பட வேண்டும் எனவும், ஐயம் ஏற்படும் இனங்களில் தீவிர விசாரணை மேற்கொண்டு 15 நாட்களுக்குள் உரிய சான்றிதழை மனுதாரருக்கு வழங்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே, திருவண்ணாமலை மாவட்டம், ஜவ்வாது மலையில் வாழ்கின்ற மலைவாழ் மக்கள் சாதிச் சான்றிதழ்கள் கேட்டு விண்ணப்பிக்கும் கோரிக்கைகளின்மீது வருவாய்த் துறை அலுவலர்களால் விசாரணை மேற்கொள்ளப்படும் போது மனுதாரர் பழங்குடியினத்தைச் சார்ந்தவர்தான் என்பது உறுதி செய்யப்பட்டால் மனுதாரருக்கு பழங்குடியினர் சாதிச் சான்றிதழ் வழங்கப்படும்.

96—

வங்கிக் கடன்

வினா எண் 106668—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் தொகுதியிலுள்ள மீனவர் கூட்டுறவுச் சங்க வங்கி மூலம் மீனவர்களுக்கு வலை, பரிசல், வீடு கட்ட மானியத்துடன் கூடிய கடன் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேட்டூரில் மீனவர் கூட்டுறவு வங்கி எதுவும் தொடங்கப்படவில்லை. எனவே, கூட்டுறவு வங்கிமூலம் மீனவர்களுக்குக் கடன் வழங்கும் கேள்வி எழாது.

97—

மேம்படுத்துதல்

வினா எண் 103698—திரு. வை. காவேரி: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் பால் பண்ணையை தேசிய அளவில் மிகப் பெரிய பண்ணையாக மாற்றவும், மேம்படுத்தவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், தற்சமயம் நாள்தோறும் சுமார் 4,63,000 லிட்டர் பாலினை சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் உள்ள 1,098 பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கொள்முதல் செய்து வருகிறது. இதில், நாளொன்றுக்கு சுமார் 1.6 இலட்சம் லிட்டர் பால் உள்ளூரிலேயே விற்பனை செய்யப்பட்டு, மீதமுள்ள பால் சென்னை மாநகர விற்பனைக்குப் பாலாகவும், பால் உபபொருட்களாகவும் அனுப்பப்பட்டு வருகிறது.

சேலம் பால் பண்ணையில், தினசரி 10-15 இலட்சம் லிட்டர் பாலினைக் கையாளக்கூடிய அளவிற்கு நவீனமாக்குவதற்குத் தேவையான மனிதவளம் மற்றும் நிதியுதவி இல்லை.

எனவே, மேற்கூறிய காரணத்தினால் சேலம் பால் பண்ணையைத் தேசிய அளவில் மிகப் பெரிய பால் பண்ணையாக மாற்றுவதற்கு சாத்தியக் கூறுகள் தற்போது இல்லை.

98—

விளம்பர வசதி

வினா எண் 107104—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புதுக்கோட்டை, கிருஷ்ணகிரி, வேலூர், சிவகங்கை, திண்டுக்கல், தூத்துக்குடி, கன்னியாகுமரி, நாகர்கோவில், தருமபுரி, நீலகிரி ஆகிய மாவட்டங்களில் எருமைப் பாலில் உள்ள பலன்களைப் பொதுமக்களுக்கு விளம்பரத்தின்மூலம் பிரச்சாரம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எருமைப் பால் உற்பத்தியில் உள்ள அனுகூலங்களை விளம்பரப்படுத்துதல் மற்றும் உற்பத்தியின்

2010 நவம்பர் 12]

அவசியம் குறித்து பிரச்சாரம் செய்ய கீழ்க்கண்டவாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:

எருமைப் பாலின் உற்பத்தியைப் பெருக்கும் பொருட்டு, பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு கிராமப்புற மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் அமைக்கப்படும் ஒருங்கிணைந்த பால் பெருக்குத் திட்டத்தின்கீழ் வாங்கப்படும் கறவை மாடுகளில் 30 சதவிகிதம் எருமை மாடுகளாக வாங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2007-2008 முதல் விவசாய மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் எருமைக் கன்றுகள் வளர்க்கும் பிரத்தியேகத் திட்டம் அமல்படுத்தப்பட்டு, பால் உற்பத்தியாளர்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது.

தமிழக அரசு, கடந்த 3 ஆண்டுகளில் எருமைப் பாலின் விலையை ஆண்டுதோறும் படிப்படியாக உயர்த்தி உத்தரவிட்டதன் பேரில், தற்போது கொள்முதல் விலையாக லிட்டருக்கு ரூ.23.00 வழங்கப்பட்டு வருகிறது.

எருமைப் பாலில் உள்ள அனுகூலங்களை விளம்பரப்படுத்திட சங்கத்தில் அறிவிப்புப் பலகைகள் வைக்கப்படுகின்றன. கிராமங்களில் இது குறித்து அறிவிப்புகளும் வழங்கப்படுகின்றன. பிரதம பால் உற்பத்தி கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு, பயிற்சிக் காலங்களில், எருமைப் பால் உற்பத்தி செய்வதில் உள்ள அனுகூலங்கள், திடமான பால்பொடி, வெண்ணெய், ஏற்றுமதித் தரமுள்ள நெய், எருமைப் பாலில் செய்யப்படும் பால் பொருட்களின் வரவேற்பு போன்றவை பற்றி எடுத்துரைக்கப்படுகிறது.

99—

பால் குளிருட்டும் மையம்

வினா எண் 110854—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதியில் ஊராட்சிதோறும் பால் குளிரூட்டும் மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

ஓமலூர் சட்டமன்றத் தொகுதியானது, சேலம் பிரதம பால் பண்ணையிலிருந்து சுமார் 20 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இங்கு, சுமார் 63 பிரதம பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு நாள்தோறும் 35,000 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. பெரியாக்கவுண்டனூர் பிரதம பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தில், 2,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட தொகுப்பு பால் குளிரூட்டும் மையமும் அமைக்கப்பட்டு நல்ல முறையில் இயங்கி வருகிறது. மேலும், ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சின்ன திருப்பதி கிராமத்தில் 5,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட தொகுப்பு பால் குளிரூட்டும் மையம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. ஓமலூர் தொகுதிக்கு உட்பட்ட பிரதம பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களில் கொள்முதல் செய்யப்படும் பால், சேலம் பால் பண்ணைக்கு எவ்வித சேதாரமுமின்றி கொண்டு வந்து பதப்படுத்தப்படும் நிலையில், ஓமலூர் தொகுதியில் ஒவ்வொரு ஊராட்சிக்கும் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கும் உத்தேசம் தற்சமயம் எழவில்லை.

100—

கடனுதவி

விணா எண் 11638—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றிய விவசாயிகளுக்கு கறவை மாடுகள் வாங்க மானியத்துடன் கூடிய கடனுதவி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திடமிருந்து நிதி உதவி பெற்று டாப்செட்கோ,

2010 நவம்பர் 12]

டாம்ப்கோமூலம் குறைந்த வட்டியில் கறவை மாட்டுக் கடன் வழங்கப்படுகிறது. மேலும், ஆதி திராவிட உறுப்பினர்களுக்கு தாட்கோ திட்டத்தின்கீழ் மானியத்துடன் கூடிய கறவை மாட்டுக் கடன், தாட்கோ நிறுவனத்தால் வழங்கப்பட்டு வருகிறது. இவற்றின்மூலம் திருப்புவனம் ஒன்றிய விவசாயிகளும், மானியத்துடன் கூடிய கடன் மற்றும் குறைந்த வட்டியில் கறவை மாட்டுக் கடன் பெற வழிவகை உள்ளது.

பட்டியல் 3

1—

திருமண மண்டபம்

வினா எண் 3047—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் சோலையாறு அணை, கோட்டூர், வேட்டைக்காரன்புதூர் ஆகிய இடங்களில் திருமண மண்டபம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சிக்குட்பட்ட 9-வது வார்டு சோமநாதபுரம் உப்பாறு சாலையில் பேரூராட்சியின் மூலமாக சமுதாய நலக் கூடம் அமைக்க முடிவு செய்து 2007-2008 ஆம் ஆண்டு அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ. 11.00 இலட்சம் மதிப்பீட்டில் சமுதாய நலக் கூடம் (தரைதளம்) கட்டப்பட்டுள்ளது. 2008-2009 ஆம் ஆண்டு வால்பாறை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ. 6.00 இலட்சம் மதிப்பீட்டில் சமுதாய நலக் கூடத்தின் மேல் தளம் (உணவுக் கூடம்) அமைக்கப்பட்டு தற்பொழுது பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது. மேலும் இப்பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் திருமண மண்டபம் அமைக்க பேரூராட்சிக்கு சொந்தமான இடம் இல்லை என்பதால் திருமண மண்டபம் அமைக்க இயலாது.

2—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 6974—திரு. வை. காவேரி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொங்கணாபுரம் ஒன்றியம், கோரணம்பட்டி கிராமம், பண்டாரன்காடு பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், கோரணம்பட்டி ஊராட்சி, பண்டாரன்காடு என்கிற பனங்காடு குடியிருப்பில் 2007-2008 ஆம் நிதியாண்டில் 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்பட்டு இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் போதுமான அளவு காவிரிக் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

3—

குடிநீர்க் குழாய் இணைப்பு

வினா எண் 11604—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், பணகுடி பேரூராட்சிப் பகுதியில் உள்ள பொதுமக்களுக்கும், வீட்டு இணைப்புகளுக்கும் தனித்தனியாக குடிநீர்க் குழாய்கள் இணைப்பு அமைத்துத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம், பணகுடி பேரூராட்சியில் குடிநீர்த் திட்ட உப விதிகளின்படி வீட்டுக் குடிநீர் இணைப்பு மற்றும் தெரு பொதுக் குழாய் இணைப்பு ஆகியவற்றிற்கு ஒரே அளவில் குடிநீர் வழங்கிட வழிவகை செய்யப்பட்டு உள்ளது. மேலும்,

அனைத்துப் பகுதிகளிலும் வீட்டுக் குடிநீர் இணைப்புக்கு என தனியாக பைப் லைன் அமைத்திட பொருளாதார ரீதியாகவும் விதிகளின்படியும் சாத்தியக்கூறு இல்லை.

4—

மயானம் அமைத்தல்

வினா எண் 18935—திரு. கே.வி. ராமநாதன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பவானி தொகுதி, தொட்டிபாளையம் கிராமம், பணங்காட்டுக் காலனியில் புதிய மயானமும், சின்னப்புலியூர் கிராமம், கரட்டுப்புதூருக்கு மயானமும் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

சின்னப்புலியூர் ஊராட்சி, கரட்டுப்புதூர் மயானம் மற்றும் தொட்டிபாளையம் ஊராட்சி, பணங்காட்டுக் காலனியில் மயானத்திற்கு எனத் தனியாக நில ஆர்ஜிதம் செய்து தரக் கோரி வருவாய்த் துறைமூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

5—

சிமெண்ட் தளம்

வினா எண் 44418—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் மருதுபாண்டியர் நினைவகத்தைச் சுற்றி சிமெண்ட் தளம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், திருப்பத்தூர் பேரூராட்சியில் உள்ள மருதுபாண்டியர் நினைவகத்தில் சுதந்திரப் போராட்ட வீரர்கள் நினைவக மேம்பாட்டுத் திட்டம், 2009-2010-ன்கீழ் சிமெண்ட் தளம் அமைக்கப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2010 நவம்பர் 12

6—

உயிரி அறிவியல் புதுமைத் திட்ட நிதி

வினா எண் 45293—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் மூலம் உயிரி அறிவியல் புதுமைத் திட்ட நிதி ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், உயிரி அறிவியல் புதுமைத் திட்ட நிதி ஏற்படுத்த தகுந்த முயற்சிகளை மேற்கொள்ளும்.

(ஆ) மேற்கூறிய உயிரி அறிவியல் புதுமைத் திட்ட நிதி ஏற்படுத்துவதற்கு வேண்டிய காரணங்களை ஆராய்ந்து, அதற்கு தகுந்த நடவடிக்கையை விரைவில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் மேற்கொள்ளும்.

7—

ஒயின் தொழிற்சாலை

வினா எண் 45304—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை சிப்காட் வளாகத்தில் ஒயின் தொழிற்சாலை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்சமயம் அத்தகைய திட்டம் சிப்காட் வசம் பரிசீலனையில் இல்லை. எனினும் ஒயின் தொழிற்சாலை துவக்க தொழில் முனைவோர்கள் நிலம் வேண்டி மானாமதுரை சிப்காட் வளாகத்தை அணுகினால் தற்போதுள்ள விலையின் அடிப்படையில் நிலம் வழங்கப்படும்.

2010 நவம்பர் 12]

8—

குடிநீர் வசதி

வினா எண் 54339—திரு. தி.க. ராஜா: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் ஒன்றியம், பசலிக்குட்டை அரசு தொடக்கப் பள்ளிக்கு குடிநீர் வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் ஒன்றியத்தைச் சேர்ந்த பசலிக்குட்டை தொடக்கப் பள்ளி நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்டு திறந்தவெளிக் கிணற்றை நீர் ஆதாரமாகக் கொண்டு 1,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட நீர்த்தேக்கத் தொட்டி மூலமாக பசிலிப்பட்டியில் தற்போது நிலையுயர்த்தப்பட்டுள்ள நடுநிலைப் பள்ளிக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

9—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 61434—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி ஒன்றியம், பாண்டியார் காத்தான்குளம் காட்டுவளவில் ஆழ்துளைக் கிணறு அமைத்து மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி ஒன்றியம், கொங்குப்பட்டி ஊராட்சியில் பாண்டியன் காட்டுவளவு குடியிருப்பின் ஒரு பகுதி பாண்டியார் காத்தான்குளம் காட்டுவளவு ஆகும்.

[2010 நவம்பர் 12

இக்குடியிருப்பிற்கு காடையாம்பட்டி கூட்டுக் குடிநீர் திட்டத்திலிருந்து பயன்பெறும் மூங்கிலேரி குடியிருப்பில் உள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து குழாய் நீட்டிப்புமூலம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, தனியே மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் அவசியம் இல்லை.

10—

ஆழ்துளைக் கிணறுகள்

வினா எண் 66187—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு நகர், 6-வது வார்டில் ஆழ்துளைக் கிணறுகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு தொகுதி, காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு நகரம் 6-வது வார்டில் ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன.

11—

குடிநீர் வசதி

வினா எண் 74451—திரு. எம்.ஆர். சுந்தரம்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆத்தூர் தொகுதி, மஞ்சினி ஊராட்சி, சதாசிவம், சிவப்பாளி குடியிருப்புப் பகுதிகளுக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குழாய் இணைப்பு வசதி செய்து குடிநீர் வசதி செய்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

சட்டமன்றம் LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2010 நவம்பர் 12]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஆத்தூர் ஒன்றியம், மஞ்சினி ஊராட்சி, சதாசிவம் மற்றும் சிவப்பாளி பகுதிகள் கவர்னர் தோப்பு குடியிருப்பைச் சார்ந்தவை. இக்குடியிருப்பில் அமைக்கப்பட்டுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டியிலிருந்து மேற்கண்ட பகுதிகளுக்கும் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

12—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 74821—திரு. கி.க. ராஜா: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் ஒன்றியம், மாடப்பள்ளி ஊராட்சியில் உள்ள மடவாளம் கிராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் ஒன்றியம், மாடப்பள்ளி ஊராட்சியைச் சேர்ந்த மடவாளம் குடியிருப்பின் மக்கள் தொகைக்கேற்றவாறு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் இயங்கி வருகிறது. எனவே, கூடுதலாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் அவசியம் இல்லை.

13—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 95404—திரு. பெ.சு. விஜயகுமார்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2010 நவம்பர் 12

(அ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், காங்கேயனூர் ஆதி திராவிடர் காலனியில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை.—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் ஒன்றியம், காங்கேயனூர் ஊராட்சி ஆதி திராவிடர் காலனி குடியிருப்புக்கு நடப்பு நிதியாண்டில் கூடுதல் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் குடிநீர் வசதி செய்யப்படவுள்ளது.

14—

குடிநீர் வசதி

வினா எண் 100326—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வரும் நிதியாண்டில் வால்பாறை தொகுதி, முருகாளி எஸ்டேட் 2-ம் பிரிவு, லோயர் ஷேக்கல்முடி, சோலையாறு அணை, சென்னியப்பா சேடல் அணை, உருளிக்கல், மானம்பள்ளி, சுருளிமலை, பெரியார் நகர், அணலி, வில்லோனி, வரட்டுப்பாறை, பழைய வால்பாறை எஸ்டேட், செல்லாளிப்பாறை ஆகிய எஸ்டேட்டுகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை.—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, முருகாளி எஸ்டேட் 2-ம் பிரிவு, லோயர் ஷேக்கல்முடி, சோலையாறு அணை, சென்னியப்பா சேடல் அணை, உருளிக்கல், மானம்பள்ளி, சுருளிமலை, பெரியார் நகர், அணலி, வில்லோனி, வரட்டுப்பாறை, பழைய வால்பாறை எஸ்டேட், செல்லாளிப்பாறை ஆகிய பகுதிகள் தனியார் தேயிலைத் தோட்ட நிறுவனங்களின்கீழ் அமைந்துள்ளன.

2010 நவம்பர் 12]

மேற்கண்ட பகுதிகளில் தனியார் தேயிலை நிறுவனத்தின் மூலமே பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே தனியாக குடிநீர் வழங்கும் திட்டம் எதுவும் இல்லை.

15—

குடிநீர் வசதி

வினா எண் 103870—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், அரசிராமணி கிராமம் 5, 1-வது வார்டுகள், செங்காளி தோட்டம் கிராம மக்களுக்கு குடிநீர் வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், அரசிராமணி பேரூராட்சிக்குட்பட்ட 4-வது மற்றும் 5-வது வார்டுகளுக்கு இப்பேரூராட்சியால் பராமரிக்கப்பட்டுவரும் குடிநீர்த் திட்டத்திலுள்ள 6.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து காவிரிக் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், செங்காளி தோட்டம் குடியிருப்பில் சுமார் 10 வீடுகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக உள்ளன. இப்பகுதி மக்களுக்கு ஏற்கெனவே உள்ள குடிநீர்த் திட்டத்தின் பகிர்மான குழாயிலிருந்து பேரூராட்சிமூலம் குழாய் விஸ்தரிப்பு செய்து போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

16—

நவீன அங்காடி

வினா எண் 114345—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு நகரில் உள்ள காய்கறி அங்காடியினை நவீன அங்காடியாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

செங்கல்பட்டு நகராட்சி, மேட்டுத்தெருவில் தற்போது நகராட்சியின் பராமரிப்பில் 33 காய்கறி அங்காடிகள் இயங்கி வருகின்றன. அனைத்துக் கடைகளிலும் 'செராமிக்' ஓடுகள் ஒட்டி தேவைப்படும் கூடுதல் வசதிகளை 2010-2011 ஆம் நிதியாண்டில் செய்து முடித்து நவீன அங்காடியாக மாற்றப்படும்.

17—

நவீன வணிக வளாகம்

வினா எண் 114404—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு நகராட்சி, புதிய பேருந்து நிலையம் அருகிலுள்ள பழுதடைந்த வணிக வளாகத்திற்குப் பதிலாக நவீன வணிக வளாகம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

செங்கல்பட்டு நகராட்சி, புதிய பேருந்து நிலையம் எதிரில் உள்ள இந்நகராட்சிக்கு சொந்தமான வணிக வளாகக் கட்டடம் 05-02-1988 அன்று கட்டிமுடிக்கப்பட்டு தற்போது அதிலுள்ள அனைத்துக் கடைகளும் இயங்கி வருகின்றன. தற்போது கட்டடத்தின் உறுதித் தன்மையை அறிந்து அதனை புதுப்பிப்பதா அல்லது முழுவதுமாக இடித்துவிட்டு புதிய கட்டடம் கட்டுவதா என்பதை ஆய்வு செய்து நடவடிக்கை மேற்கொள்ளும்பொருட்டு அண்ணா பல்கலைக்கழகத்திடம் சான்று பெற்றிட கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அண்ணா பல்கலைக்கழகம் மேற்படி கட்டடத்தின் உறுதித் தன்மையை ஆய்வு செய்து சான்று அளித்த பிறகு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

18—

மின் கம்பங்களை சீரமைத்தல்

வினா எண் 46825—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2010 நவம்பர் 12]

(அ) மானாமதுரை புதிய பேருந்து நிலையத்தில் உள்ள மின் கம்பங்களைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை புதிய பேருந்து நிலையத்தில் உள்ள மின் கம்பங்கள் நல்ல நிலையில் உள்ளன. எனவே, மின் கம்பங்களைச் சீரமைக்க வேண்டிய அவசியம் தற்போது இல்லை.

19—

மின் வசதி

வினா எண் 56039—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை டாப்சிலிப் அருகில் கோழிக்முத்தி ஆதிவாசிகள் குடியிருப்பில் மின் வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதிக்குட்பட்ட டாப்சிலிப் அருகில் கோழிகமுத்தி என்ற பகுதி இந்திரா காந்தி வன உயிரின உய்விடத்திற்குட்பட்ட வனப் பகுதியாகும். மேற்படி பகுதியில் உள்ள குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்க 8 கிலோ மீட்டர் உயர் அழுத்த மின் பாதையும், 1/2 கிலோ மீட்டர் தாழ்வழுத்த மின்பாதையும் அமைக்கப்பட வேண்டியுள்ளது. மேலும் அப்பகுதியில் மின் பாதை அமைக்க வனத் துறையிடமிருந்து தடையின்மைச் சான்றிதழ் தேவைப்படுகிறது. வனத் துறையின் தடையின்மைச் சான்றுடன் விண்ணப்பங்கள் ஏதும் பெறப்படவில்லை. தடையின்மைச் சான்றிதழுடன் உரிய விண்ணப்பங்கள் கொடுக்கப்பட்டால் வாரிய விதிகளின்படி மின் இணைப்பு வழங்கப்படும்.

[2010 நவம்பர் 12

20—

மின் பாதை மாற்றி அமைத்தல்

வினா எண் 58533—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, செம்பனார்கோவில் ஊராட்சி, குமரகோவில் மேலவீதியில் தாழ்வாகச் செல்லும் மின் கம்பிகளை மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பூம்புகார் தொகுதி, செம்பனார்கோவில் ஊராட்சி, குமரகோவில் மேலவீதியில் உள்ள குடியிருப்புகள் தாழ்வழுத்த மின் பாதைக்குக் கீழே கட்டப்பட்டுள்ளதனால், தாழ்வழுத்த மின்பாதைக்கும், குடியிருப்புகளுக்கும் உள்ள இடைவெளி வாரிய விதிப்படி உள்ள இடைவெளியை விடக் குறைவாகவே உள்ளது. எனவே, மின் பாதையை மாற்ற ஆகும் மதிப்பீட்டுச் செலவை குடியிருப்போர் ஏற்கும்பட்சத்தில் மின் பாதை மாற்றி அமைக்கப்படும்.

21—

மின்சார வசதி

வினா எண் 63114—திரு. த.அ. மேகநாதன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவேரிப்பட்டினம் தொகுதி, ஜக்கசமுத்திரம் ஊராட்சி, முல்லாசனஅள்ளி கிராமத்தில் சீரான மின்சாரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 நவம்பர் 12]

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காவேரிப்பட்டினம் தொகுதி, ஜக்கசமுத்திரம் ஊராட்சி, முல்லாசனஅள்ளி கிராமத்தில், புதிய 100 கே.வி.ஏ. மின் மாற்றி ரூ. 7,30,000/- செலவில் 19-6-2009 அன்று இயக்கி வைக்கப்பட்டது. இதன் வாயிலாக மின்சாரம் நல்ல நிலையில் அப்பகுதிக்கு வழங்கப்பட்டு வருகிறது.

22—

மின் மாற்றி

வினா எண் 67625—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, ஏ. விளாக்குளம், கிழப்பசலை ஊராட்சி, சங்கமங்களம், மானாமதுரை ஒன்றியம், கட்டிக்குளம், திருப்புவனம் பேரூராட்சி, புதூர் பகுதி மற்றும் பழையூர் பகுதிகளில் மின் மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, ஏ. விளாக்குளம், கிழப்பசலை ஊராட்சி, சங்கமங்களம், மானாமதுரை ஒன்றியம், கட்டிக்குளம், திருப்புவனம் பேரூராட்சி, புதூர் பகுதி மற்றும் பழையூர் பகுதிகளில் ஏற்கெனவே உள்ள மின் மாற்றிகளே போதுமானவையாக உள்ளன. எனவே, புதிய மின் மாற்றிகள் அமைக்க வேண்டிய அவசியம் தற்போது இல்லை.

23—

மின் மாற்றி

வினா எண் 70291—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பூம்புகார் தொகுதி, பூம்புகார் பழையகரம் பகுதியில் மின் மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

பூம்புகார் தொகுதி, பூம்புகார் பழையகரம் பகுதிக்குப் புதியதாக ஒரு 100 கே.வி.ஏ. திறன் கொண்ட மின் மாற்றி நிறுவப்பட்டு, இயக்கத்தில் உள்ளது.

24—

மின் மாற்றி அமைத்தல்

வினா எண் 100515—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, தவத்தாரேந்தல் ஊராட்சி, தவத்தாரேந்தல் கோட்டம், வளையப்பட்டி பகுதி, எதிர்மறிச்சான் பகுதியில் புதிய மின் மாற்றிகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, தவத்தாரேந்தல் ஊராட்சி, தவத்தாரேந்தல் கோட்டம், வளையப்பட்டி பகுதி, எதிர்மறிச்சான் பகுதியில் ஏற்கெனவே இரண்டு 100 கே.வி.ஏ., மின் மாற்றிகள் இயக்கத்தில் உள்ளன. மேற்கண்ட மின் மாற்றிகளில் கூடுதல் மின் பளு ஏதும் இல்லாததாலும், நல்ல இயக்கத்தில் உள்ளதாலும், மேலும் மேற்கண்ட பகுதியில் குறைந்த மின்னழுத்தம் எதுவும் இல்லாததாலும் புதிய மின் மாற்றி அமைக்க வேண்டிய அவசியம் தற்போது இல்லை.

25—

மின் மாற்றி

வினா எண் 100827—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2010 நவம்பர் 12]

(அ) மானாமதுரை தொகுதி, கள்ளங்குடி ஊராட்சி, கள்ளங்குடியில் பழைய மின் மாற்றியை அகற்றி அதிக மின்னழுத்தமுள்ள புதிய மின் மாற்றி அமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கள்ளங்குடி ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு கள்ளங்குடி மின் மாற்றி எண் (I)50 கே.வி.ஏ./22 கே.வி. மின் மாற்றியில் இருந்து மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட மின் மாற்றியில் கூடுதல் மின் பளுவோ அல்லது குறைவான மின்னழுத்தம் எதுவும் இல்லாததால் மேற்கண்ட மின் மாற்றியை அகற்றி அதிக மின்னழுத்தம் உள்ள புதிய மின் மாற்றி அமைக்க வேண்டிய அவசியம் இல்லை. எனினும், கள்ளங்குடி கிராமத்திற்குட்பட்ட வடக்குக் குடியிருப்புப் பகுதியில் எதிர்வரும் மின் பளுவிற்கேற்பவும் தரமான மின்னழுத்தத்திற்காகவும் ராஜீவ் காந்தி கிராம மின்மயமாக்கல் திட்டத்தின்கீழ் புதிய 16 கே.வி.ஏ/22 கே.வி. மின் மாற்றி அமைப்பதற்கான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. பணிகள் முடிந்தவுடன் மேற்கண்ட மின் மாற்றி இயக்கி வைக்கப்படும்.

26—

மின் மாற்றிகள் அமைத்தல்

வினா எண் 107895—திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம், சிறுபனைப் பெருகால் ஊராட்சி, கீழ்சிறுனை கிராமத்தில் மின் மாற்றிகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

சட்டமன்றம் LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம், பாலுசெட்டிசத்திரம் பிரிவிற்கு உட்பட்ட கிழ்சிறுனை கிராமத்தில் 63 கே.வி.ஏ. மின் மாற்றி ஒன்று 6-2-2010 அன்று புதியதாக நிறுவப்பட்டு இயக்கம் செய்யப்பட்டது.

27—

மானியம்

வினா எண் 108439—திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தொழிற்சாலைகள் ஜெனரேட்டர்களைப் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்துகொள்வதற்கான கூடுதல் செலவினை மானியமாக வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

தொழிற்சாலைகள் ஜெனரேட்டர்களை பயன்படுத்தி மின் உற்பத்தி செய்துகொள்வதற்கான கூடுதல் செலவினை மானியமாக வழங்குவதற்கு மின்சார வாரியத்தில் மானியம் ஏதும் (சலுகை விலை) தற்போது வழங்கப்படவில்லை.

28—

மின் கம்பிகளை மாற்றுதல்

வினா எண் 110198—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் ஒன்றியம், ஸ்ரீபராங்குசநல்லூர் ஊராட்சி, ஸ்ரீபராங்குசநல்லூர் நடுத்தெருவின் மையப் பகுதியில் உள்ள மின் கம்பிகளை மாற்ற அரசு ஆவன செய்யுமா?

2010 நவம்பர் 12]

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

ஸ்ரீவைகுண்டம் ஊராட்சி ஒன்றியம், ஸ்ரீபராங்குசநல்லூர் ஊராட்சியில் தெருவின் நடுவில் உள்ள மின் கம்பத்தை அகற்றி தெரு ஓரத்திற்கு மாற்றுவதற்கு ஊராட்சி மன்றத் தலைவர் கொடுத்த விண்ணப்பத்தின் அடிப்படையில் மின் கம்பத்தை இடமாற்றம் செய்ய அனுமதி வழங்கப்பட்டு 23-2-2010 அன்று பணிகள் முடிக்கப்பட்டன.

29—

கூட்டுறவு வளர்ச்சித் திட்டம்

வினா எண் 33157—திரு. எஸ். ராஜகுமார்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தை 2007-2008 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் 2007-2008 ஆம் ஆண்டு செயல்படுத்தப்படவில்லை. எனினும், தற்போது இதுகுறித்த செயற்குறிப்புகள் பெறப்பட்டு அரசின் ஆய்வில் உள்ளன.

30—

பகுதிநேர நியாய விலைக் கடை

வினா எண் 55727—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை ஒன்றியம், சூரக்குளம் பில்லறுந்தான் ஊராட்சி, மணக்குளத்தில் நியாய விலைக் கடை அமைக்கவும் மற்றும் நவதாவு பகுதியில் பகுதி நேர நியாய விலைக் கடை துவக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை ஒன்றியம், சூரக்குளம் பில்லறுந்தான் ஊராட்சி, மணக்குளத்தில் ஏற்கெனவே ஒரு முழுநேர நியாய விலைக் கடை 374 குடும்ப அட்டைகளைக் கொண்டு 1979 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருவதால் மேற்படி பகுதியில் மீண்டும் ஒரு நியாயவிலைக் கடை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

(2) 478 குடும்ப அட்டைகளுடன் செயல்படும் கொன்னக்குளம் நியாய விலைக் கடையில் நவதாவு கிராமத்தின் 90 குடும்ப அட்டைகளும் அடங்கும். நவதாவு கிராமத்தில் புதிய பகுதிநேரக் கடை அமைப்பதற்கு 150 குடும்ப அட்டைகளுக்குக் குறைவாக இருப்பதாலும் பிரிவினைக்குப் பின்னர் தாய் நியாய விலைக் கடையில் 500 குடும்ப அட்டைகளுக்கும் குறைவாக இருப்பதாலும் அரசின் நிபந்தனைகள் இந்நேர்வில் பூர்த்தியாகாத நிலையில், நவதாவு கிராமத்தில் புதிய பகுதிநேரக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

31—

கூடுதல் நியாய விலைக் கடை துவக்குதல்

வினா எண் 64865—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் தொகுதி, ஏலகிரி மலை, ஜவ்வாது மலை ஆகிய பகுதிகளில் கூடுதல் நியாய விலைக் கடைகளைத் துவக்க அரசு ஆவன செய்யுமா?

2010 நவம்பர் 12]

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

ஏலகிரி மலைவாழ் மக்கள் பெரும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தால் நடத்தப்படும் 3 முழு நேர மற்றும் 3 பகுதிநேர நியாய விலைக் கடைகள்மூலம் 1,476 குடும்ப அட்டைகளுக்கு பொருட்கள் விநியோகம் செய்யப்படுகின்றன. அனைத்து நியாயவிலைக் கடைகளும் கிராமங்களிலிருந்து 1 கிலோ மீட்டர் தொலைவிலேயே அமைந்துள்ளன. எனவே, ஏலகிரி மலையில் கூடுதலாக நியாயவிலைக் கடைகள் துவக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

ஜவ்வாது மலைப் பகுதியில், ஜமுனாமாத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட அத்திப்பட்டு, தொம்பதெட்டி, வீரப்பனூர் ஆகிய இடங்களில் மூன்று முழுநேரக் கடைகள் இயங்கி வருகின்றன. மேலும் குண்டாவத்தூர், தேக்குமரத்தூர் கடைகளை ஒன்றிணைத்து ஒரு புதிய பகுதிநேரக் கடை 13-12-2008-ல் ஆணையிடப்பட்டு இயங்கி வருகிறது. மேலும் செங்கம் வட்டம், கூட்டத்தூர், மேல்பட்டு ஆகிய 2 பகுதிகளில் நியாயவிலைக் கடைகள் இயங்கி வருகின்றன. இந்நிலையில் இப்பகுதியில் கூடுதலாக நியாயவிலைக் கடை துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

32—

ஊதிய உயர்வு

வினா எண் 102159—திரு. தி.க. ராஜா: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நியாய விலைக் கடைகளில் குறைந்த ஊதியத்தில் பணிபுரியும் விற்பனையாளர்களுக்கு ஊதிய உயர்வு உறுதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

கூட்டுறவுத் துறையின்கீழ் இயங்கும் சங்கங்களின் கட்டுப்பாட்டில் செயல்படும் நியாயவிலைக் கடைப் பணியாளர்களுக்கு ஊதிய விகிதம் திருத்தப்பட்டு 28-9-2007 முதல் வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஊதியத் திருத்தத்தின்படி

நியாயவிலைக் கடைப் பணியாளர்களுக்கு குறைந்தபட்சம் ரூ.1,680/-மும் அதிகபட்சம் ரூ.4,000/-மும் ஊதியம் அதிகரித்து வழங்கப்பட்டுள்ளது.

33—

பகுதிநேர அங்காடி

வினா எண் 102765—திரு. து. அமரமூர்த்தி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரியலூர் தொகுதி, அன்னிமங்கலம் ஊராட்சி, பாளையம்பாடி கிராமத்தில் புதிய பகுதிநேர அங்காடி திறக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரியலூர் மாவட்ட அரண்மனைக்குறிச்சி நியாயவிலைக் கடையிலிருந்து சில குடும்ப அட்டைகளைப் பிரித்து பாளையம்பாடி கிராமத்தில் புதிய பகுதிநேரக் கடை அமைக்கப்பட்டு 10-11-2009 முதல் செயல்பட்டு வருகிறது.

34—

நியாய விலைக் கடை

வினா எண் 110814—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, மாங்குப்பை ஊராட்சி, பழையூர் சத்திரம் பகுதியில் தனியாக நியாயவிலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டாரம், ப்பி. நல்லாகவுண்டம்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தால் நடத்தப்பட்டு வரும் மாங்குப்பை நியாயவிலைக் கடையிலிருந்து 150 குடும்ப அட்டைகளைப் பிரித்து பழையூர் சத்திரம் பகுதியில் புதிய பகுதிநேரக் கடை 16-11-2009 முதல் ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

2010 நவம்பர் 12]

35—

புதிய பேருந்து

வினா எண் 113782—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் முதல் படியூர், சிவகிரி, தொட்டிபாளையம் மற்றும் ஊத்துக்குளி R.S. வழியாக செங்கம்பள்ளிக்கு புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோரிக்கை வழித்தடத்தில் பகுதி வாரியாக பேருந்து வசதி உள்ளது. தற்சமயம் கோரிக்கைப்படி நேரடி பேருந்து இயக்க சாத்தியக் கூறுகள் இல்லாத நிலை உள்ளது. வாய்ப்புகள் ஏற்படும்பொழுது பரிசிலிக்கப்படும்.

36—

பணி நியமனம்

வினா எண் 9815—திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, வீரப்பெருமாநல்லூர் மற்றும் குள்ளஞ்சாவடி ஆரம்ப சுகாதார நிலையங்களில் கூடுதலாக ஒரு மகப்பேறு செவிலியரை பணியமர்த்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, வீரப்பெருமாநல்லூர் மற்றும் குள்ளஞ்சாவடி ஆரம்ப சுகாதார நிலையங்கள்

ஒவ்வொன்றிலும் 1 துணை செவிலியர் மற்றும் 6 கிராம சுகாதார செவிலியர்கள் பணிபுரிந்து வருகின்றனர். மேற்படி இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் காலிப் பணியிடம் ஏதும் இல்லை. 5,000 மக்கள் தொகைக்கு ஒரு மையம் என்ற விகிதத்தில் துணை சுகாதார மையம் ஏற்படுத்தப்பட்டு ஒவ்வொரு மையத்திற்கும் ஒரு கிராம சுகாதார செவிலியர் பதவி உருவாக்கப்பட்டு மைய அரசின் திட்டமிடுதல்படி செயல்பட்டு வருகிறது. மேலும் இவ்விரு ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் 24 மணி நேர பிரசவ சேவைத் திட்டம் அமல்படுத்தப்பட்டு இவ்விரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் முறையே மூன்று செவிலியர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். எனவே, இந்த ஆரம்ப சுகாதார நிலையங்களில் கூடுதலாக ஒரு மகப்பேறு செவிலியரை பணியமர்த்திட சாத்தியக்கூறுகள் இல்லை.

37—

பணி நியமனம்

வினா எண் 9817—திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, வீரப்பெருமாநல்லூர் கிராமத்தில் நிரந்தரமாக செவிலியர்களைப் பணியில் அமர்த்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, வீரப்பெருமாநல்லூர் கிராமத்தில் இயங்கி வரும் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் 3 செவிலியர்கள் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இப்பணியிடங்கள் தொகுப்பூதிய பணியிடங்களாகும். எனவே, இதில் நிரந்தரமாக செவிலியர்களை பணியமர்த்திட சாத்தியக்கூறுகள் தற்போதைக்கு இல்லை.

2010 நவம்பர் 12]

38—

தரம் உயர்த்துதல்

வினா எண் 39408—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்பாச்சேத்தி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்திற்கு தற்போதுள்ள 4 ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானவையாக உள்ளன. மேலும், அரசின் இலக்கின்படி இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும். ஆனால், சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், திருப்பாச்சேத்தி துணை சுகாதார நிலையத்திற்கும் திருப்புவனம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் 8 கிலோ மீட்டர் மட்டுமே உள்ளதாலும் திருப்பாச்சேத்தி துணை சுகாதார நிலையத்தினை ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

39—

கணினிமயமாக்குதல்

வினா எண் 40183—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மக்கள் நல்வாழ்வுத் துறையைக் கணினிமயமாக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் அனைத்து துறைகளின் தலைமை அலுவலகங்கள் மற்றும் மாவட்ட அலுவலகங்கள் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. மாநிலத்தில் உள்ள 1,421 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் 385 வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் இணைய தள வசதியுடன் கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின்கீழ் ஆரம்ப சுகாதாரப் பணிகளைக் கண்காணிக்க மென்பொருள் தயாரிக்கப்பட்டு வருகிறது. அனைத்துத் தலைமை மருத்துவ மனைகளுக்கும் கணினிகள் அரசால் வழங்கப்பட்டுள்ளன. அனைத்துத் துறைகளிலும் கணினி இல்லாத இடங்களுக்கு படிப்படியாக கணினி வழங்கப்படும்.

40—

கட்டட வசதி

வினா எண் 47333—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், வடக்கன்குளம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மகப்பேறு பிரிவு, புற நோயாளிகள் சிகிச்சை பெற கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், வடக்கன்குளம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மகப்பேறு பிரிவுக்கு நோயாளிகள் நலச் சங்க நிதியிலிருந்து ரூ. 1,00,000/- செலவில் கூடுதல் கட்டடம் பழைய கட்டடத்துடன் இணைத்து கட்டப்பட்டுள்ளது. இக்கட்டடம் 2008-2009 ஆம் நிதியாண்டில் கட்டப்பட்டு தற்போது செயல்பட்டு வருகிறது.

2010 நவம்பர் 12]

புறநோயாளிகள் சிகிச்சை பெற நோயாளிகள் நலச் சங்க நிதியிலிருந்து ரூ.50,000/- செலவில் கூடுதல் கட்டடம் பழைய கட்டடத்துடன் இணைத்து கட்டப்பட்டுள்ளது. இக்கட்டடம் 2008-2009 ஆம் நிதியாண்டில் கட்டப்பட்டு தற்போது செயல்பட்டு வருகிறது.

41—

மருந்தகம்

வினா எண் 53369—திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் வட்டம், முதலிபாளையம் ஊராட்சியில் மருந்தகம் மீண்டும் செயல்பட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் வட்டம், முதலிபாளையம் ஊராட்சியில் உள்ள மருந்தகம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது துணை சுகாதார நிலையமாகும். முதலிபாளையம் துணை சுகாதார நிலையம் நல்ல நிலையில் செயல்பட்டு வருகிறது.

42—

துணை ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 59203—திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதி, பொன்னேரி ஊராட்சி, எம். தரகம்பட்டியில் துணை சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* மத்திய அரசின் நிதியுதவியுடன் தமிழகத்தில் இதுவரை 8,683 துணை சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பெருகிவரும் மக்கள்தொகைக்கு ஏற்ப புதிய துணை சுகாதார நிலையங்கள் அமைப்பதற்கான நிதியுதவி கோரிய கருத்துரு மத்திய அரசால் நிராகரிக்கப்பட்டுள்ளது. எனவே, அரூர் தொகுதி, பொன்னேரி ஊராட்சி சார்ந்த எம். தரகம்பட்டியில் துணை சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் தற்சமயம் இல்லை.

43—

தரம் உயர்த்துதல்

வினா எண் 59224—திரு. மா. சந்திரகாசி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், மேலமாத்தூர் ஆரம்ப துணை சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், மேலமாத்தூர் கிராமத்தில் ஒரு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதால், அங்குள்ள துணை சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

44—

தரம் உயர்த்துதல்

. **வினா எண் 60186—திரு. ஆர். சாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2010 நவம்பர் 12]

மேலூர் தொகுதி, தெற்கு தெரு, சேக்கிப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையங்களை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

அரசின் கொள்கைப்படி, ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இதனடிப்படையில், மதுரை மாவட்டம், கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் கருங்காலக்குடி பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்கெனவே மேம்படுத்தப்பட்டு, மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருவதால் இதே ஊராட்சி ஒன்றியத்திலுள்ள சேக்கிப்பட்டி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

45—

துணை சுகாதார நிலையம்

வினா எண் 61219—திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் வட்டம், சாமுண்டிபுரத்தில் புதியதாக துணை சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதிய துணை சுகாதார நிலையங்கள் அமைப்பதற்கான நிதி ஒதுக்கீடு மத்திய அரசால் நிராகரிக்கப்பட்ட நிலையில் திருப்பூர் வட்டம், சாமுண்டிபுரத்தில் துணை சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் தற்சமயம் இல்லை.

TRUTH ALONE TRIUMPHS

[2010 நவம்பர் 12

46—

துணை சுகாதார நிலையம்

வினா எண் 62407—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பூம்புகார் தொகுதி, செம்பனார்கோவில் ஊராட்சி ஒன்றியம், தலையுடையவர் கோவில்பத்து ஊராட்சி, கருவிழந்தநாதபுரத்தில் துணை சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தமிழகத்தில் மத்திய அரசின் நிதியுதவி மற்றும் வழிகாட்டுதலின்படி இதுவரை 8,706 துணை சுகாதார நிலையங்கள் இயங்கி வருகின்றன. புதிய துணை சுகாதார நிலையங்கள் அமைப்பதற்கான நிதியுதவி கோரி மாநில அரசுமூலம் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்ட கருத்துரு நிராகரிக்கப்பட்ட நிலையில் தற்சமயம் கருவிழந்தநாதபுரத்தில் துணை சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

47—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 64469—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, செம்பனார்கோவில் ஒன்றியம், நல்லோடையில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2010 நவம்பர் 12]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், செம்பனார்கோவில் ஊராட்சி ஒன்றியம், நல்லோடையில் துணை சுகாதார நிலையம் உள்ளது. இக்கிராமத்திற்கு 5 கிலோ மீட்டர் தூரத்தில் சங்கரன்பந்தல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படுகிறது. இக்கிராமம் செம்பனார்கோவில் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 1,80,425 (2001 கணக்கெடுப்பு) ஆகும். இவ்வூராட்சி ஒன்றியத்தில் 5 (ஐந்து) ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன. இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும். ஆனால், நல்லோடை கிராமத்திற்கும் சங்கரன்பந்தல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் 5 கிலோ மீட்டர் மட்டுமே உள்ளதால் செம்பனார்கோவில் ஊராட்சி ஒன்றியத்தில், நல்லோடை கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

48—

கூடுதல் கட்டட வசதி

வினா எண் 64747—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மேல்மலையனூர் தொகுதி, வளத்தி, நல்லான்பிள்ளைபெற்றாள், அனந்தபுரம், சத்தியமங்கலம் ஆகிய அரசு மருத்துவமனைகளுக்கு கூடுதல் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றியத்தில் வளத்தி மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமும், செஞ்சி ஊராட்சி ஒன்றியத்தில் சத்தியமங்கலம் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமும்,

[2010 நவம்பர் 12

நல்லான்பிள்ளைபெற்றாள் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையமும், அனந்தபுரம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையமும் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன.

நல்லான்பிள்ளைபெற்றாள் மற்றும் அனந்தபுரம் ஆரம்ப சுகாதார நிலையங்களில் கூடுதலாக சிட்டு வழங்கும் அறை, புறநோயாளிகள் காத்திருக்கும் அறை, தடுப்பூசி போடும் கூடம், செவிலியர் தங்கும் அறை போன்ற வசதிகள் உள்ளன. மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு 30 படுக்கை வசதிகளுடன் கூடிய கட்டடங்கள் உள்ளதால் மேற்படி ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மேலும் கூடுதல் கட்டடம் கட்ட தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

49—

தரம் உயர்த்துதல்

வினா எண் 66458—திரு. ஆர்.எம். பழனிசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மொடக்குறிச்சி தொகுதி, தாமரைப்பாளையம் ஆரம்ப சுகாதார நிலையத்தை 24 மணி நேரமும் இயங்கும் மருத்துவமனையாகவும், 30 படுக்கை வசதி கொண்டதாகவும் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், கொடுமுடி ஊராட்சி ஒன்றியத்தில் சிவகிரி ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்கெனவே மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருவதால் அரசின் கொள்கைப்படி, இதே ஊராட்சி ஒன்றியத்திலுள்ள தாமரைப்பாளையம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த சாத்தியக் கூறுகள் இல்லை. தாமரைப்பாளையம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் 24 மணி நேர பிரசவ கவனிப்பு சேவை செயல்படுத்தப்பட்டு, 3 செவிலியர்கள் நியமிக்கப்பட்டு சுழற்சி முறையில் பணியாற்றி வருகின்றனர்.

2010 நவம்பர் 12]

50—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 76490—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரி மாவட்டம், காளிப்பேட்டையில் ஆரம்ப சுகாதார நிலையம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிபட்டி ஊராட்சி ஒன்றியம், காளிப்பேட்டை கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் 21-02-2009 அன்று தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

51—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 77327—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருவெற்றியூரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டம், திருவாடனை ஊராட்சி ஒன்றியம், திருவெற்றியூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் 21-02-2009 அன்று தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2010 நவம்பர் 12

52—

துணை சுகாதார நிலையம்

வினா எண் 80823—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் வட்டம், தத்தலூர் ஊராட்சியில் துணை சுகாதார நிலையம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் மத்திய அரசின் நிதியுதவி மற்றும் வழிகாட்டுதலின்படி இதுவரை 8,706 துணை சுகாதார நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. புதியதாக துணை சுகாதார நிலையங்கள் அமைப்பதற்கான கருத்துரு தற்போது மத்திய அரசால் நிராகரிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் திருக்கழுக்குன்றம் வட்டம், தத்தலூர் ஊராட்சியில் துணை சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

53—

கூடுதல் கட்டட வசதி

வினா எண் 81585—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், கொந்தகை ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச் சுவர், கழிப்பறை மற்றும் கூடுதல் கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2010 நவம்பர் 12]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்தில் கொந்தகை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகின்றது.

கொந்தகை ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச் சுவர், கழிப்பறை மற்றும் கூடுதல் கட்டடங்கள் கட்ட நிதி ஒதுக்கீடு எதுவும் இல்லை.

எனவே கொந்தகை ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச் சுவர், கழிப்பறை மற்றும் கூடுதல் கட்டடங்கள் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

54—

கூடுதல் கட்டட வசதி

வினா எண் 8162—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் ஒன்றியம், தொளசம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கூடுதல் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

ஓமலூர் ஒன்றியம், தொளசம்பட்டி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் பிரசவ பின்கவனிப்பு அறையுடன் கூடிய பிரசவ அறை விரிவாக்கம் செய்ய தேசிய ஊரக நலத் திட்ட உதவியின் கீழ் ரூ.4,40,000/- (ரூபாய் நான்கு இலட்சத்து நாற்பதாயிரம் மட்டும்) நடப்பு நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. பொதுப் பணித் துறைமூலம் கட்டுமானப் பணிகள் நடைபெற உள்ளன.

[2010 நவம்பர் 12

55—

கட்டட வசதி

வினா எண் 81938—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) முகையூர் தொகுதி, மணலூர்பேட்டை அரசு மருத்துவமனைக்கு 30 படுக்கைகள் கொண்ட கட்டட வசதி ஏற்படுத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி சுகாதார மாவட்டம், முகையூர் ஊராட்சி ஒன்றியத்தில் மணலூர்பேட்டை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

முகையூர் ஊராட்சி ஒன்றியத்தில் முகையூர் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருவதால் அரசின் கொள்கைப்படி இதே ஊராட்சி ஒன்றியத்திலுள்ள மணலூர்பேட்டை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

56—

மகப்பேறு மருத்துவமனை

வினா எண் 88748—திரு. வை. காவேரி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், வெள்ளாபுரம் ஊராட்சி, முனியம்பட்டி மற்றும் கன்னியாம்பட்டியில் மகப்பேறு மருத்துவமனை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 நவம்பர் 12]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் மத்திய அரசின் நிதியுதவி மற்றும் வழிக்காட்டுதலின்படி இதுவரை 8,706 துணை சுகாதார நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. புதியதாக 900 துணை சுகாதார நிலையங்கள் அமைப்பதற்கான கருத்துரு / நிதி ஒதுக்கீடு மத்திய அரசால் நிராகரிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், வெள்ளாபுரம் ஊராட்சி, முனியம்பட்டி மற்றும் கன்னியாம்பட்டியில் மகப்பேறு மருத்துவமனை (துணை சுகாதார நிலையம்) எதுவும் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் தற்சமயம் இல்லை.

57—

கட்டட வசதி

வினா எண் 90756—திரு. வி.ஏ.டி. கலியவரதன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகையூர் தொகுதி, முகையூர் ஊராட்சி ஒன்றியம், கண்டாச்சிபுரம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு 30 படுக்கைகள் கொண்ட கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி சுகாதார மாவட்டம், முகையூர் ஊராட்சி ஒன்றியத்தில் கண்டாச்சிபுரம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

முகையூர் ஊராட்சி ஒன்றிய மக்கள்தொகை 178405 (2001). முகையூர் ஊராட்சி ஒன்றியத்தில் கண்டாச்சிபுரம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம், முகையூர் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம், மணலூர்பேட்டை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம், வீரபாண்டி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம், விளந்தை கூடுதல் ஆரம்ப

சுகாதார நிலையம் ஆகியவை அனைத்து வசதிகளுடன் செயல்படுகின்றன. மேலும் கண்டாச்சிபுரம் கூடுதல் ஆரம்ப சுகாதா'ர நிலையம் அரசின் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருவதால், 30 படுக்கைகள் கொண்ட கட்டடம் கட்ட சாத்தியக் கூறுகள் இல்லை.

58—

கட்டட வசதி

வினா எண் 90878—டாக்டர் க. நெடுஞ்செழியன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, கபிலர்மலை வட்டார ஆரம்ப சுகாதார நிலையத்தில் தனியாக பெண்கள் உள்நோயாளிப் பகுதிக்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை ஊராட்சி ஒன்றியத்தில் கபிலர்மலை பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

கபிலர்மலை பிரதான ஆரம்ப சுகாதார நிலையத்தில் தனியாக (பிரசவ பின் கவனிப்பு அறை) உள்நோயாளிகள் கட்டடம் கட்ட தேசிய ஊரக நலத் திட்டத்தின்கீழ் ரூ.6,00,000/- நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. இக்கட்டடம் கட்ட உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

59—

கட்டட வசதி

வினா எண் 90881—டாக்டர் க. நெடுஞ்செழியன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கபிலர்மலை தொகுதி, பரமத்தி ஒன்றியம், கூடச்சேரி ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

2010 நவம்பர் 12]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, பரமத்தி ஒன்றியம், கூடச்சேரி ஆரம்ப சுகாதார நிலையம் அரசுக் கட்டடத்தில் போதுமான வசதிகளுடன் செயல்படுகின்றது. மேலும், கூடச்சேரி ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் 1993 ஆம் ஆண்டு கட்டப்பட்டதாகும். ஆரம்ப சுகாதார நிலையத்தின் நிலப் பரப்பளவு 2,89,940 சதுர அடி ஆகும். மேற்படி ஆரம்ப சுகாதார நிலைய கட்டடத்திற்கு 2008-2009 ஆம் ஆண்டு ரூ. 1,73,000/- செலவில் கட்டடப் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, மேற்படி கட்டடத்தில் கூடச்சேரி ஆரம்ப சுகாதார நிலையம் இயங்கி வருகிறது.

எனவே, கூடச்சேரி ஆரம்ப சுகாதார நிலையத்திற்குத் தற்போது கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் ஏதும் ஏற்படவில்லை.

60—

தரம் உயர்த்துதல்

வினா எண் 91961—திரு. ப. டில்லி பாபு: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், அரசினர் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 1,40,460 (2001 கணக்கெடுப்பு) ஆகும். ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் தரம்வாய்ந்த ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த அரசு படிப்படியாக நடவடிக்கை எடுத்து வருகிறது. தேசிய ஊரக நலத்திட்ட உதவியின்கீழ்

50 ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தரம் உயர்த்த ஆணை வெளியிடப்பட்டு, பொதுப் பணித் துறைமூலம் கட்டுமானப் பணிகள் நடைபெற உள்ளன. இப்பட்டியலில் கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சார்ந்த மேகலசின்னம்பள்ளி ஆரம்ப சுகாதார நிலையம் இடம் பெற்றுள்ளது. ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையம் எதுவும் இதில் இடம் பெறவில்லை. தற்போது தரம் உயர்த்த நிதி ஒதுக்கீடு எதுவும் இல்லாததால் ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

61—

துணை சுகாதார நிலையம்

வினா எண் 95961—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, முத்துநாயக்கன்பட்டி ஊராட்சி, புதூர் காடம்பட்டி பகுதியில் துணை சுகாதார நிலையம் (தாய் சேய் நல விடுதி) அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் சமவெளிப் பகுதிகளில் 5,000 மக்கள்தொகைக்கு ஒரு துணை சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 3,000 மக்கள்தொகைக்கு ஒரு துணை சுகாதார நிலையம் என்ற விகிதத்தில் துணை சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. தமிழகத்தில் மத்திய அரசின் நிதியுதவி மற்றும் வழிகாட்டுதலின்படி, இதுகாறும் 8,706 துணை சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. புதிய துணை சுகாதார நிலையங்கள் அமைப்பதற்கான நிதி ஒதுக்கீடு கோரிய கருத்துரு மத்திய அரசால் நிராகரிக்கப்பட்டுள்ளது. எனவே, தற்சமயம் தாரமங்கலம் தொகுதியைச் சார்ந்த புதூர் காடம்பட்டி பகுதியில் துணை சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

2010 நவம்பர் 12]

62—

தரம் உயர்த்துதல்

வினா எண் 96975—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி ஒன்றியம், கொருக்கை ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தப்பட்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்தில் கொருக்கை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. கொருக்கை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த நிதி ஒதுக்கீடு எதுவும் இல்லை. தற்போது 50 ஆரம்ப சுகாதார நிலையங்களை தேசிய ஊரக நலத் திட்ட உதவியின்கீழ் தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இப்பட்டியலில் கொருக்கை ஆரம்ப சுகாதார நிலையம் இடம்பெறவில்லை. எனவே, கொருக்கை ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

63—

தரம் உயர்த்துதல்

வினா எண் 97768—திரு. ந. சுப்ரமணியன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளத்தூர் தொகுதி, பரம்பூர் சுகாதார நிலையத்தை 20 படுக்கை வசதி மற்றும் மகப்பேறு அறுவைச் சிகிச்சை மருத்துவருடன் கூடிய மருத்துவமனையாகத் தரம் உயர்த்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஊராட்சி ஒன்றியத்தில் பரம்பூர் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. அன்னவாசல் ஊராட்சி ஒன்றிய மக்கள்தொகை 130106 (2001) ஆகும். இவ்வூராட்சி ஒன்றியத்தில் காவேரி நகர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் பரம்பூர் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படுகின்றன. அண்மையில் 50 ஆரம்ப சுகாதார நிலையங்கள் தேசிய ஊரக நலத் திட்ட உதவியின்கீழ் தரம் உயர்த்தப்பட்டு பொதுப் பணித் துறைமூலம் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்தப் பட்டியலில் பரம்பூர் ஆரம்ப சுகாதார நிலையம் இடம் பெறவில்லை. எனவே, இந்த நிதியாண்டில் பரம்பூர் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

64—

கிராம சுகாதார நிலையம்

வினா எண் 93445—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, கீழப்பசலை ஊராட்சி, வேதியரேந்தலில் கிராம சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் சமவெளிப் பகுதிகளில் 5,000 மக்கள்தொகைக்கு ஒரு துணை சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதிகளில் 3,000 மக்கள்தொகைக்கு ஒரு துணை சுகாதார நிலையம் என்ற விகிதத்தில், மத்திய அரசின் நிதியுதவியுடன் இதுவரை தமிழகத்தில் 8,706 துணை சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. புதிய துணை சுகாதார நிலையங்கள் அமைப்பதற்கான நிதி ஒதுக்கீடு கோரிய கருத்துரு மத்திய அரசால் நிராகரிக்கப்பட்டுள்ளது. எனவே, மானாமதுரை தொகுதியைச் சார்ந்த வேதியரேந்தலில் துணை சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

2010 நவம்பர் 12]

65—

பணியாளர் நியமனம்

வினா எண் 100698—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு அரசு வட்ட மருத்துவமனையில் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு, எய்ட்ஸ் பிரிவு, கண், காது, மூக்கு, தொண்டை பிரிவுகளை ஏற்படுத்தி, பணியாளர்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு அரசு மருத்துவமனை 124 படுக்கை வசதி கொண்ட வட்ட மருத்துவமனையாகச் செயல்படுகிறது. இம்மருத்துவமனைக்கு, தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின்கீழ் ரூ. 100.65 இலட்சம் செலவில் 24 படுக்கை வசதி கொண்ட மகப்பேறு பிரிவு, 6 படுக்கை வசதியுடன் கூடிய விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு, மருத்துவக் கழிவுகள் சேமிக்கும் அறை மற்றும் இரத்த சேமிப்பு அறை, நோயாளிகள் ஆலோசனை மையம் ஆகிய கட்டடப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு பணிகள் முடிவடையும் தறுவாயில் உள்ளன. மேலும் இம்மருத்துவமனைக்கு 2 உதவி மருத்துவர், 3 செவிலியர், 2 மருத்துவமனைப் பணியாளர் மற்றும் 2 துப்புரவுப் பணியாளர் பணியிடங்களும் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. எனவே, மேலும் விரிவாக்கம் செய்ய வேண்டிய அவசியம் தற்போது இல்லை.

66—

கட்டட வசதி

வினா எண் 101348—திரு. ஆர்.டி. கணேசன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேனி தொகுதி, ஓடைப்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கூடுதல் கட்டடங்கள் மற்றும் சுற்றுச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தேனி தொகுதி, சின்னமனூர் ஊராட்சி ஒன்றியத்தில் ஓடைப்பட்டி முதன்மை ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படுகிறது. ஓடைப்பட்டி முதன்மை ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கூடுதல் கட்டடங்கள் கட்ட நிதி ஒதுக்கீடு எதுவும் இல்லை. எனவே, தற்போது கூடுதல் கட்டடங்கள் கட்ட சாத்தியக் கூறு இல்லை. ஓடைப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி உதவி பெற்று சுற்றுச் சுவர் கட்டுமாறு தேனி சுகாதாரப் பணிகள் துணை இயக்குநருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

67—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 101619—திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் வட்டம், பொங்குபாளையம் ஊராட்சி, பள்ளிபாளையத்தில் படுக்கை வசதியுடன் கூடிய ஆரம்ப சுகாதார மையம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசின் கொள்கைப்படி இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும். ஆனால், திருப்பூர் மாவட்டம், திருப்பூர் ஊராட்சி ஒன்றியம், பள்ளிபாளையம் கிராமத்திற்கும், 15—வேலம்பாளையம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் 4 கிலோ மீட்டர் மட்டுமே உள்ளதால் பள்ளிபாளையம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை.

2010 நவம்பர் 12]

68—

குடியிருப்புக் கட்டடம்

வினா எண் 102028—திரு. செ. பொன்னுதுரை: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை தொகுதி, விஜயமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணிபுரிபவர்களுக்கு குடியிருப்புக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாராபுரம் சுகாதார மாவட்டம், பெருந்துறை ஊராட்சி ஒன்றியத்தில் விஜயமங்கலம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. விஜயமங்கலம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் பெண் செவிலியர் குடியிருப்புக் கட்டடம் கட்ட தேசிய ஊரக நலத் திட்ட உதவியின்கீழ் நடப்பு நிதியாண்டில் (2009-10) ரூ.6,60,000 (ரூபாய் ஆறு இலட்சத்து அறுபதாயிரம் மட்டும்) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பொதுப் பணித் துறைமூலம் கட்டுமானப் பணிகள் நடைபெற உள்ளன.

69—

மருத்துவ அலுவலர் குடியிருப்பு

வினா எண் 102780—திரு. எம். அன்பழகன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பழனி தொகுதி, பழனி ஒன்றியம், பாப்பம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவ அலுவலர் குடியிருப்பு கட்ட அரசு ஆவன செய்யுமா?

[2010 நவம்பர் 12

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

திண்டுக்கல் மாவட்டம், பழனி சுகாதார மாவட்டம், பழனி ஊராட்சி ஒன்றியத்தில் பாப்பம்பட்டி பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. பாப்பம்பட்டி பிரதான ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவ அலுவலர் குடியிருப்பு கட்ட நிதி ஒதுக்கீடு எதுவும் இல்லை. எனவே, பாப்பம்பட்டி பிரதான ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவ அலுவலர் குடியிருப்பு கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

70—

தரம் உயர்த்துதல்

வினா எண் 103262—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மேட்டூர் தொகுதி, நங்கவள்ளி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கை வசதி கொண்ட சுகாதார நிலையமாக மேம்பாடு செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், நங்கவள்ளி ஊராட்சி ஒன்றியம், நங்கவள்ளி ஆரம்ப சுகாதார நிலையத்தில் தற்போது 6 படுக்கைகள் வசதி மற்றும் அறுவை அரங்கம் உள்ளது. மேலும், 24 மணி நேர பிரசவ கவனிப்பு சேவை உள்ளது. பேறுசார் குழந்தைகள் நலத் திட்டத்தில் நங்கவள்ளி ஆரம்ப சுகாதார நிலையம் தேர்ந்தெடுக்கப்பட்டு அடிப்படை, அவசர சிகிச்சை மகப்பேறு மற்றும் சிசு கவனிப்பு மையமாகச் செயல்படுகிறது. தற்போது நங்கவள்ளி ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த நிதி ஒதுக்கீடு எதுவும் இல்லை. எனவே, நங்கவள்ளி ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

2010 நவம்பர் 12]

71—

விரிவுபடுத்துதல்

வினா எண் 104004—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, மரக்கோட்டை கிராமம், ஒண்டிவீரனூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் ஒண்டிவீரனூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள்:—

கே.என். புதூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம்

காடையாம்பட்டி பிரதான ஆரம்ப சுகாதார நிலையம்

ஒண்டிவீரனூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம்

ஒண்டிவீரனூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் மாதமொன்றுக்கு சராசரியாக 93 வெளி நோயாளிகள் பயனடைகின்றனர். மாதமொன்றுக்கு சராசரியாக 8 உள் நோயாளிகள் பயனடைகின்றனர். சராசரியாக ஓராண்டில் 152 பிரசவங்கள் நிகழ்கின்றன. ஒண்டிவீரனூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை விரிவுபடுத்த நிதி ஒதுக்கீடு எதுவும் இல்லை. எனவே, ஒண்டிவீரனூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை விரிவுபடுத்த சாத்தியக்கூறுகள் இல்லை.

72—

சுற்றுச் சுவர்

வினா எண் 107497—திரு. செ. தாமோதரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொள்ளாச்சி வட்டம், ராமபட்டிணம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

பொள்ளாச்சி (வடக்கு) ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள ராமபட்டிணம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச் சுவர் கட்ட தற்போது நிதி ஒதுக்கீடு எதுவும் இல்லை. பாராளுமன்ற / சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு சுற்றுச் சுவர் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

73—

தரம் உயர்த்துதல்

வினா எண் 103304—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் வசதி கொண்டதாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசின் கொள்கைப்படி ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதனடிப்படையில், கடவூர் ஊராட்சி ஒன்றியத்தில் ஏற்கெனவே மைலம்பட்டி பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட்டு மேம்படுத்தப்பட்ட ஆரம்ப

2010 நவம்பர் 12]

சுகாதார நிலையமாக அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருவதால், இதே ஊராட்சி ஒன்றியத்திலுள்ள கடவூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்டதாகத் தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

74—

பணி நியமனம்

வினா எண் 108383—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குத் தேவையான ஊழியர்களைப் பணியமர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

(அ) சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குத் தேவையான ஊழியர்கள் தற்போது பணியில் உள்ளனர். மேலும் நிரப்பப்படாமல் உள்ள காலியிடங்களை மிக விரைவில் படிப்படியாக நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(ஆ) கேள்வி எழாது.

75—

வங்கிக் கடன்

வினா எண் 21816—திரு. வை. காவேரி: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி, பூலாம்பட்டியில் செயற்கை வைரம் பட்டை தீட்டும் தொழிலாளர்களுக்கு அரசு மானியத்துடன் கடன் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி, பூலாம்பட்டியில் செயற்கை வைரம் பட்டை தீட்டும் தொழிலாளர்கள் பாரதப் பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின்கீழ் மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் பெற்று தொழில் துவங்கலாம். வைரம் பட்டை தீட்டும் குறுந்தொழில்களுக்கு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் கொள்கை 2008-ல் அறிவிக்கப்பட்டுள்ள மானியங்கள் விண்ணப்பத்தின் பேரில் தகுதியினடிப்படையில் வழங்கப்படுகின்றன. தொழில் துவங்குவது தொடர்பாக மாவட்டத் தொழில் மையத்தை அணுகினால் தேவையான வழிகாட்டுதல் பெறலாம்.

76—

கோழித் தீவனம்

வினா எண் 111902—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) இராமேஸ்வரம் கடல் பகுதியில் கிடைக்கும் காரல் மீன்களை கொண்டு மானாமதுரையில் கோழித் தீவனம் தயாரிக்கும் தொழில் துவக்க அரசு உதவி செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராமேஸ்வரம் கடல் பகுதியில் கிடைக்கும் காரல் மீன்களைக் கொண்டு மானாமதுரையில் கோழித் தீவனம் தயாரிக்கும் தொழில் துவங்க ஆர்வமுள்ள தொழில்முனைவோர் முன்வந்தால் மாவட்டத் தொழில் மையம்மூலம் தேவையான வழிகாட்டுதல் பெறலாம். குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் கொள்கை 2008-ல் அறிவிக்கப்பட்டுள்ள முதலீட்டு மானியம் உட்பட தகுதியுடைய மானியங்கள் தொழில் நிறுவனங்களுக்கு விண்ணப்பத்தினடிப்படையில் வழங்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2010 நவம்பர் 12]

77—

கட்டட வசதி

வினா எண் 115531—திரு. அ. சின்னசாமி: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரவட்லா கால்நடை மருந்துவமனைக்கு கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

அரசாணை எண் 172, கால்நடைப் பராமரிப்பு மற்றும் மீன் வளத் (கா.ப.3) துறை, நாள் 18-07-2006-ன்படி அரவட்லா கால்நடைக் கிளை நிலையம் 8-2-2007 முதல் செயல்பட்டு வருகிறது. கட்டடம் கட்ட 5 சென்ட் நிலம் தேர்வு செய்யப்பட்டு, ஊராட்சி மன்றத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. முன் நுழைவு அனுமதி மற்றும் நில மாற்றம் பெற மாவட்ட ஆட்சித் தலைவருக்கு கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் ஆணையரால் கடிதம் எழுதப்பட்டு, மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

78—

சுற்றுச் சுவர்

வினா எண் 117071—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் குட்டப்பாளையத்திலுள்ள கால்நடை மருந்தகத்திற்கு சுற்றுச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) ஊரக உள்கட்டமைப்பு நிதியிலிருந்து நிதி ஒடுக்கீடு வழங்கப்படும்பட்சத்தில் குட்டப்பாளையத்திலுள்ள கால்நடை மருந்தகத்திற்கு சுற்று சுவர் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) உள்கட்டமைப்பு நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு பெறப்பட்டவுடன் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

79—

புதிய மாவட்டம்

வினா எண் 2955—திரு. கி. ஆறுமுகம்: *மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

செங்கல்பட்டை தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் உருவாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

அரசாணை (நிலை) எண் 1132, பொது (சட்ட அலுவலர்கள்) துறை நாள் 11-11-2009-ன்படி, 2011 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்புப் பணி மேற்கொள்ளப்படுவதை முன்னிட்டு மாவட்டம், வட்டம், கிராமம், காவல் நிலையம், நகராட்சி, ஊராட்சி ஒன்றியம் போன்ற நிருவாக அலகுகளை புதிதாக தோற்றுவிப்பதற்கு 1-1-2010 முதல் 31-3-2011 வரை தடையாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதால் இக்கோரிக்கையைத் தற்போது ஏற்க இயலாது.

80—

வருவாய் ஆய்வாளர் அலுவலகம்

வினா எண் 21801—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2010 நவம்பர் 12]

ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி ஒன்றியம், செம்மாண்டப்பட்டி, கருப்பூரில் வருவாய் ஆய்வாளர் அலுவலகம் புதியதாக ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டத்தில் செம்மாண்டப்பட்டி மற்றும் கருப்பூர் குறு வட்டங்கள் அமைக்கப்பட்டு வருவாய் ஆய்வாளர் குடியிருப்புடன் கூடிய வருவாய் ஆய்வாளர் அலுவலகம் இயங்கி வருகிறது. எனவே, செம்மாண்டப்பட்டி மற்றும் கருப்பூரில் வருவாய் ஆய்வாளர் கட்டடங்கள் ஏதும் புதியதாகக் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

81—

இலவச வீட்டுமனைப் பட்டா

வினா எண் 60330—திரு. ஆர். சின்னசாமி: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிங்காநல்லூர் தொகுதி, கொண்டையம்பாளையம் ஊராட்சி, அண்ணா நகர் பகுதி மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், கொண்டையாம்பாளையம் கிராமம், புல எண் 261/ஏ1சி-இல் உள்ள நிலம் வாரி மற்றும் வண்டிப்பாதைப் புறம்போக்கு நிலங்களாகும். இந்த வண்டிப்பாதைப் புறம்போக்கு நிலத்தில் உட்பிரிவு செய்யப்பட்டு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. புல எண் 268/1 வாரிப் புறம்போக்கு நிலம் என்பதால் அவ்விடத்தில் வீட்டுமனைப் பட்டா வழங்க உயர் நீதிமன்றத் தடையாணை உத்தரவு அமலில் உள்ளதால், அங்கு குடியிருக்கும் 18 நபர்களுக்கு அவ்விடத்தில் வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2010 நவம்பர் 12

82—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 107993—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் ஊராட்சி, ராதாபுரம் ஓடைத் தெருவில் சுமார் 25 ஆண்டுகளுக்கும் மேலாக வசித்து வரும் குடும்பத்தினருக்குப் பட்டா வழங்கிட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், புல எண் 463 மற்றும் 470 ஆகியவை கிராமக் கணக்குகளில் புறம்போக்குப் பாதை என உள்ளது. அந்நிலங்களின் வழியாக மழைக் காலங்களில் மரவன்பத்து குளம் மற்றும் நெடுவழிக்குளம் ஆகிய இரு குளங்களின் மறுகால் தண்ணீர் பட்டார்குளம் என்ற குளத்தை சென்றடைகின்றன. புல எண் 463-இல் ஆக்கிரமிப்பு செய்து குடியிருந்து வரும் நபர்களுக்கு சமத்துவபுரத்தில் இலவச வீடுகள் வழங்கப்பட்டுவிட்டன. ஏனைய ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட வேண்டி உள்ளதால் அவ்விடத்தில் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

83—

கான்கிரீட் வீடுகள்

வினா எண் 117038—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு குடிசை மாற்று மற்றும் இடவசதிக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், சென்னிமலை பேரூராட்சியில் மத்திய அரசின் ஜவஹர்லால் நேரு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் மூலம் புதிய கான்கிரீட் வீடுகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 நவம்பர் 12]

விடை—

மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன், குடிசை மாற்று மற்றும் இடவசதிக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஜவஹர்லால் நேரு தேசிய நகர சீரமைப்புத் திட்டம் மைய அரசின் நிதியுதவியினைப் பெற்று செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் பணிகள் 10 இலட்சத்திற்கு மேல் மக்கட்தொகை கொண்ட சென்னை, மதுரை, கோவை போன்ற பெருநகரங்கள் மட்டுமே தேர்வு செய்யப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஈரோடு மாவட்டம், சென்னிமலையில் குறைந்த மக்கட்தொகை உள்ளதால் இங்கு மைய அரசின் ஜவஹர்லால் நேரு தேசிய நகர சீரமைப்புத் திட்டத்தின் கீழ் வீடுகள் கட்ட இயலாது.

84—

நவீனப் பயிற்சி

வினா எண் 45183—திரு. அ. தமிழ்ராசு: *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மண்பாண்டத் தொழில் செய்வோருக்கு நவீனப் பயிற்சி அளிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

மண்பாண்டத் தொழில் செய்வோருக்கு நவீனப் பயிற்சி அளிக்கும் திட்டம் எதுவும் இந்தத் துறையின் பரிசீலனையில் இல்லை.

85—

அடையாள அட்டை

வினா எண் 101593—திரு. எம். பன்னீர்செல்வம்: *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு அடையாள அட்டை வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

அரசாணை (நிலை) எண் 123, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 24-10-2008-ன்படி, அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களில் உறுப்பினர் பதிவு மற்றும் கேட்பு மனுக்களின்மீது உதவித் தொகை வழங்குவதை துரிதப்படுத்தும் பொருட்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் தொழிலாளர் அலுவலர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) அலுவலகங்கள் 01-11-2008 முதல் ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் மற்றும் இதர 15 அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களில் பதிவு செய்யக் கோரும் விண்ணப்பங்கள், தொழிலாளர்களிடமிருந்து மாவட்ட தொழிலாளர் அலுவலர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) அலுவலகங்களில் பெறப்பட்டு, சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலருக்கு சரிபார்த்தலுக்கு அனுப்பப்படுகின்றன. மேற்படி அலுவலரால் சரிபார்க்கப்பட்டு திரும்பப் பெறப்பட்ட விண்ணப்பங்களை, திட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு பரிசீலித்து 15 தினங்களுக்குள் பதிவு செய்து தகுதியுள்ள தொழிலாளர்களுக்கு உறுப்பினர் அட்டைகள் இலவசமாக வழங்க அனைத்து தொழிலாளர் அலுவலர்களுக்கும் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) நிர்வாக அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் வாரியங்களில் பதிவு பெற்ற தொழிலாளர்கள் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை அடையாள அட்டைகளை மாவட்ட தொழிலாளர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) அலுவலகத்தின்மூலம் இலவசமாகப் புதுப்பித்துக் கொள்ளலாம்.

86—

கட்டட வசதி

வினா எண் 104791—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூரில் மத்திய அரசின் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையில் 100 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 நவம்பர் 12]

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தொழிலாளர் அரசு ஈட்டுறுதி வரையறையின்படி, ஒரு பகுதியில், தொழிலாளர் ஈட்டுறுதி மருத்துவமனை துவங்க ஒரு இலட்சத்துக்கும் மேல் காப்பீட்டு நபர்கள் வசிக்கும்பட்சத்தில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம் 100 படுக்கைகள் கொண்ட தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையையும், 50,000 காப்பீட்டு நபர்கள் வசிக்கும் பட்சத்தில் 50 படுக்கைகள் கொண்ட தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையையும் துவங்க தொழிலாளர் அரசு ஈட்டுறுதி கழகம் கடித எண் N/11/13/15/23/2005 Construction நாள் 16-1-2007-ன்படி, ஒப்புதலளித்துள்ளது. அதன்படி, திருப்பூரில் 50 படுக்கைகள் கொண்ட தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை கட்ட செட்டிப்பாளையம் கிராமம், அருள்மிகு செல்லாண்டியம்மன் திருக்கோவிலுக்குச் சொந்தமான நிலத்தைத் தேர்வு செய்து, மாவட்ட ஆட்சியருடன் கலந்து பேசி நிலத்தைக் கையகப்படுத்தும் பணியினைத் தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம் மேற்கொண்டு வருகிறது.

87—

அடிப்படை வசதிகள்

வினா எண் 114334—திரு. எம்.என். கந்தசாமி: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் அடிப்படை வசதிகள் செய்து தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

கோயம்புத்தூர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் 1961-ல் துவங்கப்பட்டு நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. 2005 ஆம் ஆண்டில் இத்தொழிற்பயிற்சி மையம், திறன்மிகு பயிற்சி மையமாக மேம்படுத்தப்பட்டு, ரூ.3 இலட்சம் செலவில் பராமரிப்புப்

பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தற்பொழுது கோயம்புத்தூர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் பராமரிப்பு மற்றும் நிலைய சுற்றுச் சுவர் கட்டுதல் பணி தொடர்பாக கருத்துரு அரசின் பரிசிலனையில் உள்ளது. மேலும், வருடாந்திர பராமரிப்பின்கீழ் தேவைக்கேற்ப பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

88—

குளம்

வினா எண் 102694—திரு. தி.க. ராஜா: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் தொகுதி, பசலிக்குட்டை முருகன் கோயிலுக்கு குளம் வெட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், பசலிக்குட்டை அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறை ஆளுகைக்குட்பட்ட திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் நிர்வாகம், நிலை-3 செயல் அலுவலரால் கவனிக்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோயிலுக்கு திருப்பத்தூர் ஒன்றிய ஆணையாளர்மூலம் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் 100 அடி நீளம், 100 அடி அகலம் அளவில் ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாகக் குளம் அமைக்கப்பட்டுள்ளது.

89—

விளையாட்டு மைதானம்

வினா எண் 107296—திரு. போ. சின்னப்பன்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியில் ஹாக்கி விளையாட்டு மைதானம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

2010 நவம்பர் 12]

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியில் ஹாக்கி விளையாட்டு மைதானம் அமைக்கும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

90—

விளையாட்டு மைதானம்

வினா எண் 10960[illegible]—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி ஒன்றியம், டேனிஷ்பேட்டை பகுதியில் விளையாட்டு மைதானம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி ஒன்றியம், டேனிஷ்பேட்டை பகுதியில் விளையாட்டு மைதானம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

91—

குடிநீர் வசதி

வினா எண் 7245—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பாறை தொகுதியில் உள்ள வாட்டர்பால்ஸ் குடியிருப்பு, ஹைபாரஸ்ட் குடியிருப்பு, தோனிமுடி எஸ்டேட் குடியிருப்பு, முடிஸ் மார்க்கெட் பகுதி, நல்லகாத்து எஸ்டேட் குடியிருப்பு, சிறுகுன்றா எஸ்டேட், தேயிலை தோட்டத் தொழிலாளர்கள் குடியிருப்பு, பழைய வால்பாறை, வில்லோனி எஸ்டேட், முத்துமுடி எஸ்டேட், குரங்குமுடி எஸ்டேட் குடியிருப்பு முதலிய பகுதிகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதியில் உள்ள வாட்டர்பால்ஸ் குடியிருப்பு, ஹைபாரஸ்ட் குடியிருப்பு, தோனிமுடி எஸ்டேட் குடியிருப்பு, முடிஸ் மார்க்கெட் பகுதி, நல்லகாத்து எஸ்டேட் குடியிருப்பு, சிறுகுன்றா எஸ்டேட், தேயிலை தோட்டத் தொழிலாளர்கள் குடியிருப்பு, பழைய வால்பாறை, வில்லோனி எஸ்டேட், முத்துமுடி எஸ்டேட், குரங்குமுடி எஸ்டேட், குடியிருப்பு ஆகிய பகுதிகள் தனியாருக்கு சொந்தமானதால் இப்பகுதிகளுக்கு தனியார்மூலம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுகிறது.

92—

சாலை வசதி

வினா எண் 106603—திரு. கே.எஸ். விஜயகுமார்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், கொள்ளானூர் ஆராமணியுடன் புதுக்குப்பம் கிராமத்தினை இணைக்க வனப் பகுதியில் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், பாலவாக்கம் காப்புக்காட்டில் உள்ள கொள்ளானூர் ஆராமணி முதல் புதுக்குப்பம் வரையிலான சாலையை மேம்படுத்த கொள்ளானூர் ஊராட்சித் தலைவர் வனத் துறையின் அனுமதி வேண்டியுள்ளார். 2.72 கி.மீ. நீளமும், 30 அடி அகலமும் கொண்ட இச்சாலையை மேம்படுத்த, மத்திய சுற்றுச்சூழல்-வனத் துறை அமைச்சகத்தால் கடித எண் 11-48/02 FC *நாள் 14-9-2004 மற்றும் 29-4-2005-ல்*

2010 நவம்பர் 12]

தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு உரிய அனுமதியை வழங்கும்படி முதன்மை வனப் பாதுகாவலரின் 8-3-2010 நாளிட்ட கடிதத்தில், திருவள்ளூர் மாவட்ட வன அலுவலர் அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

93—

புதுப்பித்தல்

வினா எண் 13658—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, வாளவாடி நெடுஞ்சாலையில் அரிமா சங்கம் எதிரிலுள்ள சிறு பாலத்தைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை தொகுதி, வாளவாடி நெடுஞ்சாலையில் உள்ள சிறு பாலம் பொள்ளாச்சி (நெ) கோட்டம், உடுமலை (நெ) உட்கோட்டத்தைச் சார்ந்த பூலாங்கிணறு-தளி சாலை கி.மீ.5/6-ல் உள்ளது. இப்பாலத்தை ரூ.150 இலட்சம் செலவில் 2009-2010 சிறப்பு பழுதுபார்த்தலின்கீழ் அகலப்படுத்தி புதுப்பிக்கும் பணி தற்போது நடைபெற்று வருகின்றது.

94—

பாலங்கள் அமைத்தல்

வினா எண் 29006—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை வட்டம், ராகல்பாலி நெடுஞ்சாலையில் ஜெ.ஜெ. நகரில் இரண்டு சிறு பாலங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை.—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை வட்டம், ராகல்பாலி நெடுஞ்சாலையில் ஜெ.ஜெ. நகரில் இரண்டு சிறு பாலங்கள் அமைக்கக் கோரும் இடமானது பொள்ளாச்சி (நெ) கோட்டம், உடுமலை (நெ) உட்கோட்டத்தைச் சார்ந்த இதர மாவட்ட சாலையான ராகல்பாலி கிராமச் சாலை கி.மீ. ½-ல் ஜெ.ஜெ. காலனியில் அமைந்துள்ளது. 2008-2009 ஆம் ஆண்டு 17 Minor திட்டத்தின்கீழ் 1.00 இலட்சம் செலவில் 900 மி.மீ. விட்டம் கொண்ட ஒரு வரிசை குழாய்ப் பாலம் அமைக்கப்பட்டுள்ளது.

95—

சத்துணவு மையம்

வினா எண் 23919—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டையில் யு.கே.சி. நகர், சிங்கப்பூர் நகர், ராஜலட்சுமி நகர் பகுதியிலுள்ள ஆரம்பப் பள்ளிகளுக்குச் சத்துணவு மையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை.—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை நகராட்சிக்கு உட்பட்ட யு.கே.சி. நகர், சிங்கப்பூர் நகர், ராஜலட்சுமி நகர் பகுதிகளில் உள்ள ஆரம்பப் பள்ளிகளில் சத்துணவு மையம் அமைக்க ஒவ்வொரு மையத்திற்கும் ரூ.50,000/-வீதம் ரூ.1,50,000/- செலவில் சத்துணவு மையம் கட்டப்பட்டுள்ளது.

2010 நவம்பர் 12]

96—

முதியோர் இல்லம்

வினா எண் 74438—திரு. எம்.ஆர். சுந்தரம்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆத்தூர் தொகுதி, ஆத்தூர் நகராட்சி, 2-வது வார்டு பகுதியில் முதியோர் இல்லம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்:

(அ) ஆத்தூர் நகராட்சி, 2-வது வார்டிற்கு எனத் தனியாக முதியோர் இல்லம் கட்டும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

(ஆ) எழவில்லை.

97—

கண்காணிப்புக் குழுக்கள்

வினா எண் 107215—திருமதி ஜி. லதா: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள அனைத்துப் பள்ளி சத்துணவு மையங்களிலும் தரமான அரிசி உட்பட உணவுப் பொருட்கள் வழங்குவதைக் கண்காணித்திட கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்:

(அ) தமிழ்நாட்டில் உள்ள அனைத்துப் பள்ளி சத்துணவு மையங்களிலும் தரமான அரிசி உட்பட உணவுப் பொருட்கள் வழங்குவதைக் கண்காணித்திட ஏற்கெனவே கிராம, வட்டார மற்றும் மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

(ஆ) கேள்வி எழாது.

[2010 நவம்பர் 12

98—

இலவச வீட்டுமனை

வினா எண் 56917—திருமதி ஜி. லதா: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் தொகுதி, கொத்தப்பல்லி ஊராட்சி, கொத்தப்பல்லி ஆதி திராவிடர் குடியிருப்பு மக்களுக்கு வீட்டுமனை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், குடியாத்தம் தொகுதி, கொத்தப்பல்லி ஊராட்சிக்குட்பட்ட வீடற்ற ஆதி திராவிடர்களுக்கு இலவச வீட்டுமனை வழங்க கொத்தப்பல்லி கிராமம் சர்வே எண் 116/1-ல் 1.35.5 ஹெக்டேர் நிலம் ஆர்ஜிதம் செய்து வீடற்ற ஆதி திராவிடர்கள் அனைவருக்கும் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

99—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 58086—திரு. ஆர். சின்னசாமி: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிங்காநல்லூர் தொகுதி, விளாங்குறிச்சி ஊராட்சி, அம்பேத்கர் நகர் பகுதியில் வசிக்கும் ஆதி திராவிட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 நவம்பர் 12]

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் வட்டம், விளாங்குறிச்சி கிராமத்தில் க.ச.344 நெ. சாலையில் 3.50 ஏக்கர் நிலம் நில எடுப்பு செய்யப்பட்டு, வீடற்ற ஆதி திராவிட மக்களுக்கு தகுதியின் அடிப்படையில் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

100—

இலவச வீட்டுமனைப் பட்டா

வினா எண் 107251—திருமதி ஜி. லதா: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் தொகுதி, பெரும்பாடி ஊராட்சியில் ஆதி திராவிடர் குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், பெரும்பாடி ஊராட்சியில் வீட்டுமனை வழங்க தகுதியான அரசு புறம்போக்கு நிலங்கள் எதுவும் இல்லை. தனி நபர் பேச்சுவார்த்தை மூலம் நிலம் அரசுக்கு கிரயம் கொடுக்க நில உரிமையாளர் எவரும் முன்வரவில்லை. எனினும் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க தகுதியான நிலம் தேர்வு செய்யும் பணி தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

[2010 நவம்பர் 12

பட்டியல் 4

1—

ஆழ்குழாய் அமைத்தல்

வினா எண் 2794—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன்புதூர் சிறப்பு ஊராட்சி, தேவிபட்டணத்தின் குடியிருப்புப் பகுதி மற்றும் ஆதி திராவிடர் காலனிக்கு ஆழ்குழாய் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை சட்டமன்றத் தொகுதி, வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சிக்குட்பட்ட தேவிபட்டணம் ஆதி திராவிடர் காலனியில் ஏற்கெனவே ஓர் ஆழ்குழாய்க் கிணறு அமைக்கப்பட்டு, நல்ல முறையில் பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது. மேலும் தேவிபட்டணம் குடியிருப்புப் பகுதியில் ஆனைமலை கூட்டுக் குடிநீர்த் திட்டம் மற்றும் இரண்டாவது குடிநீர்த் திட்டத்தின்கீழ் குடிநீர் விநியோகம் நடைபெறுகிறது. மேற்படி பகுதியில் சுமார் 21,000 மக்கள்தொகை உள்ளது. ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு 65 லிட்டர் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், 2007-2008-ன்கீழ் (எம்.என்.பி) கீழ் ரூ.44.82 இலட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் அனைத்துப் பகுதிகளுக்கும் புதிய குடிநீர் திட்டம் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2—

தார்ச் சாலை

வினா எண் 7552—திரு. கே.வீ. ராமநாதன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2010 நவம்பர் 12]

(அ) பவானி தொகுதி, ஆப்பக்கூடலில் இருந்து கல்லாங்காடு ரோாடு வழியாக ஓரிச்சேரிபுதூர் செல்லும் சாலையை தார்ச் சாலையாக மாற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதிக்குட்பட்ட ஆப்பக்கூடல் கால்நடை மருத்துவமனையில் இருந்து கல்லாங்காடு ரோடு வழியாக ஓரிச்சேரிபுதூர் செல்லும் சாலையில் ஓரடுக்கு மெட்டல் போட்டு தார்ச் சாலை 1.450 கி.மீ. நீளத்திற்கு ரூ.16.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி முடிக்கப்பட்டு 20-4-2010 முதல் பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளது.

3—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 8587—திரு. மு. அப்பாவு: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ராதாபுரம் தொகுதி, திசையன்விளை பேரூராட்சி, 13-வது வார்டு, செக்கடி தெரு, வணிக வைசியர் தெரு, கருப்பசாமி கோயில் தெரு, பிள்ளையார் மேலத் தெரு ஆகிய இடங்களில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் தொகுதி, திசையன்விளை பேரூராட்சியில் சுமார் 850 மக்கள் வசித்து வருகின்றனர். 210 வீடுகள் உள்ளன. இங்கு பொதுக் குழாய்கள் 23 மற்றும் வீட்டுக் குழாய்கள் 32 உள்ளன. இப்பகுதியில் இரண்டு நாட்களுக்கு ஒருமுறை குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 59 லிட்டர் குடிநீர்

விநியோகம் செய்யப்படுகிறது. திசையன்விளை, நாங்குனேரி களக்காடு வழியோர கிராமங்கள் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் 2 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் பணி துவக்கப்பட்டுள்ளது. இப்பணி ஆறு மாத காலத்திற்குள் முடிக்கப்பட்டு, இனிவரும் காலங்களில் கூடுதலாக குடிநீர் விநியோகம் இப்பகுதிக்கு வழங்கப்படும்.

4—

புதிய கட்டடங்களுக்குத் தடை

வினா எண் 105843—திரு. மு. அப்பாவு: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மீனம்பாக்கம் விமான நிலையத்தைச் சுற்றிலும் 900 மீட்டர் சுற்றளவுக்கு புதிய கட்டடம் கட்டக் கூடாது என்பதை மாற்றி 100 மீட்டர் அளவுக்கு குறைத்ததுபோல் கூடன்குளம் அணுமின் நிலையத்தைச் சுற்றிலும் நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

மீனம்பாக்கம் விமான நிலையம் சர்வதேச விமான நிலையமாக உள்ளதாலும், பேரூராட்சிக்கு உட்பட்ட பகுதியில் இருப்பதாலும் அதன் அவசியத்தைக் கருதி 900 மீட்டர் சுற்றளவுக்குப் புதிய கட்டடம் கட்டக் கூடாது என்பதை மாற்றி 100 மீட்டர் அளவுக்கு புதிய கட்டடம் கட்டக் கூடாது என அரசு தெரிவித்துள்ளதாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதே நிலையை கூடன்குளம் அணுமின் நிலையத்தில் செயல்படுத்த அரசு முன்வருமா என கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. கூடன்குளம் ஒரு ஊராட்சியாகும். ஏற்கெனவே கூடன்குளம் அணுமின் நிலையத்திலிருந்து 5 கிலோ மீட்டருக்குள் கட்டப்படும் கட்டடங்களுக்கு உள்ளூர் குழுக் கூட்ட அனுமதி பெற வேண்டும் என விதி உள்ளது. அதனை மாற்றம் செய்ய இயலாது.

5—

அடிப்படை வசதிகள்

வினா எண் 117197—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2010 நவம்பர் 12]

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பேரூராட்சி, 15-வது வார்டில் அடிப்படை வசதிகள் செய்யவும், சிமெண்ட் சாலைகள், கூடுதலாக தெரு விளக்குகள் அமைக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பேரூராட்சி, 15-வது வார்டில் 2001 ஆம் ஆண்டின் மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி 1,179 பேர் வசிக்கின்றனர். அவ்வார்டில் கீழ்க்கண்ட தெருக்கள் உள்ளன: வெள்ளாளர் மேலத் தெரு, வெள்ளாளர் கிழத் தெரு, வெள்ளாளர் நடுத் தெரு, கள்ளர் தெரு, திருச்சுழிரோடு மற்றும் முதலியார் முடுக்கத் தெரு. மேற்கண்ட தெருக்களில் வெள்ளாளர் கிழத் தெருவில் தார்ச் சாலை அமைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள அனைத்து தெருக்களிலும் சிமெண்ட் சாலை வசதி செய்து தரப்பட்டுள்ளது. தினமும் கோட்டை குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. இது தவிர 1,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட 3 சின்டெக்ஸ் டேங்குகள்மூலம் பொதுமக்களின் பயன்பாட்டிற்குத் தொடர்ந்து குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. அனைத்துத் தெருக்களிலும் தெரு விளக்கு வசதி மற்றும் வடிகால் வசதி செய்து தரப்பட்டுள்ளது.

6—

மின்சார வசதி

வினா எண் 52106—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், மஞ்சல்குடிக்கு சீரான மின்சாரம் வழங்கவும், புதிய மின் கம்பிகள் மற்றும் புதிய மின் மாற்றி அமைத்துத் தரவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், மஞ்சல்குடி பகுதியில் ஏற்கெனவே பழைய 63 கே.வி.ஏ./11 கி.வோ. மின் மாற்றி மாற்றப்பட்டு, புதிய 100 கே.வி.ஏ/11 கி.வோ. மின்மாற்றி அமைக்கப்பட்டு, மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. ஏற்கெனவே உள்ள மின் கம்பிகள் நல்ல நிலையில் உள்ளதால் புதிய மின் கம்பிகள் மாற்ற வேண்டிய அவசியம் இல்லை.

7—

புதிய மின் மாற்றிகள்

வினா எண் 52111—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை பேரூராட்சிப் பகுதி மற்றும் திருப்புவனம் பேரூராட்சிப் பகுதிகளில் கூடுதலாகப் புதிய மின் மாற்றிகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை பேரூராட்சிப் பகுதியில் உள்ள இரயில்வே காலனியில், புதியதாக ஒரு 100 கே.வி.ஏ./22 கி.வோ. மின் மாற்றி அமைக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது. திருப்புவனம் பேரூராட்சிப் பகுதியில் ஏற்கெனவே உள்ள மின் மாற்றிகள் போதுமானதாக உள்ளதால் புதிய மின் மாற்றி அமைக்க வேண்டிய அவசியம் தற்போது இல்லை.

8—

புதிய மின் மாற்றி

வினா எண் 52115—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2010 நவம்பர் 12]

(அ) மானாமதுரை தொகுதி, திருப்பாச்சேத்தி மற்றும் மிளகனூர் ஆகிய பகுதிகளில் மின் மாற்றிகளைப் புதிதாக மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்பாச்சேத்தி கிராமத்திற்கு நான்கு மின் மாற்றிகள் மூலமும், மிளகனூர் கிராமத்திற்கு இரண்டு மின் மாற்றிகள் மூலமும் மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட மின் மாற்றிகளில் கூடுதல் மின் பளுவோ மற்றும் அந்தப் பகுதியில் குறைந்த மின்னழுத்தமோ இல்லாததால் மேற்கண்ட மின் மாற்றிகளை மாற்றி புதிய மின் மாற்றி அமைக்க வேண்டிய அவசியம் இல்லை.

9—

மின் மாற்றி அமைத்தல்

வினா எண் 58249—திரு. த.அ. மேகநாதன்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரி மாவட்டம், ஜக்கசமுத்திரம் ஊராட்சி, முல்லாசனஅள்ளியில் மின் மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், ஜக்கசமுத்திரம் ஊராட்சி, முல்லாசனஅள்ளி கிராமத்தில், புதிய 100 கே.வி.ஏ. மின் மாற்றி ரூ.7,30,000/- செலவில் இயக்கி வைக்கப்பட்டுள்ளது.

10—

அதிக மின்னழுத்தம் உள்ள மின் மாற்றி அமைத்தல்

வினா எண் 75052—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(அ) மானாமதுரை தொகுதி, மேலப்பிடாவூர் ஊராட்சி, ஏ.விளாக்குளத்தில் உள்ள குறைந்த மின்னழுத்தமுள்ள மின் மாற்றியை மாற்றி அதிக மின்னழுத்தம் உள்ள மின் மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மேலப்பிடாவூர் ஊராட்சியில் உள்ள மேலப்பிடாவூர் கிராமத்தில் ஏற்கெனவே இருந்த 63 கே.வி.ஏ. மின் மாற்றி மாற்றப்பட்டு, அதிகத் திறன் உள்ள 100 கே.வி.ஏ. மின் மாற்றி அமைக்கப்பட்டு சீராக இயங்கி வருகிறது. மேற்கண்ட மின் மாற்றி மாற்றப்பட்ட பிறகு அந்தப் பகுதியில் மின்னழுத்த அளவு நல்ல நிலையில் உள்ளது. ஏ. விளாக்குளம் கிராமத்திற்கு 63 கே.வி.ஏ/22 கி.வோ. மின் மாற்றி மூலம் மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட மின் மாற்றியில் கூடுதல் மின் பளுவோ அல்லது அதன் காரணமாக அந்தப் பகுதியில் குறைந்த மின்னழுத்தமோ கண்டறியப்படவில்லை. எனவே, தற்பொழுது புதிய, அதிகத் திறன் உள்ள மின் மாற்றி அமைக்க வேண்டிய அவசியம் இல்லை.

11—

புதிய மின் மாற்றி

வினா எண் 75054—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, மேலநெட்டூர் ஊராட்சி, ஆலம்பச்சேரியில் உள்ள பழைய மின் மாற்றியை மாற்றி புதிய மின் மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மேலநெட்டூர் ஊராட்சி, ஆலம்பச்சேரியில் ஏற்கெனவே இரண்டு 100 கே.வி.ஏ.

2010 நவம்பர் 12]

மின் மாற்றிகள், ஒரு 63 கேவிஏ. மின் மாற்றி மற்றும் ஒரு 50 கேவிஏ. மின் மாற்றி உள்ளது. மேற்கண்ட மின் மாற்றிகளில் உள்ள மின் பளு அந்த மின் மாற்றிகளின் திறனுக்குள் உள்ளது. மற்றும் அந்தப் பகுதியில் குறைந்த மின்னழுத்தம் கண்டறியப்படவில்லை. எனவே மேற்கண்ட மின் மாற்றிகளை மாற்றி புதிய மின் மாற்றிகள் அமைக்க வேண்டிய அவசியம் தற்பொழுது இல்லை.

12—

மின் வசதி

வினா எண் 102630—திரு. தி.க. ராஜா: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் தொகுதி, சோலையார்பேட்டை ஒன்றியம், ஏலகிரிமலை, கொட்டையூர், மூத்தனூர் கிராமங்களில் மின் வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

திருப்பத்தூர் தொகுதி, சோலையார்பேட்டை ஒன்றியம், ஏலகிரி மலை, கொட்டையூர் ஆகிய பகுதிகளில் ஏற்கெனவே மின் வசதி செய்யப்பட்டுள்ளது. அங்கு உள்ள வீடுகளுக்கு மின் இணைப்பும் வழங்கப்பட்டுள்ளது. மூத்தனூர் கிராமத்தில் மின் வசதி செய்யும்பொருட்டு, ஒரு மின் மாற்றி நிறுவப்பட்டு இயக்கி வைக்கப்பட்டுள்ளது. அங்குள்ள வீடுகளுக்கு மின் இணைப்பு கோரி பெறப்பட்ட விண்ணப்பங்களுக்கு மின் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

13—

சலுகை விலையில் மின்சாரம்

வினா எண் 104553—திரு. தா. மலரவன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூரில் உள்ள பொற்கொல்லர்கள் பணி செய்யும் வீடுகளுக்கு சலுகை விலையில் மின்சாரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

[2010 நவம்பர் 12

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

மின் கட்டண நிர்ணயம் செய்யும் அதிகாரம் பெற்ற தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின், 15-3-2003 நாளிட்ட மின் கட்டண ஆணையில் வீட்டுடன் இணைக்கப்பட்டு கையால் செய்யப்படும் நகைத் தொழிலுக்கு வீட்டு தாழ்வழுத்த மின் கட்டண விகிதம் IA விதித்து ஆணையிடப்பட்டுள்ளது.

மின் கட்டண விகிதம்

மின் நுகர்வு (யூனிட்டுகளில்) இரு மாதத்திற்கு	16-3-2003 முதல் த.மி.ஒ. ஆணையத்தால் நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் (ஒரு யூனிட்டிற்கு/ரூபாய்)	16-06-2004 முதல் தமிழக அரசால் குறைத்து நிர்ணயிக்கப்பட்டுள்ள கட்டணம் (ஒரு யூனிட்டிற்கு/ரூபாய்).
0-50	1.10	0.75
51-100	1.30	0.85
101-200	2.60	1.50
201-600	3.50	2.20
601-ம் அதற்கு மேலும்	4.75	3.05

இந்த தாழ்வழுத்த மின் கட்டண விகிதமே சலுகைக் கட்டணம் என்பதால் பொற்கொல்லர்கள் பணி செய்யும் வீடுகளுக்கு மேலும் சலுகை விலையில் மின்சாரம் வழங்கும் திட்டம் இல்லை.

14—

மின்சார வசதி

வினா எண் 110197—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2010 நவம்பர் 12]

தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் ஒன்றியம், ஸ்ரீபராங்குசநல்லூர் ஊராட்சி, கீழஆழ்வார்தோப்பு அருள்மிகு இராமசாமி திருக்கோயில் வளாகத்தில் உள்ள மின் மாற்றியை மாற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் ஒன்றியம், ஸ்ரீபராங்குசநல்லூர் கிராமத்திற்குட்பட்ட கீழஆழ்வார்தோப்பு அருள்மிகு இராமசாமி திருக்கோயில் முன்பு அமைந்துள்ள 100 கே.வி.ஏ. மின் மாற்றியை வாரிய செலவில் இடமாற்றம் செய்ய இயலாது. மேலும் மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் மேற்கண்ட மின் மாற்றியினை இடமாற்றம் செய்துதரக் கோரி பொதுமக்கள் சார்பாக கோயில் தர்மகர்த்தா திரு. ப. கணேசன் நாடார் அவர்கள் அளித்த விண்ணப்பத்தின் அடிப்படையில், கள ஆய்வு செய்து, மதிப்பீடு தயார் செய்து, அனுமதி பெறப்பட்டு மதிப்பீட்டுத் தொகை ரூ.1,97,670/- செலுத்துவதற்கு அறிவிப்புக் கடிதமும் அனுப்பப்பட்டது. மேற்படி மதிப்பீட்டுத் தொகையைக் குறிப்பிட்ட காலத்திற்குள் செலுத்தாததால் மதிப்பீட்டு அனுமதி காலாவதியாகிவிட்டது. மின் மாற்றியை இடமாற்றம் செய்யக் கோரி மீண்டும் விண்ணப்பம் கொடுக்கும்பட்சத்தில், தற்போதுள்ள வாரிய விலைப் பட்டியல் அடிப்படையில் மதிப்பீடு தயார் செய்து ஒப்புதல் பெறப்பட்டு மின் மாற்றியை இடமாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

15—

விளை நிலங்களாக மாற்றுதல்

வினா எண் 37902—திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, காடாம்புலியூர் ஊராட்சியில் புறம்போக்காக உள்ள 110 ஏக்கர் அரசு நிலத்தை முந்திரி மற்றும் பழவகைகள் தரும் விளை நிலங்களாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2010 நவம்பர் 12

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காடாம்புலியூர் ஊராட்சியில் புறம்போக்காக உள்ள 110 ஏக்கர் அரசு நிலத்தை முந்திரி மற்றும் பழவகைகள் தரும் விளை நிலங்களாக மாற்றுவதற்கு தோட்டக்கலைத் துறை மூலம் செயல்படுத்திட திட்டங்கள் ஏதும் இல்லை. விருத்தாசலம் மற்றும் நெய்வேலியில் அரசு தோட்டக்கலைப் பண்ணைகள் ஏற்கெனவே இயங்கி வருவதால், கடலூர் மாவட்டத்தில் புதியதாக அரசு தோட்டக்கலைப் பண்ணை அமைக்கும் திட்டமும் இல்லை.

16—

நத்தைப் புழு தாக்குதல்

வினா எண் 69422—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டத்தில் தென்னை மரங்களில் நத்தைப் புழுக்கள் தாக்குதல் இருப்பதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

ஆம், கோவை மாவட்டம், உடுமலை வட்டம், பெதப்பம்பட்டி வட்டாரத்தில் தென்னை மரங்களில் நத்தைப் புழுக்கள் தாக்குதல் இருப்பதைக் கண்டறிந்து ஆழியாறு, தென்னை நாற்றுப் பண்ணை பேராசிரியர் தலைமையில் சிறப்புக் குழு அமைக்கப்பட்டு, அக்குழு பரிந்துரை செய்துள்ள யோசனைகள் விவசாயிகளுக்குத் தெரிவிக்கப்பட்டு, தற்பொழுது அப்பகுதியில் நத்தைப் புழு தாக்குதல் கட்டுப்பாட்டில் உள்ளது.

2010 நவம்பர் 12]

17—

ஆய்வு மையம்

வினா எண் 86536—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தென்னை விவசாயிகள் பயன்பெறும் வகையில் முழுமையான ஏற்றுமதிக்காக தென்னம்பால் இறக்க, சேலத்தில் ஆய்வு மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

தென்னை விவசாயிகள் பயன்பெறும் வகையில் முழுமையான ஏற்றுமதிக்கான தென்னம்பால் இறக்க, சேலத்தில் ஆய்வு மையம் அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது வேளாண்மைத் துறையின் பரிசீலனையில் இல்லை.

18—

மானியம் வழங்குதல்

வினா எண் 100784—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெளி மாநிலங்களிலிருந்து உற்பத்தியாகும் உயர்ந்த ஒட்டு ரக பழக்கன்றுகள், மிளகாய் விதைகள் கொள்முதல் செய்து வறட்சியான தென் மாவட்ட விவசாயிகளுக்கு குறைந்த விலையில் மானியத்துடன் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் நிலவும் தட்பவெப்ப நிலை, மழையளவு ஆகியவற்றிற்கு உகந்தாற்போல் உயர் விளைச்சல்

தரக்கூடிய ஒட்டு ரக பழக்கன்றுகள், மிளகாய் விதைகள் தோட்டக்கலைத் துறையின் பல்வேறு திட்டங்கள்மூலம் அரசு நிர்ணயித்துள்ள மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. இவ்வுயர் விளைச்சல் ரகங்கள் நமது மாநிலத்தில் உள்ள 55 அரசு தோட்டக்கலைப் பண்ணைகளிலேயே உற்பத்தி செய்யப்படுவதாலும், அதற்கு மேல் தேவைப்படும் பழப்பயிர்கள் அரசு விதிமுறைகளின்படி தனியாரிடம் கொள்முதல் செய்தும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. வெளி மாநிலங்களில் உற்பத்தியாகும் பழக்கன்றுகள் மற்றும் மிளகாய் விதைகள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் பரிசோதனை செய்யப்பட்டு, தமிழ்நாட்டிற்கு உகந்தது என்ற சான்று பெற்ற பின்னரே தேவைக்கேற்ப கொள்முதல் செய்து விநியோகிக்கப்படும்.

தமிழகத்தில் கீழ்க்குறிப்பிட்டுள்ள திட்டங்களின்மூலம் குறைந்த விலையில் பழக்கன்றுகள், மிளகாய் விதைகள் வழங்கப்படுகின்றன.

வ.எண்	திட்டத்தின் பெயர்	மானிய விவரம்
1	ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம்	50%
2	தேசிய தோட்டக்கலை இயக்கம்	75%

19—

மானியம் வழங்குதல்

வினா எண் 101969—திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் தொகுதி, அரசுப் பண்ணைகளில் தென்னங்கன்றுகளின் உற்பத்தியை அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 நவம்பர் 12]

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம் பிச்சவாக்கத்தில் தென்னை நாற்றுப் பண்ணை இயங்கி வருகிறது. தென்னை விவசாயிகள் பயன்பெறும் வகையில் இப்பண்ணையில் தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு, நியாயமான விலையில் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. நடப்பு ஆண்டில் நெட்டை நெற்றுக்கள் 10,000 எண்ணிக்கை கொள்முதல் செய்து தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்து விநியோகம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான நெற்றுகள் ஜனவரி 2010 இல் கொள்முதல் செய்யப்படும். இது தவிர, இதுவரை இவ்வருடத்தில் 5,490 நெட்டைக் கன்றுகள் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

20—

நவீனப் பயிற்சி

வினா எண் 101970—திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயிகளுக்கு மூலிகைப் பண்ணைகள், தோட்டப் பயிர்கள், காய்கறிகள் பயிர் செய்ய நவீனப் பயிற்சி அளிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) விவசாயிகளுக்கு மூலிகைப் பண்ணைகள், தோட்டப் பயிர்கள், காய்கறிகள் பயிர் செய்ய நவீனப் பயிற்சி தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம், தேசிய தோட்டக்கலை இயக்கம், தேசிய மூலிகைப் பயிர் இயக்கம் ஆகிய திட்டங்களின்மூலம் அளிக்கப்பட்டு வருகின்றது.

(ஆ) இப்பயிற்சி ஒவ்வோராண்டும் வழங்கப்பட்டு வருகின்றது. நடப்பு ஆண்டில் கீழ்க்குறிப்பிட்டுள்ள திட்டங்கள்மூலம் விவசாயிகளுக்குப் பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது.

வ. எண்	திட்டத்தின் பெயர்	விவசாயிகள் எண்ணிக்கை
1.	தேசிய தோட்டக்கலை இயக்கம் (NHM)	24,000
2.	தேசிய மூலிகைப் பயிர் இயக்கம் (NMMP)	1,183
3.	தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் (NADP)	6,940

21—

பயிர்க் கடன்

வினா எண் 103272—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாழை பயிரிடும் விவசாயிகளுக்கு பயிர்க் கடன் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் வாழை பயிரிடும் விவசாயிகளுக்கு தோட்டக்கலைத் துறையின்மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களின்கீழ் உயர் விளைச்சல் ரக திசு வாழைக் கன்றுகள் மற்றும் இடுபொருட்கள் மானியத்தில் வழங்கப்படுகின்றன. வாழை சாகுபடி விவசாயிகள், அவர்கள் பகுதியிலுள்ள வட்டார தோட்டக்கலை விரிவாக்க அலுவலர்களை அணுகி பயன்பெற்றுக் கொள்ளலாம். மேலும், விவசாயிகளுக்குப்

2010 நவம்பர் 12]

பயிர்க் கடன் ஏதும் தோட்டக்கலைத் துறைமூலம் வழங்கப்படுவதில்லை. இந்த பயிர்க் கடனை கூட்டுறவு வங்கிகள் மூலமாகவோ அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மூலமாகவோ பெற்றுக் கொள்ளலாம்.

22—

தங்கும் விடுதி

வினா எண் 106105—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை தோட்டக்கலைப் பயிற்சி மையத்தில் மாணவர்களுக்கு தங்கும் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை தோட்டக்கலைப் பயிற்சி மையத்தில் மாணவர்களுக்குத் தங்கும் விடுதி வசதி ஏற்கெனவே உள்ளது. சென்னை தோட்டக்கலைப் பயிற்சி மையத்தை மாநில அளவிலான தோட்டக்கலை மேலாண்மைப் பயிற்சி நிலையமாக உயர்த்துவதற்கு 2009-2010 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தின்கீழ் அரசாணை (நிலை) எண் 158, வேளாண்மை (தோக1) துறை, நாள் 01-09-2009-ன்படி ரூ.100.00 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. அவற்றுள் ஏற்கெனவே உள்ள மாணவர்கள் தங்கும் விடுதியைப் புதுப்பிக்கும் பணியும் அடங்கும். தற்போது மேற்படி பணிகளுக்கான திட்டம் மற்றும் மதிப்பீட்டினைத் தயார் செய்து அனுப்பும்படி பணி மேற்கொள்ளும் நிறுவனமான வேளாண்மைப் பொறியியல் துறை கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. திட்டம் மற்றும் மதிப்பீடு பெறப்பட்டவுடன் மேற்படி பணிகள் துவங்குவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[2010 நவம்பர் 12

23—

அடையாள அட்டை

வினா எண் 108956—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கொப்பரைத் தேங்காய் விவசாயிகளுக்கு அடையாள அட்டை வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

ஆம். அரசு ஆணை எண் 134, கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 14-07-2005 மற்றும் அரசு ஆணை எண் 99, கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 11-07-06-ல், டான்பெட் நிறுவனத்தை கொப்பரைக் கொள்முதல் செய்ய அரசு ஆணையிட்டுள்ளது. அவ்வாணைகளில் மாவட்ட ஆட்சியாளர்கள், வேளான் துறை இணை இயக்குநர்களுடன் கலந்தாலோசித்து புது அடையாள அட்டைகளை கொப்பரைத் தேங்காய் விவசாயிகளுக்கு வழங்குவது குறித்துத் தீர்மானிக்கலாம் என ஆணைகளிடப்பட்டுள்ளதன் அடிப்படையில், அந்தந்தப் பகுதியில் உள்ள உதவி வேளாண்மை இயக்குநர்மூலம் கொப்பரை விவசாயிகளுக்கு அடையாள அட்டை வழங்கப்படுகிறது.

24—

விலையேற்றத்தைக் கட்டுப்படுத்துதல்

வினா எண் 111567—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கருப்பு திராட்சை விலையேற்றத்தைக் கட்டுப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 நவம்பர் 12]

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் 'பன்னீர் திராட்சை' என்ற விதையுடைய கறுப்பு திராட்சை (மஸ்கட் திராட்சை) ரகம் பயிரிடப்பட்டு வருகிறது. இத்திராட்சை ஒரு கிலோ ரூ.30/- முதல் ரூ.40/- வரை விற்கப்படுகின்றது. கடைகளில் கிடைக்கும் 'சரத்' என்ற விதையில்லா கறுப்பு திராட்சை மஹாராஷ்டிரா மாநிலத்தில் பயிரிடப்படும் திராட்சை ரகம் ஆகும். இத்திராட்சை கடைகளில் ஒரு கிலோ ரூ.120/- முதல் ரூ.150/- வரை விற்கப்படுகின்றது. இத்திராட்சைகளுக்கு தோட்டக்கலைத் துறையின்மூலம் விலை நிர்ணயம் செய்யப்படுவது இல்லை. உற்பத்தி அதிகரித்து, தேவை குறையும்போது பழங்களின் விலை குறையும். தோட்டக்கலைத் துறையின்மூலம் திராட்சைப் பயிருக்கு எவ்விதத் திட்டங்களும் தற்போது செயல்படுத்தப்படவில்லை. திராட்சை விலையேற்றத்தைக் கட்டுப்படுத்த தோட்டக்கலைத் துறையின்மூலம் நடவடிக்கை மேற்கொள்ள வழிவகை இல்லை.

25—

ஈரியோபைட் நோய்த் தடுப்பு

வினா எண் 113206—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் தென்னையைத் தாக்கும் ஈரியோபைட் நோயைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2007-2008 ஆம் ஆண்டில் தென்னை மரத்தில் ஈரியோபைட் தாக்குதல் தமிழகத்தில் பெரிய அளவில் காணப்பட்டது. அதனைத் தொடர்ந்து, இந்நோயினைக் கட்டுப்படுத்த தென்னை வளர்ச்சி வாரியம், கொச்சியின் நிதி உதவியுடன் "தென்னை மரங்களை ஈரியோபைட் நோய்

கட்டுப்படுத்தல்" என்ற திட்டம் வகுக்கப்பட்டு ரூ.22.774 கோடி திட்ட முதலீட்டில் பாதிக்கப்பட்ட 94.892 இலட்சம் மரங்களின் மேற்படி நோயைக் கட்டுப்படுத்தி நடவடிக்கை மேற்கொள்ள அரசு ஆணை எண்.527, வேளாண்மை (எவி) துறை, நாள் 19-12-2007 ஆணை வெளியிடப்பட்டது. இத்திட்டத்தை அமல்படுத்த தேர்ந்தெடுக்கப் பட்ட 10 மாவட்டங்களில், கோயம்புத்தூர் மாவட்டமும் அடங்கும். 2007-2008 ஆம் வருடத்தில் அசாடிராக்டின் 1% மருந்து கொள்முதல் செய்யப்பட்டு 2008-2009 ஆண்டு முதல் தற்போது வரை இம்மருந்து பாதிக்கப்பட்ட தென்னை விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. அதன் விவரம் வருமாறு:—

மாவட்டம்—கோயம்புத்தூர்	
கொள்முதல் செய்யப்பட்ட மருந்தின் அளவு—அசாடிராக்டின் 1%	33749.000 லிட்டர்
30-12-2009 வரை விநியோகம் செய்யப்பட்ட மருந்தின் அளவு	9849.150 லிட்டர்
நோய் கட்டுப்படுத்தப்பட்ட மரங்களின் எண்ணிக்கை	3.28 இலட்சம்

தொடர்ந்து மருந்து விநியோகம் நடைபெற்று வருகிறது.

26—

காய்கறி விதைகள்

வினா எண் 115166—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதியில் இலவசமாக காய்கறி விதைகள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு தொகுதி உள்ளடங்கிய காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித்

திட்டத்தின்கீழ் 50 சதவிகித மானிய விலையில் காய்கறி விதைகள் வழங்கப்படுகின்றன. விவசாயிகளுக்கு முழு மானிய விலையில் (இலவசமாக) காய்கறி விதைகள் வழங்கும் திட்டங்கள் எதுவும் தற்பொழுது நடைமுறையில் இல்லை.

27—

தென்னை மரக் கன்றுகள்

வினா எண் 115167—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதியில் தென்னை மரங்கள் வளர்க்கும் திட்டத்தின்கீழ் இலவசமாக விவசாயிகளுக்கு தென்னை மரக் கன்றுகள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

தென்னை வளர்ச்சி வாரியத்தின் உதவியுடன் செயல்படுத்தப்படும் தென்னை மரங்கள் வளர்க்கும் திட்டத்தின் கீழ் இலவசமாக தென்னை மரங்கள் வழங்கும் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை.

28—

சர்வதேச விமான நிலையம்

வினா எண் 104262—திரு. வை. காவேரி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மற்றும் தூத்துக்குடி விமான நிலையங்களைச் சர்வதேச விமான நிலையங்களாக மாற்ற மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா?

(ஆ) ஆம், எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* மதுரை மற்றும் தூத்துக்குடி விமான நிலையங்களை சர்வதேச விமான நிலையங்களாக மாற்ற, கருத்துரு ஏதும் தற்போது நிலுவையில் இல்லை.

29—

குளிர்சாதனப் பேருந்து

வினா எண் 104331—திரு. எஸ். ரவிச்சந்திரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலத்திலிருந்து வேலூர் மற்றும் விழுப்புரம் வழியாக சென்னைக்கு குளிர்சாதனப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம். எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் மூலமாகத் தடம் எண் 422H-ல் சேலத்திலிருந்து சென்னைக்கு வேலூர் வழியாக தினசரி 6 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றது. மேலும் சேலத்திலிருந்து சென்னைக்கு விழுப்புரம் வழியாகத் தடம் எண் 422-ல் தினசரி 22 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றது. இவ்வசதியை சேலத்திலிருந்து சென்னைக்கு வேலூர் மற்றும் விழுப்புரம் வழியாகச் செல்லும் பயணிகள் பயன்படுத்திக்கொள்ள ஏதுவாக உள்ளது. குளிர்சாதனப் பேருந்தைப் பயன்படுத்தி சேலத்திலிருந்து சென்னைக்கு வேலூர் மற்றும் விழுப்புரம் வழியாக செல்லும் பயணிகளின் அடர்வு அதிகரிக்கும்போது சேலத்திலிருந்து சென்னைக்கு வேலூர் மற்றும் விழுப்புரம் வழியாக குளிர்சாதனப் பேருந்து இயக்குவது குறித்துப் பரிசீலித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2010 நவம்பர் 12]

30—

குளிர்சாதனப் பேருந்து

வினா எண் 104333—திரு. எல். ரவிச்சந்திரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலத்திலிருந்து குருவாயூர் மற்றும் எர்ணாகுளத்திற்கு குளிர்சாதனப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம். எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலத்திலிருந்து குருவாயூர் மற்றும் எர்ணாகுளத்திற்குச் செல்லும் பயணிகளின் அடர்வு அதிகரிக்கும்போது, சேலத்திலிருந்து குருவாயூர் மற்றும் எர்ணாகுளத்திற்கு குளிர்சாதனப் பேருந்து இயக்குவது குறித்துப் பரிசிலித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும். தற்போது அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் மூலமாக தடம் எண் 724G-ல் சேலத்திலிருந்து குருவாயூருக்கு தினசரி 1 சாதாரண மற்றும் 4 அதிநவீன சொகுசு மிதவைப் பேருந்துகள் 10 நடைகள் வீதம் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும் தடம் எண் 729-ல் சேலத்திலிருந்து எர்ணாகுளத்திற்கு தினசரி 6 அதிநவீன சொகுசு மிதவைப் பேருந்துகள் 12 நடைகள் வீதம் இயக்கப்பட்டு வருகின்றன. இந்த வசதி சேலத்திலிருந்து குருவாயூர் மற்றும் எர்ணாகுளம் செல்லும் பயணிகள் பயன்படுத்திக்கொள்ள போதுமானதாக உள்ளது.

31—

பேருந்து வசதி

வினா எண் 104583—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் கே 11 பேருந்தை முள்ளிபுரம் குட்டரை வழியாக கூடுதலாக இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம். எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தடம் எண் கே 11 நகரப் பேருந்து காங்கேயம்—முத்தூர் வழி, குட்டறை, முள்ளிபுரம் தினசரி 4 தனி நடைகள் இயங்கி வருகிறது. மேற்படி பேருந்து குறுகிய கால இடைவெளியில் பலமுறை வழித்தடங்களில் இயங்குவதால் கோரிக்கை வழியாக கூடுதலாக இயக்கப்பட்டால் தற்சமயம் பயன்பெறும் வழித்தடப் பகுதியினர் பாதிப்படைய நேரிடும். எனவே, கோரிக்கைப்படி இயக்க இயலாத நிலை உள்ளது.

32—

பேருந்து வசதி

வினா எண் 113783—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம், பொத்தியபாளையம், நவிஞ்சிக்காட்டுப்புதூர், முத்துகாளிவலசு காடையூர் செல்லும் கே6 பேருந்தை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம். எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காங்கேயத்திலிருந்து பொத்தியபாளையம், விருப்புப்பள்ளம், காடையூர் வழியாக இயங்கும் தடம் எண். கே6 பேருந்து 14 தனி நடைகள் தினசரி இயக்கப்படுவதில்

2010 நவம்பர் 12]

விருப்புப்பள்ளத்திலிருந்து சுமார் 200 மீட்டர் தொலைவில் உள்ள முத்துகாளிவலசு பகுதியினர் பயனடைந்து வருகின்றனர். காங்கேயத்திலிருந்து பொத்தியபாளையம், தளிஞ்சிக்காட்டுப்புதூர் வழியாக தடம் எண்கள் கே5, SM. K8 நகரப் பேருந்துகள் 36 தனி நடைகள் இயக்கப்படுகின்றன. மேலும் கூடுதலாக இயக்க இயலாத நிலை உள்ளது.

33—

கூடுதல் பேருந்து

வினா எண் 113784—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னிமலை-பெருந்துறைக்கு பள்ளி மற்றும் கல்லூரி நேரங்களில் கூடுதல் பேருந்து இயக்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம். எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னிமலை-பெருந்துறை வழித்தடத்தில் கழக மற்றும் தனியார் நகரப் பேருந்துகள் 134 தனி நடைகளும், புறநகர்ப் பேருந்துகள் 68 தனி நடைகளும், ஆக மொத்தம் 202 தனி நடைகள் சுமார் 15 நிமிட இடைவெளியில் இயங்கிக் கொண்டுள்ளன. மேலும் கூடுதலாகப் பேருந்துகள் தற்சமயம் இயக்க இயலாத நிலை உள்ளது.

34—

கூடுதல் நகரப் பேருந்து

வினா எண் 115196—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, பாளையம்புதூருக்கு கூடுதல் நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம். எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிமிடெட், தருமபுரி மண்டலத்தைச் சார்ந்த 3 நகரப் பேருந்துகள் மூலம் தருமபுரியிலிருந்து பாளையம்புதூருக்கு நாளொன்றுக்கு 28 நடைகள் இயக்கப்பட்டு வருகிறது. இதில் பயணிகளின் அடர்வு சுமார் 48 விழுக்காடேயாகும். மேலும் பாளையம்புதூர் கிராமம் ஏற்கெனவே தருமபுரி-சேலம் மார்க்கத்தில் இயங்கும் தருமபுரி மண்டல நகர்/புறநகர்ப் பேருந்துகள் மூலம் பேருந்து வசதி பெற்ற பாளையம்புதூர் பிரிவு சாலையிலிருந்து 0.5 கி.மீ. நடைபயண தூரத்திலேயே உள்ளதால், பாளையம்புதூர் கிராமத்திற்குக் கூடுதல் பேருந்து வசதியினைச் செய்திட இயலாத நிலையுள்ளது.

35—

கூடுதல் பேருந்து

வினா எண் 115197—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி முதல் கம்பைநல்லூர் வரை (வழி குப்பூர்) கூடுதல் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம். எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி—கம்பைநல்லூர் (வழி) குப்பூர் தடத்தில் நகரப் பேருந்து தடம் எண் டி39-ன் மூலம் நாளொன்றுக்கு 6 நடைகளும் மற்றும் தருமபுரியிலிருந்து குப்பூர் வழியாக கீழ்வேப்பரம்பட்டி வரை நாளொன்றுக்கு 4 நடைகளும்

2010 நவம்பர் 12]

இயக்கப்பட்டு வருகின்றன. இதில் பயணிகளின் அடர்வு சுமார் 33 விழுக்காடே உள்ளது. மேலும் தருமபுரியிலிருந்து கம்பைநல்லூருக்கு பல்வேறு வழித்தடங்களில் இக்கழகத்தைச் சார்ந்த 12 நகரப் பேருந்துகள்மூலம் நாளொன்றுக்கு 92 நடைகள் இயக்கப்பட்டு வருவதால், கோரியுள்ள வழித்தடத்தில் கூடுதல் நகரப் பேருந்து வசதியினைத் தற்சமயம் செய்திட இயலாத நிலையுள்ளது.

36—

பேருந்து வசதி

வினா எண் 115202—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி நகராட்சி, பெண்ணாகரம் சாலை நாவிதர் நகர் என்கிற பெரியார் நகரில் பேருந்து நின்று செல்ல அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம். எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாவிதர் நகர் என்கிற பெரியார் நகர் ஏற்கெனவே இக்கழக நகரப் பேருந்துகள் பேருந்து நிறுத்தம் செய்து வரும் அன்னை சத்யா நகர் மற்றும் பிளவர் மில்லில் இருந்து 0.4 கி.மீ. நடைப் பயண தூரத்திலேயே உள்ளதால், கோரியுள்ள இடத்தில் தற்சமயம் பேருந்து நிறுத்தம் அளித்திட இயலாத நிலையுள்ளது.

37—

நகரப் பேருந்து

வினா எண் 115210—திரு. வை. காவேரி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2010 நவம்பர் 12

(அ) எடப்பாடி-எளம்பிள்ளை வழி கொங்கணாபுரம், சுண்ணாம்புசூளை, மட்டம்பட்டி, கோவலங்காடு வழியாக நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம். எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தடம் எண் 5, எடப்பாடி-எளம்பிள்ளை (வழி) கொங்கணாபுரம், கச்சுப்பள்ளி, கோவலன்காடு, அழகப்பம்பாளையம் வழித்தடத்தில் தினசரி 6 நடைகள் இயக்கப்பட்டு வருகிறது. தடம் எண் 5பி பேருந்து எடப்பாடி-எளம்பிள்ளை (வழி) கொங்கணாபுரம், கச்சுப்பள்ளி என தினசரி 3 நடைகள் இயக்கப்பட்டு வருகிறது. கேட்கப்பட்ட வழித்தடத்தில் பேருந்து வசதி பெறாத சுண்ணாம்புச்சூளை-கச்சுப்பள்ளி வழித்தடத்தில் மட்டம்பட்டி என்ற கிராமம் உள்ளது. மட்டம்பட்டி கிராமப் பகுதியில் மக்கள் குடியிருப்புகள் மிகக் குறைவாக உள்ளன. மேலும் 1000 மக்கள்தொகை பதிவேட்டில் அது இடம் பெறவில்லை. மட்டம்பட்டி-எடப்பாடி-கொங்கணாபுரம்-கன்னந்தேரி-மகுடஞ்சாவடி வழித்தடத்தில் 0.75 கி.மீ. தொலைவில் உள்ளது. .இவ்வழித்தடத்தில் ஒவ்வொரு 10 நிமிட இடைவெளியில் பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

38—

பேருந்து வசதி

வினா எண் 115416—திருமதி ஆர். பிரேமா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவினாசி தொகுதி, அவினாசி புதிய பேருந்து நிலையத்திலிருந்து பல்லடம் வரை இயக்கிய நகரப் பேருந்தை மீண்டும் அத்தடத்திலேயே இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம். எனில், எப்போது?

2010 நவம்பர் 12]

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அவினாசி புதிய பேருந்து நிலையத்திலிருந்து பல்லடம் வரை 3 கழகப் பேருந்துகள்மூலம் 28 நடைகள் எவ்வித நிறுத்தமுமின்றி அத்தடத்திலேயே தொடர்ந்து இயக்கப்பட்டு வருகின்றன.

39—

சொகுசுப் பேருந்து

வினா எண் 115458—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையிலிருந்து எர்ணாகுளத்திற்கு சொகுசுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம். எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரையிலிருந்து-எர்ணாகுளத்திற்கு செல்லும் நேரடிப் பயணிகளின் அடர்வு அதிகரிக்கும்போது, மானாமதுரை-எர்ணாகுளம் தடத்தில் சொகுசுப் பேருந்து இயக்குவது குறித்துப் பரிசீலித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மானாமதுரையிலிருந்து எர்ணாகுளம் செல்லும் பயணிகள் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட் மூலமாக இயக்கப்படும் புறநகர்ப் பேருந்து வசதியைப் பயன்படுத்தி மதுரை வந்து, அங்கிருந்து இயக்கப்படும் அரசு விரைவுப் பேருந்து (தடம் எண் 726 மதுரை-எர்ணாகுளம்) வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ளப் போதுமானதாக உள்ளது.

40—

சொகுசுப் பேருந்து

வினா எண் 115493—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2010 நவம்பர் 12

(அ) மானாமதுரையிலிருந்து மைசூருக்கு சொகுசுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரையிலிருந்து மைசூருக்கு செல்லும் பயணிகள் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட் மூலமாக இயக்கப்படும் புறநகர்ப் பேருந்து வசதியைப் பயன்படுத்தி மதுரை வந்து, அங்கிருந்தும் மற்றும் அதன் வழியாக பெங்களூருக்கு இயக்கப்படும் அரசு விரைவுப் பேருந்து வசதிகளைப் பயன்படுத்தி பெங்களூரு சென்று, அங்கிருந்தும் அதன் வழியாகவும் மைசூருக்கு இயக்கப்படும் கர்நாடக மாநில போக்குவரத்துக் கழகப் பேருந்து மற்றும் அரசு விரைவுப் பேருந்துகளைப் பயன்படுத்திக் கொள்ள ஏதுவாக உள்ளது. மானாமதுரையிலிருந்து-மைசூருக்கு செல்லும் நேரடிப் பயணிகளின் அடர்வு அதிகரிக்கும்போது, மானாமதுரை-மைசூர் தடத்தில் சொகுசுப் பேருந்து இயக்குவது குறித்துப் பரிசீலித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

41—

பேருந்து வசதி

வினா எண் 115854—திரு. ஓ.கே. சின்னராஜ்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மேட்டுப்பாளையம் தொகுதி, காளம்பாளையம் ஊராட்சி, காளம்பாளையம் முதல் பிளிச்சிகவுண்டனூர் வரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பிளிச்சிகவுண்டனூர் முதல் காளம்பாளையம் வரையிலான சுமார் 3.0 கி.மீ. தூரத்தில், ஏற்கெனவே தாயனூர்

2010 நவம்பர் 12]

ஆரம்பப் பள்ளி முதல் காளம்பாளையம் வரையிலுள்ள சுமார் 2.0 கி.மீ. தூரத்திற்குப் பேருந்து வசதியுள்ளது. மீதமுள்ள சுமார் 1.0 கி.மீ. தூரத்திலுள்ள பிளிச்சிகவுண்டனூர் முதல் தாயனூர் ஆரம்பப் பள்ளி வரையில் ஒரு சில தோட்ட வீடுகள் மட்டுமே அமைந்துள்ளன. எனவே அரசு ஆணையின்படி பேருந்து இயங்கும் பகுதியிலிருந்து 1.0 கி.மீ. வரையுள்ள பகுதிகள் யாவும் பேருந்து வசதி பெற்ற பகுதியாகவே கருதப்படும் என்பதால், மேற்காணும் பகுதிகளுக்கிடையே பேருந்து வசதியளித்திட சாத்தியக்கூறுகள் இல்லை.

42—

புதிய பேருந்து

வினா எண் 115855—திரு. ஒ.கே. சின்னராஜ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் தொகுதி, தோலம்பாளையம் ஊராட்சி, நீலம்பதி முதல் ஊக்கையனூர் வரை புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேட்டுப்பாளையத்திலிருந்து காரமடை, தோலம்பாளையம் வழியாக நீலம்பதி வரை பேருந்து ஒன்று தினசரி 4 நடைகள் இயக்கப்பட்டு வருகிறது. ஊக்கையனூர் கிராமத்தில் சுமார் 20 குடியிருப்புகளே உள்ளன. எனவே, பயணிகள் அடர்வில்லாத ஊக்கையனூர் பகுதிக்குப் பேருந்து வசதியளித்திட சாத்தியக்கூறுகள் இல்லை.

43—

புதிய கூடுதல் பேருந்து

வினா எண் 116935—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2010 நவம்பர் 12

(அ) சென்னிமலையிலிருந்து கூத்தம்பாளையம் எல்லக்காடு, சிறுக்களஞ்சி வழியாக ஊத்துக்குளிக்கு புதிய கூடுதல் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோரிக்கைத் தடத்தின் வழியாக தடம் எண் சி9 நகரப் பேருந்து 4 தனி நடைகள் இயக்கப்படுகிறது. இதில் போதிய பயணிகள் அடர்வு இல்லை என்பதால் கோரிக்கைப்படி தற்சமயம் கூடுதலாக இயக்க இயலாத நிலை உள்ளது.

44—

பேருந்து வசதி

வினா எண் 116936—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) K 13 காங்கேயம் நகரப் பேருந்தை புங்கன்துறை வழியாக பள்ளி நேரத்தில் காலை/மாலை இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தடம் எண் K 13 நகரப் பேருந்து குறுகிய கால இடைவெளியில் பலமுனை வழித்தடங்களில் இயங்குவது. 6 தனி நடைகள் புங்கன்துறை வழியாக இயக்கப்படுகின்றன. பள்ளி நேரத்திற்கு காங்கேயம்-தாயம்பாளையம் வழித்தடத்தில் இயங்குவதால் வழித்தடம் மாற்றி இயக்கப்பட்டால், தற்பொழுது பயன்பெறும் அப்பகுதி பள்ளிக் குழந்தைகள் பாதிப்படைய நேரிடும். எனவே, கோரிக்கைப்படி இயக்க இயலாத நிலை உள்ளது.

45—

பேருந்து வசதி

வினா எண் 116937—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2010 நவம்பர் 12]

(அ) காங்கேயம் நகரப் பேருந்துகள் K16 மற்றும் C5-யை உத்தாம்பாளையம் கிராமத்திற்கு காலை 8.00 மற்றும் 10.30 மணிக்கு கூடுதலாக இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நகரப் பேருந்து தடம் எண் K16-15 பேருந்து குறுகிய கால இடைவெளியில் பலமுனை வழித்தடங்களில் இயங்குவது. 4 தனி நடைகள் உத்தாம்பாளையம் வழியாக காங்கேயம்—நத்தக்காடையூர் இயங்குவது கோரிக்கைப்படி இயக்கப்பட்டால், தற்பொழுது பயன்பெறும் பகுதியினர் பாதிப்படைய நேரிடும். எனவே, கோரிக்கைப்படி இயக்க இயலாத நிலை உள்ளது.

46—

கிராம சுகாதார நிலையம்

வினா எண் 45336—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், அல்லி நகரத்தில் கிராம சுகாதார நிலையத்தைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம் சார்ந்த அல்லி நகரத்தில் உள்ள துணை சுகாதார நிலையம் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது.

[2010 நவம்பர் 12

47—

புதிய கட்டடம்

வினா எண் 46707—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் வட்டம், தேசிமுகிப்பேட்டை மற்றும் லட்டூர் கிராமங்களிலுள்ள துணை சுகாதார நிலையங்களுக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சைதாப்பேட்டை சுகாதார பகுதி மாவட்டம், நெரும்பூர் ஆரம்ப சுகாதார நிலையத்தின்கீழ் தேசிமுகிப்பேட்டை துணை சுகாதார நிலையமும் லட்டூர் துணை சுகாதார நிலையமும் செயல்படுகின்றன. தேசிமுகிப்பேட்டை மற்றும் லட்டூர் துணை சுகாதார நிலையங்களுக்கு இதுவரை நிலம் கிடைக்கப் பெறவில்லை. இந்நிலையில் தேசிமுகிப்பேட்டை மற்றும் லட்டூர் துணை சுகாதார நிலையங்களுக்குக் கட்டடம் கட்ட தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

48—

துணை சுகாதார நிலையம்

வினா எண் 60810—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், ஆர்.எஸ். மங்கலம் ஒன்றியம், வரவணி ஊராட்சியில் துணை சுகாதார நிலையத்தைச் செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 நவம்பர் 12]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டம், ஆர்.எஸ். மங்கலம் ஒன்றியம் சார்ந்த வரவாணி ஊராட்சியின் மக்கள்தொகை 2,216 மட்டுமே. எனவே, அரசு விதிமுறைப்படி வரவாணி ஊராட்சியில் துணை சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

49—

தரம் உயர்த்துதல்

வினா எண் 62720—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், பார்த்திபனூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை 24 மணி நேரமும் இயங்கும் மருத்துவமனையாகத் தரம் உயர்த்தவும், 50 படுக்கை வசதி கொண்ட கூடுதல் கட்டடம் கட்டவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி ஊராட்சி ஒன்றியத்தில் பார்த்திபனூர் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. இங்கு, 24 மணி நேர பிரசவ கவனிப்பு சேவை அறிமுகப்படுத்தப்பட்டு, 3 செவிலியர்கள் நியமிக்கப்பட்டு, சுழற்சி முறையில் பணியாற்றுகின்றனர். தரம் உயர்த்த நிதி ஒதுக்கீடு எதுவும் இல்லாததால், பார்த்திபனூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கை கொண்டதாகத் தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

[2010 நவம்பர் 12

50—

நவினப்படுத்துதல்

வினா எண் 76469—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, முத்தனேந்தல் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை நவீனப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை ஊராட்சி ஒன்றியத்தில் முத்தனேந்தல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் 30 படுக்கை வசதியுடன் கூடிய கட்டடம் கட்டப்பட்டுள்ளது. இங்கு அறுவை அரங்கு, இ.சி.ஜி., எக்ஸ்-ரே, ஸ்கேன் மற்றும் செமி ஆட்டோ அனலைசர் போன்ற நவீன உபகரணங்கள் வழங்கப்பட்டு சிறப்புறச் செயல்படுகிறது. ஆய்வுக் கூடக் கட்டடம் ரூ.3 இலட்சம் மதிப்பீட்டில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியின்கீழ் கட்டப்பட்டுள்ளது. மேலும் நவீனப்படுத்த படிப்படியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

51—

குடியிருப்புக் கட்டடம்

வினா எண் 90882—டாக்டர் க. நெடுஞ்செழியன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, ஜேடர்பாளையம் மற்றும் வெங்கரை ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவர்கள் மற்றும் பணியாளர்களுக்கு குடியிருப்புக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

2010 நவம்பர் 12]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை ஊராட்சி ஒன்றியத்தில் ஜேடர்பாளையம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம், வெங்கரை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் ஆகியவை செயல்பட்டு வருகின்றன. ஜேடர்பாளையம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தில், மருத்துவ அலுவலர் குடியிருப்பு உள்ளது. வெங்கரை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவ அலுவலர் குடியிருப்பு வசதி இல்லை. தற்போது மருத்துவ அலுவலர் குடியிருப்புக் கட்ட நிதி ஒதுக்கீடு எதுவும் இல்லாததால், வெங்கரை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மருத்துவ அலுவலர் குடியிருப்புக் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

52—

தரம் உயர்த்துதல்

வினா எண் 93180—திரு. ஆ. தமிழரசு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், அயோத்தியாபட்டணம் ஊராட்சி ஒன்றியம், காரிப்பட்டி, சின்ன வீராணம் துணை சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், சின்ன வீராணம் கிராமம், அயோத்தியாப்பட்டணம் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றிய மக்கள்தொகை 1,37,272 (2001 கணக்கெடுப்பு) ஆகும். இவ்வூராட்சி ஒன்றியத்தில் 5 ஆரம்ப சுகாதார நிலையங்கள்

[2010 நவம்பர் 12

செயல்படுகின்றன. மத்திய அரசின் இலக்கின்படி 30,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையில் அயோத்தியாபட்டணம் ஊராட்சி ஒன்றியத்திற்கு தற்போதுள்ள 5 ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதாலும், சின்ன வீராணம் துணை சுகாதார நிலையத்திற்கும் வலசையூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் 3 கிலோ மீட்டர் மட்டுமே உள்ளதாலும், சின்ன வீராணம் துணை சுகாதார நிலையத்தினை ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த சாத்தியக் கூறுகள் இல்லை.

53—

துணை சுகாதார நிலையம்

வினா எண் 104638—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, எடையப்பட்டி ஊராட்சி, எடையப்பட்டியில் துணை சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் சமவெளிப் பகுதிகளில் 5,000 மக்கள்தொகைக்கு ஒரு துணை சுகாதார நிலையம் மற்றும் மலைப்பகுதிகளில் 3,000 மக்கள்தொகைக்கு ஒரு துணை சுகாதார நிலையம் என்ற விகிதத்தில், மத்திய அரசின் நிதியுதவியுடன் இதுவரை தமிழகத்தில் 8,706 துணை சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. புதிய துணை சுகாதார நிலையங்கள் அமைப்பதற்கான நிதியுதவி கோரிய கருத்துரு மத்திய அரசால் நிராகரிக்கப்பட்டுள்ளது. எனவே, தற்சமயம் தாரமங்கலம் தொகுதி, எடையப்பட்டி ஊராட்சியைச் சார்ந்த எடையப்பட்டியில் துணை சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை.

2010 நவம்பர் 12]

54—

தரம் உயர்த்துதல்

வினா எண் 108305—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, உப்பிடமங்கலம் பேரூராட்சி ஆரம்ப சுகாதர நிலையத்தை முப்பது படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கரூர் மாவட்டம், தாந்தோணி ஊராட்சி ஒன்றியத்தில் உப்பிடமங்கலம் பிரதான ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு பிரசவ பின்கவனிப்பு அறை கட்ட மற்றும் அறுவை அரங்கு பழுதுபார்ப்புப் பணிகளுக்கு 2009-2010 ஆம் நிதியாண்டில் ரூ. 10 இலட்சம் நிதி ஒதுக்கீடு தேசிய ஊரக நலத் திட்ட உதவியின்கீழ் வழங்கப்பட்டுள்ளது. பணிகள் பொதுப் பணித் துறைமூலம் நடைபெற உள்ளன. மேலும், 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்த தற்போது நிதி ஒதுக்கீடு எதுவும் இல்லை. எனவே, உப்பிடமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்த சாத்தியக் கூறுகள் இல்லை.

55—

துணை சுகாதார நிலையம்

வினா எண் 108380—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் தொகுதி, தின்னப்பட்டி ஊராட்சி, சேத்துக்குழி, காவேரிபுரம் ஊராட்சி, கத்திரிப்பட்டி மற்றும் சின்ன சோரகை, வீரக்கல் ஆகிய பகுதிகளில் துணை சுகாதார நிலையங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2010 நவம்பர் 12

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் சமவெளிப் பகுதிகளில் 5,000 மக்கள்தொகைக்கு ஒரு துணை சுகாதார நிலையம் மற்றும் மலைப்பகுதியில் 3,000 மக்கள்தொகைக்கு ஒரு துணை சுகாதார நிலையம் என்ற விகிதத்தில் துணை சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. தமிழகத்தில் மத்திய அரசின் நிதியுதவி மற்றும் வழிகாட்டுதலின்படி, இதுகாறும் 8,706 துணை சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. புதிய துணை சுகாதார நிலையங்களுக்கான நிதி ஒதுக்கீடு கோரிய கருத்துரு மத்திய அரசால் நிராகரிக்கப்பட்டுள்ளது. எனவே, மேட்டூர் தொகுதியைச் சார்ந்த தின்னப்பட்டி ஊராட்சி, காவேரிபுரம் ஊராட்சி, சேத்துக்குழி, கத்திரிப்பட்டி மற்றும் சின்ன சோரகை, வீரக்கல் ஆகிய பகுதிகளில் துணை சுகாதார நிலையங்கள் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை.

56—

மருத்துவ சேவை மையம்

வினா எண் 108949—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம் பெரிய கல்வராயன்மலைப் பகுதியில் சுகாதார மருத்துவ சேவை மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தமிழகத்தில் மத்திய அரசின் நிதியுதவி மற்றும் வழிகாட்டுதலின்படி, ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. தற்சமயம் புதியதாக ஆரம்பிக்கப்படவிருக்கும் 116 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கான நிதியுதவி மட்டுமே மத்திய அரசால் வழங்கப்பட்டுள்ளது. புதிய துணை சுகாதார நிலையங்களுக்கான நிதி ஒதுக்கீடு கோரிய கருத்துரு மத்திய அரசால் நிராகரிக்கப்பட்டுள்ளதால், தற்சமயம் புதிய துணை சுகாதார நிலையங்கள் எதுவும் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2010 நவம்பர் 12]
57—

தைலம் தயாரிக்கும் தொழிற்சாலை

வினா எண் 75545—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் யூகலிப்டஸ் மரத்திலிருந்து தைலம் தயாரிக்கும் தொழில் துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டத்தில் சுமார் 923 ஹெக்டேர் பரப்பளவில் யூகலிப்டஸ் மரங்கள் பயிரிடப்படுகின்றன. குறிப்பாக மானாமதுரை வட்டத்தில் மட்டும் 26 ஹெக்டேர் பரப்பளவில் யூகலிப்டஸ் மரங்கள் பயிரிடப்படுகின்றன. சராசரியாக ஒரு ஹெக்டேருக்கு 2000 மரங்கள் வீதம் பயிரிடலாம். சிவகங்கை மாவட்டத்தில் டெர்டிஸ் கார்னிஸ் (Tertis Cornis) மற்றும் கமால் டிலனிசிஸ் (Camal Telanicis) போன்ற வகைகளைச் சேர்ந்த யூகலிப்டஸ் மரங்கள் மட்டுமே வளர்க்கப்படுகின்றன. இவ்வகை மரங்கள்மூலம் 10 சதவிகிதம் மட்டுமே யூகலிப்டஸ் ஆயில் தயாரிக்க முடியும். குளிர்ப் பிரேதசங்களில் பயிரிடப்படும் புளூ கம் (Blue Gum) வகை யூகலிப்டஸ் மரத்தின் இலைகள் மட்டுமே யூகலிப்டஸ் ஆயில் தயாரிப்புக்கு ஏற்றதாக உள்ளன. இவ்வகை மரங்கள் நீலகிரி போன்ற குளிர்ப்பிரதேசங்களில் மட்டுமே அதிகம் பயிரிடப்படுகின்றன. எனவே, சிவகங்கை மாவட்டத்தில் வளர்க்கப்படும் யூகலிப்டஸ் மரத்தின் இலைகள் யூகலிப்டஸ் தைலம் தயாரிப்புக்கு ஏற்றதாக இல்லாத காரணத்தால், இம்மாவட்டத்தில், குறிப்பாக மானாமதுரை பகுதியில் யூகலிப்டஸ் மரத்திலிருந்து தைலம் தயாரிக்கும் தொழிற்சாலைகள் அரசு சார்பில் துவங்க சாத்தியக் கூறுகள் இல்லை.

[2010 நவம்பர் 12

58—

கறவை மாட்டுப் பண்ணை

வினா எண் 87234—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, கலியாந்தூர் நயினார்பேட்டை ஊராட்சி, நயினார்பேட்டையில் கறவை மாட்டுப் பண்ணை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை அமைந்துள்ள சிவகங்கை மாவட்டத்தில் செட்டிநாடு கால்நடைப் பண்ணை இயங்கி வருகிறது. இப்பண்ணையில் மாடு, ஆடு மற்றும் கோழிகள் வைத்து பராமரிக்கப்பட்டு, அங்குள்ள கால்நடை வளர்ப்போருக்கு மாதிரிப் பண்ணையாகச் செயல்பட்டு வருகிறது. மேலும், தற்போது மாநிலத்தில் 10 அரசுப் பண்ணைகள் மாதிரிப் பண்ணைகளாக இயங்கி வருகின்றன. இப்பண்ணைகள் மூலமாக கால்நடைப் பராமரிப்பு, மேலாண்மை தீவனப் பயிர் வளர்ப்பு போன்றவற்றில் மக்கள் விழிப்புணர்வு பெறுகின்றனர். தற்போது செயல்பட்டுவரும் அரசுப் பண்ணைகளே மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யப் போதுமானவையாக உள்ளன. எனவே, அதே மாவட்டத்தில் உள்ள மானாமதுரை தொகுதி, கலியாந்தூர் நயினார்பேட்டை ஊராட்சி, நயினார்பேட்டையில் மற்றொரு மாவட்ட கால்நடைப் பண்ணை அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

59—

புதிய தொழிற்பேட்டை

வினா எண் 92509—திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2010 நவம்பர் 12]

(அ) ஆலங்குடி தொகுதி, கறம்பக்குடியில் புதிய தொழிற்பேட்டை அரசின் சார்பில் அமைத்துக் கொடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆலங்குடி தொகுதி, கறம்பக்குடியில் புதிய தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

போதுமான நிதி ஆதாரங்களுடனும் தொழிற் திட்டங்களுடனும் தொழில் துவங்க ஆர்வமுள்ள 20-க்கும் குறையாத தொழில் முனைவோர் திருப்பித் தரப்படாத ஒப்பளிப்புத் தொகையுடன் (Commitment Charges) முன்வந்தால் புதிதாக தொழிற்பேட்டை அமைப்பதற்கான நிலம், தொழில் முனைவோர் தேவை ஆகியவற்றின் அடிப்படையில் மாவட்ட ஆட்சியர், பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம் மற்றும் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்துடன் கலந்தாய்வு செய்து தொழிற்பேட்டை அமைப்பதற்கான மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

60—

மாட்டுப் பண்ணை அமைத்தல்

வினா எண் 95375—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை மற்றும் திருப்புவனம் பகுதியில் மாட்டுப் பண்ணை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டத்தில் ஏற்கெனவே செட்டிநாடு மாவட்ட கால்நடை பண்ணை இயங்கி வருவதாலும், அப்பண்ணையில் மாடு, ஆடு மற்றும் கோழிகள்

பராமரிக்கப்படுவதாலும், அதே மாவட்டத்தில் உள்ள மானாமதுரை மற்றும் திருப்புவனம் பகுதியில் மாட்டுப் பண்ணை அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

61—

கயிறு தொழிற்சாலை

வினா எண் 103571—திருமதி பெ. கமலாம்பள்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் தொகுதியில் கயிறு தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* காஞ்சிபுரம் மாவட்டத்தில் மாவட்ட தொழில் மையத்தின்கீழ் இயங்கும் தொழில் கூட்டுறவுச் சங்கத்தின் வாயிலாக சதுரங்கப்பட்டினம் கயிறு தொழில் கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினர்கள் மூலமாகக் கயிறு திரிக்கும் தொழில் நடந்து வருகிறது. தற்போது அச்சங்கத்திற்குத் தேவையான மூலப்பொருளான தேங்காய் நார் கிடைப்பது மிகவும் அரிதாகி, பிற மாவட்டங்களான தஞ்சாவூர், கன்னியாகுமரி போன்ற இடங்களில் இருந்து தருவிக்கப்படுகிறது. இதன் காரணமாக கயிறு தொழிற்சாலையின் பிற செலவுகள் அதிகரித்து உற்பத்தி விலை சந்தை விலையைக் காட்டிலும் அதிகமாக உள்ளது. எனவே காஞ்சிபுரம் மாவட்டத்தில் கயிறு தொழிற்சாலை அமைப்பது என்பது இலாபகரமானதாக இல்லாததால் தொழிற்சாலை அமைய சாத்தியக் கூறுகள் ஏதும் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

62—

தொழிற்பேட்டை

வினா எண் 103658—திரு. போ. சின்னப்பன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2010 நவம்பர் 12]

(அ) தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் தொகுதியில் தொழிற்பேட்டை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் தொகுதியில் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் தற்போது அரசிடம் இல்லை, இருப்பினும் குறைந்தபட்சம் 20 தொழில் முனைவோர்கள், ஏற்புக் கட்டணம் (Commitment Charges) செலுத்த முன்வந்தால் இது குறித்து பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் மற்றும் அம்மாவட்டத்தைச் சேர்ந்த தொழில் முனைவோர் சங்கம் ஆகியோருடன் சிட்கோ கலந்து ஆலோசித்து தொழிற்பேட்டை அமைப்பது குறித்து முடிவெடுக்கப்படும்.

63—

சுற்றுச்சுவர்

வினா எண் 104249—திரு. செ.ம. வேலுசாமி: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சூலூர், செங்கத்துரர், சோமனூர், வாகராயன்பாளையம் ஆகிய இடங்களிலுள்ள கால்நடை மருத்துவமனைகளுக்கு சுற்றுச்சுவர் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) சூலூர் கால்நடை மருத்துவமனைக்கு சுற்றுச்சுவர் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு பெறப்பட்டவுடன் சுற்றுச்சுவர் அமைக்கப்படும். செங்கத்துரர் கால்நடை மருந்தகக் கட்டடம் கட்ட

[2010 நவம்பர் 12

25 சென்ட் நிலம் தேர்வு செய்யப்பட்டு, தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. நில மாற்றம் மற்றும் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டவுடன் சுற்றுச்சுவர் அமைக்கப்படும். வாகராயன்பாளையம் கால்நடை மருந்தகத்திற்கு எல்லை குறிக்கப்பட்டு மதிப்பீடு அறிக்கை மற்றும் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டவுடன் சுற்றுச்சுவர் அமைக்கப்படும். சோமனூரில் கால்நடைக் கிளை நிலையம் ஏதும் இல்லை.

(ஆ) நில மாற்றம், நிதி ஒதுக்கீடு பெறப்பட்டவுடன் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

64—

புதிய கட்டடம்

வினா எண் 104979—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, முத்துநாயக்கன்பட்டி ஊராட்சி, முத்துநாயக்கன்பட்டி கால்நடை மருத்துவமனைக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) தாரமங்கலம் தொகுதி, முத்துநாயக்கன்பட்டி ஊராட்சியிலுள்ள முத்துநாயக்கன்பட்டியில் தரம் உயர்த்தப்பட்ட கால்நடைக் கிளை நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட 2-10-2009 அன்று இக்கிராமத்தில் நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில் 10 சென்ட் நிலம் ஒதுக்கி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. நபார்டு திட்டத்திலோ அல்லது வேறு திட்டத்திலோ நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட பின்னர் புதிய கட்டடம் கட்டப்படும்.

(ஆ) நிதி ஒதுக்கீடு பெறப்பட்ட பின்பு புதிய கட்டடம் கட்டப்படும்.

2010 நவம்பர் 12]

65—

வர்த்தக மையம்

வினா எண் 108032—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு பகுதியில் சிட்கோ தொழிற்பேட்டையில் சிறுதொழில் சங்கத்தினர் வர்த்தக மையம் அமைக்க, ஒரு ஏக்கர் நிலம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

ஈரோடு மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 9.97 ஏக்கர் நிலத்தில் 0.97 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்ட காலத்திலிருந்தே (28-7-1978 முதல்) பயன்படுத்தப்படாமல் இருந்தது.

அதனைத் தொடர்ந்து 0.97 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டதை சிட்கோ ரத்து செய்து 1-6-2009 அன்று ஆணையிட்டதன் தொடர்ச்சியாக தமிழ்நாடு பொது இடங்கள் ஆக்கிரமிப்புச் சட்டம், 1975-ன்கீழ் 22-12-2009 அன்று சிட்கோ கிளை மேலாளர், ஈரோடு அவர்களால் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. தற்போது இந்த நிலம், சிட்கோவிடம் உள்ளது.

மேலும் அரசு விதிமுறைகளின்படி சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து மேற்கண்ட இடத்தில் ஈரோடு மாவட்ட சிறு மற்றும் குறுந்தொழில் சங்கத்திற்குத் தேவையான இடம் ஒதுக்கீடு வழங்க சிட்கோ குழுமம் ஒப்புதல் வழங்கிய பின் நிலம் வழங்குவது பற்றி அரசு நடவடிக்கை எடுக்கும்.

66—

கால்நடை பாதுகாப்பு முகாம்

வினா எண் 117152—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2010 நவம்பர் 12

(அ) சிவகங்கை மாவட்டத்தில் கால்நடைகள் பாதுகாப்பு சிறப்பு முகாம்கள் நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) 2009-2010 ஆம் ஆண்டிற்கு, தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்ட ஊராட்சி ஒன்றியங்களிலும் (385 ஊராட்சி ஒன்றியங்கள்) 5,550 கால்நடை பாதுகாப்புத் திட்ட முகாம்கள் நடத்திட அரசாணை வெளியிடப்பட்டு, அதன்படி அனைத்து மாவட்டங்களிலும் கால்நடை பாதுகாப்புத் திட்ட முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. சிவகங்கை மாவட்டத்திற்கு 168 முகாம்கள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, அனைத்து முகாம்களும் நடத்தி முடிக்கப்பட்டன. மேலும், இம்முகாம்களில் 1,92,288 கால்நடைகளும், 33,159 பயனீட்டாளர்களும் பயன் அடைந்துள்ளனர்.

(ஆ) கேள்வி எழாது.

67—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 57043—திரு. அருள் அன்பரசு: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோளிங்கர் தொகுதி, சோளிங்கர் ஒன்றியம், பில்லாஞ்சி கிராமத்தில் குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், வாலாசா வட்டம், சோளிங்கர் ஒன்றியம், பில்லாஞ்சி கிராமத்தில் புல எண் 1143

2010 நவம்பர் 12]

குளம் புறம்போக்காகவும், 1131 மற்றும் 1128 ஓடைப் புறம்போக்கு என நீர்நிலைப் புறம்போக்காக உள்ளது. நீர்நிலைப் புறம்போக்கு நிலம் வீட்டுமனைப் பட்டா வழங்க அரசினால் தடை செய்யப்பட்ட புறம்போக்காகும். மேலும் நீர்நிலைப் புறம்போக்குகளில் ஒப்படை வழங்க நீதிமன்றம் தடையாணை பிறப்பித்துள்ளது. எனவே, இந்நிலங்களில் வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

68—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 57045—திரு. அருள் அன்பரசு: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோளிங்கர் தொகுதி, காவேரிப்பாக்கம் ஒன்றியம், சித்தாம்பட்டி காலனியில் குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம். எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், அரக்கோணம் வட்டம், சித்தாம்பட்டி கிராம மதுரா தோப்பு காலனி புல எண் 154/4C மந்தைவெளிப் புறம்போக்கில் 13 நபர்கள் வீடுகள் கட்டி ஆக்ரமணம் செய்துள்ளனர். இவ்விடம் மந்தைவெளிப் புறம்போக்கு என்பதால் கால்நடை பராமரிப்புத் துறையின் அனுமதி பெற்று பட்டா வழங்க அரக்கோணம் வட்டாட்சியரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

69—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 57046—திரு. அருள் அன்பரசு: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோளிங்கர் தொகுதி, சோளிங்கர் ஒன்றியம், கல்பட்டு கிராமத்தில் குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், வாலாசா வட்டம், கல்பட்டு கிராமத்தில் சர்வே எண் 69-இல் உள்ள களம் மற்றும் பாட்டை புறம்போக்கில் ஆக்ரமணம் செய்து வீடு கட்டிக் குடியிருந்து வரும் 12 நபர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க வாலாசா வட்டாட்சியரால் பிரேரணை தயார் செய்யப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

70—

இலவச வீட்டுமனைப் பட்டா

வினா எண் 60234—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, கண்ணம்நாயக்கனூர் ஊராட்சி, ஜோதிபாளையம் கிராமத்தில் ஜெ.ஜெ. நகர் பகுதியில் குடியிருப்பவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், கண்ணமநாயக்கனூர் கிராமம், 4.98 ஏக்கர் நிலம் ஆதி திராவிடர் வீட்டுமனைக்காக நில எடுப்பு செய்யப்பட்டு

2010 நவம்பர் 12]

103 மனையிடங்களாகப் பிரிக்கப்பட்டு, 93 நபர்களுக்கு தலா 0.03 ஏக்கர் வீதம் 2003 ஆம் ஆண்டில் வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. அவற்றுள் குடியிருந்து வரும் 11 மனையிடங்கள் போக எஞ்சிய எவரும் குடியிருக்காத 82 மனையிடங்களில் வீட்டுமனைப் பட்டாக்களை இரத்து செய்து தகுதியான வேறு நபர்களுக்கு பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

71—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 60329—திரு. ஆர். சின்னசாமி: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிங்காநல்லூர் தொகுதி, விளாங்குறிச்சி ஊராட்சி, அம்பேத்கர் நகரில் குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், விளாங்குறிச்சி கிராமம், அம்பேத்கர் நகர் மக்களுக்கு ஏற்கெனவே ஆதி திராவிட நலத் துறையின்மூலம் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. மேலும் புல எண் 344-இல் ஆதி திராவிட நலத் துறையின்மூலம் நில எடுப்புச் செய்யப்பட்ட பகுதியில் தகுதி மற்றும் முன்னுரிமை அடிப்படையில் வீட்டுமனைப் பட்டா வழங்க ஆதி திராவிட நலத் துறையின்மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

72—

புதிய கட்டடம்

வினா எண் 86555—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2010 நவம்பர் 12

(அ) தருமபுரி மாவட்ட வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

(அ) ஏற்கெனவே உள்ள கட்டடம் போதுமானதாகவும் நல்ல நிலையிலும் உள்ளது. எனவே, தருமபுரி வருவாய்க் கோட்ட அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் தற்பொழுது எழவில்லை.

(ஆ) வினா எழவில்லை.

73—

வீடு கட்டித் தரும் திட்டம்

வினா எண் 92857—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு தையற்கலைத் தொழிலகத்தில் நலிந்த தையற் கலைஞர்களுக்கு வீட்டு வசதி வாரியத்தின்மூலம் தவணை முறையில் வீடு கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

தமிழ்நாடு தையற்கலைத் தொழிலகத்தில் உள்ள நலிந்த தையற்கலைஞர்களுக்கு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின்மூலம் தவணை முறையில் வீடு கட்டித் தரும் திட்டம் எதுவும் தற்போது இல்லை.

2010 நவம்பர் 12]

74—

புதிய தாலுகா

வினா எண் 105845—திரு. வை. காவேரி: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேச்சேரி, தாரமங்கலம்-சின்னப்பட்டி பகுதியை உள்ளடக்கிய புதிய தாலுகா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

அரசாணை (நிலை) எண் 279, வருவாய்த் துறை, நாள் 9-6-2003இல் தெரிவிக்கப்பட்டுள்ள அளவுகோலின் அடிப்படையில் பரப்பளவு மற்றும் கிராமங்களின் எண்ணிக்கை நிர்ணயிக்கப்பட்ட அளவைவிடக் குறைவாக உள்ளதால் மேச்சேரி, தாரமங்கலம், சின்னப்பட்டி முதலிய பகுதியை உள்ளடக்கிய புதிய தாலுகா அமைக்க இயலாது.

75—

தாலுகா

வினா எண் 110248—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சின்னசேலம் ஊராட்சி ஒன்றியத்தைத் தாலுகாவாக அறிவிக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

அரசாணை (நிலை) எண் 1132, பொதுத் (சட்ட அலுவலர்கள்) துறை, நாள் 11-11-2009-ன்படி, 2011 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்புப் பணி மேற்கொள்ளப்படுவதை முன்னிட்டு மாவட்டம், வட்டம், கிராமம், காவல் நிலையம், நகராட்சி,

ஊராட்சி ஒன்றியம் போன்ற நிருவாக அலகுகளைப் புதிதாகத் தோற்றுவிப்பதற்கு *1-1-2010* முதல் *31-3-2011* வரை தடையாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதால் இக்கோரிக்கையைத் தற்போது ஏற்க இயலாது.

76—

புத்தகம்

வினா எண் 120159—திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சட்டப் பேரவை உறுப்பினர்களின் பணிகள் குறித்து, தொகுதி மக்களுக்கு செய்தித் துறைமூலம் புத்தகமாக அச்சடித்து இலவசமாக வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:

ஏற்கெனவே, அரசு சார்பில் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆற்றிய பணிகள் குறித்து தமிழரசு புத்தக வெளியீடு, அரசு செய்திக் குறிப்பு வெளியீடு மற்றும் நாளிதழ்கள்மூலம் அவ்வப்போது வெளியிடப்பட்டு வருவதால் இப்பணிகளைப் புத்தகமாக அச்சடித்து தொகுதி மக்களுக்கு கொடுப்பதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

77—

அரசு விளம்பரங்கள்

வினா எண் 120161—திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசின் துறை சார்ந்த விளம்பரங்களை அனைத்து நாளிதழ்களுக்கும் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 நவம்பர் 12]

விடை—

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசின் அனைத்துத் துறைகள் மற்றும் அரசு சார் நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் ஒப்பந்தப்புள்ளி, வரைகலை மற்றும் நிலம் கையகப்படுத்துதல் ஆகிய விளம்பரங்கள் மையப்படுத்தப்பட்டு விளம்பரத்தின் தன்மை, அவை சென்றடைய வேண்டிய மக்கள், நாளிதழின் தரம், விற்பனைப் பிரதிகளின் எண்ணிக்கை, அவற்றின் விநியோகம், தேவையான பதிப்புகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு நாளிதழ்கள் தேர்வு செய்யப்பட்டு விளம்பரங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. தற்போது அரசின் அங்கீகாரப் பட்டியலில் இடம் பெற்றுள்ள பெரும்பான்மையான நாளிதழ்களுக்கு அரசு விளம்பரங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

78—

மண்ணெண்ணெய் பங்க்

வினா எண் 110308—திரு. என். நன்மாறன்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை காமராஜபுரம் பகுதியில் மண்ணெண்ணெய் விநியோகம் செய்ய உரிமம் பெற்ற நிறுவனம் பணியைத் துவக்கிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

மதுரை காமராஜபுரம் வார்டு எண் (56 மற்றும் 57)-ல் உள்ள ஜனதா கூட்டுறவு நிறுவனத்திற்கு, மண்ணெண்ணெய் பங்க் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதற்கான கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

79—

தொழிலாளர் நல நீதிமன்றம்

வினா எண் 93415—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு நகரில் தொழிலாளர் நல நீதிமன்றம் துவங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டில் தொழிலாளர் நீதிமன்றம் அமைப்பதற்கான கருத்துரு எதுவும் இல்லை.

80—

ஈட்டுறுதி மருத்துவமனை

வினா எண் 98271—திரு. வை. காவேரி: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பார்ரா—

(அ) எடப்பாடியில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) புதிய இடங்களில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம்/ தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை அமைக்க அப்பகுதியினை ஆய்வு செய்து அளவை அறிக்கையினை (Survey Report) தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம் மாநில அரசுக்கு அளிக்கிறது. தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம் அளித்த

2010 நவம்பர் 12]

அளவை அறிக்கையின் அடிப்படையில் மண்டல நிர்வாக மருத்துவ அலுவலரிடமிருந்து "செய்யத்தக்கமைக்கான அறிக்கை" (Feasibility Report) பெற்ற பின்பு மாநில அரசு அப்பகுதியில் புதிய தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம் துவக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து அளவை அறிக்கை ஏதும் பெறப்படாத நிலையில், தற்போது எடப்பாடியில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை/தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம் ஏற்படுத்தும் நிலை எழவில்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

81—

அடுக்குமாடிக் குடியிருப்புகள்

வினா எண் 103079—திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் பனியன் தொழிலாளர்களுக்கு அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

திருப்பூர் பனியன் தொழிலாளர்களுக்கு அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

82—

கோயில் குளம் சீரமைத்தல்

வினா எண் 102692—திரு. தி.க. ராஜா: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2010 நவம்பர் 12

திருப்பத்தூர் தொகுதி, கோட்டை வரதராஜபெருமாள் கோயில், கோட்டை ஈஸ் வரன் கோயில் ஆகிய கோயில்களின் தேர்களைப் பழுதுபார்க்கவும், குளம் வெட்டி நீர் சேகரிக்கவும் அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் அருள்மிகு கோட்டை பிரம்மேஸ்வரர் திருக்கோயில், கோட்டை கஜேந்திர வரதராஜபெருமாள் திருக்கோயில் ஆகியவை இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களாகும். இத்திருக்கோயில்களின் நிர்வாகம் அறங்காவலர் குழுவால் பார்க்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோயிலில் திருத்தேர்கள் ஏதும் இல்லை. இத்திருக்கோயிலில் சுமார் 30 ஆண்டுகளுக்கு முன் குளம் ஒன்று இருந்தது. போதிய நீர் வரத்து இல்லாததால் நாளடைவில் திருக்குளம் மூடப்பட்டுவிட்டது. தற்சமயம் இவ்விடத்தில் பூச்செடிகள் நடப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. இவ்விடத்தில் மீண்டும் திருக்குளத்தினை ஏற்படுத்திடும் அளவிற்கு திருக்கோயிலில் போதிய நிதி வசதியும் இல்லை. இப்பணியினைச் செய்திட உபயதாரர்கள் எவரும் முன்வரவில்லை. இத்திருக்குளத்தினைச் சீரமைத்திட நகராட்சி நிதியுதவி அல்லது மாவட்ட ஆட்சித் தலைவர் நிதியுதவி வழங்கினால் மட்டுமே திருக்குளத்தினை மீண்டும் சீரமைக்க இயலும்.

TRUTH ALONE TRIUMPHS

83—

திருத்தேர்

வினா எண் 115884—திரு. ராம. சுப்புராம்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் அருள்மிகு சத்தியமூர்த்தி பெருமாள் திருக்கோயிலுக்கு திருத்தேர் செய்ய கூடுதலாக நிதி ஒதுக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 நவம்பர் 12]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை திருக்கோயில்கள் நிர்வாகத்திற்குட்பட்ட திருமயம் நகர், அருள்மிகு சத்தியமூர்த்தி பெருமாள் திருக்கோயிலுக்குச் சொந்தமான திருத்தேரினைப் பழுதுபார்க்க 16-3-2007-ல் ரூ.3.85 இலட்சம் அரசு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டது. பணியினைச் செய்திட ஒப்பந்தப்புள்ளி அழைப்புகள் பலமுறை விடுத்தும் ஒப்பந்ததாரர்கள் யாரும் கலந்துகொள்ளாததால் பணியினைத் துவங்க இயலவில்லை. இந்நிலையில் மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டு 3 ஆண்டுகள் கடந்துள்ளதால் தற்போதைய விலை விகிதத்தின்படி திருத்திய மதிப்பீட்டினை தயாரித்து மேற்கொண்டு தேவைப்படும் நிதியாதாரத்தினை உபயதாரர்கள் மற்றும் பொதுமக்கள் நன்கொடை மூலம் பெற்று திருப்பணி வேலைகளைத் துவங்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

84—

அன்னதானக் கூடம்

வினா எண் 115385—திரு. ராம. சுப்புராம்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், அரிமளம் ஒன்றியம், நெடுங்குடி அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயிலுக்கு அன்னதானக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை திருக்கோயில்கள் நிர்வாகத்திற்குட்பட்ட திருமயம் வட்டம், நெடுங்குடி, அருள்மிகு

கைலாசநாதர் திருக்கோயிலில் 400 நபர்கள் ஒரே நேரத்தில் அமர்ந்து உணவருந்தும் வசதி கொண்ட அன்னதானக் கூடம் தற்போது பயன்பாட்டில் உள்ளது. எனவே, மேற்கொண்டு புதிதாக அன்னதானக் கூடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

85—

வடிகால் குழாய் சீரமைத்தல்

வினா எண் 117386—திரு. எம். பன்னீர்செல்வம்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, திருமயிலாடி, ஸ்ரீ சுந்தரேஸ்வரர்சுவாமி தேவஸ்தானத்திற்குச் சொந்தமான கோயில் திருக்குளத்திலுள்ள வடிகால் குழாயைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், திருமயிலாடி, அருள்மிகு சுந்தரேஸ்வரர்சுவாமி திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலின் நிர்வாகம் நிலை-3 செயல் அலுவலரால் கவனிக்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோயிலின் ஆண்டு வருமானம் ரூ.1,77,432/- ஆகும். இத்திருக்கோயிலின் திருக்குளத்திற்கு வரும் வாய்க்கால் மற்றும் வடிகால் வாய்க்கால் ஆக்கிரமிப்புதாரர்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு தூர்க்கப்பட்டுள்ளது. ஆக்கிரமிப்புதாரர்களை அகற்றும் பணியினை வருவாய்த் துறை அலுவலர்களின் உதவியுடன் செய்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டவுடன் வடிகால் பகுதியினை சீர்படுத்த உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

86—

இரவுக் காவலர்கள்

வினா எண் 113698—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2010 நவம்பர் 12]

தமிழகத்தில் அரசுப் பள்ளிகளில் இரவுக் காவலர்கள் நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

அரசு ஆணை (டி) எண். 37, பள்ளிக் கல்வி (ஆர்.2) துறை, நாள் 08-02-2007-ல் இரவுக் காவலர்களை டெக்ஸ்கோ (Tamil Nadu Ex-Serviceman Corporation) *மூலம் வெளி ஆதாரம்* (Out Sourcing) *முறையில் தேர்ந்தெடுக்க ஆணை வழங்கப்பட்டுள்ளது.*

87—

அடிப்படை வசதிகள்

வினா எண் 55790—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பாறை மலைப் பகுதிகளில் குடியிருக்கும் தாழ்த்தப்பட்ட மலைசாதி மக்கள் குடியிருப்புப் பகுதிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை மலைப் பகுதிகளில் குடியிருக்கும் மலைவாழ் மக்களுக்கு 2009-2010 ஆம் ஆண்டில் மேற்கு மலைத் தொடர்ச்சி அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் ரூ.20,50,000/- செலவில், செட்டில்மென்ட் சாலை அமைப்பு/மேம்பாட்டுப் பணிகள் பாதுகாக்கப்பட்ட குடிநீர் பைப்லைன்கள் அமைத்தல், தடுப்பணைகள் கட்டுவது மற்றும் சாலைகள் மேம்பாடு செய்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் புலிகள் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் ரூ.8,60,000/- செலவில், தடுப்புச் சுவர் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

[2010 நவம்பர் 12

88—

சாலை வசதி

வினா எண் 56966—திருமதி ரா. லீமா றோஸ்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவட்டாறு தொகுதி, பேச்சிப்பாறை ஊராட்சி, மணலிக்காடு மலை முதல் கொடித்துறை மலை வரை 1.5 கி.மீ. சாலை வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு தொகுதி, பேச்சிப்பாறை ஊராட்சி, மணலிக்காடு மலை முதல் கொடித்துறை மலை வரை உள்ள 1.5 கி.மீ. நீளமுள்ள சாலை வீரப்புலி காப்புக்காட்டிற்குள், அனுமதிக்கப்பட்ட பாதை உரிமை உள்ள சாலையாகும். இச்சாலை 1977 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டுள்ளது. இதன் அனுமதிக்கப்பட்ட தூரம் 1.5 கி.மீ. மற்றும் அகலம் 3 மீட்டர் ஆகும். இச்சாலையை மேம்படுத்தும் திட்டம் ஏதும் வனத் துறையின் பரிசீலனையில் இல்லை.

எனவே பயனீட்டாளர் துறைகளான ஊரக வளர்ச்சித் துறை அல்லது நெடுஞ்சாலைத் துறையினர் இச்சாலையினை மேம்படுத்த முன்வரும் பட்சத்தில் வனச் சட்டம், 1882 மற்றும் வனப் பாதுகாப்புச் சட்டம் 1980-ன் விதிமுறைப்படி அனுமதி வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

89—

வன விலங்குகளை கட்டுப்படுத்துதல்

வினா எண் 118063—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, காஞ்சமலை 1-3-வது பிரிவுகள், வாட்டர்பால்ஸ் 1-3-வது பிரிவுகள், கவர்க்கல் 1,2-வது பிரிவுகள், அய்யர்பாடி 1,2-வது பிரிவுகள், கருமலை 1,2-வது பிரிவுகள்,

2010 நவம்பர் 12]

ஈட்டியாறு 1,2-வது பிரிவுகள், சோலையாறு 1,2-வது பிரிவுகள், சிங்கோனா 1,2-வது பிரிவுகள், நடுமலை 1,2-வது பிரிவுகள், பச்சமலை 1,2-வது பிரிவுகள், சிறுகுன்றா 1,2-வது பிரிவுகள் ஆகிய எஸ்டேட்டுகளில் மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் சிறுத்தைப் புலி நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, காஞ்சமலை 1-3-வது பிரிவுகள், வாட்டர்பால்ஸ் 1-3-வது பிரிவுகள், கவர்க்கல் 1,2-வது பிரிவுகள், அய்யர்பாடி 1,2-வது பிரிவுகள், கருமலை 1,2-வது பிரிவுகள், ஈட்டியாறு 1,2-வது பிரிவுகள், சோலையாறு 1,2-வது பிரிவுகள், சிங்கோனா 1,2-வது பிரிவுகள், நடுமலை 1,2-வது பிரிவுகள், பச்சமலை 1,2-வது பிரிவுகள் சிறுகுன்றா 1,2-வது பிரிவுகள் ஆகிய எஸ்டேட்டுகளில் மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் சிறுத்தை நடமாட்டம் இருப்பதாகக் கூறப்படும் பகுதிகளில் உள்ள பொதுமக்கள் தங்கள் வீடுகளில் சிறுத்தைக்கு உணவாகப் பயன்படும் நாய், கோழி போன்ற வளர்ப்புப் பிராணிகளை வளர்ப்பதைத் தவிர்க்க கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இப்பகுதியில் உள்ள மாட்டிறைச்சிக் கடையிலிருந்து கழிவுகளை பொது இடத்தில் கொட்டாமல் குடியிருப்பு மற்றும் பொதுமக்கள் நடமாட்டம் இல்லாத பகுதிகளில் கொட்டிட கடை உரிமையாளருக்கு அறிவுரை வழங்க நகராட்சி அலுவலர்களிடம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. சிறுத்தை நடமாட்டம் இருப்பதாக பொது மக்களிடமிருந்து தகவல் வரப்பெற்றால் தொடர்புடைய சரகப் பணியாளர்கள் அப்பகுதியில் முகாமிட்டு சிறுத்தை வராமல் இருப்பதற்கு போதுமான பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தொடர்ச்சியாக சிறுத்தை நடமாட்டம் இருப்பின் அச்சிறுத்தையினை அடர்ந்த வனப் பகுதிக்குள் விரட்டிட தேவையான முன் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும் குடியிருப்புப் பகுதிகளுக்குள் அடிக்கடி நுழையும் சிறுத்தைகள் கூண்டு வைத்துப் பிடித்து வேறு பகுதிகளில் கொண்டு சென்று விடப்பட்டு வருகின்றன. சிறுத்தை நடமாட்டத்தைக் கண்காணிக்க வனப் பணியாளர்கள், வேட்டைத் தடுப்புக் காவலர்கள் மற்றும் வன உயிரினங்களை காட்டுப்

பகுதிக்குள் அனுப்பி வைக்கும் குழு (Anti depredation Squad) நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. குடியிருப்புப் பகுதிகளில் உள்ள புதர்கள் அகற்றப்பட வேண்டுமென பல தருணங்களில் சம்பந்தப்பட்டவர்களுக்கு நேரடியாகவும் சுற்றறிக்கை மூலமாகவும் தெளிவாக அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட இடங்களில் சிறுத்தைப் புலி வராமல் இருக்க அரசு தக்க நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

90—

மயில்கள் மற்றும் முயல்கள் பாதுகாப்பு

வினா எண் 119283—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சிவகங்கை மாவட்டத்தின் காடுகளில் வளரும் மயில்கள், முயல்களைப் பாதுகாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டத்தில் காடுகளில் வளரும் மயில்கள் மற்றும் முயல்கள் தற்போது பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இம்மாவட்டத்தில் மயில்கள் மாவட்டம் முழுவதும் பரவலாகக் காணப்படுகின்றன. வனத் துறை களப் பணியாளர்களால் காடுகளில் வளரும் மயில்கள் மற்றும் முயல்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

91—

பறவைகள் பாதுகாப்பு

வினா எண் 119912—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சிவகங்கை கீழ்பாத்தி கண்மாய்க்கு வரும் வெளிநாட்டுப் பறவைகளைப் பராமரித்துப் பாதுகாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 நவம்பர் 12]

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை கீழ்பாத்தி கண்மாய்க்கு வரும் வெளிநாட்டுப் பறவைகள் சுமார் இரண்டு மாதங்களுக்கு மட்டுமே தங்கிச் செல்லும். சிவகங்கை மாவட்டத்தில் வேட்டங்குடியில் 38.40 ஹெக்டேர் பரப்பளவில் ஒரு பறவைகள் சரணாலயம் அமைக்கப்பட்டுள்ளது. அங்கேயும் வெளிநாட்டுப் பறவைகள் மற்றும் உள்நாட்டுப் பறவைகள் வந்து தங்கி இனப்பெருக்கம் செய்துவிட்டு பின்னர் சென்றுவிடுகின்றன. கீழ்பாத்தி கண்மாய்க்கு வரும் வெளிநாட்டுப் பறவைகள் தங்கும் காலங்களில் திருப்பத்தூர் வனச் சரகரால், வேட்டைத் தடுப்புக் காவலர்களைக் கொண்டு பாதுகாக்கப்பட்டு வருகின்றன. மேலும், கீழ்பாத்தி கண்மாயில் ஒவ்வொரு ஆண்டும் பறவைகள் தங்கும் காலங்களில் வேட்டைத் தடுப்பு காவலர்களை நியமித்து பறவைகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

92—

தரக் கட்டுப்பாடு சோதனைகள்

வினா எண் 14705—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) உடுமலைப்பேட்டை சாலைகள் தரக் கட்டுப்பாட்டு சோதனைகள் மூலம் சரிபார்க்கப்பட்டுள்ளனவா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உடுமலை நெடுஞ்சாலை உட்கோட்டத்தை சார்ந்த சாலைகளில் மேற்கொள்ளப்படும் வேலைகளுக்கு தரக் கட்டுப்பாடு சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு பணிகள் செயலாக்கப்படுகின்றன. இப்பணிகளுக்கான தரக் கட்டுப்பாடு சான்றுகள் சம்பந்தப்பட்ட வேலைகளுக்கான தரக் கட்டுப்பாட்டு

உதவிப் பொறியாளரால் பதியப்பட்டு, தரக் கட்டுப்பாட்டு உதவி கோட்டப் பொறியாளரால் மேலொப்பமிடப்படுகின்றன. இவை அனைத்தும் மேற்கொள்ளப்பட்ட பின்னரே, வேலைப் பட்டியல்களுக்கான தொகை வழங்கப்படுகிறது. இதன்மூலம் பணிகளின் தரம் உறுதி செய்யப்படுகிறது. எனவே, தரக் கட்டுப்பாட்டு சோதனைகள் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கான சான்றுகள் சரிபார்த்துதான் பணிகள் நடைபெற்று வருகின்றன.

93—

விரிவுபடுத்துதல்

வினா எண் 25747—திரு. செ. குருசாமி: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அந்தியூர் தொகுதி, அந்தியூரிலிருந்து பர்கூர் செல்லும் வழியில் கெட்டிசமுத்திரம் ஏரிக் கரையை விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அந்தியூர் தொகுதி, அந்தியூரிலிருந்து பர்கூர் செல்லும் வழியில் கெட்டிசமுத்திரம் ஏரிக்கரைப் பகுதியானது தற்போது ஈரோடு (நெ) கோட்டப் பராமரிப்பில் உள்ள மாவட்ட முக்கிய சாலையில் செல்லம்பாளையம்-பர்கூர்-கொள்ளேகால் சாலை கி.மீ.2/4-3/0 (வலதுபுறம்) உள்ளது. இச்சாலையின் போக்குவரத்துச் செறிவு 6034 ஆகும். கெட்டிசமுத்திரம் ஏரிக்கரையின் நீளம் 800 மீட்டர் ஆகும். கெட்டிசமுத்திரம் ஏரிக்கரைப் பகுதியில் சாலையின் தற்போதைய ஓடுதள அகலம் 5.50 மீட்டர் மற்றும் மண்புருவம் சராசரியாக இருபுறமும் 0.30 மீட்டர் முதல் 1.00 மீட்டர் வரை உள்ளது. இச்சாலையின் மண்புருவம் அகலம் இல்லாத காரணத்தினால் விபத்துகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனவே ஏரிக்கரைச் சாலையினை சுமார் 800

2010 நவம்பர் 12]

மீட்டர் நீளத்திற்கு தடுப்புச் சுவர் கட்டுவதுடன், ஓடுதளப் பகுதியினை 5.50 மீட்டரில் இருந்து 7.00 மீட்டர் வரை அகலப்படுத்துதலும் மிகவும் அவசியமாகும். இச்சாலையின் இருபுறமும் 800 மீட்டருக்கு தடுப்புச் சுவர் கட்டி, ஓடுதளப் பகுதியை இடைவழித்தடத்தில் இருந்து இருவழித்தடமாக அகலப்படுத்த தோராயமாக ரூ.190.00 இலட்சம் தேவைப்படும் என்பதால் வரும் நிதியாண்டில் ஏதேனும் திட்டப் பணிகளில் மேற்கொள்ள நிதி நிலைமைக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

94—

சாலையைச் சீரமைத்தல்

வினா எண் 25948—திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டம், மேட்டுப்பாளையம் முதல் ஊட்டி, ஊட்டி முதல் கூடலூர் வரையுள்ள தேசிய நெடுஞ்சாலைகளைச் சீர் செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

மேட்டுப்பாளையம் முதல் ஊட்டி மற்றும் கூடலூர் வழியாக காக்கநள்ளா (தமிழ்நாடு-கர்நாடக எல்லை) வரை செல்லும் தேசிய நெடுஞ்சாலை 67 நீட்சியில் 120 கி.மீ. சாலையை (கி.மீ.384/0-504/0) ரூ.80 கோடி மதிப்பீட்டில் நிரந்தரமாகச் செப்பனிடும் பணி அனைத்தும் முடிக்கப்பட்டுள்ளது. மேலும் கி.மீ.393/0-ல் புதிதாக சிறு பாலம் கட்டும் பணி 10-11-09-ல் முடிவடைந்து நவம்பர் 2009 முதல் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்துவிடப்பட்டுள்ளது.

95—

தரம் உயர்த்துதல்

வினா எண் 53339—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2010 நவம்பர் 12

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, ஆனைமலை—பூலாங்கிணறு சாலையை அகலப்படுத்தி தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை தொகுதி ஆனைமலை-பூலாங்கிணறு சாலையில் கி.மீ.16/0-32/4 வரை உடுமலை (நெ) உட்கோட்டத்தை சார்ந்த மாவட்ட முக்கிய சாலையாகும். இச்சாலையின் போக்குவரத்துச் செறிவு 5,819 ஆகும். கி.மீ. 17/6-18/0, 21/2-21/4 மற்றும் 32/2-32/4 வரையுள்ள பகுதி 7.00 மீ. அகலமும், கி.மீ.16/0-16/2 மற்றும் 32/0-32/2 வரையுள்ள பகுதி 5.50 மீ. அகலமும், ஏனைய பகுதிகள் ஒருவழித்தடமாகவும் உள்ளது.

மேற்படி சாலையில் கி.மீ.17/4-17/6 மற்றும் 18/0-19/0 வரையுள்ள ஒரு தளத்தை மேம்பாடு செய்ய, ஒருங்கிணைந்த சாலைகள் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் (2009-10) கீழ் ரூ.37.00 இலட்சத்தில் ஒப்புதல் பெறப்பட்டு 30-02-2009-இல் பணிகள் முடிவடைந்தன. கி.மீ.17/8-17/10-இல் உள்ள விபத்து நடக்கும் பகுதியினை மேம்பாடு செய்ய ரூ.30.00 இலட்சத்திற்கு CRID (2009-10) திட்டத்தின்கீழ் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு தற்பொழுது முன்னேற்றத்தில் உள்ளன. கி.மீ. 29/0-31/0 வரையுள்ள பகுதி மேம்பாடு செய்ய ரூ.59.00 இலட்சத்திற்கு CRID (2009-10) திட்டத்தின் கீழ் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு 15-2-2010 அன்று முடிவடைந்தன. மேற்குறிப்பிட்டுள்ள சாலையின் இதர பகுதிகளான கி.மீ. 16/2-17/4, 19/0-21/2, 21/4-29/0 மற்றும் 31/0-32/0 வரையுள்ள 12.20 கி.மீ. நீளத்திற்கு அகலப்படுத்த தோராயமாக ரூ.244.00 இலட்சங்கள் தேவைப்படுகின்றன. வருங்காலத்தில் நிதி நிலைமைக்கேற்ப இப்பகுதிகளைப் படிப்படியாக அகலப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

2010 நவம்பர் 12]

96—

சாலையைச் சீரமைத்தல்

வினா எண் 63519—திருமதி ரா. லீமா றோஸ்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவட்டாறு தொகுதி, கல்லடி-மாமூடு முதல் அண்டூர் வரை செல்லும் சாலையைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

நாகர்கோவில் நெடுஞ்சாலை கோட்டப் பொறியாளரின் பராமரிப்பில் உள்ள மாவட்ட இதர சாலையான கல்லடி-மாமூடு-அண்டூர் சாலை கி.மீ.0/0-3/5 வரையுள்ளது ஆகும். இச்சாலையில் கி.மீ. 0/0-2/5 உள்ள பகுதி 2008-2009 ஆம் ஆண்டிற்கான காலமுறை புதுப்பித்தல் பணியில் கருத்தளம் புதுப்பிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பகுதி கி.மீ.2/5-3/5-க்கு ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் 2009-2010-இல் ரூ.9.00 இலட்சம் மதிப்பிற்கு மேம்பாடு செய்யப்பட்டு பணி தற்போது முடிவு பெற்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

97—

சாலையை உயர்த்துதல்

வினா எண் 108743—திரு. மா. தண்டபாணி: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் உட்கோட்டம், ஒட்டன்சத்திரம்-வடமதுரை சாலையில் வேடசந்தூர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியிலிருந்து வேடசந்தூர் பெண்கள் மேல்நிலைப் பள்ளி வரை சாலையை உயர்த்தித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் உட்கோட்டம், வடமதுரை-ஒட்டன்சத்திரம் சாலையானது, திண்டுக்கல் கோட்டப் பராமரிப்பில் உள்ள மாநில நெடுஞ்சாலையாகும். இச்சாலை கி.மீ.0/0-42/8-42.80கி.மீ. நீளமுடையது. இச்சாலை இருவழித்தடமாக 7.00 மீட்டர் அகலம் கொண்டதாக உள்ளது. ஒட்டன்சத்திரம்-வடமதுரை சாலையில் வேடசந்தூர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியிலிருந்து வேடசந்தூர் பெண்கள் மேல்நிலைப் பள்ளி வரையுள்ள சாலைப் பகுதி கி.மீ.21/2 முதல் 21/6 வரை 7.00 மீட்டர் அகலம் கொண்ட சாலையாகும். இச்சாலை கி.மீ.21/4-இல் சாலையின் வலதுபுறம் குளம் உள்ளதால் அதன் உபரி நீர் சாலையைக் கடந்து செல்கிறது. எனவே அவ்விடத்தில் சிறு பாலம் அமைத்து கி.மீ.21/2-21/6 வரை சாலையை உயர்த்தி வடிகால் அமைத்து மேம்பாடு செய்வது அவசியமாகும். இதற்கு தோராயமாக ரூ.50 இலட்சம் தேவைப்படும். இப்பகுதியை மேம்பாடு செய்ய வரும் நிதியாண்டில் முன்னுரிமை அடிப்படையில் பணிகள் மேற்கொள்ள பரிசீலிக்கப்படும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

98—

சாலையைச் சீரமைத்தல்

வினா எண் 108816—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையிலிருந்து கொன்னக்குளம், மல்லல் வழியாக சாத்தரசன்கோட்டை வரை செல்லும் சாலையைச் சீரமைத்து அகலப்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 நவம்பர் 12]

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையிலிருந்து கொன்னக்குளம், மல்லல் வழியாக சாத்தரசன்கோட்டை வரை செல்லும் சாலைகளானது சிவகங்கை (நெ) கோட்டப் பராமரிப்பிலுள்ள பின்வரும் சாலைகளாகும்.

(1) மேலக்கொன்னக்குளம்-மனக்குளம் சாலையானது கி.மீ.0/0-5/2 நீளம் கொண்ட மாவட்ட இதர சாலையாகும். இச்சாலையில் கி.மீ.2/0-4/2 வரையிலான 2.20 கி.மீ. நீளச் சாலைத் தொடருக்கு மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள ரூ.20 இலட்சம் தேவைப்படும். இந்த நிதியாண்டில் இச்சாலை சீரமைக்கப்படும். மீதமுள்ள பகுதிகள் நல்ல நிலைமையில் உள்ளன.

(2) மனக்குளம்-மல்லல் சாலை கி.மீ.0/0-1/8 எனப்படும் 1.80 கி.மீ. நீளமுடைய காளையார்கோவில் ஊராட்சி ஒன்றியச் சாலையாகும். இச்சாலையை நெடுஞ்சாலைத் துறைமூலம் சீரமைத்து அகலப்படுத்த சாத்தியக் கூறுகள் இல்லை.

(3) இராமநாதபுரம்-மேலூர்-மல்லல் சாலை கி.மீ.0/0-1/8 நீளம் கொண்ட மாவட்ட இதர சாலையாகும். இச்சாலையில் கி.மீ.0/0-1/6 வரையிலான 1.60 கி.மீ. நீளமுடைய சாலை வரை காலமுறை புதுப்பித்தல் திட்டத்தின்கீழ் 2009-2010-ல் ரூ.10.00 இலட்சத்திற்கு பணி எடுத்து முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பகுதிகள் நல்ல நிலையில் உள்ளன.

99—

சாலையை அகலப்படுத்துதல்

வினா எண் 108817—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை, மானாமதுரை ஒன்றியம், முத்தனேந்தல், இடைக்காட்டூர், பாப்பாங்குளம், பெரியகோட்டை வழியாகச் செல்லும் சாலையை அகலப்படுத்தித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், முத்தனேந்தல், இடைக்காட்டூர், பாப்பாங்குளம், பெரியகோட்டை வழியாகச் செல்லும் சாலையானது முத்தனேந்தல்-பெரியகோட்டை சாலை கி.மீ.0/0-8/3 மானாமதுரை உட்கோட்ட மாவட்ட இதர சாலையாகும். இச்சாலையில் பழுதடைந்த பகுதியான கி.மீ.0/0-0/2, 1/2-1/8, 3/0-6/0 வரை ரூ.21.50 இலட்சம் செலவிலும், கி.மீ.6/0-8/3 வரை ரூ.27.00 இலட்சம் செலவிலும் 2006-2007 காலமுறை புதுப்பித்தல் திட்டத்தின்மூலம் மேம்பாடு செய்து முடிக்கப்பட்டு நல்ல நிலையில் உள்ளது. மீதமுள்ள பகுதியான கி.மீ.0/2-1/2 மற்றும் 1/8-3/0 வரையிலான பகுதியை 2010-2011 நிதியாண்டில் எடுத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். சுந்தரநடப்பு-பச்சேரி விலக்கு சாலை கி.மீ.0/0-14/100 நீளம் கொண்ட மாவட்ட இதர சாலையாகும். 2008-2009 சி.ஆர்.ஐ.டி.பி. மூலம் கி.மீ. 3/0-4/0, 5/6-6/0, 9/0-11/0 ஆகிய பகுதிகள் ரூ.30.00 இலட்சம் செலவில் எடுத்து முடிக்கப்பட்டு நல்ல நிலையிலுள்ளது. இச்சாலை கி.மீ.0/0-2/0 வரை உள்ள பகுதி 2009-2010 (வ.எண்.211) சி.ஆர்.ஐ.டி.பி. திட்டத்தில் ரூ.15.00 இலட்சம் செலவில் எடுக்கப்பட்டு பணிகள் முடிவடைந்துள்ளன.

அரசு கொள்கையின்படி மாநில நெடுஞ்சாலைகளை இருவழித் தடமாகவும், மாவட்ட முக்கிய சாலைகளை இடைவழித் தடமாகவும் அகலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2010 நவம்பர் 12]

100—

இருவழிச் சாலை

வினா எண் 110251—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு மாவட்டம், கொடுமுடி உட்கோட்டத்திற்குட்பட்ட சாலை ஆக்கிரமிப்புகளை அகற்றி இருவழிச் சாலையாக மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

ஆம். ஈரோடு (நெ) கோட்டத்திற்குட்பட்ட கொடுமுடி (நெ) உட்கோட்டத்தில் மாநிலச் சாலைகள், மாவட்ட முக்கிய சாலைகள் மாவட்ட இதர சாலைகள் மற்றும் கரும்பு அபிவிருத்திச் சாலைகளை உள்ளடக்கிய 293.250 கி.மீ. நீளமுள்ள சாலையில் 90.350 கி.மீ. நீளம் இருவழித் தடமாக உள்ளது. மீதமுள்ள சாலையில் இடைவழித் தடச் சாலையாக 20.250 கி.மீ. நீளம் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும், சி.ஆர்.ஐடி.பி. 2009-2010 திட்டத்தில் 7.60 கி.மீ. நீளத்தில் மாவட்ட முக்கிய சாலையில் 2.00 கி.மீட்டரும், மாவட்ட சாலையில் 5.60 கி.மீ. நீளமும் இடைவழிச் சாலையாக அகலப்படுத்தப்பட்டு வருகிறது. இடைவழிச் சாலையாக உள்ள மாநிலச் சாலைகள் மற்றும் மாவட்ட முக்கிய சாலைகளுக்கு முக்கியத்துவம் வழங்கி நிதி நிலைமைக்கேற்ப இருவழிச் சாலைகளாக வரும் நிதியாண்டுகளில் முன்னுரிமை அடிப்படையில் அகலப்படுத்தப்படும். மேலும், கொடுமுடி (நெ) உட்கோட்ட எல்லைக்குட்பட்ட கொடுமுடி நகரப் பகுதி, சாலைப்புதுூர் நகரப் பகுதி மற்றும் ஈரோடு—தாராபுரம் சாலையில் தலவுமலை முதல் நொய்யல் ஆற்றுப்பாலம் வரையுள்ள பகுதியில் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுவிட்டன. பிற இடங்களிலும் ஆக்கிரமிப்புகள் கண்டறியப்பட்டு அகற்றப்படும்.

[2010 நவம்பர் 12

பட்டியல் 5

1—

குடிநீர்த் தொட்டி

வினா எண் 2307—திரு. சு.ப. வேலுமணி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் தொகுதி, வேடபட்டி பேரூராட்சிக்குட்பட்ட 8, 11 மற்றும் 12 ஆகிய வார்டுகளுக்கு குடிநீர் தொட்டி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் சட்டமன்றத் தொகுதி வேடபட்டி பேரூராட்சியில் வார்டு 8, 11 மற்றும் 12 ஆகிய பகுதிகளில் குடிநீர்த் தொட்டி அமைப்பதற்கான போதிய இடவசதி இல்லை. வேடபட்டி பேரூராட்சி வார்டு எண் 8, 11 மற்றும் 12 ஆகிய பகுதிகளில் ஆழ்குழாய்க் கிணறு அமைக்க நீரூற்று நிபுணர் மூலம் ஆய்வு செய்யப்பட்டதில் ஆழ்குழாய்க் கிணறு மேற்படி வார்டுகளில் அமைக்க போதிய நீரூற்று ஆதாரம் எதுவுமில்லை எனத் தெரிவித்துள்ளார். மேலும், அப்பகுதி மக்களுக்கு அருகிலுள்ள 9-வது வார்டு கால்நடை மருத்துவமனை ஆழ்குழாய்க் கிணற்றிலிருந்தும் 1 கி.மீ. தொலைவிலுள்ள நாகராஜபுரம் ஆழ்குழாய்க் கிணற்றிலிருந்தும் குடிநீர்க் குழாய் பாதை அமைத்து குடிநீர் 3 தினங்களுக்கு ஒரு முறையும், சிறுவாணி குடிநீர் 6 நாட்களுக்கு ஒரு முறையும் சீரான முறையில் விநியோகம் செய்யப்பட்டு வருவதால் தற்சமயம் குடிநீர்த் தட்டுப்பாடு எதுவுமில்லை.

2—

புதிய குடிநீர்த் திட்டம்

வினா எண் 2799—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2010 நவம்பர் 12]

(அ) வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன்புதூர் சிறப்பு ஊராட்சி, சேத்துமடை அண்ணா நகர் பகுதிக்கு குடிநீர், குழாயில் சீராக வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சிக்குட்பட்ட சேத்துமடை அண்ணா நகர் பகுதிக்கு ஆனைமலை கூட்டுக் குடிநீர்த் திட்டம் மற்றும் இரண்டாவது குடிநீர்த் திட்டத்தின்கீழ் குடிநீர் விநியோகம் சீராக நடைபெற்று வருகிறது. ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு 65 லிட்டர் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் 2007-2008-ன் (MNP) கீழ் தொகை ரூ.44.62 இலட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் அனைத்துப் பகுதிகளுக்கும் புதிய குடிநீர்த் திட்டம் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

3—

பழுதுபார்த்தல்

வினா எண் 7567—திரு. கே.வி. ராமநாதன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானி தொகுதி, தாளபாளையம் தெற்கு கேட்டு அருகில் ஆழ்குழாய்க் கிணற்றில் காற்றுக் குழாயைப் பழுது பார்த்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி ஓலகடம் தெற்கு கேட்டு அருகில் அமைந்துள்ள ஆழ்குழாய்க் கிணறு தோட்டப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது. 5 வீடுகள் மட்டுமே உள்ளன. இதனை பழுதுபார்த்து 2-4-2010 ஆம் தேதி முதல் பொதுமக்கள் உபயோகித்து வருகிறார்கள்.

[2010 நவம்பர் 12

4—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 9960—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர் ஒன்றியம், நாரணப்பாளையம், மாரியப்பன் வட்டம் பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர் ஒன்றியம், நாரணப்பாளையம் மாரியப்பன் வட்டம் குடியிருப்புக்கு கடந்த நிதியாண்டில் (2009-2010) 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலைத் தொட்டி அமைக்கப்பட்டு காடையாம்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து காவிரிக் குடிநீர் மார்ச் 2010 முதல் வழங்கப்பட்டு வருகிறது.

5—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 10109—திரு. எ.ப. வேலுமணி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேரூர் தொகுதி, குறிச்சி நகராட்சி, பிள்ளையார்புரம், மேட்டூர் அண்ணா நகர் பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

பேரூர் தொகுதி, குறிச்சி நகராட்சி, பிள்ளையார்புரம், மேட்டூர் அண்ணா நகர் ஆகிய பகுதிகளுக்கு இரண்டு இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின்மூலம் ஏற்கெனவே தேவையான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, தனியாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் அவசியம் இல்லை.

2010 நவம்பர் 12]

6—

இரண்டாவது கூட்டுக் குடிநீர் திட்டம்

வினா எண் 10770—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறைக்கு இரண்டாவது குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, வால்பாறைக்கு தனி கூட்டுக் குடிநீர் திட்டம் செயல்படுத்தப்பட்டு டிசம்பர் 2008 முதல் மக்கள் பயன்பாட்டில் உள்ளது. மேற்படி திட்டத்தின்மூலம் போதுமான குடிநீர் வழங்கப்பட்டு வருவதால் இரண்டாவது கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஏற்படுத்த அவசியம் எழவில்லை.

7—

குடிநீர் வழங்குதல்

வினா எண் 14186—திரு. கே. எதிரொலி மணியன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதி, மடவிளாகம் கிராமத்திற்கு செய்யாற்றிலிருந்து குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

திருவண்ணாமலை மாவட்டம், சேத்துப்பட்டு ஒன்றியம், மடவிளாகம் ஊராட்சியைச் சேர்ந்த மடவிளாகம் குடியிருப்பின் குடிநீர்த் திட்டத்திற்கு மாற்று நீராதாரம் (ஆழ்துளைக் கிணறு)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

அமைத்து, தற்போது திட்டம் நல்லமுறையில் செயல்பட்டு வருகிறது. மேலும், செய்யாற்றிலிருந்து மடவிளாகம் குடியிருப்பிற்கு குடிநீர் கொண்டுவர தொழில்நுட்ப சாத்தியக் கூறுகள் இல்லை.

8—

சுத்தமான குடிநீர்

வினா எண் 16915—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் குடிநீர் சுத்தமாக வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதியில் வால்பாறை புதிய குடிநீர்த் திட்டம்மூலம் ரூபாய் *225.00* இலட்சம் மதிப்பீட்டில் திட்டம் நிறைவேற்றப்பட்டு *1-12-2008* முதல் மக்கள் பயனுக்குக் கொண்டு வரப்பட்டு சுத்தமான குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

9—

தார்ச் சாலை அமைத்தல்

வினா எண் 19026—திரு. சு.ப. வேலுமணி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூர் தொகுதி, 56-வது வட்டம், ரங்கசாமி காலனி, காட்டுப்பள்ளிவாசல், ரங்கசாமி காலனி 2-வது வீதி, பழனிசாமி காலனி முதல் வீதி, 2-வது வீதி ஆகிய பகுதிகளில் தார்ச் சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 நவம்பர் 12]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பேரூர் தொகுதி 56-வது வட்டம், ரங்கசாமி காலனி, 2-வது வீதி, காட்டுப்பள்ளிவாசல், பழனிசாமி காலனி 2-வது வீதியில் கற்சாலை அமைத்து பணி முடிக்கப்பட்டுள்ளது. மேலும் ஜவஹர்லால் நேரு தேசிய புனரமைப்பு திட்டத்தின்கீழ் புதிய பாதாள சாக்கடை வசதி செய்ய குழாய் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. பணி முழுவதும் முடிவடைந்த பின்பு தார்ச்சாலை வசதி செய்யப்படும். மேலும் பழனிசாமி காலனி 1-வது வீதியில் சிமெண்ட் கான்கிரீட் தளம் அமைத்து சாலை வசதி செய்யப்பட்டுள்ளது.

10—

குடிநீர்

வினா எண் 19391—திரு. சு.ப. வேலுமணி: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பேரூர் தொகுதி, 56-வது வட்டம், அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவு, திருவேங்கட நகர் பகுதி, நாராயணசாமி நகர், எம்.ஜி.ஆர். நகர் பகுதி, ராஜீவ் நகர் பகுதி, சாஸ்தா நகர் பகுதியில் குடிநீர் மற்றும் தெரு விளக்கு வசதி ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பேரூர் தொகுதி, கோவை மாநகராட்சி 55-வது வட்டம், அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவு திருவேங்கட நகர் பகுதி, நாராயணசாமி நகர், எம்.ஜி.ஆர் நகர் பகுதி, ராஜீவ் நகர் பகுதி, சாஸ்தா நகர் பகுதியில் குடிநீர் மற்றும் தெரு விளக்கு வசதி ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளது.

11—

கூட்டுக் குடிநீர் திட்டம்

வினா எண் 26216—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாமிரபரணி-நாங்குநேரி-திசையன்விளை கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிக்காக தாமிரபரணி ஆற்றில் பத்தமடையிலுள்ள உறை கிணறுகளை சீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாங்குநேரி—திசையன்விளை கூட்டுக் குடிநீர் திட்டம் தாமிரபரணி ஆற்று நீரை நீராதாரமாகக் கொண்டு செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்கு, பத்தமடையை தலைமையிடமாகக் கொண்டு 10 நீர் உறிஞ்சும் கிணறுகள் வாயிலாகக் குடிநீர் பெறப்பட்டு விநியோகிக்கப்படுகிறது. நாங்குநேரி-திசையன்விளை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் தலைமையிடமான பத்தமடையில் உள்ள இரண்டு நீர் உறிஞ்சும் கிணறுகளுக்கு புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ள ரூ.8.60 இலட்சம் 2007-2008 ஆம் நிதி ஆண்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டு பயனுக்குக் கொண்டுவரப்பட்டுவிட்டது.

12—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள்

வினா எண் 26772—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, மணமை ஊராட்சி, கீழக்கழனி, விட்டிலாபுரம் ஊராட்சி கொள்ளைமேடு, வடகடும்பாடி ஊராட்சி பங்காருபேட்டை, மேட்டுகாலனி, இருளர் பகுதிகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

2010 நவம்பர் 12]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியம், மணமை ஊராட்சி, கிழக்கழனி விட்டிலாபுரம் கொல்லைமேடு, வடகடும்பாடி, பங்காருபேட்டை, மேட்டுக்காலனி, இருளர் காலனி பகுதிகளில் தலா 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய தனி மின்விசைத் திட்டம் அமைக்கப்பட்டு போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுகிறது.

13—

மின்விசைப் பம்பு அமைத்தல்

வினா எண் 31796—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு 26-வது வார்டு பகுதியில் ஆழ்துளைக் கிணறு சிறு மின் விசை அடிகுழாய் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு பகுதிக்குட்பட்ட வார்டு எண் 26-ல் நகராட்சியில் நிலத்தடி நீர் ஆதாரம் உள்ள பகுதி தேர்வு செய்து மின்விசைப் பம்பு அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

14—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 40545—திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2010 நவம்பர் 12

(அ) காஞ்சிபுரம் தொகுதி, ஓரிக்கை ஊராட்சி, நரசிம்ம பல்லவ நகர், வேளிங்கபட்டரை குரு நகரில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் தொகுதி, ஓரிக்கை ஊராட்சி, நரசிம்ம பல்லவ நகர் குடியிருப்பு மற்றும் வேளிங்கபட்டரை குடியிருப்புகளுக்கு 2008-09 நிதியாண்டில் 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள நீர் உறிஞ்சும் கிணறு உதவியுடன், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலமாக குடிநீர் வழங்கப்பட்டு வருவதால், மேற்கொண்டு கூடுதல் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் அவசியம் இல்லை.

15—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 41615—திரு. லவ. காவேரி: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாவட்டம், கொங்கணாபுரம் ஒன்றியம், வெள்ளாளபுரம் கன்னியாம்பட்டி உத்தண்டிவளவுப் பகுதி, கச்சுப்பள்ளி ஊராட்சி எலந்தமரத்தான்வளவு பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

சேலம் மாவட்டம், கொங்கணாபுரம் ஒன்றியம், வெள்ளாளபுரம் ஊராட்சி, கவுண்டன்வளவு குடியிருப்பின் பகுதியே கன்னியாம்பட்டி உத்தாண்டிவளவு என்பதாகும். கவுண்டன்வளவு குடியிருப்பு எடப்பாடி தொகுதியைச் சார்ந்த 145 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. கச்சுப்பள்ளி ஊராட்சியைச் சார்ந்த

2010 நவம்பர் 12]

எலந்தமரத்தான்வளவு (எலந்தமரத்தான் கொட்டாய்) குடியிருப்பிற்கு 2008-2009 ஆம் ஆண்டில் ஆழ்துளைக் கிணற்றை நீராதாரமாகக் கொண்டு 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் செயலாக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிலுள்ளது.

16—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 42759—திரு. வெ. கண்ணன்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாரமங்கலம் தொகுதி, பள்ளிப்பட்டி ஊராட்சி, காசகாரனூர் காட்டுவளவு பகுதி, ஆண்டிகவுண்டனூர் ஆட்டுக்காரன் வட்டம் பகுதி, காக்காச்சிவளவு, கே.கே. நகர் பகுதி, நாகோசிப்பட்டி கொக்ராபள்ளம் பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் தொகுதி, பள்ளிப்பட்டி ஊராட்சி, காசகாரனூர் காட்டுவளவு பகுதி, ஆண்டிகவுண்டனூர் ஆட்டுக்காரன் வட்டம் பகுதி, காக்காச்சிவளவு, கே.கே. நகர் பகுதி, நாகோசிப்பட்டி, கொக்ராபள்ளம் ஆகிய பகுதிகளுக்கு காரப்பட்டியான் தெரு குடியிருப்பில் அமைக்கப்பட்டுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து குழாய் நீட்டிப்புமூலம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, இப்பகுதிக்கென தனியாக மேல்நிலைத் தொட்டி அமைக்கும் அவசியம் எழவில்லை.

[2010 நவம்பர் 12

17—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 46580—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியம், குழிப்பான்தண்டலம், சோகண்டி, அண்ணா நகர் பகுதி மற்றும் நென்மேலி கிராமங்களில் குடிநீர், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்.

(அ) மற்றும் (ஆ) செங்கற்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியம் குழிப்பான்தண்டலம் சோகண்டி, அண்ணா நகர் பகுதி மற்றும் நென்மேலி கிராமங்களில் போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுகிறது. எனவே, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் அவசியம் எழவில்லை.

18—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 49246—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டூர் தொகுதி, நங்கவள்ளி ஊராட்சி ஒன்றியம், ஆவடத்தூர் ஊராட்சி, எல்லம்ரெட்டியூர், காச்சி முனியம்மன் கோவில், பாண்டியன் நகர் மற்றும் மண்ணுதின்னிவளவு, மனோன்மணி நகர் மற்றும் மோட்டூர் தெரு ஆகிய குடியிருப்பு பகுதிகளுக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2010 நவம்பர் 12]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

சேலம் மாவட்டம், நங்கவள்ளி ஊராட்சி ஒன்றியம், ஆவடத்தூர் ஊராட்சி, எல்லம்ரெட்டியூர் மற்றும் மனோன்மணி நகர் குடியிருப்புகளுக்கு 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டிகளுடன் கூடிய குடிநீர்த் திட்டங்கள் முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டில் உள்ளது. பாண்டியன் நகர், மண்ணுதின்னிவளவு மற்றும் மோட்டூர் தெரு என்ற மேட்டுத் தெரு குடியிருப்புகளுக்கு 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டிகளுடன் கூடிய குடிநீர்த் திட்டப் பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளது. காச்சி முனியப்பன் கோவில் குடியிருப்புக்கு இக்குடியிருப்பின் மக்கட்தொகையையும் கணக்கில் கொண்டு, ஓட்டன்காடு குடியிருப்பில் கட்டப்பட்டுள்ள 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டியிலிருந்து போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருவதால் புதிதாக மேல்நிலைத் தொட்டி கட்டும் அவசியம் இல்லை.

19—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 49506—திரு. வை காவேரி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், வெள்ளாளபுரம் ஊராட்சி, முனியம்பட்டி அருந்ததியர் காலனி, முனியம்பட்டி தப்பட்டகாரன்வளவு ஆகிய பகுதிகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், வெள்ளாளபுரம் ஊராட்சி, முனியம்பட்டி அருந்ததியர் காலனி மற்றும் முனியம்பட்டி தப்பட்டகாரன்வளவு

குடியிருப்புகளுக்குத் தனித்தனியாக 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் 2008-2009 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டு மார்ச் 2009 முதல் மக்கள் பயனில் உள்ளது. எனவே, தனியாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் அவசியம் இல்லை.

20—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 49517—திரு. வை. காவேரி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், அ. புதூர் கிராமம், அருவங்காடு, பொன்னியன் கோவில் அருகில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* மகுடஞ்சாவடி ஒன்றியம், அ. புதூர் ஊராட்சி அருவங்காடு என்கிற அருவங்காட்டூர் குடியிருப்பில் ஏற்கெனவே 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டி கட்டப்பட்டு போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருவதுடன் பொன்னியன் கோயில் என்ற பொன்னியம்மன் கோயில்வளவு குடியிருப்பு, தற்போது மதிப்பீட்டு நிலையிலுள்ள எடப்பாடி தொகுதியைச் சார்ந்த 145 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இத்திட்டம் செயலுக்கு வரும்போது, இக்குடியிருப்பில் மேல்நிலைத் தொட்டி கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

21—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 65114—திரு. பெ.சு. விஜயகுமார்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2010 நவம்பர் 12]

(அ) போளூர் தொகுதி, ஜவ்வாதுமலை ஊராட்சி ஒன்றியம், கானமலை ஊராட்சி, அரசனூர் கிராமம், திண்டிவனம் ஊராட்சி, மதுரா கிருஷ்ணா நகர், மதுரா கலியம் காந்தி நகர், திண்டிவனம் கிராமம், எழுவாம்பாடி ஊராட்சி, குருவிமலை ஊராட்சி, கணியம்பாடி ஊராட்சி ஒன்றியம், எம்.பி.இ. பாலம்பாக்கம், விளாங்குப்பம் ஊராட்சி, கேளூர் ஊராட்சி, கானசமுத்திரம் ஊராட்சி, மதுரா வாராவதி துவரந்தல் சாலை பகுதி மற்றும் கட்டிப்பூண்டி ஊராட்சி, இந்திரா நகர் ஆகிய பகுதிகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* திருவண்ணாமலை மாவட்டம், போளூர் தொகுதி, போளூர் ஒன்றியத்தைச் சேர்ந்த திண்டிவனம், எழுவாம்பாடி, குருவிமலை, விளாங்குப்பம், கேளூர் கானசமுத்திரம், மதுரா வாராவதி துவரந்தல் சாலை மற்றும் கணியம்பாடி ஒன்றியத்தைச் சேர்ந்த எம்.பி.இ. பாலம்பாக்கம், ஆகிய குடியிருப்புகளில் மக்கள் தொகைக்கேற்ப மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுடன் கூடிய குடிநீர்த் திட்டங்கள் ஏற்கெனவே செயலாக்கப்பட்டு மக்கள் பயனில் உள்ளன. எனவே, இக்குடியிருப்புகளுக்கு கூடுதலாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்ட அவசியம் இல்லை. கானமலை அரசனூர் பகுதிக்கு கானமலையிலுள்ள *10,000* லிட்டர் மேல்நிலைத் தொட்டியிலிருந்து தனிக்குழாய் அமைத்தும், திண்டிவனம் கிருஷ்ணா நகர் பகுதிக்கு திண்டிவனம் குடியிருப்பிலுள்ள *1* இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து இப்பகுதிக்கு குழாய் நீடிப்பு செய்து கலியம் காந்தி நகர் குடியிருப்பின் மேடான பகுதிகளுக்கு இங்குள்ள *30,000* லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து தனிக்குழாய் அமைத்து குடிநீர் வழங்கவும், கேளூர் காமராஜ் நகர் பகுதிக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி விரைவில் செயலாக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும். கட்டிப்பூண்டி இந்திரா நகர் பகுதிக்கு கட்டிப்பூண்டியில் உள்ள *60,000* லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து தனிக்குழாய்மூலம் குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

22—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 66180—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம், எச்சூர் கிராமம், பள்ள காலனி பகுதி, பொன்பதிர்கூடம், இருளர் பகுதி, கிச்சான் மேடுபகுதி, வடகடம்பாடி ஊராட்சி, வசந்தபுரி, சட்ராஸ் கிராமம், கிரப்பாக்கம் காலனி, நத்தம் கிராமத்திலுள்ள சின்னத்தெரு மற்றும் தாழம்பேடு ஊராட்சி ஒன்றியம் ஆகிய இடங்களில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், எச்சூர் கிராமம் மற்றும் எச்சூர் பள்ள காலனி பகுதி, கிச்சான் மேடு பகுதி, வடகம்பாடி ஊராட்சி, வசந்தபுரி, சட்ராஸ் கிராமம், கிரப்பாக்கம் காலனி நத்தம் கிராமத்திலுள்ள சின்னத்தெரு மற்றும் தாழம்பேடு குடியிருப்புகளுக்கு, அக்குடியிருப்பின் மக்கள் தொகைக்கேற்ப மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்கப்பட்டு போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, கூடுதல் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்க அவசியம் இல்லை. பொன்பதிர் கூடம் ஊராட்சி, பொன்பதிர் கூடம் இருளர் பகுதிக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய தனி மின் விசைத்திட்டம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

23—

பாதுகாக்கப்பட்ட குடிநீர்

வினா எண் 100364—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வரும் நிதியாண்டில் வால்பாறை தொகுதி, மாணிக்க எஸ்டேட் முதல் பிரிவு மற்றும் 2 ஆம் பிரிவு, நல்லகாத்து எஸ்டேட் முதல் பிரிவு, 2-வது பிரிவு, ஸ்டேன்மோர், சவராங்காடு,

2010 நவம்பர் 12]

புதுத்தோட்டம், அப்பர் பரளை, லோயர் பரளை, ரொட்டிக்கடை பகுதி, அய்யர்பாடி எஸ்டேட் முதல் பிரிவு, இரண்டாவது பிரிவு ஆகிய எஸ்டேட்டுகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வரும் நிதியாண்டில் வால்பாறை தொகுதிக்குட்பட்ட மாணிக்க எஸ்டேட் முதல் பிரிவு, 2 ஆம் பிரிவு, நல்லகாத்து எஸ்டேட் முதல் பிரிவு, 2-வது பிரிவு, ஸ்டேன்மோர், சவராங்காடு, புதுத்தோட்டம் அய்யர்பாடி எஸ்டேட் முதல் பிரிவு, 2-வது பிரிவு ஆகிய பகுதிகள் தனியார் தேயிலைத் தோட்ட பகுதிக்குட்பட்டதாகும். மேற்குறிப்பிட்ட பகுதிகளுக்கு தனியார் தேயிலைத் தோட்ட நிர்வாகமே நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வீதம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கி வருகிறது. மேலும், தொட்டிக்கடை பகுதிக்கு நகராட்சிமூலம் செயல்படுத்தப்பட்ட தனி மின் விசைத்திட்டம்மூலம் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 70 லிட்டர் வீதம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், பரளை, லோயர் பரளை, அப்பர் பரளை ஆகிய பகுதிகளுக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்மூலம் தனி மின் விசைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டு தற்போது நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 90 லிட்டர் வீதம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

24—

கூட்டுக் குடிநீர் திட்டம்

வினா எண் 104652—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், பெரியகோட்டை ஊராட்சி, சுந்தர் நகர், மதுமிதா நகர் பகுதிக்கு கணக்கம்பாளையம் கூட்டுக் குடிநீர் திட்டத்தின்கீழ் குடிநீர் வழங்கிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை ஒன்றியம், பெரிய கோட்டை ஊராட்சியை சார்ந்த சுந்தர் நகர், மதுமிதா நகர், இந்திரா காந்தி நகர் பகுதிகளில் கணக்கம்பாளையம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் 24 மணி நேரமும் திருமூர்த்தி அணை அருகே தளி கால்வாயிலிருந்து நீர் இறைக்கப்பட்டு கணக்கம்பாளையம் மற்றும் 145 குடியிருப்புகளுக்கு போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. கணக்கம்பாளையம் கூட்டுக் குடிநீர் திட்டத்தில் பதிக்கப்பட்டுள்ள குழாய்களில் அதிகப்படியான நீர் கொண்டு செல்லும் திறன் இல்லை. எனவே, சுந்தர் நகர் மற்றும் மதுமிதா நகர் பகுதிகளுக்கு கூட்டுக்குடிநீர்த் திட்டத்திலிருந்து குடிநீர் வழங்க தொழில்நுட்ப சாத்தியக் கூறுகள் இல்லாததால் அத்திட்டத்தின்மூலம் குடிநீர் வழங்க இயலாது.

25—

ஆழ்துளைக் கிணறு

வினா எண் 105304—திரு. பெ.கு. விஜயகுமார்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் தொகுதி, சிந்தாதிரிப்பேட்டை, கீழ்காவடித்தெரு, சென்னு தெருவில் ஆழ்துளைக் கிணறு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) போளூர் தொகுதி, சிந்தாதிரிப்பேட்டை கீழ்காவடித்தெரு, சென்னு தெரு ஆகியவை போளூர் பேரூராட்சிக்குட்பட்ட தெருக்களாகும். இந்த இரு தெருக்களில் இரண்டு நாட்களுக்கு ஒரு முறை சுழற்சி முறையில் பேரூராட்சி நிர்வாகத்தால் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், சட்டமன்ற உறுப்பினரின் ஆழ்துளைக் கிணறு அமைப்பது

2010 நவம்பர் 12]

தொடர்பான கோரிக்கைக்கு, போரூர் பேரூராட்சி உரிய மன்ற தீர்மானமும், திட்டத் தொகையும் செலுத்தினால் வைப்பு நிதி திட்டமாக ஆழ்துளைக் கிணறு அமைத்து குடிநீர் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

26—

ஓய்வூதியத் தொகை

வினா எண் 117601—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மன்னர் ரிபெல் முத்துராமலிங்க சேதுபதியின் வாரிசுகளுக்கு வழங்கப்பட்டு வரும் ஓய்வூதியத் தொகையை உயர்த்தித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) முன்னாள் இராமநாதபுர மன்னர் ரிபெல் முத்துராமலிங்க சேதுபதியின் வாரிசுகளுக்கு ரூ.500/- ஆக வழங்கப்பட்டு வந்த சிறப்பு ஓய்வூதியம் 1-12-2008 முதல் மாதந்தோறும் ரூ. 1000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்) ஆக உயர்த்தப்பட்டு தற்பொழுது வழங்கப்பட்டு வருகிறது. மேற்குறிப்பிட்ட சிறப்பு ஓய்வூதியத்தை மேலும் உயர்த்தும் கருத்துரு எதுவும் தற்போது அரசின் பரிசிலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

27—

அலுவலகம்

வினா எண் 11441—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஓமலூர் தொகுதி, கே. மோரூர் பகுதியில் மின் வாரிய உதவிப் பொறியாளர் அலுவலகம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஓமலூர் தொகுதிக்குட்பட்ட கே. மோரூர் பகுதி தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களுக்கான எல்லைப் பகுதியில் உள்ளது. தற்சமயம் தருமபுரி மின் பகிர்மானத்திற்குட்பட்ட பொம்மிடி தெற்கு பிரிவு அலுவலகத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது.

தற்போதைய வாரிய வழிமுறைகளின்படி கே. மோரூர் பகுதியில் புதிய உதவிப் பொறியாளர் அலுவலகம் அமைக்கத் தேவை ஏற்படவில்லை.

28—

மின் பாதையை மாற்றி அமைத்தல்

வினா எண் 46959—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர் தொகுதி, கீழ்குளம் கிராமத்தில் உயர் அழுத்த மின் பாதையை மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

கிள்ளியூர் தொகுதிக்குட்பட்ட கீழ்குளம் கிராமத்தில், உயரழுத்த மின் பாதையை மாற்ற வேண்டிய பேரூராட்சியிலிருந்தோ அல்லது தனி நபரிடமிருந்தோ விண்ணப்பம் இதுநாள் வரையில் பெறப்படவில்லை. விண்ணப்பம் பதிவு செய்யப்பட்டு, உரிய மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டால் மின் வாரிய விதிமுறைகளின்படி மின் பாதையை மாற்றி அமைக்க ஆவன செய்யப்படும்.

2010 நவம்பர் 12]

29—

மின் விளக்குகள்

வினா எண் 65917—திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, மருங்கூர் ஆரம்ப சுகாதார நிலையம் முதல் கொள்ளுகாரன் குட்டை வழி மற்றும் லஷ்மிநாராயணபுரத்தில் கிருஷ்ணமூர்த்தி நயினார் நகர், பண்ருட்டி நகர் இணைப்புச் சாலையில் புதியதாக மின் கம்பங்கள் அமைத்து மின் விளக்குகள் பொருத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 1. பண்ருட்டி தொகுதி, மருங்கூர் ஆரம்ப சுகாதார நிலையம் முதல் கொள்ளுகாரன் குட்டை வழியில் ஏற்கெனவே 2 எண்ணம் 1 x 40w குழல் விளக்குகளும் மற்றும் 2 எண்ணம் சோடியம் ஆவி விளக்குகளும் அமைக்கப்பட்டுள்ளன. இப்பகுதியில் கூடுதலாக தெரு விளக்குகள் அமைக்க புதியதாக இரண்டு விண்ணப்பங்கள் பெறப்பட்டு முறையே ஒரு விண்ணப்பத்தில் இரண்டு எண்ணம் 1 x 40 W குழல் விளக்குகள் அமைப்பதற்கு மதிப்பீட்டுத் தொகை ரூ. 25,800/- செலுத்த கேட்புக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. மற்றொரு விண்ணப்பத்தில் 2 எண்ணம் 1 x 40W குழல் விளக்குகள் அமைப்பதற்கு மதிப்பீட்டுத் தொகை ரூ.52,303/- செலுத்த கேட்புக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. மதிப்பீட்டுத் தொகை இதுநாள் வரை செலுத்தப்படவில்லை, தொகை செலுத்தியவுடன் மின் இணைப்பு வழங்கப்படும்.

2. லஷ்மிநாராயணபுரத்தில் கிருஷ்ணமூர்த்தி நயினார் நகர் பகுதியில் தற்பொழுது மின் விளக்குகள் ஏதும் இல்லை. இந்த பகுதிக்கு தெரு மின் விளக்கு வேண்டி இதுநாள் வரை விண்ணப்பம் ஏதும் பெறப்படவில்லை. விண்ணப்பம் பெறப்பட்டால் தெரு விளக்கு அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

[2010 நவம்பர் 12

3. பண்ருட்டி நகர் இணைப்புச் சாலையில் தற்பொழுது 5 எண்ணம் சோடியம் ஆவி விளக்குகள் மற்றும் 22 எண்ணம் 1 x 40W குழல் விளக்குகள் உள்ளன. இந்தப் பகுதிக்கு கூடுதல் தெரு மின் விளக்கு வேண்டி விண்ணப்பம் ஏதும் பெறப்படவில்லை. விண்ணப்பம் பெறப்பட்டால் தெரு விளக்கு அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

30—

மின் கம்பிகளை மாற்றி அமைத்தல்

வினா எண் 101170—டாக்டர் க. நெடுஞ்செழியன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கபிலர்மலை தொகுதி, கபிலர்மலை ஒன்றியம், ஜமீன் எளம்பள்ளிக்கு நல்லூர் துணை மின் நிலையத்திலிருந்து செல்லும் 60 ஆண்டுகள் பழமையான மின் கம்பிகளை மாற்ற அரசு முன் வருமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்க்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

கபிலர்மலை தொகுதி, கபிலர்மலை ஒன்றியம், ஜமீன் எளம்பள்ளி பகுதியில் உள்ள மின்கம்பிகள் 1972 ஆம் ஆண்டு நிறுவப்பட்டவையாகும். (37 ஆண்டுகளுக்கு முன்) 60 ஆண்டுகால பழமையான மின் கம்பிகள் எவையும் அப்பகுதியில் இல்லை. இருப்பினும், தேவைக்கேற்ப பகுதிவாரியாக கம்பிகள் மாற்றி அமைக்க வாரிய விதிமுறைகளின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

31—

இலவச மின்சாரம்

வினா எண் 101889—திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மீன் பண்ணைகளுக்கு இலவச மின்சாரம் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

2010 நவம்பர் 12]

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

மீன் பண்ணைகளுக்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

32—

அலுவலகம்

வினா எண் 102966—திரு. து. அமரமூர்த்தி: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரியலூர் மாவட்டத்தில், அரியலூர் கோட்டப் பொறியாளர் அலுவலகத்திற்கு பதிலாக ஜெயங்கொண்டத்தை தலைமையிடமாகக் கொண்ட கோட்டப் பொறியாளர் அலுவலகம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெரம்பலூர் மின் பகிர்மான வட்டம், அரியலூர் மற்றும் பெரம்பலூர் ஆகிய இரண்டு கோட்டப் பொறியாளர் அலுவலகங்களை மட்டுமே தன்னகத்தே கொண்டு இயங்கி வருகிறது. மேலும், அரியலூர் மாவட்டத்தில், அரியலூர் கோட்டப் பொறியாளர் அலுவலகத்திற்கு பதிலாக ஜெயங்கொண்டத்தை தலைமையிடமாகக் கொண்ட கோட்டப் பொறியாளர் அலுவலகம் அமைக்கும் திட்டம் ஏதும் தமிழ்நாடு மின் வாரியத்திடம் இல்லை.

33—

மின் வசதி

வினா எண் 104539—திரு. ஞா. ஜாண் ஜோசப்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2010 நவம்பர் 12

(அ) விளவங்கோடு தொகுதி, குழித்துறை நகராட்சி, மார்த்தாண்டம், களியல் வருவாய் கிராம மலையோரப் பகுதிகளில் கம்பிவடம்மூலம் மின்வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விளவங்கோடு தொகுதி, குழித்துறை நகராட்சி, மார்த்தாண்டம், களியல் வருவாய் கிராம மலையோரப் பகுதிகளாகிய சிறுகடத்துக்கானி, ஒருநூறாம் வயல், கிழமன்னடி, மேலமன்னடி, தேக்கமுடி, புளியமுட்டுகாளி ஆகிய பகுதிகளுக்கு மின் விரிவாக்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும் வெல்லருக்கு, வட்டப்பாறை மற்றும் குறத்தி மலை ஆகிய பகுதிகளுக்கு மின் இணைப்பு வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

34—

மின் இணைப்பு

வினா எண் 107239—திருமதி ஜி. லதா: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மின் வசதி இல்லாத அனைத்து ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகளுக்கு மின் இணைப்பு வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் மின் வசதி இல்லாத ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகளுக்கு மின் இணைப்பு கோரி விண்ணப்பித்தால் மின் வசதி செய்து தரப்படும்.

2010 நவம்பர் 12]

35—

24 மணி நேர மின்சாரம்

வினா எண் 107799—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, வல்லிபுரம் ஊராட்சியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு 24 மணி நேரமும் மின்சாரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு தொகுதி, வல்லிபுரம் ஊராட்சியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு நெரும்பூர் 33/11 கி.வோ. துணைமின் நிலையத்திலிருந்து பெரும்பேடு 11 கி.வோ. மின் பாதையின் வழியாக மின்சாரம் வழங்கப்படுகிறது. மேலும், மேற்படி சுகாதார நிலையம் கிராமப்புற மின் பாதையில் உள்ளதால் இரண்டு மணி நேரம் தவிர, மற்ற நேரங்களில் சீரான மின்சாரம் தடை இல்லாமல் வழங்கப்படுகிறது.

36—

புதிய மின் கம்பிகள் அமைத்தல்

வினா எண் 107802—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியத்தில் பழுதடைந்த மின் கம்பிகளை மாற்றி, புதிய மின் கம்பிகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

திருக்கழுக்குன்றம் ஒன்றியத்திற்கு உட்பட்ட சதுரங்கப்பட்டினம், மாமல்லபுரம், சூராடிமங்கலம், குழிப்பாந்தண்டலம் மற்றும் பட்டிக்காடு போன்ற பகுதிகளில் சுமார் 65.9 கி.மீ. பழுதடையும் நிலையில் உள்ள மின் கம்பிகள் கண்டறியப்பட்டு இதுவரை 44.7 கி.மீ. தூரத்திற்கு புதிய மின் கம்பிகளாக மாற்றப்பட்டுவிட்டன. மீதமுள்ள 21.2 கி.மீ. தூரத்திற்கு படிப்படியாக மாற்றப்படும்.

37—

நவீனமயமாக்குதல்

வினா எண் 108451—திரு. ஞா. செந்தமிழன்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சைதாப்பேட்டை, காவேரி நகர் பகுதியில் மின் உற்பத்தியை புதுப்பித்து நவீனமயமாக்கும் (RMU-Renovation Modernisation Unit) *திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா?*

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். இத்திட்டம் பரிசீலிக்கப்பட்டு, மின் வாரியத்தின் ஒப்புதல் கிடைத்த பின் மேற்கண்ட பணி விரைவில் தொடங்கப்படும்.

38—

தடையில்லா மின்சாரம்

வினா எண் 108475—திரு. இ. மகேந்திரன்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி நகராட்சிக்குட்பட்ட 24 வார்டுகளிலும் சீரான மின்சாரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

உசிலம்பட்டி 110/11KV *உப மின் நிலையத்திலிருந்து* 11KV *உசிலம்பட்டி நகர் பீடர் வழியாக உசிலம்பட்டி நகராட்சி எல்லைக்கு உட்பட்ட 24 வார்டுகளுக்கும், 2 மணி நேரத்திற்கு ஏற்கெனவே செய்தித்தாள்களில் வெளியிடப்பட்ட நேரங்களில் சுழற்சி முறை மின்தடை தவிர மற்ற நேரங்களில் தடையில்லா மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.*

2010 நவம்பர் 12]

39—

தெரு மின் விளக்குகள்

வினா எண் 110674—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், காவல்கிணறு சந்திப்பு மலர் ஏல மையத்தில் கூடுதல் மின் கம்பங்கள் அமைத்து மின் விளக்குகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்.

திருநெல்வேலி மாவட்டம், காவல்கிணறு சந்திப்பு மலர் ஏல மைய பகுதியில் கூடுதல் தெரு மின் விளக்கு வேண்டி இதுநாள் வரை விண்ணப்பம் ஏதும் பெறப்படவில்லை. விண்ணப்பம் பெறப்பட்டால் தெரு விளக்கு அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

40 —

குளிர்பதனக் கிடங்கு

வினா எண் 20433—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் விதைகளைப் பாதுகாக்கும் குளிர்பதனக் கிடங்கு துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) வால்பாறை தொகுதியில் விதைகள் பாதுகாப்பிற்கு என குளிர்பதனக் கிடங்கு அமைப்பதற்கு அவசியம் எதுவுமில்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

[2010 நவம்பர் 12

41—

மண் வளம்

வினா எண் 40785—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எதிர்காலத்தில் எந்தப் பயிரை அறிமுகப்படுத்தினாலும் "மண் வள நிலைமையை" அடிப்படையாகக் கொள்ள திட்டங்கள் வகுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

எதிர்காலத்தில் எந்தப் பயிரை அறிமுகப்படுத்தினாலும் "மண் வள நிலைமையை" அடிப்படையாகக் கொள்ள அரசிடம் திட்டமேதும் இல்லை. எனினும், தற்போது ஒவ்வொரு பகுதியின் மண் வளம், நில வளம், நீர் வளம், மழை அளவு மற்றும் பொருட்களின் விலை நிலவரத்தைக் கருத்தில் கொண்டே அந்தந்தப் பகுதிக்கேற்ற பயிர்கள் பரிந்துரை செய்யப்படுகின்றன.

42—

விற்பனை முனையம்

வினா எண் 95456—திரு. வை. காவேரி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையில் வேளாண்மை மொத்த (பெரிய) சந்தை (பெங்களூரு சபல் மார்க்கெட் போன்று) அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரையில் உத்தேசித்துள்ள விற்பனை முனையம், பெங்களூரு 'சபல் மார்க்கெட்' போன்று அனைத்து உள்கட்டமைப்பு வசதிகள் கொண்டதாக இருக்கும்.

இதற்காக மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், மொக்கம்பட்டி மற்றும் திருவாதவூரில் 50 ஏக்கர் நிலம் மாவட்ட நிர்வாகத்தால் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

LEGISLATIVE ASSEMBLY ... ALONE TRIUMPHS

2010 நவம்பர் 12]

இதற்கான திருத்திய சாத்தியக் கூறு அறிக்கை (Revised Feasibility Report) மற்றும் திட்டத் தகவல் குறிப்பு (Project Information Memorandum) நடுவண் அரசின் கொள்கை அளவிலான ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டு பரிசீலனையில் உள்ளது.

43—

வேளாண்மை மொத்த சந்தை

வினா எண் 95457—திரு. வை. காவேரி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலத்தில் வேளாண்மை மொத்த சந்தை (பெங்களூருவில் உள்ள சபல் மார்க்கெட் போன்று) அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* சேலத்தில் வேளாண்மை மொத்த சந்தை (பெங்களூருவில் உள்ள சபல் மார்க்கெட் போன்று) அமைக்கும் உத்தேசம் தற்போது அரசுக்கு இல்லை.

44—

கடலைக் கொள்முதல்

வினா எண் 97046—திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடி தொகுதி, ஆலங்குடி ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்மூலம் கடலைக் கொள்முதல் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) ஆலங்குடி தொகுதி, ஆலங்குடி ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்மூலம் கடலைக் கொள்முதல் செய்ய இயலாது.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

[2010 நவம்பர் 12

45—

பதப்படுத்தும் தொழிற்சாலை

வினா எண் 104047—டாக்டர் க. நெடுஞ்செழியன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலையில் அன்னாசிப்பழம் பதப்படுத்தும் தொழிற்சாலையை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

கொல்லிமலையில் இயங்கி வந்த அன்னாசி பழச்சாறு தொழிற்சாலை 1982 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு "லேம்ப் சொசைட்டி" மூலம் நிர்வகிக்கப்பட்டு வந்தது. போதிய வருவாய் இல்லாத காரணத்தினால், பதிவாளர் அவர்களின் ஆணைப்படி 1999 ஆம் ஆண்டு மூடப்பட்டது. தற்போது தொழிற்சாலையில் உள்ள தளவாட சாமான்களை ஏலம் விட உத்தரவிடப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்கண்ட அன்னாசி பழச்சாறு தொழிற்சாலை மீண்டும் செயல்பட சாத்தியக் கூறு இல்லை.

46—

ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்

வினா எண் 106145—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் கூடுதலாக ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் திறக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் கூடுதலாக ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

2010 நவம்பர் 12]

47—

பராமரிப்பு

வினா எண் 108313—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், மடத்துக்குளம் ஒழுங்குமுறை விற்பனைக் கூட வளாகத்தில் உள்ள உரக் கிடங்கை பராமரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், மடத்துக்குளம் ஒழுங்குமுறை விற்பனைக் கூட வளாகத்தில் உரக் கிடங்கு ஏதும் இல்லை. எனவே, அதனைப் பராமரிக்கும் வினா எழவில்லை.

48—

போலி விதைகள் விற்பனையைத் தடுத்தல்

வினா எண் 108314—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டத்தில் போலி மக்காச்சோள விதைகள் விற்பனை செய்வதைத் தடை செய்ய அரசு ஆவன செய்யுமா,

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) தமிழ்நாடு அரசின் விதைச்சான்றுத் துறையின்கீழ் செயல்படும் விதை ஆய்வுப் பிரிவின்மூலம் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படும் விதைகளின் தரம் மத்திய அரசின் விதைகள் சட்டம், *1966*, விதை விதிகள், *1968* மற்றும் விதை கட்டுப்பாட்டு ஆணை, *1983*-ன் படி உறுதி செய்யப்படுகிறது.

[2010 நவம்பர் 12

மேலும், அனைத்து விதை விற்பனை நிலையங்களும் விதை ஆய்வாளர்களால் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் தொடர்ந்து ஆய்வு செய்யப்பட்டு விற்பனைக்கு வைக்கப்பட்டிருக்கும் விதைக் குவியல்களில் விதை மாதிரிகள் எடுத்து பரிசோதனைக்கு அனுப்பப்பட்டு, விதையின் தரம் உறுதி செய்யப்படுகிறது. சட்ட மீறல்கள் காணப்படும் நிகழ்வுகளில் உரிய உற்பத்தியாளர்கள் /விற்பனையாளர்கள்மீது நீதிமன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உடுமலை வட்டாரத்தில் போலி மக்காச்சோள விதைகள் விற்பனை நிகழ்வுகள் ஏதும் வேளாண் துறையின் கவனத்திற்கு வரவில்லை. தரம் குறைந்த விதைகளை உற்பத்தி / விற்பனை செய்தால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) வினா எழாது.

49—

கரும்பு சாகுபடி பயிற்சி

வினா எண் 117298—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயிகளுக்கு நவீன கரும்பு சாகுபடி பற்றிப் பயிற்சி அளிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) ஆம். விவசாயிகளுக்கு நவீன கரும்பு சாகுபடி பற்றிப் பயிற்சி அரசால் அளிக்கப்பட்டு வருகிறது.

(ஆ) மானாமதுரை தொகுதி சிவகங்கையில் உள்ள தனியார் சர்க்கரை ஆலையான சக்தி சர்க்கரை ஆலை அலகு II-ன் கரும்பு ஒதுக்கீடு பகுதியாகும். சக்தி சர்க்கரை ஆலை மற்றும் தமிழக அரசின்மூலம் விவசாயிகளுக்குக் கரும்பு சாகுபடியில் புதிய தொழில்நுட்பங்கள் குறித்த பல்வேறு பயிற்சிகள் கொடுக்கப்பட்டு வருகிறது. அரசு வேளாண்மைத் துறை உழவர் பயிற்சி நிலையம் மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்மூலம் கரும்பு

சாகுபடியில் புதிய தொழில்நுட்பங்கள், சொட்டுநீர் பாசனம், ஒருங்கிணைந்த உர நிர்வாகம், ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு ஆகிய பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. மேலும் திருச்சிராப்பள்ளி வேளாண் அறிவியல் நிலையம் (KVK) மூலமும் கரும்பு சாகுபடி குறித்துப் பல்வேறு பயிற்சிகள் விவசாயிகளுக்கு அவ்வப்போது அளிக்கப்பட்டு வருகின்றன.

50—

நவீனக் கழிப்பிடம் மற்றும் குடிநீர்க் குழாய்

வினா எண் 36388—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் நவீனக் கழிப்பிடம் கட்டவும் குடிநீர்க் குழாய் அமைக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்ட நீதிமன்ற வளாகத்தில், ஏற்கெனவே இரண்டு கட்டணக் கழிப்பிடங்கள் (ஆண்/பெண்), பயன்பாட்டில் உள்ளன. மேலும், நவீனக் கழிப்பிடம் கட்டுவது மற்றும் குடிநீர்க் குழாய் அமைப்பதற்கான செயற்குறிப்பு சென்னை உயர் நீதிமன்றத்திலிருந்து பெறப்படும் முன்னுரிமைப் பட்டியலில் இடம் பெறும்பட்சத்தில், இடவசதி மற்றும் செயற்குறிப்பின் நிதிச் செலவினத்திற்கிணங்க அரசு தக்க நடவடிக்கை மேற்கொள்ளும்.

51—

அடிப்படை வசதிகள்

வினா எண் 39278—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை நீதிமன்றத்திற்கு புதிய தளவாடச் சாமான்கள் வழங்கி குடிநீர் வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை நீதிமன்றத்திற்கு புதிய தளவாடச் சாமான்கள் வழங்கி குடிநீர் வசதி செய்வதற்கான செயற்குறிப்பு சென்னை உயர் நீதிமன்றத்திலிருந்து பெறப்படும் முன்னுரிமைப் பட்டியலில் இடம் பெறும்பட்சத்தில், அதன் பயன்பாடு மற்றும் நிதிச் செலவு ஆகியவற்றிற்கேற்ப அரசு தக்க நடவடிக்கை மேற்கொள்ளும்.

52—

மின் தூக்கி மற்றும் அறைகலன்கள்

வினா எண் 48922—திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் மின் தூக்கி அமைக்கப்படவும் நீதிமன்றங்களில் போதிய அறைகலன்கள் வழங்கப்படவும் அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

வேலூர் மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் மின் தூக்கி அமைப்பதற்கும் நீதிமன்றங்களில் போதிய அறைகலன்கள் வழங்கப்படுவதற்குமான செயற்குறிப்பு சென்னை உயர் நீதிமன்றத்திலிருந்து பெறப்படும் முன்னுரிமைப் பட்டியலில் இடம் பெறும்பட்சத்தில், நிதிநிலைக்கேற்ப அரசு தக்க நடவடிக்கை மேற்கொள்ளும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2010 நவம்பர் 12]

53—

பேருந்து தின விழா

வினா எண் 117687—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேருந்து தின விழாவினை (பஸ் டே) தடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மாணவர்கள், பொது மக்கள் மற்றும் ஓட்டுநர்/ நடத்துநர்களிடையே நல்லுறவைப் பேணுவதன் பொருட்டு மாணவர்கள் மற்றும் பொது மக்கள் விருப்பத்தின்பேரில் பேருந்து தின விழா, பேருந்தின் இயக்கத்திற்கு எவ்வித இடையூறும் ஏற்படாவண்ணம் அனுசரிக்கப்படுகிறது. மேற்காண் பேருந்து தின விழா அனுசரிக்கப்படுவது அரிதாகவே காணப்படுகிறது. எனவே, இதனைத் தடுப்பதற்கான அவசியம் எழாது.

54—

கவரிங் நகை தயாரிப்புத் தொழில்

வினா எண் 45108—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையில் சிறு தொழில் மேம்பாட்டு நிறுவனம்மூலம் கவரிங் நகை தயாரிப்புத் தொழில் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டத்தில், சிவகங்கை நகரத்திலும், காரைக்குடியில் தேவகோட்டை சாலையிலும் இரண்டு அரசு தொழிற்பேட்டைகள் நிறுவப்பட்டுள்ளன. இதுமட்டுமல்லாது

மானாமதுரை வட்டத்தில் கிருங்கா கோட்டையில் ஒரு தொழிற்பேட்டை 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தால் அமைக்கப்பட்டுள்ளது. 21.85 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டுள்ள இத்தொழிற்பேட்டையில் ஐந்து தொழிற்கூடங்கள் 1.5 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டுள்ளன. நீண்ட காலமாக இங்கு தொழில் துவங்க தொழில் முனைவோர்கள் முன்வராத காரணத்தால் எஞ்சியுள்ள 20.35 ஏக்கர் நிலங்கள் மேம்படுத்தப்படாமல் இருக்கின்றன.

இந்நிலையில் வேறு ஒரு தொழிற்பேட்டை மானாமதுரையில் அமைக்க இயலாத சூழ்நிலை நிலவுகிறது. கவரிங் நகைத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் இத்தொழிற்பேட்டையில் தொழில் துவங்க முன்வருவார்களேயானால், எஞ்சியுள்ள நிலம் மேம்படுத்தப்பட்டு மேற்கொண்டுள்ள தொழில் முனைவோருக்கு தொழில் மனைகள் வழங்க இயலும்.

55—

தொழிற்பேட்டை

வினா எண் 92508—திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடி தொகுதி. ஆலங்குடியில் தொழிற்பேட்டை ஒன்று அரசின் சார்பில் அமைத்துக் கொடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி, ஆலங்குடியில் புதிதாக தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் பரிசீலனையில் இல்லை.

போதுமான நிதி ஆதாரங்களுடனும், தொழிற்திட்டங்களுடனும் தொழில் துவங்க ஆர்வமுள்ள 20-க்கும் குறையாத தொழில் முனைவோர் திருப்பித் தரப்படாத ஒப்பளிப்புத் தொகையுடன்

2010 நவம்பர் 12]

(Commitment Charges) முன்வந்தால் புதிய தொழிற்பேட்டை அமைப்பதற்கான நிலம், தொழில் முனைவோர் தேவை ஆகியவற்றின் அடிப்படையில் மாவட்ட ஆட்சியர், பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம் மற்றும் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்துடன் கலந்தாய்வு செய்து தொழிற்பேட்டை அமைப்பதற்கான மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

56—

புதிய தொழிற்பேட்டை

வினா எண் 92510—திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குடி தொகுதி, கிரமங்கலத்தில் புதிய தொழிற்பேட்டை அரசின் சார்பில் அமைத்துக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி, கிரமங்கலத்தில் புதிதாக தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

போதுமான நிதி ஆதாரங்களுடனும், தொழிற்திட்டங்களுடனும் தொழில் துவங்க ஆர்வமுள்ள 20-க்கும் குறையாத தொழில் முனைவோர் திருப்பித் தரப்படாத ஒப்பளிப்புத் தொகையுடன் (Commitment Charges) முன்வந்தால் புதிய தொழிற்பேட்டை அமைப்பதற்கான நிலம், தொழில் முனைவோர் தேவை ஆகியவற்றின் அடிப்படையில் மாவட்ட ஆட்சியர், பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம் மற்றும் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தடன் கலந்தாய்வு செய்து தொழிற்பேட்டை அமைப்பதற்கான மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

57—

தொழிற்பேட்டை அமைத்தல்

வினா எண் 109043—திரு வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொரப்பூர் தொகுதியில் தொழிற்பேட்டை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டத்தில், மொரப்பூர் வட்டத்தில் போதிய தொழில் முனைவோர்கள் முன்வராத காரணத்தினால் சிட்கோ தொழிற்பேட்டை இதுவரை தொடங்கப்படவில்லை. ஆனால், மொரப்பூரிலிருந்து 25 கி.மீ. தொலைவில் உள்ள ஊத்தங்கரை என்னும் இடத்தில் அரசின்மூலம் 1996-ல் 41.00 ஏக்கர் பரப்பளவில் புதிய தொழிற்பேட்டை தொடங்கப்பட்டது. 2006 ஆம் ஆண்டில் 5 புதிய தொழிற்கூடங்கள் கட்டப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்டது. போதிய தொழில் முனைவோர்கள் தொழில் துவங்க முன்வாரத காரணத்தினால் மீதமுள்ள 38 ஏக்கர் நிலப்பரப்பு மேம்படுத்தப்படாமல் உள்ளது. ஆர்வமுள்ள தொழில் முனைவோர் கணிசமான அளவில் முன்வந்தால் புதிதாக தொழிற்பேட்டை அமைப்பதற்கான நிலம், தொழில் முனைவோர் தேவை ஆகியவற்றின் அடிப்படையில் மாவட்ட ஆட்சியருடன் கலந்தாலோசித்து கருத்தாய்வு செய்து மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

58—

கிராம நிர்வாக அலுவலர்

வினா எண் 117252—திரு. எஸ். ஜான் ஜேக்கப்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் கிராம நிருவாக அலுவலர் பணிக்காலியிடம் எவ்வளவு உள்ளது?

(ஆ) உடனடியாக இக்காலியிடங்களை நிரப்ப அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிராம நிருவாக அலுவலர் நிலையில் 15-3-2010 அன்றைய நிலையிலான 3,218 காலிப்பணியிடங்களை நிரப்பிட அரசாணை (நிலை) எண் 123, வருவாய்த் துறை,

2010 நவம்பர் 12]

நாள் 11-3-2010-ல் ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. அதன் விவரம் பின்வருமாறு:

(1)	(2)		(3)
1.	தமிழ்நாடு தேர்வாணையம் (காத்திருப்போர் பட்டியல்) மூலம் ஒதுக்கீடு	=	443
2.	தமிழ்நாடு தேர்வாணைய போட்டித் தேர்வுமூலம் நியமனம்	=	1,576
3.	தமிழ்நாடு தேர்வாணைய போட்டித் தேர்வு (தாழ்த்தப்பட்டோர்/ பழங்குடியினருக்கான சிறப்பு நேரடித் தேர்வு) மூலம் நியமனம்	=	1,077
4.	மாவட்ட ஆட்சியர்களால் கருணை அடிப்படைமூலம் நியமனம் (சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்மூலம்)	=	525
	மொத்தம்		3,621

இதன் தொடர்பான தொடர் நடவடிக்கைகள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மற்றும் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களால் எடுக்கப்பட்டு வருகின்றன.

59—

கட்டடம்

வினா எண் 37901—திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, காடாம்புலியூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வருவாய்த் துறையினர் வசம் இருந்த நிலம் உட்பிரிவு செய்யப்பட்டு, அதன்படி சர்வே எண் 554/9, காடாம்புலியூர் கிராமத்தில் 0.06.0 ஏர்ஸ் (0.15 சென்ட்) நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, புறங்கனி ரோடு, வடலூர்-பண்ருட்டி நெடுஞ்சாலை, காடாம்புலியூர்-607 103 என்ற முகவரியில் உள்ள நிலத்தில், அரசாணை (நிலை) எண் 105, வணிக வரி மற்றும் பதிவுத் துறை, நாள் 7-9-2006-ன்படி, புதிய அலுவலக கட்டடம் கட்டப்பட்டு, 15-12-2008 முதல் காடாம்புலியூர் சார்பதிவகம், அரசுக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது.

60—

புதிய கட்டடம்

வினா எண் 63594—திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்: *மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மதுரை மாநகரில் துணை பதிவுத் துறைத் தலைவர் அலுவலகம், மாவட்ட பதிவாளர் அலுவலகம் மற்றும் சார்பதிவாளர் அலுவலகங்களை ஒருங்கிணைத்து ஒரே கட்டடத்தில் இயங்குவதற்கு ஏதுவாக புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரையில், துணை பதிவுத் துறைத் தலைவர் அலுவலகத்துடன் பிற பதிவு அலுவலகங்களும் அமையும் வண்ணம், மதுரை தாலுகா, ஒத்தக்கடை இராஜகம்பீரம் கிராமப் புல எண் 80/4-ல் 0.04.5 ஏர்ஸ் 80/6-ல் 0.12.05 ஏர்ஸ் ஆக மொத்தம் 0.17.0 ஏர்ஸ் அல்லது 0.42 சென்ட் நிலத்தில் ஒருங்கிணைந்த வளாகம் அமைத்திட, கட்டுமானப் பணிக்கான பூர்வாங்கப் பணிகள் பொதுப் பணித் துறையால் துவங்கப்பட்டுள்ளன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2010 நவம்பர் 12]

61—

இடைத்தரகர்

வினா எண் 108184—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் பத்திரப் பதிவு அலுவலகங்களில் இடைத்தரகர் முறையை ஒழிக்க அரசு விரைந்து நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) இடைத்தரகர்களை அறவே ஒழித்திட, பதிவுச் சட்டத்தில் 'இடைத்தரகர்' என்பதற்கான விளக்கம் தரப்பட்டு அவர்கள்மீது எடுக்கப்படவேண்டிய நடவடிக்கை குறித்தும் விளக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் பதிவு அலுவலகங்களில் இடைத்தரகர்கள் அலுவலகப் பணிக்கு இடையூறு விளைவித்தால் அவர்கள்மீது காவல் துறைக்கு புகார் அளித்து கைது செய்யப்பட இச்சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

(ஆ) எழவில்லை.

62—

நியாயவிலைக் கடை

வினா எண் 2574—திரு. இ. ஆறுமுகம்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் வட்டம், சிட்லம்பாக்கம் நியாய விலைக் கடையை மகளிர் சுய உதவிக் குழுக்கள்மூலம் நடத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

திருக்கழுக்குன்றம் வட்டம், பேரம்பாக்கம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் நடத்தும் சிட்லம்பாக்கம் கூட்டுறவு பகுதிநேர நியாயவிலைக் கடையில் 276 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. இக்கடையை மகளிர் சுய உதவிக் குழுக்கள் ஏற்று நடத்திட சாத்தியக் கூறுகள் இல்லை.

63—

பணி நியமனம்

வினா எண் 117355—திரு. எம்.என். கந்தசாமி: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டத்தில் பணிபுரிபவர்களுக்கு சிறப்புத் தேர்வு நடத்தி அரசுப் பணியில் நியமனம் செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம் மத்திய அரசின் கட்டுப்பாட்டின்கீழ் வருவதால் இத்திட்டத்தின்கீழ் பணிபுரிபவர்களுக்கு சிறப்புத் தேர்வு நடத்தி அரசுப் பணியில் நியமனம் செய்யும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) எழவில்லை.

64—

பயிற்சி நிலையம்

வினா எண் 106336—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையில் அர்ச்சகர்களுக்கான பயிற்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 1, தமிழ் வளர்ச்சி, பண்பாடு மற்றும் அறநிலையத் (அ.நி.4-2) துறை, நாள் 2-1-2007-ல் வெளியிடப்பட்ட ஆணையின் அடிப்படையில் முதற்கட்டமாக

2010 நவம்பர் 12]

மதுரை, பழநி, திருச்செந்தூர், திருவண்ணாமலை, சென்னை மற்றும் திருவரங்கம் ஆகிய ஆறு இடங்களில் அர்ச்சகர்களுக்கான பயிற்சி நிலையங்கள் துவங்கப்பட்டுள்ளன. எனவே, இந்த அரசாணையில் தெரிவிக்கப்பட்ட இடங்களைத் தவிர வேறு இடங்களில் அர்ச்சகர் பயிற்சி நிலையங்களை தொடங்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

65—

புதுப்பித்தல்

வினா எண் 107758—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாமல்லபுரம், நெம்மேலி ஆளவந்தார் நினைவிடத்தைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

மாமல்லபுரம், நெம்மேலி ஆளவந்தார் அறக்கட்டளை ஸ்தாபகருக்கு நெம்மேலி கிராமத்தில் திருக்கோயில் (நினைவிடம்) அமையப்பெற்றுள்ளது. இவ்விடத்தில் தினசரி பூசைகளும், மாதந்தோறும் திருநட்சத்திர பூசையும் மற்றும் ஆண்டுக்கொருமுறை குரு பூசையும் மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இத்திருக்கோயிலில் நடைபெறும் குரு பூசை திருவிழாவிற்குத் திருக்கோயில் முழுவதும் செப்பனிட்டு, வர்ணம் தீட்டி நல்ல நிலையில் புதுப்பொலிவுடன் இருப்பதால் தற்போது இத்திருக்கோயிலை புதுப்பிக்க அவசியம் எழவில்லை.

66—

மாதச் சம்பளம்

வினா எண் 108574—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள கிராமக் கோயில் பூசாரிகளுக்கு மாதச் சம்பளம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2010 நவம்பர் 12

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகத்திலுள்ள கிராமப்புற திருக்கோயில்களின் ஆண்டு வருமானம் ரூ.5000/-க்கும் குறைவாக இருப்பதால், இத்திருக்கோயில்களின் பூசாரிகளுக்கு மாத ஊதியம் வழங்க இயலாத நிலை இருந்து வருகிறது. மேலும், கிராமப்புறத் திருக்கோயில் பூசாரிகளுக்கு மாதச் சம்பளம் வழங்குவதற்கு அரசிடம் திட்டம் ஏதுமில்லை.

67—

நவீனப்படுத்துதல்

வினா எண் 114440—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாமல்லபுரம், நெம்மேலி ஆளவந்தார் அறக்கட்டளையில் உள்ள தங்கும் அறைகளை நவீனப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

காஞ்சிபுரம் மாவட்டம், மாமல்லபுரம், நெம்மேலி ஆளவந்தார் அறக்கட்டளை சட்டப்பிரிவு 46(3)-ன்கீழ் விளம்புகை செய்யப்பட்ட அறக்கட்டளையாகும். இதன் நிர்வாகம் நிலை-2 செயல் அலுவலரால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. காஞ்சிபுரம் உதவி ஆணையர் தக்காராக உள்ளார். இவ்வறக்கட்டளையின் உதவித்தொகை நிர்ணய வருமானம் பசலி 1418-க்கு ரூ.19,62,948/- இவ்வறக்கட்டளைக்குச் சொந்தமான தங்கும் விடுதி, திருமணக்கூடம் ஆகியன ரூ.9.23 இலட்சம் மதிப்பீட்டில் அறக்கட்டளை நிதிமூலம் வர்ணம் தீட்டப்பட்டு புதுப்பொலிவுடன் காணப்படுகிறது.

2010 நவம்பர் 12]

68—

சுற்றுச்சூழல் பாதுகாப்பு

வினா எண் 106285—திரு. ஆர்.எம். பழனிசாமி: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மொடக்குறிச்சி தொகுதியிலுள்ள காளிங்கராயன் வாய்க்காலில் சாயக்கழிவு, தோல் கழிவுகள் கலப்பதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காளிங்கராயன் வாய்க்கால் மற்றும் காவிரி ஆறு போன்ற நீர் ஆதாரங்களை மாசுபடாமல் தடுப்பது மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு சம்பந்தமாக, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகையில், சென்னை உயர் நீதிமன்றம் 4-7-2007 மற்றும் 9-8-2007-ல் பிறப்பித்த உத்தரவில் அனைத்து சாய மற்றும் தோல் பதனிடும் தொழிற்சாலைகளும் பூஜ்ய கழிவுநீர் வெளியீடு செய்வதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது. சுத்திகரிப்பு நிலையம் R.O., R.M.S. அமைக்காத தொழிற்சாலைகள்மீது மூடுதல் உத்தரவு மற்றும் அபராதம் விதித்தல் உட்பட கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் அங்கீகரிக்கப்படாத தொழிற்சாலைகள் உருவாகாமல் இருப்பதற்கு உள்ளாட்சி அமைப்புகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. ஈரோடு மாவட்ட நிர்வாகம் மூலமாக பல சாய மற்றும் சலவைப் பட்டறைகள் மூடி முத்திரையிடப்பட்டு நீதிமன்றத்தின் உத்தரவை அமல்படுத்தி வருகிறது. மேலும் மாவட்ட ஆட்சியரின் தலைமையில் பல துறைகள் இணைந்து கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டு சுற்றுச்சூழலைப் பாதுகாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. காவிரி ஆறு மற்றும் காளிங்கராயன் வாய்க்கால் மாசுபடாமல் இருப்பதற்காக தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

[2010 நவம்பர் 12

69—

தொகுப்பு வீடுகள்

வினா எண் 83049—சி. சண்முகவேலு: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை வட்டம், கோடந்தூர் வனப் பகுதியில் வசிக்கும் மலைவாழ் மக்களுக்கு தகர வீடுகளை மாற்றி தொகுப்பு வீடுகள் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை வட்டம், கோடந்தூர் வனப் பகுதியில் உள்ள மலைவாழ் மக்கள் குடியிருப்பில் 95 வீடுகள் உள்ளத்தில் 40 தொகுப்பு வீடுகள் கட்டப்பட்டுள்ளன. இவற்றில் உடுமலை பஞ்சாயத்து யூனியன்மூலம் 1988-89 ஆம் ஆண்டில் தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் (NREP) கீழ் 23 கான்கிரீட் கூரை வீடுகளும் மற்றும் ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் (JVVT) கீழ் 27 வீடுகளும் கட்டப்பட்டுள்ளன. இவ்வீடுகளில் ஏற்பட்ட பழுதுகளை நீக்க உடுமலை சரகரால் 2000-2001-ல் ரூ. 149,322/- செலவிடப்பட்டுள்ளது. மேற்படி திட்டங்களின்கீழ் நிதி ஒதுக்கப்படும்பட்சத்தில் மீதமுள்ள 55 தொகுப்பு வீடுகள் கட்டப்படும்.

70—

அகழி வெட்டுதல்

வினா எண் 118088—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, கவர்க்கல், கவர்க்கல், 2வது பிரிவு, ஆனைமுடி, பெரிய கல்லார், சின்னக் கல்லாறு, கல்லாறு, ஈட்டியாறு வரட்டுப்பாறை, லோயர்பாரளை, அப்பர்பாரளை, அணலி, ஸ்டேன்மோர், சவரங்காடு, ரொட்டிக் கடை, சக்தி வாட்டர்பால்ஸ், பழையகாடு, வேவர்லி, செல்லாலிப்பாறை, வாட்டர்பால்ஸ் கொட்டபாத்தி ஆகிய எஸ்டேட்டுகளில் மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் யானைகள் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த அகழி வெட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 நவம்பர் 12]

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கவர்க்கல், கவர்க்கல் 2-வது பிரிவு, வரட்டுப்பாறை, லோயர்பாரளை, அப்பர்பாரளை, அணலி, ஸ்டேன்மோர், சவரங்காடு, ரொட்டிக் கடை, சக்தி வாட்டர்பால்ஸ், பழையகாடு, வேவர்லி, செல்லாலிப்பாறை, வாட்டர்பால்ஸ், கொட்டபாத்தி, ஆனைமுடி, சின்னக் கல்லாறு, பெரிய கல்லாறு, கல்லாறு, ஈட்டியாறு ஆகியவை வால்பாறை மற்றும் மானாம்பள்ளி வனச் சரக எல்லைக்குட்பட்ட தனியார் தோட்டக் குடியிருப்புப் பகுதிகளாகும். எனவே, இப்பகுதிகளில் வனத் துறை வாயிலாக அகழி வெட்டுவது குறித்த கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

71—

அகழி வெட்டுகள்

வினா எண் 118113—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, காடம்பாறை, ஷேக்கல்முடி, சி.டி.ஆர்., மானாம்பள்ளி பவர்ஹவுஸ், காப்பிக்காடு, செங்குத்துப்பாறை, குரங்குமுடி, மாணிக்கா, முடிஸ், சங்கிலி ரோடு, ஹைபாரஸ்ட், வாகமலை, எம்.ஜி.ஆர். நகர், புதுத்தோட்டம், தலநார், சிலோன் காலனி, கோ.காலனி, துளசிங் நகர், வாழைத் தோட்டம், காமராஜ் நகர் ஆகிய எஸ்டேட்டுகளில் மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் யானைகள் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த அகழி வெட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஷேக்கல்முடி, சி.டி.ஆர்., மானாம்பள்ளி பவர் ஹவுஸ், செங்குத்துப்பாறை, மாணிக்கா, முடிஸ், சங்கிலி ரோடு, ஹைபாரஸ்ட், வாகமலை ஆகியவை மானாம்பள்ளி வனச் சரக எல்லைக்குட்பட்ட பகுதிகளாகும். மேற்குறிப்பிட்ட பகுதிகளில்

[2010 நவம்பர் 12

மானாம்பள்ளி பவர்ஹவுஸ் தவிர மீதமுள்ள பகுதிகளில் எப்பொழுதாவது யானைகள் சேதம் ஏற்படுத்துவது உண்டு. இவை தவிர மானாம்பள்ளி பகுதிகளில் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குச் சொந்தமான குடியிருப்புகள் மட்டுமே உள்ளன. மேற்படி பகுதிகளில் மானாம்பள்ளி பவர்ஹவுஸ் குடியிருப்புப் பகுதியைத் தவிர மற்ற பகுதிகளில் யானையின் வழித்தடம் உள்ளது. மேலும், மேற்படி மானாம்பள்ளி பவர்ஹவுஸ் குடியிருப்புப் பகுதியைத் தவிர சுற்றிலும் காப்பு வனமாக உள்ளது. மீதமுள்ள இடங்கள் தனியார் எஸ்டேட் தோட்டப் பகுதிகளாக இருப்பதால் அவற்றைச் சுற்றிலும் யானைகள் வராமல் தடுக்க அகழி வெட்டுவது குறித்த கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

காட்பாறை, எம்ஜிஆர் நகர், புதுத் தோட்டம், தலநார் சிலோன் காலனி, கோ-ஆப்ரேடிவ் காலனி, துளசிங் நகர், வாழைத் தோட்டம், காமராஜர் நகர் ஆகியவை வால்பாறை வனச் சரக எல்லைக்குட்பட்ட பகுதிகளாகும். இவற்றில் புதுத் தோட்டம் மற்றும் தலநார் ஆகியவை மட்டும் தனியார் தோட்ட நிர்வாகங்களின்கீழ் வருகின்ற குடியிருப்புப் பகுதிகளாகும். இப்பகுதிகளில் எப்பொழுதாவது யானைகள் சேதம் ஏற்படுத்துவது உண்டு. இவை தவிர காடாம்பாறை பகுதியில் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குச் சொந்தமான குடியிருப்புகள் மட்டுமே உள்ளன. எம்ஜிஆர் நகர், சிலோன் காலனி, கோ-ஆப்ரேடிவ் காலனி, துளசிங் நகர், வாழைத் தோட்டம் மற்றும் காமராஜர் நகர் ஆகியவை வால்பாறை டவுன் பகுதியில் அமைந்துள்ள குடியிருப்புப் பகுதிகளாகும். இப்பகுதிகளில் யானை நடமாட்டம் ஏதுமில்லை. புதுத் தோட்டம் மற்றும் தலநார் ஆகிய இடங்கள் தனியார் தோட்டப் பகுதிகளாக இருப்பதால் அவற்றைச் சுற்றிலும் அகழி வெட்டுவது குறித்த கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

அட்டகட்டி தமிழ்நாடு மின்சார வாரிய குடியிருப்புப் பகுதிகளில் யானை நடமாட்டம் ஏதுமில்லை.

72—

அகழி வெட்டுதல்

வினா எண் 118134—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2010 நவம்பர் 12]

(அ) வால்பாறை தொகுதி, புதுக்காடு, பழைய வால்பாறை, சிவகாப்பி, முருகன், குரங்குமுடி, முடிஸ், சேடல்டேம், கடலைப்பாறை, ஹைபாரஸ்ட், வாகமலை, சங்கிலி ரோடு, ரொட்டிக் கடை, பிளாண்டிவேலி, சண்முகா, மானாம்பள்ளி, முருகாளி பஜார், கல்யாண பந்தல், உருளிக்கல் பெரியார் நகர், மக்கள் குடியிருப்பு, பெரியார் நகர், ஊசிமலை, ஊசிமலை மட்டம், அழியாறு, அட்டகட்டி பகுதி ஆகிய எஸ்டேட்டுகளில் மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் யானைகள் வராமல் தடுக்க அகழி வெட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்காடு, சிவகாப்பி, முருகன், குரங்குமுடி, முடிஸ், கடலைப்பாறை, ஹைபாரஸ்ட் வாகமலை, சங்கிலி ரோடு, மானாம்பள்ளி, முருகாளி பஜார், கல்யாணப்பந்தல், உருளிக்கல், பெரியார் நகர் ஆகியவை மானாம்பள்ளி வனச் சரக எல்லைக்குட்பட்ட தனியார் தோட்ட நிர்வாகங்களின்கீழ் வருகின்ற குடியிருப்புப் பகுதிகளாகும்.

பழைய வால்பாறை, ரொட்டிக் கடை, பிளாண்டிவேலி, சண்முகா, ஊசிமலை, ஊசிமலை மட்டம் ஆகியவை வால்பாறை வனச் சரக எல்லைக்குட்பட்ட தனியார் தோட்ட நிர்வாகங்களின் கீழ் வருகின்ற குடியிருப்புப் பகுதிகளாகும். அட்டகட்டியில் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குச் சொந்தமான குடியிருப்புகள் மட்டுமே அமைந்துள்ளன. மேற்சொன்ன பகுதிகளில் பழைய வால்பாறை, ரொட்டிக் கடை, பிளாண்டிவேலி, சண்முகா, ஊசிமலை, ஊசிமலை மட்டம் ஆகிய குடியிருப்புப் பகுதிகளில் எப்பொழுதாவது யானைகள் சேதம் ஏற்படுத்துவது உண்டு.

மேற்கண்ட இடங்கள் தனியார் தோட்டக் குடியிருப்புப் பகுதிகளாக இருப்பதால் இப்பகுதிகளில் வனத் துறை வாயிலாக அகழி வெட்டுவது குறித்த கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

73—

அகழி வெட்டுதல்

வினா எண் 118160—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பாறை தொகுதி, தாய்முடி, 1,2 பிரிவுகள், கருமலை, கருமலை பஜார், கருமலை 1,2 பிரிவுகள், சிறுகுன்றா, சிறுகுன்றா 1,2 பிரிவுகள், அக்காமலை 1,2 பிரிவுகள், அய்யர்பாடி முதல் பிரிவு, வெள்ளமலை டாப், வெள்ளமலை மட்டம், கெஜமுடி 1,2 பிரிவுகள், வாட்டர்பால்ஸ் முதல் பிரிவு ஆகிய எஸ்டேட்டுகளில் மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் யானைகள் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த அகழி வெட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாய்முடி 1, 2-வது பிரிவுகள், கெஜமுடி ஆகியவை மானாம்பள்ளி வனச் சரக எல்லைக்குட்பட்ட தனியார் தோட்ட நிர்வாகங்களின்கீழ் வருகின்ற குடியிருப்புப் பகுதிகளாகும். மேற்சொன்னவற்றில் கெஜமுடி, தாய்முடி மற்றும் முடிஸ் எஸ்டேட் பகுதிகளில் யானைகளின் வழித்தடம் செல்கிறது. மீதமுள்ள இடங்கள் தனியார் எஸ்டேட் தோட்டப் பகுதிகளாக இருப்பதால் அப்பகுதிகளில் யானைகள் வராமல் தடுக்க அகழி வெட்டுவது குறித்த கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

கருமலை பஜார், கருமலை 1,2 பிரிவுகள், சிறுகுன்றா 1,2 பிரிவுகள், அக்காமலை 1,2 பிரிவுகள், அய்யர்பாடி முதல் பிரிவு, வெள்ளமலை டாப், வெள்ளமலை மட்டம் மற்றும் வாட்டர்பால்ஸ் முதல் பிரிவு ஆகியவை வால்பாறை வனச் சரக எல்லைக்குட்பட்ட தனியார் தோட்ட நிர்வாகங்களின்கீழ் வருகின்ற குடியிருப்புப் பகுதிகளாகும். மேற்சொன்னவற்றில் கருமலை பஜார், கருமலை 1,2 பிரிவுகள், சிறுகுன்றா 1, 2 பிரிவுகள், அக்காமலை 1,2 பிரிவுகள், அய்யர்பாடி முதல் பிரிவு, வெள்ளமலை டாப், வெள்ளமலை மட்டம் பகுதி வரை யானைகளின் வழித்தடம் செல்கிறது. இப்பகுதிகளில் உள்ள குடியிருப்புகளில் எப்பொழுதாவது யானைகள் சேதம் ஏற்படுத்துவது உண்டு. மேற்கண்ட இடங்கள் தனியார் எஸ்டேட் தோட்டப் பகுதிகளாக இருப்பதால் அவற்றைச் சுற்றிலும் யானைகள் வராமல் தடுக்க அகழி வெட்டுவது குறித்த கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

2010 நவம்பர் 12]

74—

அகழி வெட்டுதல்

வினா எண் 118185—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, காஞ்சமலை, காஞ்சமலை 2-ம் பிரிவு, தோனிமுடி 1, 2-ம் பிரிவுகள், முத்துமுடி 1, 2-ம் பிரிவுகள் வில்லோனி 1, 2-ம் பிரிவுகள், உருளிக்கல் 1, 2-ம் பிரிவுகள், சோலையாறு டேம் வலது, இடது கரைகள், பன்னிமேடு பங்களா, பன்னிமேடு 1,2 பிரிவுகள் ஆகிய எஸ்டேட்டுகளில் மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் யானைகள் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த அகழி வெட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சமலை, காஞ்சமலை 2-ம் பிரிவு, தோனிமுடி 1,2 பிரிவுகள், முத்துமுடி 1,2 பிரிவுகள், உருளிக்கல் 1,2 பிரிவுகள், சோலையாறு வலது, இடது கரைகள், பன்னிமேடு பங்களா டிவிசன் மற்றும் 1,2 பிரிவுகள் ஆகியவை மானாம்பள்ளி வனச் சரக எல்லைக்குட்பட்ட தனியார்த் தோட்ட நிர்வாகங்களின்கீழ் வருகின்ற குடியிருப்புப் பகுதிகளாகும். இப்பகுதிகளில் யானைகளின் வழித்தடம் செல்கிறது. இப்பகுதிகளில் உள்ள குடியிருப்புகளில் எப்பொழுதாவது யானைகள் சேதம் ஏற்படுத்துவது உண்டு. இக்குடியிருப்புப் பகுதிகள் அனைத்தும் தனியார் தோட்ட நிர்வாகங்களின் கட்டுப்பாட்டில் வருவதால் அவற்றைச் சுற்றிலும் யானைகள் வராமல் தடுக்க அகழி வெட்டுவது குறித்த கருத்துரு அரசின் பரிசிலனையில் இல்லை.

காஞ்சமலை, காஞ்சமலை 2-வது பிரிவு, வில்லோனி 1 மற்றும் 2-ம் பிரிவுகள் ஆகியவை வால்பாறை வனச் சரக எல்லைக்குட்பட்ட தனியார் தோட்ட நிர்வாகங்களின்கீழ் வருகின்ற குடியிருப்புப் பகுதிகளாகும். மேற்சொன்னவற்றில் காஞ்சமலை, காஞ்சமலை 2-ம் பிரிவின் ஊடே சிறுகுன்றா S.F.-50 முதல் வெள்ளமலை, நடுமலை, கருமலை, அய்யர்பாடி பகுதிவரை யானைகளின் வழித்தடம் செல்கிறது. இப்பகுதிகளில் உள்ள குடியிருப்புகளில் எப்பொழுதாவது யானைகள் சேதம்

ஏற்படுத்துவது உண்டு. இவை தவிர வில்லோனி *1* மற்றும் *2*-ம் பிரிவுகளில் யானைகளின் வழித்தடம் ஏதுமில்லை. இக்குடியிருப்புப் பகுதிகள் அனைத்தும் தனியார் தோட்ட நிர்வாகங்களின் கட்டுப்பாட்டில் வருவதால் அவற்றைச் சுற்றிலும் யானைகள் வராமல் தடுக்க அகழி வெட்டுவது குறித்த கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

75—

அகழி வெட்டுதல்

வினா எண் 118213—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பாறை தொகுதி, பச்சமலை, பச்சமலை 2-வது பிரிவு, நடுமலை 1,2 பிரிவுகள், நல்லகாத்து 1,2 பிரிவுகள், இஞ்சிப்பாறை 1,2 பிரிவுகள், சிங்கோனா 1,2 பிரிவுகள், சிங்கோனா பத்தாம்பாத்தி, அய்யர்பாடி, ஜெஇ பங்களா, அய்யர்பாடி, அய்யர்பாடி 2-வது பிரிவு ஷேக்கல்முடி, ஷேக்கல்முடி 2-வது பிரிவு, நல்லமுடி, நல்லமுடி 2-வது பிரிவு, வாட்டர்பால்ஸ் 2-வது பிரிவு, சோலையாறு, சோலையாறு 2,3 பிரிவுகள் வால்பாறை நகராட்சி 1-வது வார்டு, அட்டகட்டி பகுதி ஆகிய எஸ்டேட்டுகளில் மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் யானைகள் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த அகழி வெட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பச்சமலை, பச்சமலை 2-வது பிரிவு, நடுமலை 1,2-வது பிரிவு, அய்யர்பாடி ஜே.இ பங்களா, அய்யர்பாடி 2-வது பிரிவு, வாட்டர்பால்ஸ் 2-வது பிரிவு ஆகியவை வால்பாறை வனச் சரக எல்லைக்குட்பட்ட தனியார் தோட்டக் குடியிருப்புப் பகுதிகளாகும். நல்லகாத்து 1,2-வது பிரிவுகள் சின்கோனா பத்தாம்பாத்தி, ஷேக்கல்முடி, ஷேக்கல் முடி 2வது பிரிவு நல்லமுடி 2-வது பிரிவு, சோலையாறு, சோலையாறு 2,3 பிரிவுகள் ஆகியவை மானாம்பள்ளி வனச் சரக எல்லைக்குட்பட்ட தனியார் தோட்டக் குடியிருப்புப் பகுதிகளாகும். எனவே இப்பகுதிகளில் வனத் துறை வாயிலாக அகழி வெட்டுவது குறித்த கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

2010 நவம்பர் 12]

76—

தரைமட்டப் பாலம்

வினா எண் 6469—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை தொகுதி, ருத்திராபாளையம்—கொழுமம் வரை குள்ளகாரன் ஓடையில் தரைமட்டப் பாலம் அமைத்து தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

உடுமலைப்பேட்டை தொகுதி, ருத்திராபாளையம்-கொழுமம் வரை குள்ளகாரன் ஓடையில் தரைமட்டப் பாலம் அமைக்க கோரும் இடம் பொள்ளாச்சி (நெ) கோட்டப் பராமரிப்பிலுள்ள மாவட்ட இதர சாலையான கொழுமம்-கல்லாபுரம் சாலை கி.மீ. 1/2இல் உள்ளது. இந்த தரைமட்டப் பாலம் பழுதடைந்துவிட்டதால் அதை ஓர் உயர்மட்டப் பாலமாக மாற்ற ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் 2006-2007இன்கீழ் ரூ.45.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு மேற்படி பாலம் டிசம்பர் 2008 இல் முடிக்கப்பட்டு தற்போது போக்குவரத்து நடைபெற்று வருகிறது.

77—

ஒருங்கிணைந்த சாலை

வினா எண் 8004—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை தொகுதி, சித்தாண்டீஸ்வரர் கோயில் சாலை பழுதடைந்துள்ளது அரசுக்குத் தெரியுமா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, சித்தாண்டீஸ்வரர் கோயில் சாலையானது பொள்ளாச்சி (நெ) கோட்டப் பராமரிப்பில்

உள்ள கெங்கம்பாளையம்-சிங்காநல்லூர் சாலை முதல் சித்தாண்டீஸ்வரர் கோயில் சாலை கி.மீ.0/0-2/0 எனும் 2.0 கி.மீ. நீளமுள்ள ஒருவழித்தடமான மாவட்ட இதர சாலையாகும். இச்சாலையானது ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு திட்டம் (ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு திட்டம் 2006-2007)-ன்கீழ் ரூ.20.00 இலட்சத்திற்கு மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு மார்ச் 2007 இல் முடிக்கப்பட்டு, தற்பொழுது இச்சாலை நல்ல நிலையில் உள்ளது.

78—

தடுப்புச் சுவர்

வினா எண் 8013—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் கருமலை செல்லும் பாதையில் தடுப்புச் சுவர் ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறையில் கருமலை செல்லும் பாதையில் தடுப்புச் சுவர் கட்டக்கோரும் சாலை அய்யர்பாடி சாலையிலிருந்து கி.மீ.3/2-இல் பிரிந்து செல்லும் ஸ்டேன்மோர்-சிறுகுன்றா கி.மீ.0/0-8/850 சாலையாகும். இது பொள்ளாச்சி (நெ) கோட்டத்தினால் பராமரிக்கப்பட்டுவரும் மாவட்ட இதர சாலையாகும். கி.மீ.0/0-8/850 வரை நீளமுள்ள இச்சாலையில் தடுப்புச் சுவர் கட்டும் பணி ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் 2008-2009 இல் ரூ.15.00 இலட்சத்திற்கு பணி மேற்கொள்ளப்பட்டு 25-10-2008 இல் முடிவடைந்துள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2010 நவம்பர் 12]

79—

தடுப்புச் சுவர்

வினா எண் 8014—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறையில் கவர்க்கல் முன்னால் தடுப்புச் சுவர் கட்டித் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

பொள்ளாச்சி (நெ) கோட்டப் பராமரிப்பில் உள்ள பொள்ளாச்சி-வால்பாறை சாலை கி.மீ.0/0-64/0 வரையுள்ள மாநில நெடுஞ்சாலையாகும். மேற்படி சாலையின் போக்குவரத்துச் செறிவு 3317 PCU ஆகும். இந்த சாலையில் தடுப்புச் சுவர் கட்டக் கோரியுள்ள கவர்க்கல் எனும் இடம் கி.மீ.49/0-50/0 வரை உள்ள பகுதியாகும். மேற்படி இடத்தில் தடுப்புச் சுவர் கட்ட ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (CRIDP) 2008-2009 இல் கி.மீ.30/3-50/0 வரை ரூ.21.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு டிசம்பர் 2008-இல் பணி முடிக்கப்பட்டுவிட்டது.

80—

தரைப்பாலம்

வினா எண் 13213—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குன்றடம் ஊராட்சிக்குப்பட்ட ரங்கபாளையம்-வெள்ளக்கோவில் வரை தரைப்பாலம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குன்றடம் ஊராட்சிக்குட்பட்ட ரங்கபாளையம் முதல் வெள்ளக்கோவில் வரை தரைப்பாலம் அமைக்கக்

[2010 நவம்பர் 12

கோரியுள்ள பணியின் பெயர் "ரங்கபாளையம்—பெரமியம் இடையே வெள்ளக்கோவில் சாலை வரை அமராவதி ஆற்றில் தரைப்பாலம் அமைத்தல்" ஆகும். தரைப்பாலம் அமைக்க கோரப்பட்டுள்ள இடத்திற்கு சுமார் 200 மீட்டர் மேற்புறம் 'வலுவிழந்த பாலங்கள் திரும்பக் கட்டுதல்' பட்டியலில் "பெரமியம்—செல்லப்பிள்ளை கவுண்டன்புதூர் சாலை கி.மீ.0/2ல் அமராவதி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுதல் மற்றும் கி.மீ.0/0—1/3 வரை சாலை மேம்பாடு செய்தல்" எனும் பணிக்கு சுமார் ரூ.490.00 இலட்சம் தேவைப்படும். இப்பணி ஒட்டு மொத்தப் பிரேரணையில் சேர்க்கப்பட்டு, ஒப்புதல் கிடைக்கப் பெற்றதும், நபார்டு நிதியுதவி திட்டத்தின்கீழ், செயலாக்கம் செய்யப்பட உள்ளது. இப்பாலம் வழியாகவும் வெள்ளக்கோவில் சென்றடையலாம். எனவே, மேற்படி தரைப்பாலம் கட்ட கோரப்பட்ட இடத்திற்கு மிக அருகிலேயே இப்பாலம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளதால், சட்டமன்ற வினாவில் கேட்கப்பட்ட தரை மட்டப்பாலம் அவசியமில்லை.

81—

உயர்மட்டப் பாலம்

வினா எண் 30396—திரு. ஓ.கே. சின்னராஜ்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டுப்பாளையம் தொகுதி, காரமடை-தோலம்பாளையம் சாலை கி.மீ.8/10 புஜங்கனூரில் சாலையின் 'எஸ்' வளைவைத் தவிர்க்க உயர்மட்டப் பாலம் கட்டி நேர்சாலையாக மாற்ற அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

மேட்டுப்பாளையம் தொகுதி, காரமடை-தோலம்பாளையம் சாலை கோவை (நெ) கோட்டப் பராமரிப்பில் உள்ள "மாவட்ட முக்கிய சாலையானது" கி.மீ.0/0 முதல் 16/600 வரையுள்ளது. இச்சாலையில் கி.மீ.8/10இல் மூன்று கண் கொண்ட (8.60 m span) 30 skew வடிவமைப்பில் ஒரு உயர்மட்டப் பாலம் ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் 2008-2009இன்கீழ் ரூ.80.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ளப்பட்டு 27-6-2009இல் முடிக்கப்பட்டுள்ளது. தற்போது போக்குவரத்து சீராக நடைபெற்று வருகிறது.

2010 நவம்பர் 12]

82—

பாதுகாப்பு சுவர்

வினா எண் 40683—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை பிரதான சாலையில் மணல் சரிவு ஏற்படாதிருக்க ரிவிட்மெண்ட் அடிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை பிரதான சாலையானது பொள்ளாச்சி (நெ) கோட்டப் பராமரிப்பில் உள்ள பொள்ளாச்சி-வால்பாறை சாலை கி.மீ.0/0-64/0 எனும் 64.0 கி.மீ. நீளமுள்ள மாநிலச் சாலையாகும். (எஸ்.எச்.78) இச்சாலையில் மிக அத்தியாவசியமான இடங்களைத் தேர்வு செய்து கி.மீ.30/03-50/0 வரை உள்ள 20 கி.மீ. இடைப்பட்ட இடங்களில் பாதுகாப்பு சுவர் கட்டும் பணிக்கு ரூ.21 இலட்சத்திற்கு ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் 2008-2009 ஆம் ஆண்டில் ஒப்புதல் பெறப்பட்டு பணி துவங்கி 10/2008இல் முடிக்கப்பட்டது. மேலும், இச்சாலையில் கி.மீ.52/0-55/0 வரை உள்ள பகுதியில் கைப்பிடிச் சுவர் பழுதுபார்த்தல் பணிக்கு ரூ.4.70 இலட்சத்திற்கு பராமரிப்பு தலைப்பில் ஒப்பந்தப்புள்ளி கோரி பணி துவங்கப்பட்டு 11/2008-ல் முடிக்கப்பட்டது. மேலும், இச்சாலையில் உள்ள தடுப்புச் சுவர் கட்டும் பணிகள் வரும் நிதியாண்டுகளில் முன்னுரிமை அடிப்படையிலும் அரசின் நிதி நிலைமைப்படியும் எடுத்து செய்ய கருத்துரு தயார் செய்யப்பட்டு பரிசிலனையில் உள்ளது.

83—

சாலையை அகலப்படுத்துதல்

வினா எண் 46781—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், பளுகல் பேரூராட்சி, கண்ணிமாமூடு, மூருகுவாட்டுக்கோணம் சாலையை அகலப்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

நாகர்கோவில் (நெ) கோட்டப் பராமரிப்பில் உள்ள "மாவட்ட இதர சாலையான" இடைக்கோடு-கண்ணுமாமூடு சாலை கி.மீ.0/0-5/7.3.75மீ அகலம் கொண்ட ஒருவழிச் சாலை ஆகும். இச்சாலையில் கி.மீ. 3/0-3/6 வரையுள்ள பகுதியை மட்டும் அகலப்படுத்த கோரப்பட்டுள்ளது. இச்சாலையின் போக்குவரத்து செறிவு 1176 PCU ஆகும். போக்குவரத்து செறிவின் அடிப்படையிலும் மற்றும் அரசின் நிதி நிலைமைப்படியும் மாநில நெடுஞ்சாலைகளை இருவழித்தடமாகவும், மாவட்ட முக்கிய சாலைகளை இடைவழித்தடமாக அகலப்படுத்தும் பணிகள் படிப்படியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வரும் காலங்களில் வாகன போக்குவரத்து செறிவு அடிப்படையில் சாலையை அகலப்படுத்துவதற்கு பரிந்துரை செய்யப்படும்.

84—

பாலம் கட்டுதல்

வினா எண் 48529—திரு. ஜா. ஜாண் ஜோசப்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விளவங்கோடு தொகுதி, கடற்கரை கிராமமான இரயுமன் துறையில் ஏ.வி.எம். கால்வாய்க்கு குறுக்கே சுனாமி நிதியில் பாலம் கட்ட அரசு நிதி ஒதுக்கீடு செய்ய முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

விளவங்கோடு தொகுதி, கடற்கரை கிராமமான இரயுமன் துறையில் ஏ.வி.எம். கால்வாய்க்கு குறுக்கே சுனாமி நிதியில் பாலம் கட்ட குறிப்பிடப்பட்டுள்ள சாலையானது நாகர்கோவில் (நெ) கோட்டப் பராமரிப்பிலுள்ள, நீரோடி-இரயுமன்துறை சாலை

2010 நவம்பர் 12]

கி.மீ.0/0-8/985 ஆனது மாவட்ட இதர சாலையாகும். இச்சாலையில் பாலம் கட்ட கோரும் இடம் கி.மீ. 5/10 ஆகும். ஏ.வி.எம். கால்வாயின் குறுக்கே பாலம் புதுப்பித்துக் கட்டும் பணிக்கு 2007-2008 ஆம் ஆண்டு சுனாமி நிதி திட்டத்தின்கீழ் ரூ.80.00 இலட்சம் அனுமதி வழங்கப்பட்டு பாலம் கட்டுதல் பணி நடைபெற்று வருகிறது. இப்பணி ஆகஸ்ட் 2010 இல் முடிவடையும்.

85—

சாலையைச் செப்பனிடுதல்

வினா எண் 46763—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை, இஞ்சிப்பாறை சாலையைச் செப்பனிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். பொள்ளாச்சி (நெ) கோட்டக் கட்டுப்பாட்டில் பராமரிக்கப்பட்டு வரும் "மாவட்ட முக்கிய சாலையான வால்பாறை மாணிக்கா-குரங்காமுடி சாலை" கி.மீ. 0/0-10/2 ஆகும். இச்சாலை தற்போது ஒருவழித்தடமாக உள்ளது. இச்சாலையில் பழுதடைந்த பகுதியான கி.மீ. 1/8-3/0 மற்றும் 9/8-10/2 வரையிலான 1.80 கி.மீ. நீளத்திற்கு பன்னிரண்டாவது மாநில நிதிக் குழு திட்டத்தின்கீழ் ரூ.35.00 இலட்சம் மதிப்பில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு 12/2009 இல் பணி முடிவடைந்தது. மற்றொரு பகுதியான கி.மீ. 0/0-0/8 மற்றும் கி.மீ. 7/0-8/0 வரையிலான 1.60 கி.மீ. நீளத்திற்கு ரூ.28.00 இலட்சம் மதிப்பில் 2008-2009 காலமுறை பராமரிப்பில் சிறப்புப் பழுதுபார்த்தல் திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ளப்பட்டு 4/2009-இல் அனைத்து பணிகளும் முடிந்தன. மீதமுள்ள சாலைப் பகுதியான கி.மீ.0/6-1/8, 3/0, 7/0, 8/0-9/6 வரை 6.80 கி.மீ. நீளத்திற்கு உள்ள சாலைப் பகுதிகளும் நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. ஆக மொத்த நீளமான 10.2 கி.மீ. சாலைப் பகுதி செப்பனிடப்பட்டு போக்குவரத்திற்கு ஏற்ற வகையில் உள்ளது.

[2010 நவம்பர் 12

86—

பாலத்தைப் புதுப்பித்தல்

வினா எண் 54068—திரு. ஞா. ஜான் ஜோசப்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளவங்கோடு தொகுதி, கடையால்—ஆறுகாணி சாலையில் கானல்கரை பாலத்தைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோயில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகர்கோவில் (நெ) கோட்டப் பராமரிப்பில் உள்ள "மாவட்ட இதர சாலையான" களியல்-ஆலஞ்சோலை-ஆறுகாணி சாலை கி.மீ.0/0-16/3 ஆகும். இச்சாலையில் கி.மீ.3/4-இல் அமைந்துள்ள பாலத்தைப் புதுப்பிக்க கோரப்பட்டுள்ளது. இவ்விடத்தில் சிற்றாறு சாலையின் குறுக்கே புதிய பாலம் கட்டுதல் பணிக்கு ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் 2008-2009-ல் ரூ.90 இலட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டு பாலம் கட்டுதல் பணி 29-03-2010-இல் முடிவடைந்து போக்குவரத்து நடைபெற்று வருகிறது.

87—

சாலையைச் சீரமைத்தல்

வினா எண் 54483—திருமதி மு. சந்திரா: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ராசபாளையம் தொகுதி, புத்தூர் சாலையைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

2010 நவம்பர் 12]

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

விருதுநகர் (நெ) கோட்டப் பராமரிப்பில் உள்ள தளவாய்புரம் இனாம் கோவில்பட்டி சாலை கி.மீ.0/0-6/050 எனும் 6.05 கி.மீ. நீளமுள்ள ஒருவழித்தடமான "மாவட்ட இதர சாலையாகும்." இச்சாலையில் கி.மீ.0/0-3/6 வரை ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் 2008-2009 ஆம் ஆண்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு ரூ.37.00 இலட்சத்திற்கு மேம்பாடு செய்யும் பணியானது 23-03-2009 அன்று முடிக்கப்பட்டு மீதமுள்ள கி.மீ. 3/6-6/050 வரை ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் 2009-2010 ஆம் ஆண்டில் சிறப்பு உறுப்புத் திட்டத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு மேம்பாடு மற்றும் 5/2-இல் கல்வெட்டு உள்பட ரூ.25.00 இலட்சத்திற்கு பணி மேற்கொள்ளப்பட்டு 31-03-2010-இல் முடிக்கப்பட்டு நல்ல நிலையில் உள்ளது.

88—

இருவழிப் பாலம்

வினா எண் 57554—திரு. செ. பொன்னுதுரை: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை தொகுதி, பெருந்துறையிலிருந்து காஞ்சிகோவில் செல்லும் நெடுஞ்சாலையில் எல்.பி.பி. வாய்க்கால் குறுக்கே இருவழிப் பாதையுடன் பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெருந்துறை தொகுதி, பெருந்துறையிலிருந்து காஞ்சிகோவில் செல்லும் நெடுஞ்சாலையில் எல்.பி.பி. வாய்க்கால் குறுக்கே இருவழிப் பாதையுடன் பாலம் அமைக்கக் கோரியுள்ள சாலையானது கோபி (நெ) கோட்டப் பராமரிப்பில் உள்ள

[2010 நவம்பர் 12

"மாவட்ட முக்கிய சாலையான" பெருந்துறை-கவுந்தம்பாடி சாலை கி.மீ. 0/0-17/4 வரை ஆகும். இச்சாலையில் கி.மீ. 8/4-இல் எல்.பி.பி. வாய்க்கால் பாலம் அமைந்துள்ளது. இப்பாலத்தின் ஓடுதளம் தற்போது ஒருவழித்தடமாக உள்ளது. இதனை இருவழிப் பாலமாக புதியதாகக் கட்டுவதற்கு ரூ.150.00 இலட்சம் தேவைப்படும். வருங்காலத்தில் நிதி நிலைமைக்கு ஏற்ப இப்பணியை எடுத்துக் கொள்ள தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

89—

பாலம் அமைத்தல்

வினா எண் 63281—திரு. மா. தண்டபாணி: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேடசந்தூர் தொகுதி, வேடசந்தூர்—கடம்பூர் சாலையில் நாகபோனானூர் கி.மீ. 0/10-ல் பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

வேடசந்தூர் தொகுதி, கடம்பூர் சாலையில் நாகபோனானூர் கி.மீ. 0/10-இல் தற்பொழுது உள்ள தரைமட்டப் பாலம் நல்ல நிலையில் உள்ளது. இந்தப் பாலத்தின் நீளம் 15.00 மீ. மற்றும் அகலம் 12.00 மீ. உள்ளது. தரைமட்டப் பாலம் உள்ள இந்த ஓடையின் தண்ணீர் குடகனாற்றில் கலப்பதால், ஆற்றில் அதிக வெள்ளப் பெருக்கு ஏற்படும்போது தண்ணீர் எதிர்நோக்கி தரைமட்டப் பாலத்திற்கு மேலே மூன்று அடி உயரத்திற்கு நிரம்பி நிற்பதால், போக்குவரத்து பாதிப்படைகிறது. இந்த ஓடையின் குறுக்கே புதிய ஆர்.சி.சி. உயர்மட்டப் பாலம் அமைப்பதற்கு ரூ.50.00 இலட்சம் தேவைப்படுகிறது. எனவே போக்குவரத்தைக் கருத்தில் கொண்டு முன்னுரிமை அடிப்படையில் இப்பாலப் பணியை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2010 நவம்பர் 12]

90—

சாலையை செப்பனிடுதல்

வினா எண் 63520—திருமதி ரா. லீமா றோஸ்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு தொகுதி, குலசேகரம்-பொன்மனை-ஈஞ்சக்கோடு சாலையை செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு தொகுதி, குலசேகரம்-பொன்மனை-ஈஞ்சக்கோடு சாலையானது நாகர்கோவில் (நெ) கோட்டப் பராமரிப்பில் உள்ள மாவட்ட இதர சாலைகளான (1) பொன்மனை-பொன்னுமங்கலம் சாலை கி.மீ. 0/0-1/4 மற்றும் (2) வெண்டலிகோடு-பொன்மனை சாலை கி.மீ. 0/0-1/6 ஆகும். பொன்மனை-பொன்னுமங்கலம் சாலையில் தாழ்வான பகுதியை உயர்த்தி சீர் செய்வதற்கு ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் 2009-2010-ன்கீழ் ரூ.10 இலட்சத்திற்கு ஒப்புதல் பெறப்பட்டு பணி முடிக்கப்பட்டுள்ளது. வெண்டலிகோடு-பொன்மனை சாலையிலுள்ள பள்ளங்கள் தற்பொழுது (உட்கோட்ட சாலைப் பணியாளர்கள் மூலமாக) தார் நொடி போடப்பட்டு சீர் செய்யப்பட்டு நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

91—

பாதுகாப்பு சுற்றுச் சுவர்

வினா எண் 83701—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை தொகுதி, உடுமலைப்பேட்டை-பழனி செல்லும் கொமரலிங்கம் வழி அமராவதி ஆற்றுப்பாலம் சாலையில் இருபுறமும் பாதுகாப்பு சுற்றுச் சுவர் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை தொகுதி, உடுமலைப்பேட்டை-பழனி செல்லும் கொமரலிங்கம் வழி அமராவதி ஆற்றுப் பாலப் பகுதி பொள்ளாச்சி (நெ) கோட்ட பராமரிப்பில் உள்ள உடுமலை-கொமரலிங்கம் சாலை (மாவட்ட முக்கிய சாலை) கி.மீ. 15/10-ல் அமராவதி ஆற்றின் குறுக்கே அமைந்துள்ள பாலப் பகுதியாகும். இப்பாலத்தின் பழனி பக்கத்து அணுகு சாலையில் கி.மீ. 16/0-16/2 வரை வலது புறம் பாதுகாப்புச் சுவர் 2008-2009-ல் சீரமைப்பு நிதியின்கிழ் ரூ.4.25 இலட்சத்திற்கு அமைக்கப்பட்டு 1/2009-ல் பணி முடிக்கப்பட்டு விட்டது. பாலத்தின் இடது புறத்தில் ஏற்கெனவே பாதுகாப்புச் சுவர் உள்ளது. இதனை உடனடியாகச் சீரமைக்க வேண்டிய நிலையில் இல்லை. உடுமலை பக்கத்து அணுகு சாலையில் பாதுகாப்பிற்காக வழிகாட்டித் தூண்கள் இருபுறமும் பொருத்தப்பட்டுள்ளன.

92—

அகலப்படுத்துதல்

வினா எண் 110113—திரு. செ. தாமோதரன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பொள்ளாச்சி வட்டம், வடக்கிபாளையம் கிராமம் வழியாக கேரளா செல்கின்ற சாலையில் ஆற்றின் இடையே உள்ள குறுகிய பாலத்தை அகலப்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

பொள்ளாச்சி வட்டம், வடக்கிபாளையம் கிராமம் வழியாக கேரளா செல்கின்ற சாலையானது பொள்ளாச்சி (நெ) கோட்டப் பராமரிப்பிலுள்ள மாவட்ட முக்கிய சாலையான கி.மீ. 122/0 திண்டுக்கல்-பெங்களூரு சாலையிலிருந்து நடுப்புணி சாலை கி.மீ. 0/0-17/2 ஆகும். இச்சாலையில் கி.மீ. 16/8-இல் நடுப்புணி

2010 நவம்பர் 12]

அருகில் பாலப் பகுதி உள்ளது. மேற்படி பாலம் 6x5 80 கண் (Span) கொண்டதும் 3.65 மீட்டர் அகலம் உள்ளதுமான குறுகிய பாலமாகும். இப்பாலம் பழுதடைந்துள்ளது. கி.மீ. 16/8-இல் உள்ள குறுகிய பாலத்தை நேர்பாதை மாற்றி, (realignment) புதுப்பித்துக் கட்டவும் கி.மீ. 13/6-17/4 வரையுள்ள சாலையை மேம்படுத்தவும், ரூ.4.00 கோடிக்கு 29-3-2010-இல் கருத்துரு மாநிலங்களுக்கிடையேயான சாலைகளை இணைக்கும் திட்டத்தில் சேர்த்து மைய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது. ஒப்புதல் கிடைக்கப் பெற்றதும் பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

93—

பழுதுபார்த்தல்

வினா எண் 35720—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கிழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதி, கிருஷ்ணாபுரம் ஊராட்சி, கிருஷ்ணாபுரம் தொடக்கப் பள்ளி சத்துணவு கூடத்தைப் பழுதுபார்க்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்:

தருமபுரி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கிருஷ்ணாபுரம் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளி சத்துணவு மையத்தினை, சிறுசேமிப்பு மற்றும் ஊக்க நிதியின்கீழ் ரூ.40,000/- செலவில் பழுது நீக்கம் செய்யப்பட்டு தற்போது சத்துணவு மையக் கட்டடம் நல்ல நிலையில் உள்ளது.

94—

பால்வாடி மையம்

வினா எண் 52679—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கிழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை முடிஸ் பகுதியில் பால்வாடி ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2010 நவம்பர் 12

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை முடிஸ் பகுதியில் மொத்த மக்கள்தொகை 678 ஆகும். இக்கிராமத்தில் 0-3 வயது வரை குழந்தைகள் 13 பேரும், 3-6 வயது வரை 15 பேரும் உள்ளனர். இப்பகுதியில் எஸ்டேட் மேலாளர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் வசித்து வருகின்றனர். முடிஸ் பகுதியைச் சுற்றிலும் உள்ள பகுதிகளில் குழந்தைகள் காப்பகம் (Creche) உள்ளது. மேலும் புனித அந்தோணியர் (Nursery) பள்ளியிலும் பயனடைந்து வருகிறார்கள். மையம் ஆரம்பிப்பதற்கு குழந்தைகள் வருகை குறைவாக இருக்கும் காரணத்தால் முடிஸ் பகுதியில் பால்வாடி மையம் ஆரம்பிக்கும் சூழ்நிலை இல்லை.

95—

குழந்தைகள் நல மையம்

வினா எண் 87278—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல் மாவட்டம், ஆர். புதுக்கோட்டை கிராமம், உட்கடை, எல்லைப்பட்டி புதூரில் குழந்தைகள் நல மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்:

திண்டுக்கல் மாவட்டம், ஆர். புதுக்கோட்டை கிராமம், உட்கடை, எல்லைப்பட்டி புதூர் கிராமத்தில் குழந்தைகள் மையம் 31-5-2004 முதல் செயல்பாட்டில் உள்ளது. இம்மையத்தில் 20 குழந்தைகள் பயனடைந்து வருகின்றனர். இம்மையம் சொந்தக் கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றது. மையத்தில் அனைத்து அடிப்படை வசதிகளும் போதுமான அளவில் உள்ளன. எனவே, வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பகுதியில் ஏற்கெனவே குழந்தைகள் மையம் அரசுக் கட்டடத்தில் இயங்கி வருகின்ற நிலையில் புதிதாக மையம் அமைக்க அவசியம் எழவில்லை.

2010 நவம்பர் 12]

96—

சுற்றுச் சுவர்

வினா எண் 107660—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு வட்டம், ஆத்தூரில் இயங்கும் பிற்காப்பு இல்லத்திற்கு சுற்றுச் சுவர் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு வட்டம், ஆத்தூரில் இயங்கி வரும் அரசினர் பிற்காப்பு இல்லத்திற்கு சுற்றுச் சுவர் அமைக்க, அரசு ஆணை (நிலை) எண் 103, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 21-6-2007 மற்றும் அரசு ஆணை (நிலை) எண் 70, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 20-5-2009 ஆகிய அரசாணைகளின்படி ரூ.13.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பொதுப் பணித் துறைமூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிவுற்று பயன்பாட்டில் உள்ளது.

97—

சத்துணவுத் திட்டத்தை நீட்டித்தல்

வினா எண் 117366—திரு. எஸ். நன்மாறன்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழக அரசால் வழங்கப்படும் சத்துணவுத் திட்டத்தை 12 ஆம் வகுப்பு வரை நீட்டிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்:

தமிழக அரசால் 10 ஆம் வகுப்பு வரை வழங்கப்படும் சத்துணவுத் திட்டத்தை 12 ஆம் வகுப்பு வரை நீட்டிக்க செய்யும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

98—

இல்வச விட்டுமனைப் பட்டா

வினா எண் 69610—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், பார்த்திபனூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அருகில் குடியிருந்து வரும் ஆதி திராவிடர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பரமக்குடி வட்டம், பார்த்திபனூர் ஆரம்ப சுகாதார நிலையம் அருகில் அரசு புறம்போக்கு இடத்தில் 5 ஆண்டுகளுக்கு மேலாக வீடு கட்டிக் குடியிருந்து வரும் ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்த ஆறு நபர்களுக்கு மேற்கண்ட அரசு புறம்போக்கு நிலத்தை வரன்முறை செய்து பட்டா வழங்கும் (one time) திட்டத்தில் மனைப் பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

99—

இல்வச தொழிற்பயிற்சிகள்

வினா எண் 84218—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்ட மீனவக் குடும்பங்கள் மாற்றுத் தொழில் செய்ய இலவசமாக தொழிற்பயிற்சிகள் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

2010 நவம்பர் 12]

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில், மீன்வளத்தினைப் பெருக்கும் வகையிலும், நீர்நிலைகளில் மீன்வளர்ப்பினை மேற்கொள்ளவும், நீர்வள நிலவளத் திட்டத்தின்கீழ் குளங்களில் மீன் வளர்த்திடும் திட்டம் தற்போது நடைமுறையில் உள்ளது. இத்திட்டத்தின்கீழ், குளத்தில் மீன் வளர்த்திட இளைஞர்களுக்கு தற்போது பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. எனவே, இராமநாதபுரம் மாவட்ட மீனவக் குடும்பங்கள் மாற்றுத் தொழில் செய்திட, மீன் துறைமூலம் தனியாக வேறு இலவசமாக தொழிற்பயிற்சிகள் வழங்க வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.

(ஆ) எழாது.

100—

கடல்பாசி வளர்ப்பு

வினா எண் 93401—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமேஸ்வரம் மீனவர்களுக்கு கடற்பாசி வளர்ப்பது குறித்து தொழில் பயிற்சி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* இராமேஸ்வரம் மீனவர்களுக்கு கடற்பாசி வளர்ப்பு குறித்த தொழில் பயிற்சி, மண்டபம் மீன் துறை உதவி இயக்குநர் (விரிவாக்கம் மற்றும் பயிற்சி) மூலம் பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்பு சிறப்புத் திட்டத்தின்கீழ் (SGSY) தற்போது அளிக்கப்பட்டு வருகிறது.

[2010 நவம்பர் 12

பட்டியல் 6

1—

நஷ்ட ஈடு

வினா எண் 13766—திருமதி எஸ். தேன்மொழி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நிலக்கோட்டை தொகுதி, மல்லியம்பட்டி சித்தர்கள் நத்தம், புளியம்பட்டி ஆகிய கிராமங்களில் உள்ள விவசாயிகளின் நிலங்களை 54 பெரியாறு பிரதானக் கால்வாய் திட்டத்திற்கு கையகப்படுத்தியதற்கு நஷ்ட ஈடு தொகை வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை வட்டம், சித்தர்கள் நத்தம் கிராமத்தில் பெரியாறு வைகை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கான இழப்பீட்டுத் தொகை நில உரிமைதாரர்களுக்கு வழங்கப்பட்டுவிட்டது.

2—

இலஞ்ச ஒழிப்புப் பிரிவு

வினா எண் 54080—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலையில் மாவட்ட காவல் துறையின் இலஞ்ச ஒழிப்புப் பிரிவு துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது வேலூர் மாவட்டம், வேலூரைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் ஊழல் தடுப்புக்

2010 நவம்பர் 12]

கண்காணிப்புத் துறைப் பிரிவு திருவண்ணாமலை மாவட்டம் தொடர்பான ஊழல் தடுப்பு/இலஞ்ச ஒழிப்புப் பணியைச் செவ்வனே செய்து வருவதால் தற்போது திருவண்ணாமலை மாவட்டத்தில் தனியே ஊழல் தடுப்புக் கண்காணிப்புத் துறைப் பிரிவு துவங்க சாத்தியம் இல்லை.

3—

ஆற்று நீர்

வினா எண் 54422—திரு. வீ.ஏ.டி. கலிவரதன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகையூர் தொகுதி, ஆயந்தூர் ஏரிக்கு தென்பெண்ணை ஆற்று நீர் பெற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்பெண்ணை ஆற்றிலிருந்து பிரியும் பம்பை வாய்க்காலின் வழியாகத்தான் ஆயந்தூர் ஏரிக்குத் தண்ணீர் செல்ல வேண்டும். ஆயந்தூர் ஏரி பம்மை வாய்க்காலின் அடிமட்டத்தைவிட மேல் மட்டத்தில் அமைந்துள்ளதால் ஆயந்தூர் ஏரிக்குத் தென்பெண்ணையாற்றிலிருந்து நீரை எடுத்துச் செல்ல சாத்தியக் கூறுகள் இல்லை.

4—

ஏரி மராமத்து

வினா எண் 63731—திரு. கே.எல். இளவழகன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காடு தொகுதி, திமிரி ஒன்றியம், நம்பரை ஏரியை தூர் வாரி, கரைகளைப் பலப்படுத்தி, மதகுகளை சீர் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2010 நவம்பர் 12

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆற்காடு வட்டம், திமிரி ஒன்றியம், நம்பரை ஏரியை தூர் வாரி, கரைகளைப் பலப்படுத்தும் பணிகள் 2006-2007 ஆம் ஆண்டு நபார்டு வங்கி நிதி உதவியுடன் செய்து முடிக்கப்பட்டுள்ளது. மதகுகள் நல்ல நிலையில் உள்ளன. எனவே பழுதுபார்க்கும் அவசியம் தற்போது இல்லை.

5—

ஏரி மராமத்து

வினா எண் 63757—திரு. கே.எல். இளவழகன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காடு தொகுதி, ஆற்காடு ஒன்றியம், லாடவரம் ஏரியைத் தூர் வாரி, கரையைப் பலப்படுத்தி, அதன் மதகினை சீர் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆற்காடு தொகுதி, ஆற்காடு ஒன்றியம், லாடவரம் ஏரியைத் தூர் வாரி, கரைகளைப் பலப்படுத்தி, செப்பனிடும் பணிகள் 2004-2005 ஆம் ஆண்டு நபார்டு வங்கி நிதியுதவியுடன் செய்யப்பட்டுள்ளன. மேலும், இவ்வேரியில் உள்ள இரண்டு மதகுகளும் நல்ல நிலையில் உள்ளதால் இம்மதகுகளை சீர்செய்யும் அவசியம் ஏற்படவில்லை.

6—

ஏரி மராமத்து

வினா எண் 63762—திரு. கே.எல். இளவழகன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காடு தொகுதி, திமிரி ஒன்றியம், கீழ்பாடி ஏரியைத் தூர் வாரி, கரையைப் பலப்படுத்தி, அதன் மதகினைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 நவம்பர் 12]

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆற்காடு வட்டம், திமிரி ஒன்றியம், கீழ்பாடி ஏரி 2005-2006 ஆம் ஆண்டு நபார்டு வங்கி நிதியுதவியில் தூர் வாரி கரை பலப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், இந்த ஏரியில் உள்ள 3 மதகுகளும் நல்ல நிலையில் உள்ளன. மதகுகளின் பின்புறம் நீர்த்தேக்கத் தொட்டி (Rear cistern) திருகுமறை கதவுகள் மற்றும் மதகுகளின் பின்புறமுள்ள Leading channel-ல் உள்ள சிறிய பழுதுபார்ப்புப் பணிகளும் செய்து முடிக்கப்பட்டுள்ளன. எனவே மதகினைப் புதுப்பிக்க அவசியம் எழவில்லை.

7—

தடுப்பணை

வினா எண் 68828—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் ஒன்றியம், ஜலகம்பாறை மலைப் பகுதியிலிருந்து வரும் நீரைத் தேக்க ஒரு தடுப்பணை கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஜலகம்பாறை நீர் வீழ்ச்சிக்கு அருகில் 10 மீ. கலிங்கு கொண்ட ஒரு தடுப்பணையும், கானாற்றின் குறுக்கே 7 தடுப்பணைகளும் உள்ளதால் மேலும் ஒரு தடுப்பணை அமைத்து பாசனம் செய்ய புவி அமைப்பு ஏற்றதாக இல்லை. எனவே, மேற்கூறிய இடத்தில் மேலும் ஒரு தடுப்பணை அமைக்க தொழில்நுட்ப ரீதியாக சாத்தியம் இல்லை.

[2010 நவம்பர் 12

8—

கலைஞர்களை ஊக்குவிக்கும் திட்டம்

வினா எண் 117241—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் நலிவடைந்து வரும் நையாண்டி மேளக் கலைஞர்களை ஊக்குவிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் நையாண்டி மேளக் கலைஞர்களை உள்ளடக்கிய நாட்டுப்புறக் கலைஞர்களை ஊக்குவிக்கும் பொருட்டு, அக்கலைகளை அழிந்துவிடாமல் பாதுகாக்கும் விதமாகவும் தமிழக அரசால் நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியம் அமைக்கப்பட்டு நையாண்டி மேளக் கலைஞர்களை உள்ளடக்கிய நாட்டுப்புறக் கலைஞர்களை ஊக்குவிக்க திட்டங்கள் வாரியத்தால் செயல்படுத்தப்படுகின்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

9—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 6177—திரு. கே.எல். இளவழகன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதி, திமிரி ஒன்றியம், மழையூர் மற்றும் மேல்புதுப்பாக்கம் ஊராட்சியில் புதிய குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 நவம்பர் 12]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதி, திமிரி ஒன்றியம், மழையூர் மற்றும் மேல்புதுப்பாக்கம் ஊராட்சிகளில் உள்ள அனைத்துக் குடியிருப்புகளிலும் மக்கள் தொகைக்கேற்ப மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுடன்கூடிய குடிநீர்த் திட்டங்கள் செயலாக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டில் உள்ளன.

10—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 3820—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, செம்பனார்கோவில் ஒன்றியம், கஞ்சாநகரம் ஊராட்சி, அக்ரகாரத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, செம்பனார்கோவில் ஒன்றியம், கஞ்சாநகரம் ஊராட்சி, அக்ரகாரத்தின் மக்கட்தொகைக்கேற்ப 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்பட்டு, போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, தனியாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் அவசியம் இல்லை.

11—

குடிநீர் வசதி

வினா எண் 10121—திரு. சு.ப. வேலுமணி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேரூர் தொகுதி, குறிச்சி நகராட்சி, போத்தனூர், ஜோதி நகர், பிள்ளையார்புரம், சிட்கோ பகுதி, மேட்டூர் நாச்சிமுத்து கவுண்டர் வீதி, கே.வி.கே. நகர், மதுக்கரை ரயில்வே கேட் அருகில், 21-வது வார்டு, மேட்டூர் 10-வது வார்டு, நஞ்சுண்டாபுரம் சாலை, மீன் கடை சந்து மற்றும் கருணாநிதி நகர் முதலிய பகுதிகளில் குடிநீர் வசதி ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

பேரூர் தொகுதி, குறிச்சி நகராட்சி, போத்தனூர், ஜோதி நகர், பிள்ளையார்புரம், சிட்கோ பகுதி, மேட்டூர் நாச்சிமுத்து கவுண்டர் வீதி, கே.வி.கே. நகர், மதுக்கரை ரயில்வே கேட் அருகில், 21-வது வார்டு, மேட்டூர் 10-வது வார்டு, நஞ்சுண்டாபுரம் சாலை, மீன் கடை சந்து மற்றும் கருணாநிதி நகர் முதலிய பகுதிகளுக்கு புதிய குடிநீர்த் திட்டமான குறிச்சி, குனியமுத்தூர் மற்றும் கிணத்துக்கடவு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 70 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

12—

குடிநீர் வசதி

வினா எண் 14187—திரு. கோ. எதிரொலி மணியன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதி, ஆலம்பூண்டி கிராமத்தில் குடிநீர் வசதி செய்து தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

2010 நவம்பர் 12]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

திருவண்ணாமலை மாவட்டம், சேத்துப்பட்டு ஒன்றியம், ஆலம்பூண்டி ஊராட்சியைச் சேர்ந்த ஆலம்பூண்டி குடியிருப்பில் செயல்பட்டுவரும் குடிநீர்த் திட்டத்தின் குடிநீர் வழங்கு நிலை மூலம் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்படுகிறது.

13—

கணினிப் பயிற்சி நிலையம்

வினா எண் 16920—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஓமலூர் தொகுதி, பாகல்பட்டி ஊராட்சியில் கணினிப் பயிற்சி நிலையம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள பாகல்பட்டி ஊராட்சியில் கணினிப் பயிற்சி நிலையம் ஏற்படுத்தும் திட்டம் ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

14—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 25139—திரு. பெ. கண்ணன்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாரமங்கலம் தொகுதி, மல்லியகுந்தம் ஊராட்சி, ஊஞ்சக்காடு, அய்யந்துரை பகுதிக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2010 நவம்பர் 12

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் தொகுதி, மல்லியகுந்தம் ஊராட்சி, ஊஞ்சக்காடு, அய்யந்துரை பகுதியில் இரண்டு கையிறைப்பான்கள் மற்றும் ஒரு தனி மின்விசைத் திட்டம் பயனில் உள்ளன. இக்குடியிருப்பில் அமைக்கப்பட்டுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் காடையாம்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டம்மூலம் காவிரிக் குடிநீர் ஏற்றப்பட்டு போதுமான அளவு காவிரிக் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, அய்யந்துரை பகுதிக்குத் தனியாக மேல்நிலைத் தொட்டி அமைக்க அவசியம் இல்லை.

15—

சர்க்கரை ஆலை

வினா எண் 37205—திரு. கி. ஆறுமுகம்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையை கூட்டுறவுத் துறை மூலம் நடத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையை கூட்டுறவுத் துறை மூலம் நடத்துவதற்கு 7-8-2010 அன்று அரசாணை (நிலை) எண் 110-ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

16—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 40550—திருமதி பெ. கமலாம்பாள்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2010 நவம்பர் 12]

(அ) காஞ்சிபுரம் தொகுதி, உபுக்கோல்பட்டு ஊராட்சி, வதியூர் மேட்டுத் தெருவில் புதிய ஆழ்துளைக் கிணறு, மோட்டார் பம்புடன் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் தொகுதி, வதியூர் மேட்டுத் தெரு, வதியூர் கிராமத்தைச் சேர்ந்த பகுதியாகும். வதியூர் குடியிருப்பில் ஏற்கெனவே இரண்டு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுடன் கூடிய தனி மின்விசைத் திட்டம் பயனில் உள்ளது. 2008-2009 ஆம் ஆண்டு வதியூர் மேட்டுத் தெருவில் ஊராட்சிமூலம் சிறு மின்விசை பம்புத் திட்டம் நிறைவேற்றப்பட்டு தற்போது முழுமையான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, இப்பகுதிக்கு புதியதாக ஆழ்துளைக் கிணறு மோட்டார் பம்பு அமைத்து மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அவசியம் எழவில்லை.

17—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 42756—திரு. பெ. கண்ணன்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாரமங்கலம் தொகுதி, அரங்கனூர் ஊராட்சி, புள்ளானூர் பகுதி, ஆதி திராவிடர் காலனி பகுதி, புதூர் அத்திமரத்தூர் வடக்கு காட்டுவளவு பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் தொகுதி, அரங்கனூர் ஊராட்சி, புள்ளானூர் பகுதி, ஆதி திராவிடர் காலனி பகுதி, புதூர் அத்திமரத்தூர் வடக்கு காட்டுவளவு ஆகிய 2 புதிய குடியிருப்புகளுக்கும் நடப்பு நிதியாண்டில் (2010-2011) மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுடன்கூடிய தனி மின் விசைத் திட்டங்கள் மூலம் குடிநீர் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

18—

குடிநீர் வசதி

வினா எண் 43493—திரு. எம். பன்னீர்செல்வம்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, கேவரோடை கிராமத்திற்கு கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் முழுமையாகக் குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

சீர்காழி தொகுதி, 108 கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் புதிய நீர் உறிஞ்சும் கிணறு அமைக்கும் பணி (4.50 மீட்டர் விட்டம்) புனரமைப்புத் திட்டம் 2008-2009-ல் எடுத்துக் கொள்ளப்பட்டு அனைத்துப் பணிகளும் 31-10-2009-ல் முடிக்கப்பட்டு தற்போது வேட்டங்குடி ஊராட்சியைச் சேர்ந்த கேவரோடை கிராமத்திற்கு அங்குள்ள 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி வாயிலாகப் போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுகிறது.

2010 நவம்பர் 12]

19—

தெரு விளக்கு வசதி

வினா எண் 44554—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை வில்லோனி, நடுங்குன்றா செட்டில்மெண்ட் பகுதிக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர், சாலை வசதி, தெரு விளக்கு, வரட்டுப்பாறை பகுதி முனீஸ்வரன்கோயில் முன்பு மற்றும் வரட்டுப்பாறை பகுதி கிளப் முன்பு தெரு விளக்கு வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை வில்லோனி நடுங்குன்றா செட்டில்மெண்ட், இந்திரா காந்தி வனவிலங்கு சரணாலயத்திற்குட்பட்ட அடர்ந்த வனப் பகுதியில் உள்ளதால், அப்பகுதி மக்களுக்கு வனத் துறையின்மூலம் குடிநீர் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் நகராட்சியின்மூலம் 6 தெரு விளக்குகள் அமைக்கப்பட்டு நல்ல முறையில் பராமரிக்கப்படுகின்றன.

20—

சர்க்கரை ஆலையினைப் புனரமைத்தல்

வினா எண் 45195—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

படாளம் சர்க்கரை ஆலையினைப் புனரமைத்து கூட்டுறவுத் துறையிலேயே இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

படாளம் சர்க்கரை ஆலையினைப் புனரமைத்து கூட்டுறவுத் துறையிலேயே இயக்குவதற்கு 7-8-2010 அன்று அரசாணை (நிலை) எண் 110-ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

21—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 45496—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, இராமிரெட்டிப்பட்டி ஊராட்சி, கோரையன்வளவு, கோட்டம்மடு மற்றும் கொல்லப்பட்டியன் வளவு ஆகிய பகுதிகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை.—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் தொகுதி, இராமிரெட்டிப்பட்டி ஊராட்சி, கோரையன்வளவு, கோட்டம்மடு மற்றும் கொல்லப்பட்டியன்வளவு, கத்திமாறன்வளவு பகுதிகளுக்கு முறையே இருசாக்கவுண்டன்வளவு மற்றும் மந்தை தோப்பூர் குடியிருப்புகளிலுள்ள 30,000 மற்றும் 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டிகளிலிருந்து இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருவதால், இப்பகுதிகளுக்கென தனித்தனியாக மேல்நிலைத் தொட்டிகள் அமைக்கும் அவசியம் இல்லை.

22—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 49233—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் தொகுதி, கொளத்தூர் ஊராட்சி, கருங்கல்லூர் ஊராட்சி, மேலகாலனி, செம்படபுதூர், சின்ன காலனி, பனமரத்தூர் காலனி, அய்யாங்காடு, மேட்டுப்பாளையூர் மற்றும்

2010 நவம்பர் 12]

ஆலமரத்துப்பட்டி ஊராட்சி, ராகவேந்திரர் நகர், பெரியார் நகர் (காக்காயன்காடு) ஆகிய கிராமங்களில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், கொளத்தூர் ஒன்றியம், கருங்கல்லூர் ஊராட்சியிலுள்ள கருங்கல்லூர் மேலகாலனி மற்றும் செம்படபுதூர் சின்ன காலனி குடியிருப்புகளுக்கு தனித்தனியாக 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டிகள் கட்டப்பட்டு தற்போது மக்கள் பயன்பாட்டிலுள்ளன. இதர குடியிருப்புகளான கருங்கல்லூர் ஊராட்சி, பனமரத்தூர் காலனி, ஆலமரத்துப்பட்டி ஊராட்சி, ராகவேந்திரர் நகர் (காக்காயன்காடு) பெரியார் நகர் குடியிருப்புகளுக்கு 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் செயலாக்கப்பட்டுள்ளது. கருங்கல்லூர் ஊராட்சி, அய்யாங்காடு குடியிருப்புக்கு குடிநீர்த் திட்டம் செயலாக்க ஏதுவாக தற்போது நீராதாரம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேட்டுப்பாளையம் குடியிருப்புக்கு அக்குடியிருப்பில் ஏற்கெனவே கட்டப்பட்டுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருவதால் கூடுதலாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் அவசியம் இல்லை.

23—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 49503—திரு. வை. காவேரி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், சமுத்திரம் ஊராட்சி, நாச்சியப்பன்வளவு, அரிசிப்பாளையம் கலர்க்காடு, மாணிக்கம்பட்டி புத்திரன்வளவு ஆகிய பகுதிகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2010 நவம்பர் 12

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், சமுத்திரம் ஊராட்சி, நாச்சியப்பன் வளவு மற்றும் அரிசிப்பாளையம், கலர்க்காடு பகுதிகளில் தலா ஒரு கையிறைப்பான் தற்போது பயன்பாட்டில் உள்ளது. இவ்விரு குடியிருப்புகளுக்கும் இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் குடிநீர் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மாணிக்கம்பட்டி புத்திரன்வளவு பகுதி மாணிக்கம்பட்டி குடியிருப்பின் உள்ளடங்கிய பகுதியாகும். இக்குடியிருப்பில் இரண்டு கையிறைப்பான்கள் மூலமும் மற்றும் இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டியிலிருந்தும் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, மாணிக்கம்பட்டி புத்திரன்வளவு குடியிருப்புக்கு தனியாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டிய அவசியம் இல்லை.

24—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 49519—திரு. வை. காவேரி: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், அ. தாழையூர் ஊராட்சி, பழையூர், மாங்குட்டப்பட்டியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், அ. தாழையூர் ஊராட்சி, பழையூர், மாங்குட்டப்பட்டி குடியிருப்பு,

2010 நவம்பர் 12]

எடப்பாடி தொகுதியைச் சார்ந்த 92 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. எனவே திட்டம் செயலுக்கு வரும்பொழுது இக்குடியிருப்பில் மேல்நிலைத் தொட்டி கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

25—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 50900—திரு. க.ப. வேலுமணி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூர் தொகுதி, குறிச்சி குனியமுத்தூர் ஆழியாறு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை விரைவில் நிறைவேற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆழியாற்றை நீராதாரமாகக் கொண்டு கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் தொகுதிக்குட்பட்ட குறிச்சி, குனியமுத்தூர் நகராட்சிகள் மற்றும் கிணத்துக்கடவு பேரூராட்சிக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்பட்டு, ஜூன் 2009 முதல் மக்கள் பயனுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

26—

நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 60439—திரு. அருள் அன்பரசு: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோளிங்கர் தொகுதி, வாங்கூர் ஊராட்சியில் கூடுதல் நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2010 நவம்பர் 12

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், சோளிங்கர் ஒன்றியம், வாங்கூர் ஊராட்சியைச் சேர்ந்த வாங்கூர் குடியிருப்பில் 2008-2009 ஆம் ஆண்டு கூடுதல் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய குடிநீர்த் திட்டம் செயலாக்கப்பட்டுள்ளது.

27—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 62390—திரு. வை. காவேரி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், கன்னந்தேரி ஊராட்சி, காட்டூரில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், கன்னந்தேரி ஊராட்சி, காட்டூர் குடியிருப்பிற்கு, ராசிபுரம்-எடப்பாடி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் ஒண்டிக்கடை குடியிருப்பில் கட்டப்பட்டுள்ள 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து குழாய் நீட்டிப்புமூலம் அத்தியாவசிய தேவைக்கான குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், இக்குடியிருப்பிற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் செயல்படுத்த நடவடிக்கையில் உளளது.

28—

குடிநீர் வசதி

வினா எண் 69760—திரு. செ. சின்னச்சாமி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2010 நவம்பர் 12]

(அ) மருங்காபுரி தொகுதி, மருங்காபுரி ஒன்றியம், தாதகவுண்டம்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளி மாணவ மாணவிகளுக்கு குடிநீர் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மருங்காபுரி தொகுதி, மருங்காபுரி ஒன்றியம், தாதகவுண்டம்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டம் 2/2010-ல் பணிகள் முடிக்கப்பட்டு மக்கள் பயனுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

29—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 74823—திரு. கி.க. ராஜு: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் தொகுதி, ஏ.கே. மோட்டூர் ஊராட்சி, பொட்டுக்காரன் வட்டத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் ஒன்றியம், ஏ.கே. மோட்டூர் ஊராட்சியைச் சேர்ந்த பொட்டுக்காரன் வட்டம் என்பது அம்மன்நகர் குடியிருப்பை ஒட்டிய பகுதியாகும். இதன் மக்கள் தொகை 75 ஆகும். அம்மன்நகர் குடியிருப்பிற்கு 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் இயங்கி வருகிறது. இதிலிருந்து பொட்டுக்காரன் வட்டம் பகுதிக்கு குழாய் நீட்டிப்புமூலம் குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். எனவே தனியே மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அவசியம் இல்லை.

[2010 நவம்பர் 12

30—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 75842—திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கிழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் தொகுதி, காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம், விஷார் கிராமத்தில் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் தொகுதி, காஞ்சிபுரம் ஒன்றியத்திலுள்ள விஷார் அரசு உயர்நிலைப் பள்ளி வளாகத்திலேயே விஷார் கிராமத்திற்கான 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டுள்ளது. இந்தத் தொட்டிக்கு வரும் நீர் உந்து குழாய் நீட்டிப்பு செய்து, பள்ளி வளாகத்தில் உள்ள 1,000 லிட்டர் கொள்ளளவு உள்ள HDPE தொட்டியில் நீர் ஏற்றப்பட்டு குடிநீர் வசதி செய்யப்பட்டு வருகிறது. மேலும் இந்நிதியாண்டில் (2009-2010) கூடுதலாக 5,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் திட்டம் உள்ளது.

31—

மேம்பாலம் கட்டுதல்

வினா எண் 86541—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கிழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், கெங்கவல்லி அருகே வீரகனூர் சுவேத நதி மேம்பாலத்தைப் புதியதாகக் கட்டித் தர அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

2010 நவம்பர் 12]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

சேலம் மாவட்டம், வீரகனூர் பேரூராட்சியிலிருந்து பூலாம்பாடி செல்லும் வீரகனூர் பேரூராட்சிக்குட்பட்ட சாலையின் நடுவே அமைந்துள்ள சுவேத நதியில் பொதுமக்களின் போக்குவரத்திற்காகப் பேரூராட்சியால் அமைக்கப்பட்ட தரைப்பாலம் அண்மையில் பெய்த மழையின் காரணமாக மிகவும் பழுதடைந்துள்ளது. மேற்படி நதி அமைந்துள்ள பேரூராட்சி எல்லைக்குட்பட்ட சாலையினை நெடுஞ்சாலைத் துறைக்கு ஒப்படைக்கும்பட்சத்தில், சுவேத நதியின்மீது அமைந்துள்ள தரைப்பாலத்தினை மேம்பாலமாக அமைக்க கோட்டப் பொறியாளர், நபார்டு (கிராமச் சாலைகள்), சேலம் அவர்கள் இசைவு தெரிவித்துள்ளதன் அடிப்படையில், மேற்காணும் சாலையினை நெடுஞ்சாலைத் துறைக்கு ஒப்படைக்க மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து வரப்பெற்ற கருத்துருமீது பேரூராட்சிகளின் இயக்குநரகம்மூலம் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி சாலையினை நெடுஞ்சாலைத் துறைக்கு ஒப்படைப்பு செய்ய உரிய அரசாணை கிடைக்கப் பெற்றவுடன் கோட்டப் பொறியாளர், நபார்டு (கிராமச் சாலைகள்), சேலம்மூலம் பேரூராட்சி எல்லைக்குள் அமைந்துள்ள சுவேத நதியின்மீது மேம்பாலம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

32—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 92107—திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம், தாமல், முசரவாக்கம், நத்தப்பேட்டை ஆகிய கிராமங்களில் பாலாற்று கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் தொகுதி, காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம், தாமல் ஊராட்சியில் உள்ள 13 குடியிருப்புகளில் 11 குடியிருப்புகளுக்கு முழுமையான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள 2 குடியிருப்புகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. முசரவாக்கம் ஊராட்சியில் உள்ள 9 குடியிருப்புகளில் 8 குடியிருப்புகளுக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள ஒரு குடியிருப்பிற்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நத்தப்பேட்டை ஊராட்சியில் உள்ள 28 குடியிருப்புகளில் 17 குடியிருப்புகளுக்கு பாலாற்றுப் படுகையில் 3 ஆழ்துளைக் கிணறுகள்மூலம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்பட்டு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாழ்துளைக் கிணறுகளிலிருந்து போதுமான நீராதாரம் வறட்சிக் காலங்களில் கிடைக்காத காரணத்தால் மேலும் இரண்டு நீருறிஞ்சு கிணறுகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் மீதமுள்ள 11 குடியிருப்புகளில் 7 குடியிருப்புகளுக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய தனி மின்விசைத் திட்டம் அமைக்கப்பட்டு முழுமையான அளவு (40 lpcd) குடிநீர் வசதி வழங்கப்பட்டு வருகிறது மற்றும் மீதமுள்ள 4 குடியிருப்புகளுக்கு குடிநீர்த் திட்டம் செயலாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

33—

குடிநீர் வசதி

வினா எண் 100376—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வரும் நிதியாண்டில் வால்பாறை, சக்தி தலனார், காடம்பாறை, சுவர்க்கல், ஊமாண்டி முடக்கு, வேவர்லி, வாட்டர்பால்ஸ் எஸ்டேட், பழையகாடு, வாட்டர்பால்ஸ் எஸ்டேட் முதல் பிரிவு, 2-வது பிரிவு, 3-வது பிரிவு, பச்சமலை, முடிஸ்,

2010 நவம்பர் 12]

நடுமலை, தோனிமுடி, கெஜமுடி, சங்கிலி ரோடு, பன்னிமேடு பங்களா டிவிஷன், பன்னிமேடு எஸ்டேட் 2 ஆம் பிரிவு ஆகிய எஸ்டேட்டுக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, சக்தி தலனார் கவர்க்கல், ஊமாண்டி முடக்கு, வேவர்லி, வாட்டர்பால்ஸ் எஸ்டேட், பழையகாடு, வாட்டர்பால்ஸ் எஸ்டேட் முதல் பிரிவு, 2-வது பிரிவு, 3-வது பிரிவு, பச்சமலை, மூடிஸ், நடுமலை, தோனிமுடி கெஜமுடி, சங்கிலி ரோடு, பன்னிமேடு, பங்களா டிவிஷன், பன்னிமேடு எஸ்டேட் 2 ஆம் பிரிவு ஆகிய பகுதிகளுக்கு தனியார் தேயிலைத் தோட்ட நிருவாகத்தின்மூலம் போதுமான குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் காடம்பாறை குடியிருப்பு பகுதிக்கு மின் வாரியம்மூலம் போதுமான குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே தனியாக குடிநீர் வழங்கும் திட்டம் எதுவும் இல்லை.

34—

கூடுதல் நிதி

வினா எண் 101588—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி, கணவாய்புதூர் ஊராட்சி, கண்ணப்பாடி, வீராட்சியர் மலை கிராமங்களுக்கு கூடுதலாக நிதி வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

சேலம் மாவட்டம், காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியம், கணவாய்புதூர் ஊராட்சிக்குட்பட்ட கண்ணப்பாடி குக்கிராமத்தின் மக்கள்தொகை 438 ஆகும். வீராட்சியூர் குக்கிராமத்தின்

[2010 நவம்பர் 12

மக்கள்தொகை 206 ஆகும். இக்கிராமங்களுக்கு கணவாய்புதூர் ஊராட்சிக்கு மாநில நிதிக் குழு மானியத்தின்மூலம் மக்கள்தொகைக்கு ஏற்ப ஒதுக்கப்படும் நிதி பகிர்ந்தளிக்கப்பட்டு வருகிறது. கூடுதல் நிதி வழங்க இயலாது.

35—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 103776—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, செம்மாண்டப்பட்டி ஊராட்சி, பாலிக்காட்டு காலனிக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி ஒன்றியம், செம்மாண்டப்பட்டி ஊராட்சி, பாலிக்காட்டு காலனி குடியிருப்பில் 15,000 லிட்டர் மற்றும் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட இரண்டு மேல்நிலைத் தொட்டிகள் அமைக்கப்பட்டு, ஆழ்துளைக் கிணறு மற்றும் காடையாம்பட்டி கூட்டுக் குடிநீர் திட்டம்மூலம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

36—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 110014—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாலாற்றில் இருந்து வள்ளிபுரம்-வழுவதூர்-தக்கனூர்-நரப்பாக்கம்-சாலூர் ஆகிய கிராமங்களுக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

2010 நவம்பர் 12]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம், வள்ளிபுரம், வழுவதூர், தத்தனூர், நரப்பாக்கம், சாலூர் ஆகிய ஊராட்சிகளிலுள்ள அனைத்து குடியிருப்புகளிலும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுடன் கூடிய தனி மின்விசைத் திட்டங்கள் செயலாக்கப்பட்டு முழுமையான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, பாலாற்றிலிருந்து கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமைக்கும் கருத்துரு பரிசிலனையில் இல்லை.

37—

மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடம்

வினா எண் 119696—திரு ப. குணசேகரன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், எஸ். வாகைக்குளம், குருந்தன்குளம் கிராமத்தில் மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 'ஒரு ஊராட்சிக்கு ஒரு சுய உதவிக் குழு கட்டடம் கட்ட வேண்டும்' என்ற அடிப்படையில், எஸ். வாகைக்குளம் கிராமத்தில் மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடம் ஏற்கெனவே கட்டப்பட்டுள்ளது. மேலும், வீரனேந்தல் ஊராட்சியில் மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடம் ஏற்கெனவே கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. அவ்வூராட்சியைச் சார்ந்த குருந்தன்குளம் கிராமத்தில் உள்ள சுய உதவிக் குழுக்கள் அக்கட்டடத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

[2010 நவம்பர் 12

38—

எழுதுபொருட்கள் தயாரித்தல்

வினா எண் 121079—திருமதி பெ. கமலாம்பாள்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மாவட்டந்தோறும் உள்ள மகளிர் சுய உதவிக் குழுக்கள் எழுதுபொருட்கள் தயாரித்து அரசுக்கு வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மகளிர் சுய உதவிக் குழுக்கள்மூலம் எழுது பொருட்கள் தயாரித்து அரசுக்கு வழங்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

39—

துணை மின் நிலையம்

வினா எண் 113169—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாவட்டம், இடங்கணசாலை, பேரூர், கே.கே. நகர் பகுதியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

தற்போது இடங்கணசாலை, கே.கே. நகர், பேரூர் ஆகிய பகுதிகளுக்கு வேம்படிதாளம் 110/22 கி.வோ. துணை மின் நிலையத்திலிருந்து மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. இத்துணை மின் நிலையத்தில் தற்சமயம் 3 x 16 எம்.வி.ஏ. திறனுள்ள மின்மாற்றிகள் இயங்கி வருகின்றன. அதன் மின் பளு 42.47 எம்.வி.ஏ. வரை எட்டியுள்ளது. அப்பகுதியில் தற்சமயம் தரமான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, இடங்கணசாலை, கே.கே. நகர், பேரூர் ஆகிய பகுதிகளில் ஒரு புதிய துணை மின் நிலையம் அமைக்க தற்பொழுது அவசியம் எழவில்லை.

2010 நவம்பர் 12]

40—

துணை மின் நிலையம்

வினா எண் 115618—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை அருகிலுள்ள ஏர்வாடி தர்ஹாவிற்கு தனியாக துணை மின் நிலையம் அமைத்து சீரான மின்சாரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை அருகிலுள்ள ஏர்வாடி தர்ஹாவில் ஒரு துணை மின் நிலையம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேற்படி துணை மின் நிலையம் அமைக்கத் தேவையான நிலம் கண்டறியப்பட்டுள்ளது. நிலம் கையகப்படுத்தப்பட்டவுடன், துணை மின் நிலையம் அமைக்க பணிகள் மேற்கொள்ளப்படும்.

41—

துணை மின் நிலையம்

வினா எண் 1[illegible]—திரு. எஸ். [illegible]: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறை நகரப் பகுதியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) மயிலாடுதுறை நகரப் பகுதியில் புதிய 33/11 கி.வோ. ஆளில்லா நகர துணை மின் நிலையம் அமைக்க பணிகள் மேற்கொள்ளப்பட்டு, விரைவில் பணிகள் முடிக்கப்படும்.

42—

புனல் மின் நிலையம்

வினா எண் 118628—திருமதி ரா. லீமா றோஸ்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவட்டாறு தொகுதி, பெருஞ்சாணி புனல் மின் நிலையம் செயல்பாட்டில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு மெகாவாட் மின்சாரம் தயாரிக்கப்படுகிறது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) ஆம். பெருஞ்சாணி புனல் மின் நிலையம் செயல்பாட்டில் உள்ளது.

(ஆ) கடந்த 2009-2010 ஆம் ஆண்டில் 2.347MU (மில்லியன் யூனிட்ஸ்) மின் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

43—

மின் உற்பத்தி

வினா எண் 118629—திருமதி ரா. லீமா றோஸ்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவட்டாறு தொகுதி, கோதையார் நீர் மின் நிலையத்திலிருந்து கூடுதலாக மின் உற்பத்தி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவட்டாறு தொகுதி, கோதையாரில் கூடுதலான நீர் மின் திட்டங்கள் வருவதற்கு ஆய்வு செய்ததில்,

2010 நவம்பர் 12]

கோதையாரின் இயற்கை புனல் திறன் அமைப்பு தற்பொழுது உள்ள 60 மெகாவாட் மற்றும் 40 மெகாவாட் மின் நிலையங்களுக்கு மட்டுமே போதுமானதாக உள்ளது. எனவே, அதிகப்படியாக எந்த ஒரு மின் நிலையமும் கோதையாரில் கொண்டு வருவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை.

44—

பகுதிநேர நியாயவிலைக் கடை

வினா எண் 96957—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், மொரப்பூர் தொகுதி, கேத்துரெட்டிப்பட்டி செங்கா நகர் பகுதியில் பகுதிநேர நியாயவிலைக் கடை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், கேத்துரெட்டிப்பட்டி நியாயவிலைக் கடை 561 குடும்ப அட்டைகளுடன் தாய்க் கடையாக செயல்பட்டு வருகிறது. இதிலிருந்து வேப்பிலைப்பட்டி மற்றும் சவுளுக்கொட்டாய் ஆகிய இடங்களில் 2 பகுதிநேரக் கடைகள் பிரிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. தற்போது பகுதி நேர நியாயவிலைக் கடை கோரும் செங்கா நகர் பகுதி மக்கள் வேப்பிலைப்பட்டி பகுதி நேர நியாயவிலைக் கடையில் அத்தியாவசியப் பொருட்களைப் பெற்று வருகின்றனர். செங்கா நகர் பகுதியில் 62 குடும்ப அட்டைகளே உள்ளன. இந்நிலையில் செங்கா நகர் பகுதியில் 150 குடும்ப அட்டைகளுக்கும் குறைவாக இருப்பதாலும், தாய்க் கடையான கேத்துரெட்டிப்பட்டியிலிருந்து ஏற்கெனவே 2 பகுதி நியாயவிலைக் கடைகள் பிரிக்கப்பட்டு செயல்பட்டு வருவதாலும் அப்பகுதியில் புதிய பகுதிநேர நியாயவிலைக் கடை அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

[2010 நவம்பர் 12

45—

ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்

வினா எண் 85581—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தை மீண்டும் செயல்படுத்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

ஓமலூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் 24-11-2006 முதல் புதிய சொந்தக் கட்டடத்தில் (மேட்டூர் பிரிவு ரோடு அருகில்) இயங்கி வருகிறது.

46—

பூச்சிக்கொல்லி தயாரித்தல்

வினா எண் 106082—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அதிக செலவற்ற, சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவல்ல உயிரியல் முறையில் உயிரியல் பூச்சிக்கொல்லிகளைத் தயாரிப்பது குறித்து ஆய்வு செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ மற்றும் (ஆ) சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும், உயிரியல் பூச்சிக்கொல்லிகளை விவசாயிகள் பயன்படுத்துவதை ஊக்குவிக்கும் பொருட்டும், தமிழ்நாட்டில் மொத்தம் 10 உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகங்களும், காஞ்சிபுரம் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் இரண்டு ஒருங்கிணைந்த பூச்சி நிர்வாக மையங்களும் செயல்பட்டு வருகின்றன. இவற்றில், காஞ்சிபுரம் ஒருங்கிணைந்த பூச்சி நிர்வாக

2010 நவம்பர் 12]

மையத்தில் உயிரியல் பூச்சிக்கொல்லி/உயிரியல் காரணிகளான சூடோமோனாஸ் 1,900 கிலோவும், டிரைகோடெர்மா 500 கிலோவும், என்பிவி கரைசல் 100 லிட்டரும் உற்பத்தி செய்யப்படுகின்றன. மதுரை ஒருங்கிணைந்த பூச்சி நிர்வாக மையத்தில் உயிரியல் பூச்சிக்கொல்லி/உயிரியல் காரணிகளான சூடோமோனாஸ் 2,650 கிலோவும், டிரைகோடெர்மா 970 கிலோவும், என்பிவி கரைசல் 100 லிட்டரும், டிரோகோக்ரம்மா சைலோனிஸ் 1,000 கிலோவும் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் உயிரியல் பூச்சிக்கொல்லி/உயிரியல் காரணிகள் மானிய விலையில் விவசாயிகளுக்கு மத்திய அரசின் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டு வருகின்றன.

47—

தரம் உயர்த்துதல்

வினா எண் 120192—திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு சட்டக் கல்லூரிகளை சர்வதேச சட்டக் கல்லூரிகளுக்கு நிகராக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இல்லை.

48—

நிவாரண நிதியை உயர்த்துதல்

வினா எண் 68575—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாலை விபத்துகளில் உயிரிழப்பவரின் குடும்பத்திற்கு வழங்கப்படும் முதலமைச்சரின் நிவாரண நிதியை உயர்த்தி வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

[2010 நவம்பர் 12

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம், சாலை விபத்தில் பாதிக்கப்பட்டோர் மற்றும் சாலை விபத்தில் இறந்தோர் குடும்பங்கள் பயன்பெறும் வகையில், வேறெந்த நல வாரியங்களாலும் நிவாரண நிதி பெறாத இனங்களில், முதலமைச்சரின் சாலை விபத்து நிவாரண நிதியிலிருந்து ஏற்கெனவே வழங்கப்பட்டு வந்த நிவாரணத் தொகையை கீழ்க்கண்டவாறு 1-6-2010 முதல் உயர்த்தி அரசாணை (நிலை) எண் 508, உள் துறை, நாள் 26-5-2010-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது:

வ. எண்	வாகன விபத்து இழப்பின் விவரம்	8-6-1999 தேதியிட்ட அரசாணை (நிலை) எண் 817-ன் படி ஏற்கெனவே வழங்கப்பட்ட நிவாரண நிதியுதவி	1-6-2010 முதல் உயர்த்தப்பட்டுள்ள நிவாரண நிதியுதவி
1	இறப்பு	ரூ.10,000	ரூ.25,00
2	நிரந்தர செயலிழப்பு	ரூ.6,000	ரூ.10,000
3	ஒரு கண் அல்லது ஒரு கை, கால் செயலிழப்பு	ரூ.4,000	ரூ.7,000
4	ஏனைய சிறு காயங்கள்	ரூ.500	ரூ.1,000

49—

பேருந்து வசதி

வினா எண் 117794—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம்—கொடுவாய் செல்லும் கே-6 பேருந்தை காங்கேயம்பாளையத்திற்கு பள்ளி நேரத்தில் கூடுதலாக ஒரு நாளைக்கு 3 நடைகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 நவம்பர் 12]

விடை.—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குறுகிய கால இடைவெளியில் பலமுனை வழித்தடங்களில் இயங்கும் தடம் எண் கே-6 நகரப் பேருந்து காங்கேயத்தில்-காலை 8.00, மாலை 4.30, மாலை 6.35 மணியிலும், செட்டிப்பாளையத்தில் காலை 9.05, மாலை 5.35 மணியிலும் புறப்பட்டு பள்ளி நேரங்களில் காங்கேயம்பாளையம் வழியாக இயக்கப்படுகிறது. மேலும் கூடுதலாக அவ்வழியாக இயக்கப்பட்டால் தற்சயம் பயன்பெறும் பகுதியினருக்கு பாதிப்பு ஏற்படும் என்பதால் கோரிக்கைப்படி இயக்க இயலாத நிலை உள்ளது.

50—

பேருந்து வசதி

வினா எண் 121296—திரு. த.அ. மேகநாதன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காவேரிப்பட்டினம் தொகுதி, அரசம்பட்டி வழியாக போச்சம்பள்ளியிலிருந்து வேலம்பட்டிக்கு நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை.—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) போச்சம்பள்ளி-வேலம்பட்டி (வழி) அரசம்பட்டி தடத்தின் நீளம் 22.0 கி.மீ. ஆகும். அரசு ஆணைப்படி நகரப் பேருந்து வசதி கோரும் இருமுனைகளின் ஊர்களில் ஒன்று நகரியமாக அங்கீகரிக்கப்பட்டிருந்தால் மட்டுமே நகரப் பேருந்து இயக்கிட இயலும். இதில், பேருந்து வசதி கோரியுள்ள இரு ஊர்களும் நகரியமாக அங்கீகரிக்கப்படாத காரணத்தினால் போச்சம்பள்ளி-வேலம்பட்டி (வழி) அரசம்பட்டி தடத்தில் தனியாக நகரப் பேருந்து ஒன்றை இயக்கிட இயலாத நிலையுள்ளது.

51—

பேருந்து மண்டலம்

வினா எண் 122702—திரு. சி. கோவிந்தசாமி: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூரைத் தலைமையிடமாகக் கொண்டு அரசுப் போக்குவரத்துக் கழக மண்டலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (4டி) எண் 2, போக்குவரத்துத் (ட்டி1) துறை, நாள் 24-08-2010-ல் கோயம்புத்தூர் மற்றும் ஈரோடு மண்டலம் தவிர "திருப்பூர்" என்ற புதிய மண்டலம் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், கோயம்புத்தூர் கட்டுப்பாட்டின்கீழ் உருவாக்க ஒப்புதல் அளித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

52—

பேருந்து வசதி

வினா எண் 122930—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஜலகண்டாபுரம் முதல் ராசிபுரம் வரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

ஜலகண்டாபுரம்-எளம்பிள்ளை, சேலம் என 1 புறநகர் பேருந்து 8 நடைகளும், எளம்பிள்ளை-ராசிபுரம் என 6 நகரப் பேருந்துகள் தடம் எண் 15 மூலம் 60 நடைகளும் இயக்கப்பட்டன. தற்போது பகுதி வாரியாக பேருந்து வசதி பெற்றுள்ளது. இது தவிர தனியார் பேருந்துகள் மூன்று, கேட்கப்பட்ட வழித்தடத்திலேயே தற்போது

2010 நவம்பர் 12]

இயக்கப்பட்டு வருகின்றன. மேலும் ஜலகண்டாபுரம்-எளம்பிள்ளை வழித்தடத்தில் 4 தனியார் பேருந்துகள் தினசரி 24 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேற்கண்டவாறு இயக்கப்படும் பேருந்து வசதியே பொதுமக்களின் தேவையை நிறைவு செய்யும் வகையில் உள்ளது.

53—

பேருந்து வசதி

வினா எண் 123326—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் முதல் தீவட்டிப்பட்டி வரை ஓமலூர் வழியாக அடுக்குமாடிப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

2010-11 ஆம் நடப்பு நிதியாண்டிற்கான புதிய பேருந்து ஒதுக்கீட்டில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், சேலம் மண்டலத்திற்கு அடுக்குமாடிப் பேருந்து ஒதுக்கீடு செய்யப்படவில்லை. மேலும் சேலம் நகரப் பகுதிகளில் ஆங்காங்கே சாலைகளின் குறுக்கே மின் கம்பங்கள், மின் கம்பிகள், தொலைபேசி ஒயர்கள் செல்வதாலும் அடுக்குமாடிப் பேருந்துகள் இயக்க இயலாத நிலை உள்ளது.

54—

வங்கியின் புதிய கிளை

வினா எண் 110258—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழகம் முழுவதும் தாய்கோ வங்கியின் கிளைகளைத் துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

2009-10-ல் புதியதாக கும்பகோணம், பொள்ளாச்சி, தூத்துக்குடி, ஒட்டன்சத்திரம் மற்றும் திருவொற்றியூர் ஆகிய இடங்களில்

[2010 நவம்பர் 12

தமிழ்நாடு தொழிற்கூட்டுறவு வங்கிக் (தாய்கோ வங்கி) கிளைகள் திறக்கப்பட்டு அத்துடன் மொத்தம் 43 கிளைகள் மாநிலத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் செயல்பட்டு வருகின்றன. இந்நிலையில் புதிதாக வங்கிக் கிளைகளைத் திறப்பதற்கான வேண்டுகோள்கள் ஏதேனும் பெறப்பட்டால், அது பற்றி ஆராய்ந்து, மேற்கண்ட இடங்களில் வங்கியின் புதிய கிளைகளைத் திறந்து, இலாபகரமாக செயல்படுமா என ஆராய்ந்து அதற்குத் தகுந்தாற்போல் நடவடிக்கை எடுக்கப்படும்.

55—

தடுப்பூசி

வினா எண் 118614—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் குளிர் காலத்தில் வைரஸ்மூலம் ஆடுகளுக்குப் பரவும் ஆட்டுக்கொல்லி நோய்களை தடுப்பூசிமூலம் தடுக்க மருத்துவ முகாம் நடத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

ஆடுகளுக்கு ஏற்படும் வைரஸ் நோயான ஆட்டுக்கொல்லி நோய்க்கான தடுப்பூசி ஆடுகளுக்கு அஸ்காடு (ASCAD) திட்டத்தின்கீழ் ஆண்டுதோறும் போடப்பட்டு வருகிறது. சேலம் மாவட்டத்தில் இந்த ஆண்டு ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் ஆடுகளுக்கு இத்தடுப்பூசி போடப்படும். சம்பந்தப்பட்ட கால்நடை மருந்தகங்களின்மூலமாகவும், முகாம்களின்போதும் இப்பணி நடைபெறும். ஆட்டுக்கொல்லி நோய் பொதுவாக கோடை காலத்திலேயே ஆடுகளைத் தாக்கும். அஸ்காடு திட்டத்தின்கீழ் ஆட்டுக்கொல்லி நோய்க்காக பெங்களூருவில் உள்ள தடுப்பூசி தயாரிக்கும் ஐ.வி.ஆர்.ஐ., அரசு நிறுவனத்திடமிருந்து தடுப்பூசி பெறப்பட்டு ஏற்கெனவே மாவட்டங்களில் முன்னறிவிப்பு செய்யப்பட்டு, போடப்பட்டு வருகிறது. கடந்த ஐந்து வருடங்களில், இத்துறை உரிய காலத்தில் தடுப்பூசி போடுவதற்கு எடுத்துவரும் தொடர் நடவடிக்கைகளில் 20-லிருந்து 3 ஆக இந்நோய்க் கிளர்ச்சி குறைந்துள்ளது.

2010 நவம்பர் 12]

56—

ஆக்கிரமிப்பு அகற்றுதல்

வினா எண் 35171—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, மல்லிக்குட்டை ஊராட்சி ஏரிகளில் ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மல்லிக்குட்டை கிராமம் ஏரி புறம்போக்கு சர்வே எண் 54 விஸ். 12.72.5 ஹெக்டேர் நிலம் ஆகும். மேற்படி ஏரியிலிருந்து ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுவிட்டன என்று மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

57—

ஆக்கிரமிப்பு அகற்றுதல்

வினா எண் 47522—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, ஓமலூர் பேருந்து நிலையம் அருகிலுள்ள அரசு புறம்போக்கு பாதையிலுள்ள ஆக்கிரமிப்பை அகற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

ஓமலூர் பேருந்து நிலையத்திலுள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுவிட்டன. தற்போது ஆக்கிரமிப்புகள் எதுவும் இல்லை என மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2010 நவம்பர் 12

58—

பட்டா

வினா எண் 118912—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், சென்னிமலை, வடமுகம், வெள்ளோடு, அத்தப்பாளையம், நாடார் காலனியில் மக்களுக்கு நிலப்பட்டா வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், வடமுகம் வெள்ளோடு கிராமம், மஜரா அத்தப்பாளையம் கிராமக் கணக்குகளில் "ஓடை" என வகைபாடு செய்யப்பட்டுள்ளது. எனவே, சென்னை உயர் நீதிமன்றம் (நீதிப்பேராணை எண் 20186/ 2000/27-06-2005 நாளன்று வழங்கிய தீர்ப்பின்படி, நீர்நிலைப் புறம்போக்குகளில் ஒப்படை செய்வதைத் தவிர்க்க வேண்டும் எனத் தீர்ப்பு வழங்கியிருப்பதால்) மேற்படி பகுதியில் வசிக்கும் குடும்பங்களுக்குப் பட்டா வழங்க இயலாது.

59—

சிலை அமைத்தல்

வினா எண் 121592—திரு. எல். ரவிச்சந்திரன்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகரில் மறைந்த முன்னாள் முதலமைச்சர் திரு. எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்களின் திருவுருவச் சிலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 நவம்பர் 12]

விடை—

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஏற்கெனவே அரசு சார்பில் சென்னையில் முன்னாள் முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு நினைவகம் மற்றும் அருங்காட்சியகம் அமைக்கப்பட்டு நினைவகத்தில் ஆண்டுதோறும் அன்னாரின் பிறந்த நாளில் சிறப்பு செய்யப்பட்டு வரும் நிலையிலும் மற்றும் சென்னை அண்ணா சாலையில் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் முழு உருவச் சிலை நிறுவப்பட்டுள்ள நிலையிலும் மறைந்த முன்னாள் முதலமைச்சர் திரு. எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்களின் திருவுருவச் சிலையை சேலம் மாநகரில் அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

60—

நினைவு இல்லம்

வினா எண் 122418—திரு. இ. மகேந்திரன்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, சேடப்பட்டி ஒன்றியம், பெருங்காமநல்லூரில் ஆங்கிலேயர்களை எதிர்த்து சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட ஒரு பெண் உட்பட 16 நபர்களுக்காக எழுப்பப்பட்ட நினைவுத் தூண் அருகில் நினைவு இல்லம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:

ஏற்கெனவே அரசு சார்பில் ஏராளமான நினைவகங்கள் நிறுவப்பட்டு அவை பராமரிக்கப்பட்டு வரும் நிலையிலும், ஆண்டுதோறும் ஜூலைத் திங்கள் 17 ஆம் நாள் அன்று தியாகிகள் தினம் அரசால் கொண்டாடப்பட்டு வரும் நிலையிலும், உசிலம்பட்டி தொகுதி, சேடப்பட்டி ஒன்றியம், பெருங்காமநல்லூரில் ஆங்கிலேயர்களை எதிர்த்து சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட ஒரு பெண் உட்பட 16 நபர்களுக்காக எழுப்பப்பட்ட நினைவுத் தூண் அருகில் நினைவு இல்லம் அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

61—

நெல் கொள்முதல் நிலையம்

வினா எண் 65324—திரு. சபா. இராஜேந்திரன்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லிக்குப்பம் தொகுதி, அண்ணா கிராம ஒன்றியம், மாளிகைமேடு கிராமத்தில் நெல் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், நெல்லிக்குப்பம் தொகுதி, அண்ணா கிராம ஒன்றியம், மாளிகைமேடு கிராமத்தில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்கத் தேவையான நிலம் இலவசமாக (இனாம் சாசனம்) இன்னும் பெறப்படவில்லை. நிலம் இனாம் சாசனமாக பெறப்படும்பட்சத்தில் அங்கு அரசு நிதி ஆதாரம் பெற்று, நிரந்தர நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

62—

கொள்முதல்

வினா எண் 67327—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உளுந்து, பருப்பு ஆகியவற்றை நேரடிக் கொள்முதல் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது மார்க்கெட்டிங் கமிட்டிமூலமாக விவசாயிகள் பருப்பு வகைகளை விற்பனை செய்து வருகிறார்கள்.

2010 நவம்பர் 12]

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், பொது விநியோகத் திட்டத்தின்கீழ் தேவையான உளுந்து, துவரை ஆகிய பருப்பு வகைகளை மத்திய அரசு பொதுத் துறை நிறுவனங்கள்மூலமாக மானிய விலையிலும் உலகளாவிய ஒப்பந்தப்புள்ளிமூலமாக, வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்தும் மற்றும் திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளிகள் மூலமாக கொள்முதல் செய்தும் வருகிறது.

63—

பட்டகுச் சவாரி

வினா எண் 69823—திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை ஸ்ரீ மாரியம்மன் தெப்பக்குளத்தில் படகுச் சவாரி விட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலின் உபகோயிலான அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் அருகில் உள்ள தெப்பக்குளம் 1000 அடி நீளம் 1000 அடி அகலம் மற்றும் 12 அடி ஆழம் உள்ளதாகும். ஒவ்வொரு வருடமும் தை மாதம் பௌர்ணமி அன்று நடைபெறும் தைப் பூச திருவிழாவில் அம்பாள் மற்றும் சுவாமி தெப்பத்தில் உலா வருவதற்கு இத்தெப்பக்குளத்திற்கு அருகில் அமைந்துள்ள வைகை ஆற்றிலிருந்து தற்காலிகக் கிணறு அமைத்து மின்மோட்டார்மூலம் தெப்பக்குளத்திற்கு சுமார் 6 அடி முதல் 10 அடி வரை தெப்பம் மிதக்கும் அளவிற்கு தண்ணீர் நிரப்பப்பட்டு தெப்ப உற்சவம் நடைபெற்று வருகிறது. தெப்பக்குளத்தில் தண்ணீர் நிரப்பப்படும்போது தண்ணீர் மட்டத்தைப் பராமரிக்க பூமிக்கடியில் உறிஞ்சும் நீர், ஆவியாகும் நீர் சேர்த்து தினமும் 34,50,000 லிட்டர் அதாவது ஒரு நாளைக்கு 3.5 மில்லியன் லிட்டர் தண்ணீர் தேவைப்படுகிறது. தண்ணீர் அதிக அளவில் தெப்பக்குளத்தில்

[2010 நவம்பர் 12

நிரப்பப்படும்போது, தண்ணீர் மட்டத்தைப் பராமரிக்கத் தேவையான தண்ணீர் தெப்பக்குளத்தில் இருந்தால் மட்டுமே படகு சவாரி விட இயலும் என்பதால், தற்போதைய நிலையில் மேற்கண்ட தெப்பக்குளத்தில் படகு சவாரி விட இயலாத நிலை உள்ளது.

64—

கோயில்களைப் புதுப்பித்தல்

வினா எண் 69960—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னிமலை, பிடாரியூர், குளத்துப்பாளையம், மதுரை வீரன் கோயில் மற்றும் குருக்கபாளையம் கிராமம், ஆண்டிபுதூர் ஆதி திராவிட காலனி கோயில்களைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், குளத்துப்பாளையம் அருள்மிகு மதுரைவீரன் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறை ஆளுகையின்கீழ் உள்ள பட்டியலில் சேராத ஒரு கால பூசை நிதியுதவித் திட்டத்தின்கீழ் பூசை நடைபெறும் திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் தற்போது நல்ல நிலையில் உள்ளதால் திருப்பணி செய்ய வேண்டிய நிலையில் இல்லை. மேலும், இத்திருக்கோயில் நெடுஞ்சாலைத் துறைக்கு சொந்தமான இடத்தில் அமைந்துள்ளதாலும் மேற்படி திருக்கோயிலுக்கு நிதியுதவி வழங்க வேண்டிய அவசியம் இல்லை.

2. மற்றொரு திருக்கோயிலான திருப்பூர் மாவட்டம், காங்கேயம் வட்டம், குருக்கப்பாளையம் கிராமம், ஆண்டிப்புதூர் ஆதி திராவிடர் காலனியில் உள்ள அருள்மிகு மாகாளியம்மன் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் நேரடிக் கட்டுப்பாட்டில் அல்லாத திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலின் திருப்பணிக்கு நிதியுதவி வேண்டி மேற்படி சட்டப் பேரவை

2010 நவம்பர் 12]

உறுப்பினரால் ஏற்கெனவே வினா எழுப்பப்பட்டு 2005-06 ஆம் ஆண்டிற்கான ஆதி திராவிடர் திருக்கோயில் திருப்பணி நிதியுதவித் திட்டத்தில் ரூ.25,000/- வழங்கப்பட்டு திருப்பணி முடிக்கப்பட்டுள்ளது.

65—

திருக்கோயில் கட்டடப் பணி

வினா எண் 70221—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை தொகுதி, திருமூர்த்திமலை அருள்மிகு அமணலிங்கேஸ்வரர் திருக்கோயில் நுழைவாயில் கட்டும் பணியினை மீண்டும் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

திருப்பூர் மாவட்டம், உடுமலை வட்டம், திருமூர்த்திமலை, அருள்மிகு அமணலிங்கேஸ்வரர் திருக்கோயிலுக்கு ரூ.8,50,000/- மதிப்பீட்டில் அலங்கார நுழைவு வாயில் மண்டபம் கட்ட மதிப்பீடு மற்றும் வரைபடம், தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டு மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அங்கீகாரம் வழங்கப்பட்டு, ஒப்பந்ததாரரால் கட்டுமான வேலைகள் நடைபெற்றது. இப்பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது வனத் துறையினரால் இடையூறுகள் ஏற்பட்டு பணிகள் தொடர்ந்து நடைபெறாமல் நின்றுவிட்டது. மேற்படி பணிகள் தொடங்க வனத் துறையினரிடம் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு பணிகள் மீண்டும் துவக்கப்பட்டன. ஒப்பந்ததாரருக்கு அளவீடு புத்தகத்தின்படி திருக்கோயில் நிதியிலிருந்து தொகை வழங்கப்பட்டு பணிகள் 65% வரை நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, ஒப்பந்ததாரரால் தொடர்ந்து பணிகள் நடத்தப்படாமல் நிலுவையில் உள்ளன. ஒப்பந்ததாரரிடமிருந்து எவ்வித பதிலும் பெறப்படாததால், திருக்கோயில் நலன் கருதி, அறங்காவலர் குழு கூட்டுத் தீர்மானத்தின்படி அலங்கார மண்டபம் கட்டும் பணிக்கான ஒப்பந்தமானது இரத்து செய்யப்பட்டுள்ளது. எனவே மீதமுள்ள

35% அலங்கார நுழைவு வாயில் மண்டப கட்டுமான பணிக்கு திருத்திய மதிப்பீடு தயார் செய்து புதியதாக ஒப்பந்தப்புள்ளி விடப்பட்டு கட்டுமானப் பணிகள் விரைவில் தொடங்கப்படும்.

66—

மின் விளக்கு வசதி

வினா எண் 98476—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், தாயமங்கலம் ஸ்ரீ அருள்மிகு முத்துமாரியம்மன் கோயிலுக்குக் கூடுதலாக மின் விளக்கு வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், தாயமங்கலம், அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் திருக்கோயிலில் கூடுதலாக மின் வசதிக்கு உயர் மின் கோபுர விளக்கு ஒன்று அமைக்கப்பட்டு 100% பணிகள் முடிக்கப்பட்டு, பயன்பாட்டில் இருந்து வருகிறது.

67—

நவீன கழிப்பிடங்கள்

வினா எண் 102462—திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் கைலாசநாதர் கோயில், வைகுண்டப் பெருமாள் கோயிலுக்கு நவீன கழிப்பிடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 நவம்பர் 12]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில் மற்றும் வைகுண்டப்பெருமாள் திருக்கோயில் ஆகியவை தொல்பொருள் துறையின் பராமரிப்பில் உள்ளன. மேலும் காஞ்சிபுரம் கைலாசநாதர் திருக்கோயிலில் ஏற்கெனவே நவீன கழிப்பிட வசதிகள் சுற்றுலாத் துறையின்மூலம் செய்யப்பட்டு நகராட்சி நிருவாகத்தால் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும் வைகுண்டப்பெருமாள் திருக்கோயிலிலும் அடிப்படை வசதிகள் செய்யப்பட வேண்டும் என இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் கேட்டுக் கொண்டதன் அடிப்படையில் சுற்றுலாத் துறையின்மூலம் கழிப்பிட வசதி மற்றும் குடிநீர் வசதி ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

68—

கட்டட வசதி

வினா எண் 108478—திரு. ஐ. மகேந்திரன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, பூதிப்புரம் ஊராட்சி, தவசித்தேவன்பட்டியில் உள்ள விநாயகர் கோயில், சந்தன மாரியம்மன் கோயில், முத்தாலம்மன் கோயிலுக்குக் கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

உசிலம்பட்டி தொகுதி, பூதிப்புரம் ஊராட்சி, தவசித்தேவன்பட்டியில் உள்ள அருள்மிகு விநாயகர் திருக்கோயில், சந்தன மாரியம்மன் திருக்கோயில் மற்றும் முத்தாலம்மன் திருக்கோயில் ஆகிய மூன்று திருக்கோயில்களும் இந்து சமய

அறநிலையத் துறை ஆளுகையின்கீழ் இல்லாத திருக்கோயில்கள் என்பதால் இத்திருக்கோயில்களுக்குக் கட்டடம் கட்டித் தர நிதியுதவி வழங்க இயலாத நிலை உள்ளது.

69—

கல்வெட்டில் பதித்தல்

வினா எண் 108585—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அறநிலையத் துறைக்கு சொந்தமான கோயில்களின் சர்வே எண், கோயில்களின் விவரங்கள் அடங்கிய பட்டியல்களை கல்வெட்டில் பதித்து வைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்கள் மற்றும் இதர அசையாச் சொத்துக்கள் குறித்த விவரங்கள், இந்து சமய அறநிலையத் துறை சட்ட விதிகளின்படி, சம்பந்தப்பட்ட திருக்கோயிலின் சொத்துப் பதிவேட்டில் பதிவு செய்து துறையின் அங்கீகாரம் பெற்று வைத்திருக்க வேண்டும். இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள 37,098 திருக்கோயில்களில் 19,683 திருக்கோயில்களின் சொத்துப் பதிவேடு அங்கீகரிக்கப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகிறது. அந்நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்து விவரத்தை அறிவிப்பு பலகையில் எழுதி திருக்கோயில் வளாகத்தில் வைத்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே, திருக்கோயில் சொத்து விவரங்கள் அடங்கிய கல்வெட்டுக்களை பதித்து வைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

2010 நவம்பர் 12]

70—

கோயில் திருப்பணி

வினா எண் 108601—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் தொகுதி, கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம், பாலவாடி கிராமத்திலுள்ள அருள்மிகு ஜலகண்டேஸ்வரர் ஆலயத்தைப் புதுப்பிக்கவும், கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், பாலவாடி கிராமம், அருள்மிகு ஜலகண்டேஸ்வரர் திருக்கோயிலுக்கு தத்துக்கோயில் திருப்பணி திட்டத்தின்கீழ் ரூ.1,75,000/- மதிப்பீட்டில் உற்சவர் பாதுகாப்பு, கிரில் கேட்டு, மேல்தளம் பழுதுபார்த்தல் மற்றும் விமான திருப்பணி ஆகியவை செய்யப்பட்டுள்ளன. மேற்படி திருக்கோயிலுக்கு 1-3-2007 அன்று குடமுழுக்கும் நடத்தப்பட்டுள்ளது. தற்போது மேற்படி திருக்கோயில் நல்ல நிலையில் உள்ளது. எனவே, இத்திருக்கோயிலுக்கு திருப்பணி செய்வதற்கான திட்டம் ஏதுமில்லை.

71—

கட்டமைப்பு பணிகள்

வினா எண் 108602—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர், கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம், காவேரிபுரம் கிராமம், கோட்டையூர் கோட்டை மாரியம்மன் கோயிலுக்கு கட்டமைப்புப் பணிகளை விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம், காவேரிபுரம் கிராமம், கோட்டையூர் அருள்மிகு கோட்டை மாரியம்மன் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டின்கீழ் இல்லாத பிற்படுத்தப்பட்ட மக்கள் வாழும் பகுதியில் உள்ளதும், வருவாய் இல்லாததுமான திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலுக்கு நிலங்களோ வேறு அசையாச் சொத்துக்களோ இல்லை. இத்துறைக் கட்டுப்பாட்டின்கீழ் இல்லாத, பிற்படுத்தப்பட்டோர் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயிலுக்கு, இத்துறை சட்ட விதிகளின்படி திருப்பணிகள் மேற்கொள்ளவோ திருப்பணிக்கு நிதியுதவி அளிக்கவோ இயலாது.

72—

தங்கும் விடுதி

வினா எண் 111712—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர், சின்ன திருப்பதி பெருமாள் கோயிலுக்கு இந்து சமய அறநிலையத் துறை நிதியில் தங்கும் அறையும், கூடுதலாக திருமண மண்டபமும் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

இத்திருக்கோயிலுக்கு உபயதாரர்கள்மூலமாக 25.00 இலட்சம் மதிப்பீட்டில் திருமண மண்டபம் 1998-ல் கட்டப்பட்டுள்ளது. இத்திருக்கோயிலில் அதிகமான திருமணங்கள் நடைபெறுவதில்லை. மேலும், திருமண மண்டபத்திற்கு குறைவான வாடகையே வசூலிக்கப்பட்டாலும், அதிக எண்ணிக்கையில் திருமணங்கள் நடைபெறுவதில்லை. எனவே, கூடுதலாக மற்றொரு திருமண மண்டபம் கட்டுவதற்கு திருக்கோயிலில் போதிய நிதி வசதி இல்லை. இத்திருக்கோயிலில் உபயதாரர்கள்மூலம் இரண்டு தங்கும்

2010 நவம்பர் 12]

விடுதிகளும், திருக்கோயில்மூலம் ஒரு தங்கும் விடுதியும் கட்டப்பட்டுள்ளன. இவற்றில் ஆறு அறைகள் உள்ளன. இந்த மூன்று விடுதிகளும் தற்போதுதான் கட்டி முடிக்கப்பட்டு வாடகைக்கு விடப்பட்டுள்ளன. இந்த மூன்று தங்கும் விடுதிகளும் பக்தர்கள் தங்குவதற்குப் போதுமானதாக உள்ளதால், கூடுதலாக திருமண மண்டபம் மற்றும் தங்கும் விடுதி கட்டுவதற்கான அவசியம் எழவில்லை.

73—

வழிபாட்டு வசதி

வினா எண் 117387—திரு. எம். பன்னீர்செல்வம்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிதம்பரம் நடராஜர் ஆலயத்தின் தென்புற வாயிலை பக்தர்களின் வழிபாட்டிற்குத் திறக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

சிதம்பரம், அருள்மிகு சபாநாயகர் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறை ஆளுகையின்கீழ் உள்ள பட்டியலைச் சேர்ந்த திருக்கோயில் ஆகும். மேற்படி திருக்கோயிலுக்கு சென்னை, உயர் நீதிமன்ற உத்தரவின்படி செயல் அலுவலர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். 22-2-2009 முதல் செயல் அலுவலரால் பொறுப்பேற்கப்பட்டு நிர்வாகம் செயல்பட்டு வருகிறது. தற்போது செயல் அலுவலர் நியமனத்தை எதிர்த்து டெல்லி, உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டு விசாரணையில் உள்ளது. இதனிடையில் டெல்லி, உச்ச நீதிமன்றத்தில் சிறப்பு விடுப்பு மேல்முறையீட்டு மனு எண் 30278/2009-ல் 15-3-2010-நாளிட்ட உத்தரவில் செயல் அலுவலர், மேற்படி திருக்கோயிலில் பெரிய கட்டுமானப் பணிகளோ அல்லது இடித்தல் பணிகளோ மேற்கொள்ளக்கூடாது என தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. டெல்லி உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகளில் இறுதி உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்ட பின்னரே மேற்காணும் திருக்கோயிலின் தென்புற வாயிலை பக்தர்களின் வழிபாட்டிற்குத் திறப்பது குறித்துப் பரிசீலிக்க முடியும்.

[2010 நவம்பர் 12

74—

ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்

வினா எண் 118587—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, சின்ன திருப்பதி கோயில் நிலத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காருவள்ளி சின்ன திருப்பதி, அருள்மிகு பிரசன்ன வெங்கட்ரமணசுவாமி திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயில், மரக்கோட்டை கிராமம், சர்வே எண் 167-ல் 28.45 ஏக்கர் பரப்பளவிலான சிறிய மலை மீது அமைந்துள்ள திருக்கோயிலாகும். இந்நிலம் முழுவதும் திருக்கோயில் புறம்போக்காக வகைப்படுத்தப்பட்டுள்ளது. இத்திருக்கோயில் அமைந்துள்ள நிலப்பரப்பு தவிர இதர இடங்கள் அனைத்தும் மலைப்பகுதியாக உள்ளது. இத்திருக்கோயில் அமைந்துள்ள மலையின் அடிவாரத்தில் கோயில் புறம்போக்கு நிலத்தில் 16 தனி நபர்கள் சிலர் வீடுகள் கட்டி ஆக்கிரமிப்பு செய்துள்ளனர். மேலும் ஊராட்சி ஒன்றிய சமுதாயக் கூடம் மற்றும் ஊராட்சி மன்ற அலுவலகம் ஆகியவையும் கட்டடப்பட்டு செயல்பட்டு வருகின்றன. ஆக்கிரமிப்புதாரர்கள் கிராம நிர்வாக அலுவலரிடம் தீர்வை செலுத்தி ரசீது பெற்றுள்ளனர். இந்நிலம் கோயில் புறம்போக்காக வகைப்படுத்தப்பட்டுள்ள நிலமாதலால் அறநிலையத் துறை சட்டப் பிரிவு 78-ன்கீழ் நடவடிக்கை எடுக்க இயலாத நிலை உள்ளது. வருவாய்த் துறையினர் மூலமாகவே ஆக்கிரமிப்புகளை அகற்ற இயலும். அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2010 நவம்பர் 12]

75—

கூடுதல் வகுப்பறைகள்

வினா எண் 117354—திரு. எம்.என். கந்தசாமி: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியநாயக்கன்பாளையம் ஒன்றியம், கனுவாய் தொடக்கப் பள்ளியில் கூடுதல் வகுப்பறைகள் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெரியநாயக்கன்பாளையம் ஒன்றியம், கனுவாய் தொடக்கப் பள்ளிக்கு போதுமான கட்டடங்கள் உள்ளன. எனவே, கூடுதல் கட்டடம் தற்போது தேவைப்படவில்லை.

76—

எழுத்தறிவுத் திட்டம்

வினா எண் 117577—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எழுத்தறிவுத் திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் வளர் கல்வித் திட்டம், விடுபட்டோருக்கான எழுத்தறிவுத் திட்டம் போன்றவை 30-9-2009 உடன் முடிவுற்று புதிய கற்கும் பாரதம் என்ற எழுத்தறிவுத் திட்டம் தருமபுரி, ஈரோடு, பெரம்பலூர், சேலம் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் மைய, மாநில அரசு நிதி

[2010 நவம்பர் 12

உதவியுடன் முதற்கட்டமாக செயல்பட்டு வருகிறது. இரண்டாம் கட்டமாக அரியலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் விரைவில் செயல்பட உள்ளது. மேலும், தமிழ்நாட்டில் புதிய எழுத்தறிவுத் திட்டம் கற்கும் பாரதம் செயல்படாத 25 மாவட்டங்களில் தமிழக அரசு ரூ. 36.19 இலட்சம் நிதி உதவியுடன் பகுதி-II-ன்படி மாநில மகளிருக்கான எழுத்தறிவுத் திட்டம் ஆகஸ்ட் 2010 முதல் 6 மாதங்களுக்கு செயல்படுத்தப்படுகிறது.

77—

வரி விலக்கு அளித்தல்

வினா எண் 121136—திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொதுமக்கள் அன்றாடம் பயன்படுத்தும் உயிர் காக்கும் மருந்து, மாத்திரைகளுக்கு வரி விலக்கு அளிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா, வணிக வரித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டப் பிரிவு 15-ன்கீழ் 4 ஆம் அட்டவணை B பிரிவில் வரிசை எண் 52-ல் உயிர்காக்கும் மருந்துகளுக்கு முழு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

78—

அடிப்படை வசதி

வினா எண் 83050—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், சின்னாறு வனப் பகுதி, மஞ்சப்பட்டி கிராம மலைவாழ் மக்களுக்கு அடிப்படை வசதி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 நவம்பர் 12]

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், மஞ்சம்பட்டி வனப் பகுதியில் உள்ள 15 மலைவாழ் மக்களின் வீடுகள், மாவட்ட ஆட்சியர் நிதி மற்றும் வளர்ச்சி முகமை திட்டத்தின்கீழ் (எப்டிஏ) தகர வீடுகளாக கட்டித் தரப்பட்டுள்ளன. மருந்து தெளிப்பான்கள் ரூ.10,000/- செலவிலும் மற்றும் உழுவை மாடுகள் வாங்க ரூ. 20,000/-மும் ஆனைமலை வளர்ச்சி முகமை திட்டத்தின்மூலம் கடனாகக் கொடுக்கப்பட்டுள்ளன. அப்பகுதியில் வசிக்கும் மக்கள் தொன்றுதொட்டு ஆற்று நீரையே குடிநீருக்குப் பயன்படுத்தி வருகின்றனர். அனைத்து வீடுகளிலும் கதிரொளி (சோலார்) மின் விளக்குகள் வழங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. இப்பகுதி மக்கள் அமராவதி மற்றும் மன்னவனூரில் உள்ள அரசு சுகாதார நிலையங்களைப் பயன்படுத்தி வருகின்றனர்.

79—

குடியிருப்பு பகுதிகளில் வன விலங்குகளை கட்டுப்படுத்துதல்

வினா எண் 118041—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, சிங்கோனா, ஊசிமலை, ஊசிமலைமட்டம், அக்காமலை, அக்காமலை 2-ம் பிரிவு, கருமலை பஜார், புதுத்தோட்டம், ரொட்டிக்கடை, லோயர்பாரளை, அப்பர்பாரளை, வேவர்லி, பிளண்டிவேலி, சண்முகா, தலநார், கல்லாறு, அட்டகட்டி, அழியாறு, வாட்டர்பால்ஸ் பழையகாடு, வாட்டர்பால்ஸ் என்.சி. பிரிவு, வெள்ளமலை சோலைப்பாடி, வெள்ளைமலைமட்டம், வெள்ளமலை ஆகிய எஸ்டேட்டுகளில் மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் சிறுத்தைப் புலி நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2010 நவம்பர் 12

விடை.—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, சிங்கோனா, ஊசிமலைமட்டம், அக்காமலை, அக்காமலை 2-ம் பிரிவு கருமலை பஜார், புதுத்தோட்டம், ரொட்டிக்கடை, லோயர்பாரளை, அப்பர்பாரளை, வேலர்லி, பிளண்டிவேலி, சண்முகா, தலநார், கல்லாறு, அட்டகட்டி, அழியாறு, வாட்டர்பால்ஸ் பழையகாடு, வாட்டர்பால்ஸ் என்.சி. பிரிவு, வெள்ளமலை சோலைப்பட்டி, வெள்ளமலைமட்டம், வெள்ளமலை ஆகிய எஸ்டேட்டுகளில் மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் சிறுத்தைப் புலி நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த மாலை 6.00 மணிக்கு மேல் பொதுமக்கள் குறிப்பாக குழந்தைகள் நடமாட்டத்தை கூடுமானவரை தவிர்க்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. சிறுத்தை நடமாட்டம் இருப்பதாகக் கூறப்படும் பகுதிகளில் உள்ள பொதுமக்கள் தங்கள் வீடுகளில் சிறுத்தைக்கு உணவாகப் பயன்படும் நாய், கோழி போன்ற வளர்ப்புப் பிராணிகளை வளர்ப்பதைத் தவிர்க்க கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்கள். இப்பகுதிகளில் உள்ள மாட்டிறைச்சிக் கடைகளிலிருந்து கழிவுகளை பொது இடத்தில் கொட்டாமல் குடியிருப்பு மற்றும் பொதுமக்கள் நடமாட்டம் இல்லாத பகுதிகளில் கொட்டிட கடை உரிமையாளருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. சிறுத்தை நடமாட்டம் இருப்பதாகத் தகவல் வரப்பெற்றால் சரகப் பணியாளர்கள் அப்பகுதியில் முகாமிட்டு சிறுத்தை வராமல் இருப்பதற்குப் போதுமான பாதுகாப்புப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். மேலும், கூண்டு வைத்து பிடித்து வேறு பகுதிகளில் கொண்டுசென்று விடுகின்றனர்.

இப்பொருள் குறித்து 18-5-2010 அன்று பொள்ளாச்சி ஸ்ரீராமு கல்லூரியில் மாண்புமிகு வனத் துறை அமைச்சர் தலைமையில் வருவாய்த் துறை, காவல் துறை, உள்ளாட்சித் துறை அலுவலர்கள், நகராட்சி மக்கள் பிரதிநிதிகள், தோட்ட அதிபர் சங்க நிர்வாகிகள், தொழிற்சங்க பிரதிநிதிகள், ஆராய்ச்சியாளர்கள், தன்னார்வ தொண்டு நிறுவன பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்ட ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டு சம்பந்தப்பட்டவர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டன. அக்கூட்டத்தில் மனித வன உயிரின மோதல் குறித்த தடுப்பு நடவடிக்கை எடுப்பது தொடர்பாக ஒரு குழு அமைக்க முடிவு எடுக்கப்பட்டது. அம்முடிவின்படி ஆனைமலை புலிகள் காப்பக உதவி இயக்குநர் தலைமையில் ஒரு குழு அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2010 நவம்பர் 12]

80—

தண்ணீர்த் தொட்டிகள்

வினா எண் 119221—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டத்தின் காடுகளில் வாழும் மயில்கள், மான்கள் மற்றும் முயல்களுக்கு காடுகளில் ஆங்காங்கே தண்ணீர்த் தொட்டிகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டத்தின் காடுகளில் வாழும் மயில்கள், மான்கள் மற்றும் முயல்களுக்கு மேற்படி விலங்குகள் அதிகமாக காணப்படும் மணமலை காப்புக்காடு, சங்கரபதி காப்புக்காடு மற்றும் பணங்குடி காப்புக்காடு பகுதிகளில் சுமார் 25 எண்ணம் தண்ணீர் தொட்டி வைத்து நீருற்றி விலங்குகள் காப்புக்காட்டை விட்டு வெளியேறாவண்ணம் பாதுகாக்கப்பட்டு வருகிறது. தற்போது பெய்த கோடை மழையில் மேற்படி பகுதியில் உள்ள குட்டைகளில் தண்ணீர் உள்ளது.

81—

மின் வசதி மற்றும் சாலை வசதி

வினா எண் 120134—திரு. நா. உதயசூரியன்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கல்வராயன் மலையில் மலைவாழ் மக்களுக்கு மின் வசதி, சாலை வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

விழுப்புரம் மாவட்டம், கல்வராயன் மலையில் வசிக்கின்ற மலைவாழ் மக்களுக்கு மின் வசதி, சாலை வசதி ஆகியவற்றினை விழுப்புரம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையும், தமிழ்நாடு மின்சார வாரியமும் செய்து வருகின்றன. இதனால் பெரும்பாலான மலைக்கிராமங்கள் மின்சார வசதி, சாலை வசதிகளால்

மேம்படுத்தப்பட்டுள்ளன. நிலுவையில் உள்ள கிராமங்களுக்கு மின் வசதி மேம்படுத்த மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுத்து வருகிறது. குறிப்பாக கல்வராயன் மலையில் அமைந்துள்ள சின்ன திருப்பதி முதல் தெக்குப்பட்டி வரையிலான கிராமங்கள் பயன் பெறும் வகையில் மின் வசதி மேம்படுத்தும்பொருட்டு பெறப்பட்ட வனப் பாதுகாப்புச் சட்டம் 1980-ன்கீழ் தமிழ்நாடு மின்சார வாரியத்திடம் இருந்து பெறப்பட்ட கருத்துரு மைய அரசிற்கு 25-2-2009-ல் அனுப்பி வைக்கப்பட்டது. மத்திய மின்சார ஆணையம் நிர்ணயம் செய்துள்ளவாறு இந்நேர்வில் தேவைப்படும் வன நிலத்திற்கு திருத்திய கருத்துரு அனுப்பி வைக்குமாறு மத்திய அரசு கடித நாள் 7-9-2009-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி பயனீட்டாளர் துறையிடம் இருந்து கள்ளக்குறிச்சி மாவட்ட வன அலுவலர்/விழுப்புரம் வனப் பாதுகாவலர் மூலமாக திருத்திய கருத்துரு பெறப்பட்டு அதன்மீது கூடுதல் விவரங்கள் கோரப்பட்டு பரிசீலனையில் உள்ளன. கூடுதல் விவரங்கள் பெறப்பட்டவுடன் மத்திய அரசின் ஒப்புதல் பெற விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

82—

வனவிலங்குப் பாதுகாப்பு

வினா எண் 120956—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, மணியக்காரர், மானிக்கா 1,2-ம் பிரிவுகள், வரட்டுப்பாறை, பழைய வால்பாறை, சிவகாப்பி, முருகன் குரங்குமுடி, ஸ்டேன்மோர் 1,2-ம் பிரிவுகள், நல்லகாத்து 1,2-ம் பிரிவுகள், இஞ்சிப்பாறை, 1,2-ம் பிரிவுகள், புதுக்காடு, முருகாளி, கல்யாணபந்தல், அணலி, ஷேக்கல்முடி சிடிஆர், ஷேக்கல் 1,2 பிரிவுகள், மானாம்பள்ளி வில்லோனி 1,2-ம் பிரிவுகள் ஆகிய எஸ்டேட்டுகளில் உள்ள குடியிருப்பு பகுதிகளில் சிறுத்தைப் புலி நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, மணியக்காரர், மானிக்கா 1, 2-ம் பிரிவுகள், வரட்டுப்பாறை, பழைய வால்பாறை, சிவகாப்பி,

2010 நவம்பர் 12]

முருகன் குரங்குமுடி, ஸ்டேன்மோர் 1, 2-ம் பிரிவுகள், நல்லகாத்து 1, 2-ம் பிரிவுகள், இஞ்சிப்பாறை 1, 2-ம் பிரிவுகள், புதுக்காடு, ஷேக்கல்முடி சிடிஆர், ஷேக்கல்முடி, 1, 2-ம் பிரிவுகள், மானாம்பள்ளி வில்லோனி 1, 2-ம் பிரிவுகள் ஆகிய எஸ்டேட்டுகளில் உள்ள குடியிருப்பு பகுதிகளில் சிறுத்தை புலி நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மேலும், பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

2. வன உயிரினங்கள் மனிதர்கள் வாழும் பகுதியில் புகுந்து சேதம் விளைவிப்பதைத் தடுப்பதற்கு எஸ்டேட் சார்பிலும் எஸ்டேட்டில் வசிக்கும் பொதுமக்கள் சார்பிலும் எடுக்கப்பட வேண்டிய தடுப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து எஸ்டேட் நிர்வாகத்தினருக்கும் மற்றும் குடியிருப்பவர்களுக்கும் சுற்றறிக்கை நோட்டீஸ் வழங்கப்பட்டு அதில் குறிப்பிட்டுள்ள அறிவுரைகளைப் பின்பற்றுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது

83—

சாலை சீரமைத்தல்

வினா எண் 8315—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை தொகுதியில் பழுதடைந்துள்ள சாலையைச் சீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

வால்பாறை தொகுதியில் பழுதடைந்துள்ள சாலைகளில் 2006-2007-ஆம் ஆண்டில் தனிப் பழுது பார்த்தல் திட்டத்தின்கீழ் 24.185 கி.மீ. நீளமுள்ள சாலைகள் ரூ.235.30 இலட்சம் மதிப்பிலும், ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் 2006-2007-ன்கீழ் 23.25 கி.மீ. நீளமுள்ள சாலைகள் ரூ.383 இலட்சம் மதிப்பிலும் மேம்பாடு செய்ய எடுத்துக்கொள்ளப்பட்டு பணிகள் முடிவடைந்து சாலைகள் நல்ல நிலையில் உள்ளன.

[2010 நவம்பர் 12

84—

ஆற்றுப் பாலத்தை சீர் செய்தல்

வினா எண் 33825—திரு. தி. இராமசாமி: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு-மதுரை நெடுஞ்சாலை இடையே பழுதடைந்துள்ள கல்லணை ஆற்றுப் பாலத்தை சீர் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

விருதுநகர் (நெ) கோட்டப் பராமரிப்பில் உள்ள மாநில நெடுஞ்சாலையான (எச்.எஸ்.182) வத்ராப்-மகாராஜபுரம்-அழகாபுரி-விருதுநகர் சாலையில் கி.மீ.1/10-இல் கல்லணை ஆற்றின் குறுக்கே அமைந்துள்ளதாகும். கடந்த 2006-இல் நவம்பர் மாதம் பெய்த பெருமழையின் காரணமாக, மேற்படி பாலத்தின் கீழ்ப்படுகையில் (Downstream Side) உள்ள "ஏப்ரான்" மற்றும் கட் ஆப்-வால் ஆகியவை பழுதடைந்திருந்தன. அவற்றைச் சீர் செய்ய வேண்டி 2008-2009 ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தில் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டு பணி 10/2009-இல் முடிவுற்று நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

85—

சாலையை அகலப்படுத்துதல்

வினா எண் 81989—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அருப்புக்கோட்டை-திருச்சுழி, சாயல்குடி-கரடுசந்தை, மாரியூர் வாலிநோக்கம் சாலை 5 கி.மீ. நீளத்திற்கு அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

2010 நவம்பர் 12]

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்ட மாநில நெடுஞ்சாலையில் கி.மீ.0/0-2/0 மற்றும் 16/0-32/018.00 கி.மீ நீளத்திற்கு ரூ.756 இலட்சம் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் 2006-2007-இல் பணி மேற்கொள்ளப்பட்டு 31.03.2008-இல் பணி முடிக்கப்பட்டுவிட்டது. இதே சாலையில் கி.மீ 2/0-8/0 மற்றும் 13/2-16/0 வரையுள்ள 8.80 கி.மீ நீளத்திற்கு ரூ.298 இலட்சம் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தில் 2007-2008-இல் பணி மேற்கொள்ளப்பட்டு 31.03.2009-இல் பணி முடிக்கப்பட்டுவிட்டது. மேலும் கி.மீ 8/0-13/2=5.20 கி.மீ நீளத்திற்கு ரூ.210 இலட்சம் மதிப்பீட்டில் 2006-2007-ஆம் ஆண்டு மத்திய சாலை நிதித் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு 30.10.2008-இல் பணிகள் நிறைவேற்றப்பட்டுவிட்டது. தற்போது போக்குவரத்திற்கு ஏற்ற வகையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

86—

சத்துணவுக் கூடம்

வினா எண் 71800—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் சத்துணவுக் கூடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்:

தாரமங்கலம் தேர்வுநிலை பேரூராட்சியின் 2008-2009 ஆம் ஆண்டு நமக்கு நாமே திட்டத்தின்கீழ் தாரமங்கலம் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளிக்கு சமையல் கூடம் கட்டும் பணி முடிவுற்று, தற்போது சமையல் கூடம் பயன்பாட்டில் உள்ளது.

87—

சத்துணவு மையம்

வினா எண் 104984—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி ஒன்றியம், கஞ்சநாயக்கன்பட்டி கிராமம், நடுமோட்டூரில் சத்துணவு மையம் புதியதாகக் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி ஒன்றியம், கஞ்சநாயக்கன்பட்டி கிராமம், நடுமோட்டூரில் குழந்தைகள் மையம் கட்டுவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை.

88—

குடிநீர் வசதி

வினா எண் 8060—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, காங்கேயம் ஆதி திராவிட பள்ளி மாணவர்கள் விடுதிக்கு குடிநீர் இணைப்பு வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், காங்கேயம் கோட்டம், காங்கேயம் அரசு மாணவர் விடுதியில், நகராட்சி குடிநீர் இணைப்பு இரண்டு பெறப்பட்டு, தற்போது நல்ல முறையில் செயல்படுவதோடு மேற்படி விடுதி மாணவர்களுக்கு போதுமான குடிநீர் வசதி உள்ளது.

2010 நவம்பர் 12]

89—

கான்கிரீட் சாலை

வினா எண் 19215—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, இல்லியம்புதூர் ஆதி திராவிடர் காலனி, வடக்குப் பகுதி, கிழக்கு, மேற்கு தெருக்களுக்கு வடிகால் அமைத்து கான்கிரீட் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், காங்கேயம் ஒன்றியம், பொத்தியபாளையம் ஊராட்சி, இல்லியம்புதூர், ஆதி திராவிடர் காலனியில் 2009-2010 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றிய பொது நிதியில் ரூ. 1.00 இலட்சம் மதிப்பீட்டில் கான்கிரீட் தளம் அமைக்கப்பட்டு விட்டது. மேலும், வடிகால் அமைத்து கழிவு நீர் வெளியேற்ற இடம் ஏதும் இல்லாததால் வடிகால் வசதி செய்ய இயலாது.

தமிழ்நாடு சட்டப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

90—

வீட்டுமனைப்பட்டா

வினா எண் 30643—திரு. சு.ப. வேலுமணி: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூர் தொகுதி, பாலத்துறை ஊராட்சி ஆதி திராவிடர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பேரூர் தொகுதிக்குட்பட்ட பாலத்துறை ஊராட்சி ஆதி திராவிட மக்களுக்கு ஏற்கெனவே அருகிலுள்ள சிராபாளையம் கிராமத்தில் இலவச வீட்டு மனைப்பட்டா வழங்கப்பட்டுள்ளது. கோயம்புத்தூர் தெற்கு வட்டம், மலுமிச்சம்பட்டி கிராமத்திலும் வீடற்ற ஆதி திராவிட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

91—

கடனுதவி வழங்கும் திட்டம்

வினா எண் 39666—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றிய ஆதி திராவிடர்களின் காலனி வீடுகளை மராமத்து செய்ய தாட்கோ மூலம் கடனுதவி வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றிய ஆதி திராவிடர்களின் காலனி வீடுகளை மராமத்து செய்ய தாட்கோமூலம் கடனுதவி வழங்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

92—

தங்கும் விடுதி

வினா எண் 40328—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பாறை ஆதி திராவிடர் மாணவர் தங்கும் விடுதியைச் செப்பனிட்டு, கூடுதல் அறைகள் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை ஆதி திராவிடர் மாணவர் தங்கும் விடுதியை 2008-2009 ஆம் நிதியாண்டில் மேற்குத் தொடர்ச்சிமலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ. 2.00 இலட்சத்தில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும் அரசு மாணவர் விடுதிக் கட்டடம் இயங்கிவரும் பழைய ஓட்டுக் கட்டடத்தை இடித்துவிட்டு புதிய கட்டடம் நபார்டு திட்டத்தின்மூலம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

93—

மயான வசதி

வினா எண் 102733—திரு. கி.க. ராஜா: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் தொகுதி, லாலாப்பேட்டையிலுள்ள ஆதி திராவிடர்களுக்கு புதியதாக மயான வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

வேலூர் மாவட்டம், ஆண்டியப்பனூரிலிருந்து லாலாப்பேட்டை செல்லும் கிராமச் சாலையை ஒட்டினாற்போல் உள்ள புல எண் 467/2-ல் பாதை புறம்போக்கில் 0.10.0 ஹெக்டேர் நிலம் புதிய மயானமாக ஆதி திராவிட மக்களுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

[2010 நவம்பர் 12

94—

மீன் பண்ணைகள்

வினா எண் 117466—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டத்தில் மீன் பண்ணைகள் அமைக்க மானியம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதியதாக மீன் பண்ணைகள் அமைப்போருக்கு மானியம் வழங்கும் திட்டம் துறையின் நடைமுறையில் உள்ளது. மீன் துறையில் மீன் வளர்போர் மேம்பாட்டு முகமை திட்டங்களின் மூலம் / தேசிய மீன்வள அபிவிருத்தி வாரியத் திட்டத்தின்கீழ் மீன் பண்ணைகள் அமைக்க 20% மானியம் வழங்கப்படுகிறது. சிவகங்கை மாவட்டத்தில் நீர் வள, நில வளத் திட்டத்தின்கீழ் கோட்டக்கரையாறு மற்றும் மணிமுத்தாறு உப நதிநீர்க் கோட்டங்கள் பண்ணைக்குட்டைகளில் மீன் வளர்க்க உள்ளீட்டு செலவினம் ரூ. 15,000/-ம் 100% மானியமாகவும் அளிக்கப்பட்டுள்ளது. மீன் விதை வங்கிகள் அமைத்திட ரூ. 15.08 இலட்சம் 100% மானியமாக அளிக்கப்பட்டுள்ளது. 2007-2008-லிருந்து கோட்டக்கரையாறு மற்றும் மணிமுத்தாறு உப வடிநிலக்கோட்டத்தில் மொத்தம் 95 பண்ணைக் குட்டைகளில் மீன் வளர்க்கவும், 3 மீன் விதை வங்கிகளில் மீன் குஞ்சுகள் வளர்க்கவும் மானியங்கள் வழங்கப்பட்டுள்ளது. எனவே, சிவகங்கை மாவட்டத்தில் மீன் பண்ணைகளை அமைக்க விழைவோர் மதுரை மீன் வளர்ப்போர் மேம்பாடு முகமையின் முதன்மை நிர்வாக அலுவலர்/மீன் துறை உதவி இயக்குநரை (உள்நாட்டு மீன்வளம்) அணுகி உரிய விவரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

95—

கான்கிரீட் வீடுகள்

வினா எண் 119218—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2010 நவம்பர் 12]

(அ) கிழக்கரை மீனவர்களுக்கு கான்கிரீட் வீடுகள் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2010-2011 ஆம் ஆண்டில், இராமநாதபுரம் மாவட்டம், கிழக்கரை கிராம மீனவர் கூட்டுறவுச் சங்கத்திலிருந்து மீனவர் இலவச வீடு கட்டும் திட்டத்தின்கீழ் இலவச வீடுகள் வேண்டி கோரிக்கை ஏதும் பெறப்படவில்லை. அவ்வாறு பெறப்படும்போது கோரிக்கை குறித்துப் பரிசீலிக்கப்படும்.

96—

தொழிற்சாலை

வினா எண் 121131—திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மீன்களை உணவுப்பொருட்களாகத் தயார் செய்து டின்களில் அடைத்து வெளிநாட்டிற்கு விற்பனை செய்யும் தொழிற்சாலை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மீன்களை உணவுப்பொருட்களாகத் தயார் செய்து டின்களில் அடைத்து வெளிநாட்டிற்கு விற்பனை செய்யும் தொழிற்சாலை அமைக்கும் திட்டங்கள் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

[2010 நவம்பர் 12

97—

தொழிற்சாலை

வினா எண் 56654—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, பிலிசின்னம்பாளையம், கரியஞ்செட்டிபாளையம், ஜல்லிப்பட்டி, அங்கலக்குறிச்சி, கம்பலாபட்டி, அர்த்தநாரிபாளையம், தென்சங்கம்பாளையம், சோமந்துறை, தென்சித்தூர், ரமணமுதலிபுதூர், பெத்தநாயக்கனூர் மற்றும் காளியாபுரம் ஆகிய ஊராட்சிகளில் பால் உணவுப் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதிக்குட்பட்ட 12 ஊராட்சிகளில் தற்போது 17 சங்கங்கள் பதிவு செய்யப்பட்டு, நாளொன்றுக்கு சுமார் 5000 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. இச்சங்கங்களிலிருந்து உள்ளூர் விற்பனை போக, மீதமுள்ள பால் முழுவதும் சுமார் 5 கிலோ மீட்டர் அருகிலுள்ள சன்முகாபுரம் பால் குளிரூட்டும் நிலையத்தில் குளிர்வு செய்யப்பட்டு, பிரதான பண்ணைக்கு பால் டேங்கர்கள் மூலம் எடுத்துச் செல்லப்படுகிறது. சங்கங்களுக்குத் தேவையான பால் உபபொருட்கள் பால் கோவா, நெய், மைசூர்பா போன்றவை ஒன்றியத்தின்மூலம் அவ்வப்போது வழங்கப்பட்டு வருகிறது. மேலும், வால்பாறை தொகுதிக்குட்பட்ட வால்பாறை நகரில் பால் உணவுப் பூங்கா (Food park) செயல்பட்டு வருகிறது.

இந்நிலையில், வால்பாறை தொகுதியில் உள்ள பிலிசின்னம்பாளையம், கரியஞ்செட்டிபாளையம், ஜல்லிப்பட்டி, அங்கலக்குறிச்சி, கம்பலாபட்டி, அர்த்தநாரிபாளையம், தென்சங்கம்பாளையம், சோமந்துரை, தென்சித்தூர், ரமணமுதலிபுதூர், பெத்தநாயக்கனூர் மற்றும் காளியாபுரம் போன்ற ஊராட்சிகளில் பால் உணவு தயாரிக்கும் தொழிற்சாலை அமைத்திட தற்போது வாய்ப்பில்லை.

2010 நவம்பர் 12]

98—

விளம்பரத்தின்மூலம் பிரச்சாரம்

வினா எண் 107137—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில், எருமைப்பாலில் உள்ள பலன்களைப் பொதுமக்களுக்கு விளம்பரத்தின்மூலம் பிரச்சாரம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எருமைப் பாலின் உற்பத்தியைப் பெருக்கும் பொருட்டு, பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு கிராமப்புற மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஒருங்கிணைந்த பால் பெருக்குத் திட்டத்தின்கீழ் வாங்கப்படும் கறவைகளின் 30 சதவிகிதம் எருமை மாடுகளாக வாங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2007-2008 முதல் தேசிய விவசாய மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் எருமைக் கன்றுகள் வளர்க்கும் பிரத்தியேக திட்டம் அமல்படுத்தப்பட்டு, பால் உற்பத்தியாளர்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது.

எருமைப் பாலில் உள்ள அனுகூலங்களை விளம்பரப்படுத்திட, சங்கத்தில் அறிவிப்புப் பலகைகள் வைக்கப்படுகின்றன. பிரதம பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்குப் பயிற்சிக் காலங்களில் எருமைப் பால் உற்பத்தி செய்வதில் உள்ள அனுகூலங்கள், திடமான பால்பொடி மற்றும் வெண்ணை ஏற்றுமதி, தரமுள்ள நெய், எருமைப்பாலில் செய்யப்படும் பால் பொருட்கள் ஆகியவை பற்றி எடுத்துரைக்கப்படுகிறது.

99—

கூட்டுறவுச் சங்கத்தை இணைத்தல்

வினா எண் 113745—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2010 நவம்பர் 12

(அ) ஈரோடு பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கத்தை, ஈரோடு கூட்டுறவு பால் ஒன்றியம்-ஆவினுடன் இணைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியமும், ஈரோடு பால் நுகர்வோர் உற்பத்தியாளர்கள் ஒன்றியமும், ஈரோடு பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கமும் தனி அலுவலர் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகின்றன. மேலும், ஈரோடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் ஒப்புதல் பெறப்பட்ட பணியாளர் "திறன் பட்டியல்" படி (Cadre Strength) 83 பணியாளர்கள் அதிகமாக உள்ளனர்.

எனவே, ஈரோடு பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கத்தை, ஈரோடு கூட்டுறவு பால் ஒன்றியம்-ஆவினுடன் இணைக்க தற்போது சாத்தியக் கூறுகள் இல்லை.

100—

கட்டடம்

வினா எண் 115532—திரு. அ. சின்னசாமி: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரவட்லா பால் கூட்டுறவுச் சங்கத்திற்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

பேரணாம்பட்டு சட்டமன்றத் தொகுதி, பேரணாம்பட்டு ஒன்றியத்தில் செயல்பட்டு வரும் வி.எல்.ஆர். 35 அரவட்லா மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமாக 4360 சதுர அடி காலிமனை உள்ளது. இச்சங்கத்தில், தினசரி 300 லிட்டர் பால் கொள்முதல் செய்து அதில் உள்ளூரில் 10 லிட்டர் விற்பனை செய்தது போக 290 லிட்டர் பால் வேலூர்-திருவண்ணாமலை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்திற்கு அனுப்பப்பட்டு வருகிறது.

2010 நவம்பர் 12]

2. வி.எல்.ஆர். 35 மகளிர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்குப் போதுமான நிதியாதாரம் இல்லாததால், கட்டடம் கட்டுவதற்கு வாய்ப்பில்லை. இருப்பினும், சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யும்பட்சத்தில், கட்டடம் கட்டுவதற்கு வாய்ப்புகள் உள்ளன.

பட்டியல் 7

1—

தூர் வாருதல்

வினா எண் 1070—திரு. மு. அப்பாவு: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ராதாபுரம் வட்டம், பழவூர் ஊராட்சி, கட்டப்புளி ஓடையில் கட்டப்பட்டுள்ள தடுப்பணைகளின் உயரத்தை அதிகரித்து கரையை பலப்படுத்தி தூர் வாரி புனரமைப்பு செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், பழவூர் கிராமத்திலுள்ள கட்டப்புளி ஓடையின் முதல் தடுப்பணையினை கசிவுக் குட்டையாக (Percolation Pond) மாற்றம் செய்யும் பணிகள் சிற்றாறு வடிநிலக் கோட்டத்தின்மூலம் மேற்கொள்ளப்பட்டு கட்டுமானப் பணிகளும் முடிவடைந்துள்ளன.

2—

கற்றுச் சுவர்

வினா எண் 16616—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2010 நவம்பர் 12

(அ) வால்பாறை தொகுதி, பரம்பிக்குளம் அணை, நீராறு அணை, அட்டகட்டி மற்றும் வால்பாறையிலுள்ள தங்கும் விடுதிகளை விரிவுபடுத்தி சுற்றிலும் தடுப்புச் சுவர் ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, பரம்பிக்குளம் அணை, நீராறு அணை மற்றும் வால்பாறையிலுள்ள தங்கும் விடுதிகளில் தற்போது உள்ள அறைகளே அரசு அதிகாரிகள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் தங்க போதுமானதாக உள்ளதால், மேற்குறிப்பிட்ட தங்கும் விடுதிகளை விரிவுபடுத்தி சுற்றுச் சுவர் அமைக்கும் திட்டம் எதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

3—

பழுதுபார்த்தல்

வினா எண் 19140—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, ஆழியாறு, சோலையாறு பரம்பிக்குளம், நீராறு அணைகளின் கதவுகளை பழுதுபார்க்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆழியாறு, சோலையாறு, பரம்பிக்குளம் மற்றும் நீராறு அணைகளின் கதவுகள் ஆண்டுதோறும் ஒதுக்கப்படும் பராமரிப்பு நிதியினைக் கொண்டு முறையாகப் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

2010 நவம்பர் 12]

4—

வடிகால் அமைத்தல்

வினா எண் 21853—திரு. எம். பன்னீர்செல்வம்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, புதுமண்ணியாற்றிலிருந்து பிரிந்து வரும் சந்திரன் வடிகாலை மாற்றி தெற்குராஜன் வாய்க்காலில் வடிகால் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, புதுமண்ணியாற்றிலிருந்து பிரிந்து வரும் சந்திரன் வடிகாலையும் தெற்குராஜன் வாய்க்காலையும் இணைப்பதற்கு மட்ட அளவுகள் அனுமதிக்காது என்பதால், அத்திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

5—

தடுப்பணையை விரிவுபடுத்துதல்

வினா எண் 28497—திரு. செ.ம. வேலுச்சாமி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டம், ராவுத்திரில் நொய்யல் ஆற்றின் குறுக்கே கட்டியுள்ள தடுப்பு அணையினை விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

இவ்வணையில் பழுதுகள் ஏதுமில்லை. எனவே அணை விரிவுபடுத்த வேண்டிய அவசிய நிலையில் இல்லை. மேலும், அதை விரிவுபடுத்த அரசிடம் திட்டம் ஏதுமில்லை.

[2010 நவம்பர் 12

6—

நடைபாலம்

வினா எண் 44832—திரு. எச். வசந்தகுமார்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரந்தானேரி ஊராட்சி, முதலைக்குளம் காலனிக்கு மணிமுத்தாறு கால்வாயில் ஒரு சிறிய நடைபாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2008-2009 ஆம் ஆண்டின் நாங்குநேரி சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் தொகுதி வளர்ச்சி நிதியிலிருந்து கரந்தானேரி ஊராட்சி, முதலைக்குளம் காலனிக்கு மணிமுத்தாறு கால்வாயில் சிறிய நடைபாலம் அமைக்கும் பணிக்கு ரூபாய் மூன்று இலட்சங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, நடைபாலம் அமைக்கப்பட்டுள்ளது.

7—

தடுப்பணை

வினா எண் 57125—திரு. எம். பன்னீர்செல்வம்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி ஒன்றியம், திட்டை ஊராட்சி, வெள்ளப்பள்ளம் உப்பனாற்றின் வலதுபுறக் கரையை பலப்படுத்த தடுப்பணை கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி சட்டமன்றத் தொகுதி, திட்டை ஊராட்சி, வெள்ளப்பள்ளம் உப்பனாறு வலது கரையை பலப்படுத்தி மார்ச் 2009-இல் பணி முடிக்கப்பட்ட நிலையில் உப்பனாற்றின் வலதுபுறக் கரையை பலப்படுத்த தடுப்பணை கட்ட வேண்டிய அவசியமில்லை.

2010 நவம்பர் 12]

8—

சீரமைப்புப் பணிகள்

வினா எண் 58019—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை தொகுதி, அமராவதி அணையின் பிரதானக் கால்வாய் பாலத்தின் இருபுறங்களிலும் பழுதடைந்துள்ள தடுப்புச் சுவரை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

உடுமலைப்பேட்டை தொகுதி, அமராவதி அணையின் பிரதான கால்வாய் பாலத்தின் இருபுறங்களிலும் பழுதடைந்த தடுப்புச் சுவர் சீரமைப்புப் பணிகள் ஏற்கெனவே எடுத்துக்கொள்ளப்பட்டு, முடிக்கப்பட்டு விட்டன.

9—

அணைக்கட்டு

வினா எண் 63298—திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் வட்டம், கோட்டப்பட்டி அருகே கல்லாறு அணைக்கட்டு திட்டம் அமல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், கோட்டப்பட்டி அருகே கல்லாறு அணைக்கட்டு அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

10—

உபரி நீர்

வினா எண் 63304—திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாணியாறு அணையிலிருந்து வரும் உபரி நீரை அரூர் பெரிய ஏரிக்குக் கொண்டுவர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வாணியாறு அணையிலிருந்து வரும் உபரி நீரை அரூர் பெரிய ஏரிக்கு கொண்டுவரும் வாய்க்கால்கள் தூர் எடுக்கப்பட்டு செப்பனிடப்பட்டுவிட்டதால், இனி வாணியாற்றின் உபரி நீர் அரூர் பெரிய ஏரிக்குத் தடையின்றி செல்லும்.

11—

கரையை உயர்த்துதல்

வினா எண் 63306—திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், தருமபுரி வட்டம், பாளையம் உள்வட்டம், பாளையம்புதூர் கோம்பை மாரியம்மன் கோயில் ஏரியின் கரையை உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், தருமபுரி வட்டம், பாளையம் உள்வட்டம், பாளையம்புதூர் கோம்பை மாரியம்மன் கோயில் ஏரியின் கரையை உயர்த்த சாத்தியக் கூறு இல்லை.

2010 நவம்பர் 12]

12—

கால்வாய் நீட்டிப்பு

வினா எண் 63309—திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், அரூர் வள்ளிமதுரை அணையிலிருந்து மாவேரி வரையுள்ள கால்வாயை காவாப்பட்டி புது ஏரி வரை நீட்டிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், அரூர் வள்ளிமதுரை அணையிலிருந்து மாவேரி வரையுள்ள கால்வாயை காவாப்பட்டி புது ஏரி வரை நீட்டிப்பது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

13—

தடுப்பணை

வினா எண் 63972—திரு. குத்தாலம் க. அன்பழகன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குத்தாலம் தொகுதி, மயிலாடுதுறை வட்டம், குத்தாலத்தில் காவிரி ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

குத்தாலம் தொகுதி, மயிலாடுதுறை வட்டம், குத்தாலத்தில் காவிரி ஆற்றின் குறுக்கே தடுப்பணை (Check dam) கட்டும் திட்டம் ஏதும் இல்லை.

14—

பாசனத் திட்டம்

வினா எண் 71500—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, குண்டடம் ஒன்றியம், ஆரத்தொழுவு, பெருமாள்பாளையம், செங்கோடம்பாளையம், சிறுக்கினார், புங்கந்துறை ஆகிய ஊராட்சி பகுதி விவசாய நிலங்களை பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத் திட்ட பாசனப் பகுதியில் இணைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேற்படி திட்டங்கள் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

15—

தடுப்பணை

வினா எண் 76050—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், கம்பம்பட்டி ஊராட்சி, கம்பம்பட்டி காட்டுவளவு வனத் துறை ரோப்கார் செல்லும் பகுதியில் தொப்பையாற்றின் குறுக்கே தடுப்பணை கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், கம்பம்பட்டி ஊராட்சி, கம்பம்பட்டி காட்டுவளவு வனத் துறை ரோப்கார் செல்லும் பகுதியில் தொப்பையாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

2010 நவம்பர் 12]

16—

தடுப்பணை

வினா எண் 81352—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, வெள்ளாளப்பட்டி ஊராட்சி பகுதி சனத்குமார் ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* தருமபுரி தொகுதி, வெள்ளாளப்பட்டி ஊராட்சிப் பகுதி சனத்குமார் ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

17—

கழிவறை வசதி

வினா எண் 86510—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், மணிமுத்தாறு அணையில் சுற்றுலாப் பயணிகள் உபயோகத்திற்கு கழிப்பறை கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம், மணிமுத்தாறு அணையில் சுற்றுலாப் பயணிகளின் உபயோகத்திற்காக ரூ.2.10 இலட்சம் செலவில் கழிவறை கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

[2010 நவம்பர் 12

18—

சிமெண்ட் தடுப்புச் சுவர்

வினா எண் 87882—திரு. எம். பன்னீர்செல்வம்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, புதுத்துறை-காலைமேடு பகுதி அடிக்காத்துறை பகுதியில் கரை உடைப்பைத் தடுக்க சிமெண்ட் தடுப்புச் சுவர் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

சீர்காழி தொகுதி, புதுத்துறை-காலைமேடு பகுதி, அடிக்காத்துறை பகுதியில் கரை உடைப்பைத் தடுக்க சிமெண்ட் தடுப்புச் சுவர் கட்ட திட்டம் ஏதும் இல்லை.

19—

தடுப்புச் சுவர்

வினா எண் 87887—திரு. எம். பன்னீர்செல்வம்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, வடகால்-திருமுல்லைவாசல் சாலையில் பொறை வாய்க்காலின் தென்கரையில் தடுப்புச் சுவர் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

பொறை வாய்க்கால் வலது கரையில் (தென்கரை) வடகால் திருமுல்லைவாசல் சாலையில் உடைப்போ அல்லது கரை அரிப்போ ஏதுமில்லை. கரை அதன் தரத்திற்கு நல்ல நிலையில் உள்ளது. எனவே, தடுப்புச் சுவர் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

2010 நவம்பர் 12]

20—

இணைப்புப் பாலங்கள்

வினா எண் 93237—திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர், நொய்யல் ஆற்றின் இரு கரையோரங்களிலும் வஞ்சிபாளையம் முதல் காசிபாளையம் வரை சாலை அமைத்து இடையே இணைப்புப் பாலங்கள் அமைத்துத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

திருப்பூர் மாவட்டம், நொய்யல் ஆற்றின் இரு கரையோரங்களிலும் வஞ்சிபாளையம் முதல் காசிபாளையம் வரை சாலை அமைத்து இடையே இணைப்புப் பாலங்கள் அமைக்கும் திட்டம் ஏதும் தற்சமயம் இல்லை.

21—

தூர் வாருதல்

வினா எண் 101569—திரு. ஜா. ஜான் ஜோசப்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேச்சிப்பாறை அணையைத் தூர் வாரி அதன் கொள்ளளவை அதிகரிக்க திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பேச்சிப்பாறை அணையில் தற்போது 956 மில்லியன் கன அடி தண்ணீர் மதகு மட்டத்திற்குக்கீழ் தேங்கும் (Dead Storage). தூர் வாருவதினால் பயன்படும் நீரின் கொள்ளளவு எந்தவிதத்திலும் மாறுபடாது. மழை குறைவின் காரணமாகவே தண்ணீர்ப் பற்றாக்குறை ஏற்படுகிறது. எனவே, அணையானது தூர் வார வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.

22—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 6972—திரு. வை. காவேரி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மகுடஞ்சாவடி ஒன்றியம், ஏகாபுரம் ஊராட்சி, சந்தையன் காடு பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி, குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மகுடஞ்சாவடி ஒன்றியம், ஏகாபுரம் ஊராட்சியைச் சார்ந்த சந்தையன்காடு குடியிருப்புக்கு தற்சமயம் தப்பக்குட்டை ஊராட்சியிலுள்ள முக்குட்டியூர் குடியிருப்பிலுள்ள 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டியிலிருந்து அத்தியாவசியத் தேவைக்கான குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் சிறுமின்விசைத் திட்டம் ஒன்றும் மக்கள் பயன்பாட்டிலுள்ளது. இப்பகுதிக்கு மேல்நிலைத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் செயலாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

23—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 6975—திரு. வை. காவேரி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொங்கணாபுரம் ஒன்றியம், பச்சாலியூர் பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 நவம்பர் 12]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கொங்கணாபுரம் ஒன்றியம், வெள்ளாளபுரம் ஊராட்சியைச் சார்ந்த பச்சாலியூர் குள்ளப்பன்காடு குடியிருப்புக்கு 2008-2009 ஆம் நிதியாண்டில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டியுடன்கூடிய தனி மின்விசைத் திட்டம் நிறைவேற்றப்பட்டு தற்போது போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

24—

கட்டட வசதி

வினா எண் 13075—டாக்டர் க. நெடுஞ்செழியன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கபிலர்மலை ஒன்றியம், ஜேடர்பாளையம், ஆதி திராவிடர் தெருவிற்கு மகளிர் சுய உதவிக் குழு கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒரு ஊராட்சிக்கு ஒரு சுய உதவிக் குழு கட்டடம் கட்ட வேண்டும் என்ற அடிப்படையில், கபிலர்மலை ஊராட்சி ஒன்றியம், வடகரையாத்தூர் ஊராட்சியில் மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடம் கட்டப்பட்டுள்ளது. அதே ஊராட்சியைச் சார்ந்த ஜேடர்பாளையம் ஆதி திராவிடர் தெருவிற்கு கூடுதல் மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடம் கட்ட வழிவகையில்லை. மேலும், வடகரையாத்தூர் ஊராட்சியில் உள்ள அனைத்து சுய உதவிக் குழுக்களும் மேற்படி சுய உதவிக் குழுக் கட்டடத்தை தொடர்ந்து பயன்படுத்தி வருவதால் தனியாகக் கட்டடம் தேவையில்லை.

[2010 நவம்பர் 12

25—

குடிநீர் வசதி

வினா எண் 20502—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், கோனூர் ஊராட்சி, பரட்டையன்வளவு பகுதியில் வனத் துறை கிணற்றிலிருந்து கோனூர் கிராமம், 1-வது வார்டு பகுதிக்கு குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், நங்கவள்ளி ஊராட்சி ஒன்றியம், கோனூர் ஊராட்சி 1-வது வார்டில், எட்டு குடியிருப்புகள் உள்ளன. எட்டு குடியிருப்புகளுக்கும் காடையாம்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ், இக்குடியிருப்புகளில் அமைக்கப்பட்டுள்ள 8 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளிலிருந்து போதுமான அளவு காவிரிக் குடிநீர் வழங்கப்படுகிறது. எனவே, இக்குடியிருப்புகளுக்கு பரட்டையன்வளவு பகுதியில் அமைந்துள்ள வனத் துறை கிணற்றிலிருந்து புதிய குடிநீர்த் திட்டம் செயல்படுத்த அவசியம் இல்லை.

26—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 41613—திரு. வை. காவேரி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி ஒன்றியம், சித்தூர் ஊராட்சி, அய்யம்பெருமாள் வளவுப் பகுதி, ஆடையூர் ஊராட்சி, கோவில்பாளையம் காட்டுவளவு பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 நவம்பர் 12]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சித்தூர் ஊராட்சி, அய்யம்பெருமாள் வளவுப் பகுதி, காளியாகோயில்காடு பிரதான குடியிருப்பைச் சார்ந்தது. இக்குடியிருப்பிற்கு ராசிபுரம்-எடப்பாடி கூட்டுக் குடிநீர் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து அய்யம்பெருமாள்வளவு பகுதிக்கும் சேர்த்து போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுகிறது. ஆடையூர் ஊராட்சி, கோயில்பாளையம் காட்டுவளவு என்ற கோயில்பாளையம் ஏரிவளவு குடியிருப்பு தற்போது மதிப்பீட்டு நிலையிலுள்ள எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் மற்றும் மகுடஞ்சாவடி ஒன்றியங்களைச் சார்ந்த 145 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இத்திட்டம் செயலாக்கப்படும்போது இக்குடியிருப்புக்கும் மேல்நிலைத் தொட்டியுடன் திட்டம் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

27—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 45468—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஒன்றியம், பெரியேரிப்பட்டி ஊராட்சி, செட்டிப்பட்டி மேல் தெரு பகுதி, பச்சனம்பட்டி ஊராட்சி, 2-வது வார்டு, கோல்காரனூர் ஆதி திராவிடர் காலனி பகுதிகளுக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஒன்றியம், பெரியேரிப்பட்டி ஊராட்சி, செட்டிப்பட்டி மேல் தெரு பகுதிக்கு

மேல்நிலைத் தொட்டியுடன் குடிநீர்த் திட்டம் செயலாக்க பரிசீலிக்கப்படும். பச்சனம்பட்டி ஊராட்சி, 2-வது வார்டு கோல்காரனூர் ஆதி திராவிடர் காலனி பகுதிக்கு கோல்காரனூர் பிரதானக் குடியிருப்பிலுள்ள 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டியிலிருந்து போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, மேலும் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அவசியம் இல்லை.

28—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 46577—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதி, திருக்குழுக்குன்றம் வட்டம், புதுப்பட்டினம் முதல் லத்தூர் வரையுள்ள கிராமங்களுக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் வட்டம், புதுப்பட்டினம் முதல் லத்தூர் வரையுள்ள அனைத்து கிராமங்களுக்கும் தற்போது நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வீதம் தனி மின்விசைத் திட்டம் மூலமாக போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருவதால் மேற்படி கிராமங்களுக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு அவசியம் இல்லை.

29—

மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி

வினா எண் 49235—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2010 நவம்பர் 12]

(அ) மேட்டூர் தொகுதி, கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம், கண்ணாமூச்சி ஊராட்சி, கந்துகாரன் கொட்டாய், பிடாரனூர் மற்றும் கோல்நாயக்கன்பட்டி ஊராட்சி, ரெட்டியூர்-H, வாச்சம்பள்ளி-H, நவப்பட்டி ஊராட்சி, காவேரி கிராஸ் குண்டுக்கல் ஆகிய கிராமங்களில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* சேலம் மாவட்டம், கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம், கண்ணாமூச்சி ஊராட்சி, கந்துகாரன் கொட்டாய் மற்றும் செட்டியார் குடியிருப்புகளில் கட்டப்பட்டுள்ள முறையே 10,000 மற்றும் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகளிலிருந்து போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருவதால், இவ்விரண்டு குடியிருப்புகளுக்கும் தற்போது தனித் தனியாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டும் திட்டம் ஏதும் இல்லை. கொளத்தூர் ஒன்றியம், நவப்பட்டி ஊராட்சி, காவேரி கிராஸ் குண்டுக்கல் மற்றும் கோல்நாயக்கன்பட்டி ஊராட்சி ரெட்டியூர்-H குடியிருப்புகளுக்கு 2008-2009 ஆம் நிதியாண்டில் முறையே 30,000 மற்றும் 10,000 லிட்டர் மேல்நிலைத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் செயலாக்கப்பட்டு தற்போது மக்கள் பயன்பாட்டிலுள்ளது.

30—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 49254—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டூர் தொகுதி, நங்கவள்ளி ஒன்றியம், கோனூர் ஊராட்சி, மாத்தலையான்காடு, விண்ணாங்காடு, பாலிக்காடு, சீமெண்ணெய்க்-காரன்வளவு மற்றும் மங்கானூர் ஆதி திராவிடர் காலனி, வள்ளகுட்டை, கந்தனூர் தெற்கு, மேட்டுதானம்பட்டி கருப்புசாமி கோவில், கூளையூர் தோப்பு, அண்ணாநகர் ஆகிய பகுதிகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

நங்கவள்ளி ஒன்றியம், கோனூர் ஊராட்சி, மாத்தலையான்காடு குடியிருப்புக்கு மேல்நிலைத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. விண்ணாங்காடு, சிமெண்ணெய்க்காரன்வளவு ஆகிய குடியிருப்புகளுக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுடன் கூடிய குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு மக்கள் பயன்பாட்டில் உள்ளன. மங்கானூர் ஆதி திராவிடர் காலனி மற்றும் கூளையூர் தோப்பு, அண்ணா நகர் ஆகிய குடியிருப்புகளுக்கு தனித் தனியாக 10,000 லிட்டர் மேல்நிலைத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு மக்கள் பயனில் உள்ளது. பாலிக்காடு என்கிற பாலிக்கரடு குடியிருப்பிற்கு அக்குடியிருப்பில் அமைக்கப்பட்டுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்தும் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருவதால் கூடுதலாக மேல்நிலைத் தொட்டி அமைக்கும் அவசியம் எழவில்லை. வள்ளக்குட்டை (வெள்ளக்குட்டை) குடியிருப்புக்கு போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருவதால் தற்போது இக்குடியிருப்புக்கு தனியாக மேல்நிலைத் தொட்டி கட்டும் அவசியம் இல்லை. கந்தனூர் தெற்கு பகுதிக்கு, கந்தனூரில் அமைக்கப்பட்டுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டியிலிருந்து போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருவதால் தனியாக மேல்நிலைத் தொட்டி கட்ட அவசியம் இல்லை. மேட்டுதானம்பட்டி கருப்பசாமி கோவில் குடியிருப்புக்கு இக்குடியிருப்பின் மக்கட்தொகையையும் கணக்கில் கொண்டு மேட்டுதானம்பட்டி குடியிருப்பில் கட்டப்பட்டுள்ள 60,000 லிட்டர் மேல்நிலைத் தொட்டியிலிருந்தும் அத்தியாவசியத் தேவைக்கான குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இக்குடியிருப்புக்குப் போதுமான அளவு குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

31—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 49494—திரு. வை. காவேரி: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2010 நவம்பர் 12]

(அ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், புதுப்பாளையம் ஊராட்சி, பெரியகாடு, மணக்காடு, கலர்க்காடு, புதுப்பாளையம் கஸ்பா, கோல்காரன் வளவு, எருமைப்பட்டி, வேங்கான்வளவூர் ஆகிய பகுதிகளில் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், புதுப்பாளையம் ஊராட்சி, பெரியகாடு பகுதி, புதுப்பாளையம் கஸ்பா மற்றும் வேங்கான்வளவூர் பகுதி ஆகியவை புதுப்பாளையம் குடியிருப்பில் உள்ளடங்கிய பகுதியாக உள்ளதால், அப்பகுதிகளுக்கு அக்குடியிருப்பில் இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்தேக்கத் தொட்டியிலிருந்தும், கலர்க்காடு பகுதிக்கு காரக்காடு குடியிருப்பில் அமைக்கப்பட்ட 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்தும், எருமைப்பட்டி பகுதி புதுப்பாளையம் ஊராட்சியைச் சார்ந்த முத்தையாம்பட்டி வடக்கு குடியிருப்பின் உள்ளடங்கிய பகுதியாக உள்ளதால், அக்குடியிருப்பில் உள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்தும் எடப்பாடி ஒன்றியம், தாதாபுரம் ஊராட்சியைச் சார்ந்த மலைக்காடு பகுதிக்கு தாதாபுரத்தில் அமைக்கப்பட்ட 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து குழாய் நீட்டிப்பு மூலமும் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, மேற்கூறிய பகுதிகளுக்கு தனியாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் அவசியம் இல்லை. புதுப்பாளையம் ஊராட்சி, கோல்காரன்வளவு குடியிருப்புக்கு இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் காவிரிக் குடிநீர் வழங்க பணிகள் நடைபெற்று வருகின்றன.

32—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 65130—திரு. பெ.க. விஜயகுமார்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2010 நவம்பர் 12

(அ) போளூர் தொகுதி, கிருஷ்ணாபுரம் ஊராட்சி, மதுரா சின்ன கிருஷ்ணாபுரம் ஊராட்சி, திருசூர் ஊராட்சி, திருசூர் வள்ளுவர் காலனி, செங்குணம் ஊராட்சி, செங்குணம் குன்றுமேடு மற்றும் துரிஞ்சிக்குப்பம் ஊராட்சி, துரிஞ்சிக்குப்பம் ஆகிய இடங்களில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* திருவண்ணாமலை மாவட்டம், போளூர் ஒன்றியம், துரிஞ்சாபுரம் ஊராட்சியைச் சேர்ந்த துரிஞ்சாபுரம் குடியிருப்பில் 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் ஏற்கெனவே செயலாக்கப்பட்டு போதுமான அளவு (40 lpcd) குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. செங்குணம் ஊராட்சியைச் சேர்ந்த செங்குணம் குன்றுமேடு பகுதிக்கு செங்குணம் குடியிருப்பிலுள்ள மேல்நிலைத் தொட்டியில் இருந்து தனிக் குழாய்மூலம் குடிநீர் வழங்கவும், சின்ன கிருஷ்ணாபுரம் மற்றும் திரிசூர் வள்ளுவன் காலனி குடியிருப்புகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் செயலாக்கவும் கூடிய விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

33—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 65876—திரு. பெ.சு. விஜயகுமார்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் தொகுதி, பொத்தரை கிராமத்திலுள்ள ஆதி திராவிடர் பகுதிக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* திருவண்ணாமலை மாவட்டம், போளூர் ஒன்றியம், பொத்தரை ஊராட்சியைச் சேர்ந்த பொத்தரை குடியிருப்பிலுள்ள ஆதி திராவிடர் பகுதிக்குப் பொத்தரை

2010 நவம்பர் 12]

குடியிருப்பில் பொது இடத்தில் அமைக்கப்பட்டுள்ள 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து போதுமான அளவு (40 lpcd) குடிநீர் வழங்கப்படுவதால், தனியாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அவசியமில்லை.

34—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 74747—திருமதி பெ. லீமாரோஸ்பாள்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் தொகுதி, காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம், விப்பேடு காலனியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் தொகுதி, காஞ்சிபுரம் ஊராட்சி, விப்பேடு காலனியில் மக்கள்தொகைக்கேற்ப ஏற்கெனவே கட்டப்பட்டுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் தற்போது முழுமையான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, புதிய மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைக்கும் அவசியம் இல்லை.

35—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 74824—திரு. தி.க. ராஜா: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் தொகுதி, மிட்டூர் ஊராட்சி, சர்க்கரைகுப்பம் மேற்கத்தியான் வட்டம் மற்றும் கோவிந்தன் வட்டம் ஆகிய பகுதிகளுக்கு 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் ஒன்றியம், மிட்டூர் ஊராட்சியைச் சேர்ந்த சர்க்கரைக்குப்பம், மேற்கத்தியான் வட்டம் ஆகிய பகுதிகளுக்கு 30,000 லிட்டர் கொள்ளளவு உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் செயலாக்கப்பட்டு தற்போது நல்ல முறையில் இயங்கி வருகிறது. கோவிந்தன் வட்டம் பகுதிக்கு, அப்பகுதிக்கு அருகிலுள்ள குறும்பட்டி குடியிருப்பிலுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, தனியாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அவசியம் இல்லை.

36—

குடிநீர் வசதி

வினா எண் 77270—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, குண்டடம், வட்டமலை பகுதியில் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காங்கேயம் தொகுதி, குண்டடம் வட்டமலை பகுதியில் குண்டடம் ஒன்றியம், செங்கோடம்பாளையம் ஊராட்சியைச் சேர்ந்த, மூக்கன்கோட்டை மற்றும் அப்பியாபாளையம் ஆதி திராவிடர் காலனி ஆகிய குடியிருப்புகள் அடங்கியுள்ளன. மூக்கன்கோட்டை குடியிருப்புக்கு ஏற்கெனவே அங்குள்ள தனி மின்விசைத் திட்டத்தின்மூலமும், அப்பியாபுரம் ஆதி திராவிடர் காலனிக்கு அருகிலுள்ள சமத்துவபுரம் குடியிருப்புக்கான குடிநீர்த் திட்டத்திலிருந்து குழாய் நீட்டிப்பு செய்தும், போதுமான அளவு (40 lpcd) குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

2010 நவம்பர் 12]

37—

குடிநீர் வசதி

வினா எண் 100340—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வரும் நிதியாண்டில் வால்பாறை தொகுதி, காமராஜ் நகர் குடியிருப்பு பகுதி, ரயான் டிவிஷன், சிங்கோனா சிறுகுன்றா, கருமலை, காஞ்சிமலை, ஊசிமலை, பிளண்டிவேலி, சோலையாறு எஸ்டேட் 1 & 2 ஆம் பிரிவு, ஈட்டியாறு எஸ்டேட், கல்லாறு, குரங்குமுடி, இஞ்சிப்பாறை ஆகிய எஸ்டேட்டுகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, காமராஜ் குடியிருப்புப் பகுதி, ரயான் டிவிஷன், சிங்கோனா, சிறுகுன்றா, கருமலை, காஞ்சிமலை, ஊசிமலை, பிளண்டிவேலி, சோலையாறு எஸ்டேட் 1 மற்றும் 2 பிரிவு, ஈட்டியாறு எஸ்டேட், கல்லாறு குரங்குமுடி, இஞ்சிபாறை ஆகிய பகுதிகள் தனியார் தேயிலைத் தோட்ட நிறுவனத்தின்கீழ் அமைந்துள்ளது. மேற்கண்ட பகுதிகளுக்கு தனியார் தேயிலைத் தோட்ட நிறுவனத்தின்மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

38—

சேமிப்புக் கிடங்கு

வினா எண் 104038—திரு. வி.ஏ.டி. கலியவரதன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) முகையூர் தொகுதி, ஆற்காடு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் சேமிப்புக் கிடங்கு அறை கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆற்காடு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கமானது 20-4-1969 முதல் செயல்பட்டு வருகின்றது. இச்சங்கத்திற்கான கட்டடம் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் நிதியுதவியுடன் கட்டப்பட்டது. இதன் அடித்தளம் மூன்று கிட்டங்கிகளாகப் பிரிக்கப்பட்டு, உரக் கிட்டங்கி 50 மெட்ரிக் டன்னும், தானிய சேமிப்புக்கு 100 மெட்ரிக் டன்னும் கொள்ளளவு கொண்டதாகக் கட்டப்பட்டது. தற்போது ஆற்காடு நியாயவிலைக் கடைக்கென சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து தனியே கட்டடம் கட்டப்பட்டு, நியாயவிலைக் கடை 1-2-2010 முதல் புதிய கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றது. நியாய விலைக் கடை செயல்பட்டு வந்த 100 மெட்ரிக் டன் அளவு கிட்டங்கி காலியாக உள்ளதால், விவசாயிகள் தானிய ஈட்டுக் கடன் கோரினால், மேற்படி கிட்டங்கியை சங்கம் சேமிப்புக் கிடங்காக பயன்படுத்திக் கொண்டு தானிய ஈட்டுக் கடன் வழங்கும். எனவே, இந்நிலையில் சங்கத்திற்கென தனியே புதிய சேமிப்புக் கிட்டங்கி அறை கட்டுவதற்குத் தேவை எழவில்லை.

39—

புதிய கட்டடம்

வினா எண் 122546—திரு. இ. மகேந்திரன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி கூட்டுறவு நில வள வங்கிக்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

உசிலம்பட்டி தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிக்குக் கட்டடம் கட்ட சொந்த இடம் இல்லை. மேலும், அவ்வங்கிக்கு சொந்த இடம் வாங்க வங்கியின் தனி அலுவலருக்கு உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. எனவே, வருங்காலத்தில் இவ்வங்கிக்கு சொந்தமான இடம் வாங்கியவுடன், அரசு உதவியுடன் சொந்த அலுவலகக் கட்டடம் கட்ட வழிவகை உள்ளது.

2010 நவம்பர் 12]

40—

பெயர் சூட்டுதல்

வினா எண் 13695—திரு. போ. கோபாலன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உதகமண்டலம் தாவரவியல் பூங்காவிற்கு அன்னை இந்திரா காந்தியின் பெயர் சூட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

உதகை அரசு தாவரவியல் பூங்காவிற்கு அன்னை இந்திரா காந்தியின் பெயர் சூட்டுவது தொடர்பான செயற்குறிப்பு அரசின் ஆய்வில் இல்லை.

41—

சாகுபடி

வினா எண் 47918—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், சிரியாநங்கை, பெரியாநங்கை, வல்லாரை, சோற்றுக்கற்றாழை செடிகளை உற்பத்தி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டாரத்தில் தேசிய மூலிகைப் பயிர் இயக்கத் திட்டத்தில் சிறியாநங்கை, பெரியாநங்கை, வல்லாறை, சோற்றுக்கற்றாழை சாகுபடி செய்வதற்கு 50% மானியம் வழங்கப்படுகிறது. அதன்படி,

மேற்கண்ட பயிர்களுக்கு அரசு மானியம் ஒரு எக்டருக்கு கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகிறது:

சிறியாநங்கை	..	ரூ.5000/-
பெரியாநங்கை	..	ரூ.5000/-
சோற்றுக்கற்றாழை	..	ரூ.8500/-

2010-2011 ஆம் ஆண்டில் தேசிய மூலிகைப்பயிர் இயக்கத் திட்டத்தில் பயன்பெற, பயனாளிகள் விவசாயிகளைத் தேர்வு செய்யும் பணி தற்பொழுது நடைபெற்று வருகிறது.

திருப்புவனம் வட்டாரத்தில் பயிர் செய்ய விரும்பும் விவசாயிகள் தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகத்தைத் தொடர்புகொண்டு மூலிகைப் பயிர்களுக்கான மானிய விவரங்கள் மற்றும் ஆலோசனைகளைப் பெற்றுப் பயனடையலாம்.

42—

மேம்படுத்தும் திட்டம்

வினா எண் 62751—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம், கல்லாறு தோட்டக்கலை அரசு பழப்பண்ணையின் நிலச்சரிவுகளை சரி செய்து, மேம்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) அரசுத் தோட்டக்கலைப் பண்ணை கல்லூரியில் 13-11-2006 அன்று நிலச்சரிவினை சரி செய்ய அரசாணை எண் 270, வருவாய் (NC.II) துறை, நாள் 24-05-2007-ன்படி ரூ.21.50 இலட்சம் ஒதுக்கிடு

2010 நவம்பர் 12]

செய்யப்பட்டு கீழ்க்கண்ட பணிகள் செயற்பொறியாளர், வேளாண் பொறியியல் துறை, கோவை அவர்களால் மேற்கொள்ளப்பட்டது.

வ. எண்	பணிகள்	ஒதுக்கப்பட்ட நிதியினம் (ரூ.)	மேற்கொண்ட செலவினம் (ரூ.)
1.	வெள்ளம் பாதித்த பகுதியில் பாறாங்கற்கள் மற்றும் செடி, கொடி கழிவுகளை அகற்றுதல்	4,50,000/-	4,45,636/-
2.	வெள்ளம் பாதித்த வடபுற பகுதிகளில் பென்ச் டெரஸ் மற்றும் கற்சுவர் அமைத்தல்	5,00,000/-	4,98,345/-
3.	உயர்மட்ட நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மண்ணாலான மழை நீரைத் திருப்பிவிடும் கால்வாய்கள் அமைத்தல்	3,50,000/-	3,48,518/-
4.	மழை நீரைத் திருப்பி விடும் பணிகள் மற்றும் சிமென்ட் பூசிய பாசனக் கால்வாய்கள் அமைத்தல்	8,50,000/-	8,48,648/-
	மொத்தம்	21,50,000/-	21,41,147/-

மேற்கண்ட பணிகள் அனைத்தும் 02-06-2008 அன்று முடிக்கப்பட்டுள்ளன.

43—

விவசாயக் கருவிகள்

வினா எண் 90758—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகையூர் தொகுதி, முகையூர் ஒன்றியம், மணம்பூண்டி வேளாண்மைத் துறையின் மூலமாகக் கொடுக்கப்படும் விவசாயக் கருவிகளின் எண்ணிக்கையை கூடுதலாக வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) முகையூர் தொகுதி உள்ளடக்கிய விழுப்புரம் மாவட்டத்திற்கு தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் (NADP) 2008-2009-ன்கீழ் 529 வேளாண்மைக் கருவிகள் ரூ.168.74 இலட்சம் செலவிலும், பேரியல் மேலாண்மைத் திட்டம் (MMA) 2009-2010-ல் 179 எண்கள் வேளாண்மைக் கருவிகள் ரூ.79.80 இலட்சம் செலவிலும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. மேலும் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் (NADP) 2009-2010 திட்டத்தின்கீழ் 614 எண்கள் வேளாண்மைக் கருவிகள் ரூ.348.45 இலட்சம் செலவில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

2. மேற்காணும் விவசாயக் கருவிகள் மற்றும் அதற்கான ஒதுக்கீடு தொகைகள் 2008-2009 ஆம் ஆண்டைவிட 2009-2010 ஆம் ஆண்டில் விழுப்புரம் மாவட்டத்திற்குக் கூடுதலாகவே விவசாயக் கருவிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

44—

கருத்தரங்குகள்

வினா எண் 95921—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியில் விவசாயிகளுக்கு இயற்கை வேளாண்மை சாகுபடி குறித்த பயிற்சி மற்றும் கருத்தரங்குகள் நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 நவம்பர் 12]

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்ட மானாமதுரை வட்டாரத்தில் 30-3-2010 அன்று 100 விவசாயிகளுக்கு இயற்கை பண்ணையம் சாகுபடி தொடர்பான பயிற்சி தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் மற்றும் வேளாண்மைத் துறையினரால் நடத்தப்பட்டது. மேலும், மானாமதுரை தொகுதி விவசாயிகளுக்கு இயற்கை வேளாண்மை சாகுபடி குறித்த கருத்தரங்குகள் (Seminars) நடத்த அரசிடம் தற்போதைக்கு திட்டமேதும் இல்லை.

45—

கசிவுநீர்க் குட்டை கட்டுதல்

வினா எண் 119930—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை ஊராட்சி, இராவணாபுரம் சிற்றூராட்சியின் வரப்பள்ளத்தில் கசிவுநீர்க் குட்டை வேளாண்மைப் பொறியியல் திட்டத்தில் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை ஊராட்சி, இராவணாபுரம் சிற்றூராட்சியின் வரப்பள்ளத்தில் வேளாண்மைப் பொறியியல் துறைமூலம் 2010-2011 ஆம் நிதியாண்டில் கசிவுநீர்க் குட்டை கட்டும் திட்டம் ஏதும் இல்லை. மேலும், போதிய நிதி இன்மையால் தற்போது இப்பகுதியில் கசிவுநீர்க் குட்டை கட்டும் திட்டம் ஏதும் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

46—

தூர் வாருதல்

வினா எண் 119933—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை ஊராட்சி, உடுக்கம்பாளையம், பூலாங்கினார், சர்கார்புதூர், தும்பலப்பட்டி, சின்ன பூலாங்கினார், மருள்பட்டி, கொங்குரார்குட்டை, பூசாரிநாயக்கன்குளம், ஆலாங்குளம்குட்டை, ஆர்வேலூர்குட்டை, கணபதிபாளையம் ஆகிய குட்டைகளை வேளாண்மைப் பொறியியல் துறைமூலம் தூர் வார அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை ஊராட்சி, உடுக்கம்பாளையம், பூலாங்கினார், சர்கார்புதூர், தும்பலப்பட்டி, சின்ன பூலாங்கினார், மருள்பட்டி, கொங்குரார்குட்டை, பூசாரிநாயக்கன்குளம், ஆலாங்குளம்குட்டை, ஆல்வேலூர்குட்டை, கணபதிபாளையம் ஆகிய குட்டைகளைத் தூர் வார திட்டங்கள் ஏதும் வேளாண்மைப் பொறியியல் துறையில் இல்லாத காரணத்தினாலும், இப்பொருள் குறித்து கருத்துரு ஏதும் இல்லாத நிலையிலும், மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் தூர் வாரும் பணிகள் மேற்கொள்ள இயலாது.

47—

தூர் வாருதல்

வினா எண் 119934—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை ஊராட்சி, கணபதிபாளையம், லௌகப்பட்டி, குரல்குட்டை, மொடக்குப்பட்டி, மானுப்பட்டி, வாளவாடி, தீர்த்தமடை, சின்னவாளவாடி,

2010 நவம்பர் 12]

புங்கமுத்தூர், காட்டூர், பெரிய பாப்பனூத்து ஆகிய குட்டைகளை வேளாண்மைப் பொறியியல் துறைமூலம் தூர் வார அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை ஊராட்சி, கணபதிபாளையம், லெளகப்பட்டி, குரல்குட்டை, மொடக்குப்பட்டி, மானுப்பட்டி, வாளவாடி, தீர்த்தமடை, சின்னவாளவாடி, புங்கமுத்தூர், காட்டூர், பெரிய பாப்பனூத்து ஆகிய குட்டைகளைத் தூர் வார வேளாண்மைப் பொறியியல் துறையில் திட்டம் ஏதும் இல்லை.

48—

ஆராய்ச்சி மையம்

வினா எண் 121725—திரு. எம்.ஆர். சுந்தரம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆத்தூர் தொகுதியில் கரும்பு ஆராய்ச்சி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

ஆத்தூர் தொகுதியில் கரும்பு ஆராய்ச்சி மையம் அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

49—

ஆராய்ச்சி மையம்

வினா எண் 121726—திரு. எம்.ஆர். சுந்தரம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆத்தூர் தொகுதியில் வாழை ஆராய்ச்சி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

ஆத்தூர் தொகுதியில் வாழை ஆராய்ச்சி மையம் அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

50—

பட்டயப் படிப்புகள்

வினா எண் 123288—திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் வேளாண்மை சம்பந்தமான பட்டயப் படிப்புகளை மீண்டும் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின்கீழ் இயங்கிவரும் பதினொரு பட்டயப் படிப்பு நிறுவனங்களில் வேளாண்மை மற்றும் தோட்டக்கலை பட்டயப் படிப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன. அவற்றில் ஆறு பட்டயப் படிப்பு நிறுவனங்கள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் இணைப்பு பெற்று செயல்பட்டு வருகின்றன. மேற்கண்ட பட்டயப் படிப்பு நிறுவனங்களில் தேவையான அளவு இடங்கள் ஒதுக்கப்பட்டு மாணவர்கள் படித்து வருகின்றனர். புதிதாக ஒரு பட்டயப் படிப்பு நிறுவனம் தொடங்க குறைந்தது 50 ஏக்கர் விவசாய நிலமும் ரூ.50 கோடி வரை நிதியும் தேவைப்படுகிறது. ஆகவே, தமிழகத்தில் வேளாண்மை சம்பந்தமான பட்டயப் படிப்புகளை மீண்டும் துவங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

51—

வேளாண் பொறியியல் மையம்

வினா எண் 126914—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றத்தில் வேளாண் பொறியியல் மையத்தை மீண்டும் துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

காஞ்சிபுரம் மாவட்டத்தில், செங்கல்பட்டு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருக்கழுக்குன்றம் வேளாண்மைப் பொறியியல் சேவைக் கூட்டுறவு மையம் 1995 ஆம் ஆண்டிலிருந்து செயல்படாமல் நலிவடைந்துள்ளது. 1996-1997 தணிக்கை ஆண்டில், மையம் ரூ.9,65,082.11 ஒட்டுமொத்த நட்டத்தில் உள்ளது. தற்போது மையத்தில் பணியாளர் எவரும் பணியில் இல்லை. இந்நிலையில், திருக்கழுக்குன்றம் வேளாண்மைப் பொறியியல் சேவைக் கூட்டுறவு மையத்தை மீண்டும் புத்துயிரூட்டி துவக்க வழிவகையில்லை.

52—

பண்ணையை மேம்படுத்துதல்

வினா எண் 126927—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, புல்லேரி மூலிகைப் பண்ணையை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

தோட்டக்கலைத் துறையின்கீழ் செங்கல்பட்டு தொகுதியில் மூலிகைப் பண்ணைகள் ஏதும் செயல்படவில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2010 நவம்பர் 12

53—

கணினி வழங்குதல்

வினா எண் 108406—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) கணினி பட்டப் படிப்பு படித்த மாணவ/ மாணவியர்களுக்கு மானிய விலையில் கணினி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கணினி பட்டப் படிப்பு படித்த மாணவ/ மாணவியருக்கு மானிய விலையில் கணினி வழங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

54—

புதிய அரசு கலைக் கல்லூரி

வினா எண் 113195—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பள்ளிப்பட்டு தொகுதியில் புதிய அரசு கலைக் கல்லூரி துவக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

பள்ளிப்பட்டு தொகுதியில் புதிய அரசு கலைக் கல்லூரி துவக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

55—

அரசு கலைக் கல்லூரி

வினா எண் 113665—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2010 நவம்பர் 12]

ஓமலூர் தொகுதியில் அரசு கலைக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

ஓமலூர் தொகுதியில் அரசு கலைக் கல்லூரி துவக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

56—

பேருந்து வசதி

வினா எண் 119926—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டையிலிருந்து நெய்காரப்பட்டிக்கு புதிய நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உடுமலை-பழநி (வழி) நெய்க்காரப்பட்டி என 4 தனியார் பேருந்துகள் தினசரி 22 நடைகள் இயங்கி வருகின்றன. இதுதவிர உடுமலை-கொழுமம் வழித்தடத்தில் அரசுப் போக்குவரத்துக் கழகம் மற்றும் தனியார் பேருந்துகள் 7, தினசரி 100 நடைகளும், நெய்க்காரப்பட்டியிலிருந்து கொழுமத்திற்கு 6 பேருந்துகள் தினசரி 45 நடைகளும் இயங்கி வருகின்றன. எனவே, இவ்வழித்தடத்தில் நேரடியாகவும், பகுதிவாரியாகவும் அரசுப் போக்குவரத்துக் கழகம் மற்றும் தனியார் பேருந்துகள்மூலம் போதுமான அளவு இயங்கி வருகின்ற நிலையில் புதிய நகரப் பேருந்து இயக்கிட அவசியம் ஏற்படவில்லை.

57—

பேருந்து வசதி

வினா எண் 121292—திரு. த.அ. மேகநாதன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2010 நவம்பர் 12

(அ) காவேரிப்பட்டணம் தொகுதி, சின்னேகவுண்டனூர் கிராமத்திற்கு பாலக்கோட்டிலிருந்து ஜக்கசமுத்திரம், இராயக்கோட்டை வழியாக நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பாலக்கோடு-சின்னேகவுண்டனூர் (வழி) ஜக்கசமுத்திரம், இராயக்கோட்டை வழித்தடத்தின் நீளம் 32.0 கி.மீ. ஆகும். இவ்வழித்தடத்தில் பாலக்கோடு-இராயக்கோட்டை (வழி) ஜக்கசமுத்திரம் மற்றும் இராயக்கோட்டை-சின்னேகவுண்டனூர் வழித்தடத்தில் பகுதிவாரியாக பேருந்து வசதியுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:

பாலக்கோடு—இராயக்கோட்டை (வழி) ஜக்கசமுத்திரம்

வ.எண்	பேருந்து விவரம்	நாளொன்றுக்கு இயக்கப்படும் நடைகள்
1	2 கழக நகர் பேருந்துகள்	7
2	1 புறநகர் பேருந்து	4
	மொத்தம்	11

இராயக்கோட்டை—சின்னேகவுண்டனூர்

வ.எண்	பேருந்து விவரம்	நாளொன்றுக்கு இயக்கப்படும் நடைகள்
1	1 கழக நகர் பேருந்து	4
2	1 தனியார் சிற்றுந்து	16
	மொத்தம்	20

இவ்வாறு வழித்தடம் முழுவதும் பகுதிவாரியாக பேருந்து வசதியுள்ளதாலும், இது சுற்று வழித்தடம் என்பதாலும் கோரியுள்ள வழித்தடத்தில் தனியாக நகரப் பேருந்து ஒன்றை தற்சமயம் இயக்கிட இயலாத நிலையுள்ளது.

2010 நவம்பர் 12]

58—

கூடுதல் பேருந்து வசதி

வினா எண் 121294—திரு. த.அ. மேகநாதன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவேரிப்பட்டினம் தொகுதி, கொத்தலம் கிராமத்திற்கு காவேரிப்பட்டினம் வழியாக கிருஷ்ணகிரியிலிருந்து நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி-கொத்தலம் (வழி) காவேரிப்பட்டினம் வழித்தடத்தின் நீளம் 30.0 கி.மீ. ஆகும். இவ்வழித்தடத்தில் நகர் தடம் எண் கே 42-ன் மூலம் நாளொன்றுக்கு 10 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. இதில் பயணிகளின் அடர்வு சுமார் 56 விழுக்காடு உள்ளது. எனவே, கோரியுள்ள வழித்தடத்தில் பயணிகளின் அடர்வு மேற்கொண்டு அதிகரிக்கும் பட்சத்தில் கூடுதல் பேருந்து வசதி செய்வது பற்றிப் பரிசீலிக்கலாம்.

59—

பேருந்து வசதி

வினா எண் 121300—திரு. த.அ. மேகநாதன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவேரிப்பட்டினம் தொகுதி, கிருஷ்ணகிரியிலிருந்து காவேரிப்பட்டினம் வழியாக போடரஅள்ளி கிராமத்திற்கு நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி-போடரஅள்ளி (வழி) காவேரிப்பட்டினம் தடத்தின் நீளம் 30.0 கி.மீ. ஆகும். இத்தடத்தில் ஏற்கெனவே நகர் பேருந்து தடம் எண் கே 52-ன்மூலம் நாளொன்றுக்கு 6 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. இதைத் தவிர, நகர் தடம் எண் கே 6ஏ-ன்மூலம் காவேரிப்பட்டணம் போடரஅள்ளி தடத்தில் நாளொன்றுக்கு 2 நடைகளும் இயக்கப்பட்டு வருகின்றன. இதில் பயணிகளின் அடர்வு சுமார் 42 விழுக்காடேயாகும். மேலும், கோரியுள்ள வழித்தடத்தில் நகர் தடம் எண் கே 57-ன்மூலம் கிருஷ்ணகிரியிலிருந்து காவேரிப்பட்டினம்-போடரஅள்ளி பிரிவு சாலை வழியாக 270 கி.மீ. தூரத்திற்கு நாளொன்றுக்கு 6 நடைகளும் இயக்கப்படுகின்றன. எனவே, கோரியுள்ள வழித்தடத்தில் கூடுதல் நகரப் பேருந்து வசதியினை தற்சமயம் செய்திட இயலாத நிலையுள்ளது.

60—

பேருந்து வசதி

வினா எண் 121309—திரு. வெ. காவேரி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, வெள்ளாளபுரம் ஊராட்சியில் இயக்கப்பட்டு வந்த கே. 6 பேருந்தை மேட்டுப்பாளையம் சின்னப்பம்பட்டி வழியாக மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கே-6 பேருந்து, (1) எடப்பாடி-தாரமங்கலம் (வழி) மேட்டுப்பாளையம் வழித்தடத்தில் 6 நடைகளும், (2) எடப்பாடி-குமாரபாளையம் வழித்தடத்தில் 8 நடைகளும் தற்போது இயக்கப்பட்டு வருகிறது. இதுதவிர, நகரப் பேருந்துகள் 4, 2, எஸ் 10 வெவ்வேறு வழித்தடங்களில் இயக்கப்படும்போது

2010 நவம்பர் 12]

மேட்டுப்பாளையம் வழியாக தினசரி 38 நடைகள் இயக்கப்படுகின்றன. இப்பேருந்துகள் இயக்கப்படும் வழித்தடத்திலிருந்து சின்னப்பம்பட்டி 0.8 கி.மீ. தொலைவிலேயே உள்ளது. எனவே, அரசாணையின்படி பேருந்து வசதி பெற்ற பகுதியாகவே கருதப்படும். மேலும் மினி பேருந்து ஒன்று தாரமங்கலம்-பாச்சாலியூர் வழித்தடத்தில் இயக்கப்படும்போது சின்னப்பம்பட்டி வழியாக இயக்கப்பட்டு வருகிறது. மேற்படி பேருந்து வசதியே இப்பகுதி மக்களின் போக்குவரத்துத் தேவையை நிறைவு செய்யும் வகையில் உள்ளது.

61—

கூடுதல் பேருந்து வசதி

வினா எண் 127186—திரு. கு.ப. வேலுமணி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூர் தொகுதி, திருமலையம்பாளையத்திற்கு தடம் எண் 3-சி கூடுதலாக இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பேரூர் தொகுதி, திருமலையம்பாளையத்திற்கு ஐந்து அரசுப் பேருந்துகள் தினசரி 66 நடைகள் தற்போதைய பயணிகள்அடர்விற்கேற்ப இயக்கப்பட்டு வருகின்றன. வருங்காலத்தில் இப்பகுதியின் பயணிகள் அடர்வு அதிகரிக்கும்போது கூடுதல் பேருந்துகள் இயக்கிட நடவடிக்கை எடுக்கப்படும்.

62—

பேருந்து வசதி

வினா எண் 127187—திரு. கு.ப. வேலுமணி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூர் தொகுதி, பொள்ளாச்சி-பாலக்காடு மெயின் ரோடு பகுதிகளில் இரவு நேரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பொள்ளாச்சி-பாலக்காடு வழித்தடம் பேரூர் தொகுதிக்கு உட்பட்டதல்ல. கோவை-பாலக்காடு என்பதே சரியானதாகும். இந்த கோவை-பாலக்காடு வழித்தடத்தில் அதிகாலை 4.00 மணி முதல் இரவு 11.00 மணி வரை போதுமான பேருந்துகள் தொடர்ந்து இயக்கப்பட்டு வருகின்றன. இடைப்பட்ட பின்னிரவு நேரங்களில் பயணிகள் அடர்வு இல்லை. எனவே, வருங்காலத்தில் இரவு நேரங்களில் பயணிகள் அடர்வு அதிகரிக்கும்போது பேருந்துகள் இயக்கிட பரிசீலிக்கப்படும்.

63—

பேருந்து வசதி

வினா எண் 127192—திரு. வை. காவேரி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி-பவானி, திருப்பூர்-பல்லடம் வழியில் புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி-பவானி, திருப்பூர்-பல்லடம் வழித்தடத்தின் நீளம் 105 கி.மீ. ஆகும். எடப்பாடி-பவானி லட்சுமி நகர் பேருந்து நிறுத்தம் வரையிலான பகுதி ஒவ்வொரு 15 நிமிட இடைவெளியிலும், பவானி லட்சுமி நகர்-திருப்பூர் ஒவ்வொரு 10 நிமிட இடைவெளியிலும், திருப்பூர்-பல்லடம் ஒவ்வொரு 10 நிமிட இடைவெளியிலும் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு பகுதிவாரியாக இயக்கப்படும் பேருந்துகளே தற்போது பொதுமக்களின் தேவையை நிறைவு செய்யும் வகையில் உள்ளது.

2010 *நவம்பர்* 12]

64—

கூடுதல் பேருந்து

வினா எண் 127196—திரு. வை. காவேரி: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலம்-இராமேஸ்வரம் வரை புறநகர் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு லிமிடெட், மூலமாக தடம் எண் 637-ல் சேலத்திலிருந்து-இராமேஸ்வரத்திற்கு தினசரி 2 சாதாரண பேருந்துகள் 2 நடைகள் வீதம் இயக்கப்பட்டு வருகின்றன. இந்த வசதியை சேலம்-இராமேஸ்வரம் பயணிகள் பயன்படுத்திக் கொள்ள ஏதுவாக உள்ளது. சேலம்-இராமேஸ்வரம் தடத்தில் பயணம் செய்யும் பயணிகளின் அடர்வு அதிகரிக்கும்போது மேற்படி வழித்தடத்தில் கூடுதல் பேருந்து இயக்குவது குறித்துப் பரிசீலித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

65—

பேருந்து வசதி

வினா எண் 127197—திரு. வை. காவேரி: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலம்-திருப்பூர் செல்லும் ஒரு சில பேருந்துகளை பல்லடம் வரை நீட்டித்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2010 நவம்பர் 12

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம்-திருப்பூர்-பல்லடம் வழித்தடத்தில் மூன்று அரசுப் பேருந்துகள் தினசரி 6 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. இது தவிர, சேலம்-திருப்பூர் வழித்தடத்தில் ஒவ்வொரு 30 நிமிட இடைவெளியிலும், திருப்பூர்-பல்லடம் வழித்தடத்தில் ஒவ்வொரு 10 நிமிட இடைவெளியிலும் பேருந்துகள் தற்போது இயக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு நேரடியாகவும், பகுதி வாரியாகவும் இயக்கப்படும் பேருந்து வசதியே தற்போது பொதுமக்களின் தேவையை நிறைவு செய்யும் வகையில் உள்ளது.

66—

பேருந்து வசதி

வினா எண் 127198—திரு. வை. காவேரி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம்-ஈரோடு செல்லும் சில பேருந்துகளை காங்கேயம் வரை நீட்டிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம்-ஈரோடு, காங்கேயம், பழனி வழித்தடத்தில் சேலம் மண்டலம்மூலம் இரண்டு அரசுப் பேருந்துகள் தினசரி 6 நடைகளும், கோவை மண்டலம்மூலம் மேற்படி வழித்தடத்தில் 6 பேருந்துகள் தினசரி 12 நடைகளும் தற்போது இயக்கப்பட்டு வருகின்றன. இதுதவிர சேலம்-ஈரோடு வழித்தடம் ஒவ்வொரு 5 நிமிட இடைவெளியிலும், ஈரோடு-காங்கேயம் வழித்தடம் ஒவ்வொரு 10 நிமிட இடைவெளியிலும் அரசு மற்றும் தனியார் புறநகர் பேருந்துகள் மூலம் பேருந்து வசதி பெற்று வருகிறது. மேற்கண்டவாறு நேரடியாகவும், பகுதி வாரியாகவும் கேட்கப்பட்ட வழித்தடம் பேருந்து வசதி பெற்றுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2010 நவம்பர் 12]

67—

தரம் உயர்த்துதல்

வினா எண் 34154—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஒன்றியம், தொளசம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி, ஓமலூர் ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை, 1,84,650 (2001 கணக்கெடுப்பு) ஆகும். இவ்வூராட்சி ஒன்றியத்தில் 5 கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன. தற்போது 50 ஆரம்ப சுகாதார நிலையங்கள் தேசிய ஊரக நலத் திட்ட நிதி உதவியின்கீழ் தரம் உயர்த்த ஆணை வெளியிடப்பட்டு பொதுப் பணித் துறை மூலம் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், நிதி ஒதுக்கீடு இல்லாததால் ஓமலூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள தொளசம்பட்டி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்த சாத்தியக் கூறுகள் இல்லை.

68—

தரம் உயர்த்துதல்

வினா எண் 45211—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தனியார் மருத்துவமனைகளுக்கு நிகராக அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களையும் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தனியார் மருத்துவமனைகளுக்கு நிகராக தரம் உயர்த்துவது என்பது அரசின் குறிக்கோள் இல்லை. மக்களுக்கு தரமான மருத்துவ வசதி தடையின்றி கிடைக்கச் செய்வதே அரசின் குறிக்கோள் ஆகும். தற்போது மொத்தமுள்ள 385 ஊராட்சி ஒன்றியங்களில் 257 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன. மேலும், ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த அரசு படிப்படியாக நடவடிக்கை எடுத்து வருகின்றது. 30 படுக்கை வசதிகள் கொண்ட ஸ்கேன், இ.சி.ஜி., எக்ஸ்-ரே, செமி ஆட்டோ அனலைசர், பாய்ல்ஸ் அப்பாரட்டஸ் போன்ற நவீன உபகரணங்கள் வழங்கப்பட்டு அனைத்து வசதிகளுடன் அவை செயல்படுகின்றன. 24 மணி நேரம் செயல்படும் அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் தலா 5 மருத்துவ அலுவலர்கள் நியமிக்கப்பட்டு 24 மணி நேர பிரசவ கவனிப்பு சேவை கர்ப்பிணி தாய்மார்களுக்கு வழங்கப்படுகிறது. தேசிய ஊரக நலத் திட்ட நிதி உதவியுடன் ஆரம்ப சுகாதார நிலையங்களைச் சிறப்பாக செயல்படுத்த பல்வேறு நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன. பராமரிப்புப் பணிகளுக்கு அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களின் உள்கட்டமைப்பு வசதிகள் பல்வேறு வகையில் மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

69—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 54036—திரு. ஞா. ஜாண் ஜோசப்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளவங்கோடு தொகுதி, மஞ்சவிளை, அம்பலக்கடை, கொல்லங்கோடு, அடைக்காக்குழி பகுதிகளில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TRUTH ALONE TRIUMPHS

2010 நவம்பர் 12]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், மேல்புறம் ஊராட்சி ஒன்றிய மஞ்சவிளை கிராம மக்கள்தொகை 7,925 (2001 கணக்கெடுப்பு) ஆகும். இக்கிராமத்தில் துணைச் சுகாதார நிலையம் உள்ளது. இக்கிராமத்திற்கும் குழித்துறை அரசு மருத்துவமனைக்கும் இடைப்பட்ட தூரம் 3 கிலோ மீட்டர் மட்டுமே உள்ளதால் மஞ்சவிளை கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

2. அம்பலக்கடை கிராம மக்கள் தொகை 8,429 (2001 கணக்கெடுப்பு) ஆகும். இக்கிராமத்தில் துணைச் சுகாதார நிலையம் உள்ளது. இக்கிராமத்திற்கும் அருமனை அரசு மருத்துவமனைக்கும் இடைப்பட்ட தூரம் 4 கிலோமீட்டர் மட்டுமே உள்ளதால் அம்பலக்கடை கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

3. தமிழகத்தில் புதிதாக தோற்றுவிக்கப்பட்ட 110 ஆரம்ப சுகாதார நிலையங்களில், கன்னியாகுமரி மாவட்டம், முஞ்சிறை ஊராட்சி ஒன்றியம், கொல்லங்கோடு கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் 28-2-2009-ல் தோற்றுவிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

4. அடைக்காக்குழி கிராம மக்கள் தொகை 5,052 (2001 கணக்கெடுப்பு) ஆகும். இக்கிராமத்தில் துணைச் சுகாதார நிலையம் உள்ளது. அடைக்காக்குழி கிராமத்திற்கும் ஆறுதேசம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் 5 கிலோ மீட்டர் மட்டுமே உள்ளதால் அடைக்காக்குழி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக் கூறுகள் இல்லை.

70—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 59204—திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2010 நவம்பர் 12

(அ) வேலூர் மாவட்டம், அரக்கோணம் வட்டம், பள்ளூர் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* 2001 ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி, வேலூர் மாவட்டம், நெமிலி ஊராட்சி ஒன்றியம், பள்ளூர் கிராமத்தின் மக்கள்தொகை 3,100 ஆகும். இக்கிராமத்தில் துணைச் சுகாதார நிலையமும் 15 கிலோ மீட்டர் தொலைவில் அரக்கோணம் அரசு மருத்துவமனையும் செயல்படுகின்றன. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 1,51,721 (2001 கணக்கெடுப்பு) ஆகும். இவ்வூராட்சி ஒன்றியத்தில் 4 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன. நெமிலி ஊராட்சி ஒன்றியத்திற்கு தற்போதுள்ள 4 ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதாலும், பள்ளூர் கிராமத்திற்கும் ஆட்டுப்பாக்கம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் 7 கிலோ மீட்டர் மட்டுமே உள்ளதாலும் பள்ளூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

71—

தரம் உயர்த்துதல்

வினா எண் 65395—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காடு தொகுதி, திமிரி ஒன்றியம், காவனூர் துணைச் சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 நவம்பர் 12]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், திமிரி ஊராட்சி ஒன்றியம் மக்கள்தொகை 1,31,671 (2001 கணக்கெடுப்பு) ஆகும். இவ்வூராட்சி ஒன்றியத்தில் 4 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன. மத்திய அரசின் இலக்கின்படி 30,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையில் திமிரி ஊராட்சி ஒன்றியத்திற்கு தற்போதுள்ள 4 ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதால் திமிரி ஊராட்சி ஒன்றியத்தில் காவனூர் துணைச் சுகாதார நிலையத்தினை ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த சாத்தியக் கூறுகள் இல்லை.

72—

தரம் உயர்த்துதல்

வினா எண் 86355—திரு. அ. அன்வர்ராஜா: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி தாலுகா, கொண்டுநல்லான்பட்டி துணைச் சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 1,38,688 (2001 கணக்கெடுப்பு) ஆகும். இவ்வூராட்சி ஒன்றியத்தில் 9 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன. மத்திய அரசின் இலக்கின்படி 30,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையில் கடலாடி ஊராட்சி ஒன்றியத்திற்கு தற்போதுள்ள 9 ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதாலும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோமீட்டருக்கும் மிகக் குறைவாக உள்ளதாலும் கொண்டுநல்லான்பட்டி துணைச் சுகாதார நிலையத்தினை ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த சாத்தியக் கூறுகள் இல்லை.

73—

தரம் உயர்த்துதல்

வினா எண் 92001—திரு. கோ. எதிரொலி மணியன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலசப்பாக்கம் தொகுதி, கொம்மநந்தல் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கை வசதிகள் கொண்டதாக தரம் உயர்த்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், சேத்துப்பட்டு ஊராட்சி ஒன்றியத்தில் சேத்துப்பட்டு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் அரசாணை எண் 142, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 30-4-2007-ன்படி தேசிய ஊரக நலத் திட்ட உதவியின்கீழ் தரம் உயர்த்த அனுமதி வழங்கப்பட்டு 30 படுக்கைகள் கொண்டதாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. தமிழகத்தில் ஒரு ஊராட்சி ஒன்றியத்தில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்த படிப்படியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. எனவே, அரசின் கொள்கைப்படி சேத்துப்பட்டு ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கொம்மநந்தல் பிரதான ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த சாத்தியக் கூறுகள் இல்லை.

74—

தரம் உயர்த்துதல்

வினா எண் 100699—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் மாவட்டம், சேத்தியாதோப்பு ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

2010 நவம்பர் 12]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், புவனகிரி ஊராட்சி ஒன்றியத்தில் சேத்தியாதோப்பு சமுதாய நல மையத்தைத் தரம் உயர்த்த 12-11-2008-ல் ஆணை வெளியிடப்பட்டது. ஆனால், அங்கு தரம் உயர்த்த போதுமான நில வசதி இல்லாத காரணம் தெரிவிக்கப்பட்டதால் அரசாணை எண் 327, மக்கள் நல்வாழ்வுத் துறை, நாள் 8-10-2009-ல் வெளியிடப்பட்ட அரசாணையில் இதற்குப் பதிலாக நாகப்பட்டினம் மாவட்டம், மணல்மேடு ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்த திருத்த ஆணை வெளியிடப்பட்டது. எனவே, சேத்தியாதோப்பு சமுதாய நல மையத்தைத் தரம் உயர்த்த சாத்தியக் கூறுகள் இல்லை.

75—

துணைச் சுகாதார நிலையம்

வினா எண் 102194 திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, தெ. புதுக்கோட்டையில் துணைச் சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் சமவெளிப் பகுதிகளில் 5,000 மக்கள் தொகைக்கு ஒரு துணைச் சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 3,000 மக்கள் தொகைக்கு ஒரு துணைச் சுகாதார நிலையம் என்ற விகிதத்தில் துணைச் சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. தமிழகத்தில் மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி, இதுகாறும் 8,706 துணைச் சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. புதிய துணைச் சுகாதார

நிலையங்களுக்கான நிதி ஒதுக்கீடு கோரிய கருத்துரு மத்திய அரசால் நிராகரிக்கப்பட்டுள்ளது. எனவே, மானாமதுரை தொகுதி, தெ. புதுக்கோட்டையில் துணைச் சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை.

76—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 104293—திரு. க.ப. வேலுமணி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பேரூர் தொகுதி, குறிச்சி நகராட்சி, வெங்கடாசலபதி லே-அவுட்டில் ஆரம்ப சுகாதார மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசின் கொள்கைப்படி இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும். ஆனால், கோயம்புத்தூர் மாவட்டம், மதுக்கரை ஊராட்சி ஒன்றியம், வெங்கடாசலபதி லே-அவுட் கிராமத்திற்கும், போத்தனூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் 4 கிலோ மீட்டர் மட்டுமே உள்ளதால் வெங்கடாசலபதி லே-அவுட் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை.

77—

பட்டா வழங்குதல்

வினா எண் 5880—திரு. தி.க. ராஜா: *மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் ஒன்றியம், திம்மணாமத்தூர் கிராம மயானத்திற்கு தவறாக தனியாருக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது அரசுக்கு தெரியுமா?

2010 நவம்பர் 12]

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், ஏ.கே. மோட்டூர் மதுரா திம்மணாமத்தூர் கிராமம், புல எண் 17/3 விஸ்தீரணம் 0.05.0 ஹெக்டேர் நிலம் மயானமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. எனவே, மயானத்திற்கு தவறாக பட்டா ஏதும் வழங்கப்படவில்லை. மேலும் ச.எண்.17/2ஏ3-ல் 0.14.0 நிலம் பட்டா நிலமாகும்.

78—

ஆக்கிரமிப்புகள்

வினா எண் 37951—திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகர், காமராஜர் நகரில் பேருந்து நிறுத்தம் பின்புற ஆக்கிரமிப்பை அகற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி நகராட்சிக்கு உட்பட்ட காமராஜர் நகரில் பேருந்து நிலையம் பின்புறம் உள்ள ஆக்கிரமிப்புகள் 21-1-2008 அன்று அகற்றப்பட்டுவிட்டன.

79—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 57047—திரு. அருள் அன்பரசு: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோளிங்கர் தொகுதி, காவேரிப்பாக்கம் ஒன்றியம், ஜோதிபுரம் மற்றும் ரசூல்பேட் கிராமத்தில் குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பிரஸ்தாப புலங்கள் யாவும் நீர்நிலைப் புறம்போக்கு என்பதால் ஒப்படை வழங்க நீதிமன்றத் தடையாணை உள்ளதால், மேற்படி கிராமத்தில் வாழ்ந்து வருபவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

80—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 108993—திருமதி ஜி. லதா: *மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வேலூர் மாவட்டம், அரக்கோணம் நகரம், ஏ.பி.எம்.சர்ச் பகுதியில் 100 ஆண்டுகளாக வாழ்ந்து வரும் 502 அருந்ததியின துப்புரவுத் தொழிலாளர் குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

இந்த நிலங்கள் அனைத்தும் அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்கள் அல்ல. இதர அரசுத் துறையினருக்குச் சொந்தமான பட்டா நிலங்களாக உள்ளன. வீட்டுமனைப் பட்டாக்கள் அரசு புறம்போக்கு நிலங்களில் மட்டுமே வழங்கப்படுகின்றன. எனவே பட்டா வழங்க இயலாது.

சட்டமன்றம் LEGISLATIVE ASSEMBLY ... ALONE TRIUMPHS

81—

பெயர் மாற்றம்

வினா எண் 120165—திருமதி பெ. கமலாம்பாள்: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழ்நாட்டில் பெயர் மாற்றம் செய்பவர்களுக்கு சலுகை முறையில் பெயர் மாற்றும் கட்டணத்தைக் குறைத்தும், உடனடியாக அரசிதழில் வெளியிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 நவம்பர் 12]

விடை—

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) (i) பெயர் மாற்றம் மற்றும் மதமாற்ற விவரத்தினை ஆங்கில வழியில் தமிழ்நாடு அரசிதழில் வெளியிட பிரசுரக் கட்டணம் ரூ.350/- (ரூபாய் முன்னூற்று ஐம்பது மட்டும்) மற்றும் அரசிதழின் பிரதிகள் மற்றும் தபால் செலவிற்கு ரூ.65/- (ரூபாய் அறுபத்தைந்து மட்டும்) என மொத்தம் ரூ.415/- (ரூபாய் நானூற்றுப் பதினைந்து மட்டும்) வசூலிக்கப்பட்டு வருகிறது.

(ii) 3-8-2006 முதல் தமிழ் வழியில் பெயர் மாற்ற விவரத்தினை தமிழ்நாடு அரசிதழில் வெளியிட பிரசுரக் கட்டணம் ரூ.350/-லிருந்து ரூ.50/- (ரூபாய் ஐம்பது மட்டும்) என குறைக்கப்பட்டும் மற்றும் அரசிதழின் பிரதிகள் மற்றும் தபால் செலவிற்காக ரூ.65/- (ரூபாய் அறுபத்தைந்து மட்டும்) எனவும் மொத்தம் ரூ.115/- (ரூபாய் நூற்றுப் பதினைந்து மட்டும்) வசூலிக்கப்பட்டு வருகிறது.

(iii) ஆங்கில வழி மற்றும் தமிழ் வழியிலான பெயர் மாற்றத்திற்காக மேலே குறிப்பிட்டுள்ளவாறு தற்பொழுது வசூலிக்கப்பட்டு வரும் பிரசுரக் கட்டணம் மற்றும் அரசிதழின் பிரதிகள் மற்றும் தபால் செலவிற்கான கட்டணங்களை குறைக்கும் எண்ணம் ஏதும் அரசுக்கு தற்பொழுது இல்லை.

(iv) பொது மக்களிடமிருந்து முறையாகப் பூர்த்தி செய்து பெறப்பட்ட பெயர் மாற்ற விண்ணப்பங்களின் அடிப்படையில் பெயர் மாற்ற விவரங்கள் 10 தினங்களுக்குள் அரசிதழில் வெளியிடப்பட்டு வருகின்றன.

82—

மின் கண்காணிப்புக் கருவி

வினா எண் 67271—திரு. செ.ம. வேலுசாமி: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் உணவுக் கிடங்கிலிருந்து அத்தியாவசியப் பொருட்கள் செல்வதை கண்காணிக்க மாவட்ட தலைமை இடத்தில் மின் கண்காணிப்புக் கருவி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் உணவுக் கிடங்கிலிருந்து பொருட்கள் செல்வதைக் கண்காணிக்க மாவட்ட தலைமையிடத்தில் மின் காண்காணிப்புக் கருவி அமைப்பது தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது பரிசிலனையில் இல்லை.

83—

தொழிலாளர் நல நீதிமன்றம்

வினா எண் 106119—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் தொகுதியில் தொழிலாளர் நல நீதிமன்றம் அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேட்டூரில் தொழிலாளர் நீதிமன்றம் அமைப்பதற்கான கருத்துரு எதுவும் அரசின் பரிசிலனையில் இல்லை.

84—

குடிநீர் வசதி

வினா எண் 99076—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2010 நவம்பர் 12]

சேலம் மாவட்டம், கஞ்சமலை சித்தேஸ்வரன் கோயிலுக்கு உப்புநீரை நன்னீராக்கும் சாதனம் பொருத்தி குடிநீர் வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், கஞ்சமலை அருள்மிகு சித்தேஸ்வரர் சுவாமி திருக்கோயிலில் உப்புநீரை நன்னீராக்கும் கருவி (R.O.) பிளான்ட் ரூ.1,05,000/-க்கு (ரூபாய் ஒரு இலட்சத்து ஐந்தாயிரம் மட்டும்) வாங்கப்பட்டு திருக்கோயிலில் பொருத்தப்பட்டு, 3-11-2009 முதல் நல்ல நிலையில் இயங்கி வருகிறது.

85—

அகழிகள் அமைத்தல்

வினா எண் 116252—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி ஈட்டியாறு 1,2 பிரிவுகள், ஸ்டேன்மோர் 1,2 பிரிவுகள், கவர்க்கல் 1,2 பிரிவுகள், வில்லோனி 1,2 பிரிவுகள், வாட்டர்பால்ஸ் என்.சி., வாட்டர்பால்ஸ் பழையகாடு, வாட்டர்பால்ஸ், 1,3 பிரிவுகள், வெள்ளமலை 1,2 பிரிவுகள், நல்லமுடி முதல் பிரிவு, சோலையாறு முதல் பிரிவு, ஷேக்கல்முடி சி.டி.ஆர்., ஷேக்கல்முடி முதல் பிரிவு, மாணிக்கா, மாணிக்கா 2 ஆம் பிரிவு, சிங்கோனா 3-5 பிரிவுகள், பச்சமலை முதல் பிரிவு ஆகிய எஸ்டேட்டுகளில் உள்ள குடியிருப்புப் பகுதிகளில் அகழி வெட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ் வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேற்காணும் வினாவில் குறிப்பிட்டுள்ள தோட்டங்களில் சிங்கோனா 3-5 பிரிவுகள் மட்டுமே தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தினைச் சார்ந்தவை. ஆனால் இப்பகுதிகளிலுள்ள குடியிருப்புப் பகுதிகளைச் சுற்றி அகழிகள் அமைப்பது தற்போது சாத்தியமற்றது ஆகும்.

[2010 நவம்பர் 12

86—

சிறப்புப் பொருளாதார மண்டலம்

வினா எண் 45189—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கணினி மென்பொருள் வளர்ச்சியின் இரண்டாம் கட்ட நகரமாக சேலத்தைத் தேர்வு செய்து கணினிப் புரட்சியின் தளமாக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்:

ஜாகீர் அம்மாபாளையம் கிராமம், சேலம் தாலுகா, சேலம் மாவட்டத்தில் 164.26 ஏக்கர் நிலப்பரப்பில் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் தகவல் தொழில்நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இதற்கான பொது உட்கட்டமைப்பு வசதிகள் பணி தற்போது 53 ஏக்கர் நிலப்பரப்பில் நடைபெற்று வருகிறது. இது வருகிற டிசம்பர் 2010-ல் முடிவடையும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. இந்த தகவல் தொழில்நுட்பப் பூங்கா சுமார் 10,000 நபர்களுக்கு நேர்முக வேலைவாய்ப்பையும் 20,000 நபர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பையும் உருவாக்கும். மேலும், அடுத்த 5 ஆண்டு காலத்தில் ரூ.800 கோடி முதலீடு வரும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

87—

தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா

வினா எண் 106863—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர், சென்னை, செங்கல்பட்டு, விழுப்புரம், சேலம், திருச்சி, மதுரை, பெரம்பலூர், தஞ்சாவூர், அரியலூர், கரூர், தேனி, திருப்பூர், கோயம்புத்தூர், திருநெல்வேலி, இராமநாதபுரம், நீலகிரி,

2010 நவம்பர் 12]

தூத்துக்குடி, திண்டுக்கல், சிவகங்கை, வேலூர், கிருஷ்ணகிரி, ஈரோடு, நாகப்பட்டினம் மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா சென்னை, கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, சேலம், திருநெல்வேலி, ஓசூர் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டு அதற்கான உட்கட்டமைப்பு வசதிகளும், கட்டுமானப் பணிகளும் நடைபெற்று வருகின்றன. வேலூர் மாவட்டத்திலும் மற்றும் விழுப்புரத்திலும் தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா அமைக்க ஏதுவான இடம் பார்க்கும் பணி பரிசிலனையில் உள்ளது. இந்த மாவட்டங்களைத் தவிர இதர மாவட்டங்களில் தகவல் தொழில்நுட்பவியல் பூங்காக்கள் அமைக்கும் உத்தேசம் ஏதும் இல்லை.

88—

தங்கும் விடுதிகள்

வினா எண் 8092—செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாவட்டந்தோறும் வேலைக்குச் செல்லும் பெண்கள் தங்க அரசு விடுதிகள் உருவாக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்:

பணிபுரியும் மகளிருக்கான அரசு விடுதிகள் சென்னையில் இரண்டும், கடலூர், திருச்சி, கிருஷ்ணகிரி, புதுக்கோட்டை, தூத்துக்குடி மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களில் தலா ஒன்றும் ஆக மொத்தம் எட்டு அரசு பணிபுரியும் மகளிருக்கான தங்கும் விடுதிகள் அரசால் சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றன. வேலைக்குச் செல்லும் பெண்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும்

வகையில், வேலைவாய்ப்புகள், தொழில் மையங்கள் மற்றும் தொழிற்சாலைகள் அதிகமாகவும் மற்றும் வேலைக்குச் செல்லும் பெண்கள் அதிகமுள்ள மேற்கண்ட மாவட்டங்களில் பணிபுரியும் மகளிருக்கான அரசு தங்கும் விடுதிகள் தொடங்கப்பட்டு இயங்கி வருகின்றன.

(2) மேலும், மாநில அரசின் பரிந்துரையின்மூலம் மத்திய அரசின் மானியத்தைப் பெற்று சென்னை, கோவை, தருமபுரி, காஞ்சிபுரம், கன்னியாகுமரி, மதுரை, நீலகிரி, நாமக்கல், புதுக்கோட்டை, பெரம்பலூர், சேலம், சிவகங்கை, தஞ்சாவூர், திருநெல்வேலி, திருச்சி, வேலூர், விருதுநகர் மற்றும் தேனி ஆகிய 18 மாவட்டங்களில் பணிபுரியும் மகளிருக்கான தங்கும் விடுதிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

(3) எனவே, அரசு பணிபுரியும் மகளிருக்கான தங்கும் விடுதிகள் மற்றும் அரசின் பரிந்துரையின்மூலம் மானியம் பெற்று நடத்தப்பட்டு வரும் பணிபுரியும் மகளிருக்கான தங்கும் விடுதிகள் செயல்பட்டு வரும் மாவட்டங்கள் தவிர ஏனைய மாவட்டங்களில் வேலைக்குச் செல்லும் பெண்கள் தங்க, விடுதிகளை உருவாக்க கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

89—

சத்துணவு மையக் கட்டடம்

வினா எண் 50226—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி பேரூராட்சி, மோட்டுப்பட்டியில் பழுதடைந்துள்ள சத்துணவு மையத்தைப் பராமரிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* தாரமங்கலம் தொகுதி, மோட்டுப்பட்டி ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிக்கு, அனைவருக்கும் கல்வி இயக்கத்தின்கீழ் 2010-2011 ஆம் ஆண்டில் கூடுதல் கட்டடத்துடன் சத்துணவு மையமும் கட்ட கல்வித் துறையால் மதிப்பிடப்பட்டுள்ளது.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும் LEGISLATIVE ASSEMBLY

2010 நவம்பர் 12]

90—

மகளிர் விடுதி

வினா எண் 103078—திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூரில் பெண்களுக்கு தங்கும் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்:

திருப்பூரில் தற்போது (1) இளமகளிர் கிறித்துவ அமைப்பு மற்றும் (2) பார்க் டிரஸ்ட் ஆகிய இரண்டு தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் மகளிருக்கான இரண்டு தங்கும் விடுதிகள் நடத்தப்பட்டு வருவதால், திருப்பூரில் கூடுதலாக அரசு பணி புரியும் மகளிர் விடுதி ஒன்று தொடங்குவதற்கு கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

91—

தங்கும் விடுதி

வினா எண் 116905—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூரில் பணிபுரியும் பெண்களுக்கு தங்கும் விடுதி அமைத்திட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்:

திருப்பூரில் தற்போது (1) இளமகளிர் கிறித்துவ அமைப்பு மற்றும் (2) பார்க் டிரஸ்ட் ஆகிய இரண்டு தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் மகளிருக்கான இரண்டு தங்கும் விடுதிகள் நடத்தப்பட்டு வருவதால், திருப்பூரில் கூடுதலாக அரசு பணிபுரியும் மகளிர் விடுதி ஒன்று தொடங்குவதற்கு கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

92—

கல்வியியல் பட்டப் படிப்புப் பயிற்சி

வினா எண் 104575—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை வட்டத்தில் கல்லூரியில் பட்டப் படிப்பு படித்து முடித்துள்ள ஆதி திராவிடர் மாணவ, மாணவிகளுக்கு கல்வியியல் பட்டப் படிப்புப் பயிற்சி அளிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

அரசாணை (ப) எண் 318/ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (சிஉதி1) துறை, நாள் 15-12-2009-ல் கல்வியியல் பட்டப் படிப்புப் பயிற்சி முடித்தவர்களுக்கு வேலைவாய்ப்பு அதிகம் இருப்பதால் அரசு மற்றும் தனியார் கல்லூரிகளில் இப்படிப்பிற்காக 200 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் இளைஞர்களுக்கு ரூ.50.00 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

93—

பயிற்சிகள்

வினா எண் 104579—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை வட்டத்தில் உள்ள படித்த ஆதி திராவிட மாணவர்களுக்கு ஆசிரியர் பயிற்சி, மருத்துவ ஆய்வுக்கூட தொழில் நுட்பாளர் பயிற்சி, அழகுக்கலைப் பயிற்சி, தையல் பயிற்சி, ஓட்டுநர் பயிற்சி, ஏ.சி. மெக்கானிக் பயிற்சி, கணினிப் பயிற்சி, கண் சிகிச்சை உதவியாளர் பயிற்சி ஆகிய பயிற்சிகள் அளிக்க அரசு ஆவன செய்யுமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2010 நவம்பர் 12]

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

2006-2007 ஆம் நிதியாண்டு முதல் சிறப்பு மாநில நிதியுதவி திட்டத்தின்கீழ் ரூ.25.00 கோடி ஒவ்வொரு ஆண்டும், ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஆதி திராவிட இனத்தவருக்கு, 'தாட்கோ' மூலம், திறன் வளர்க்கும் பயிற்சிகள் முறையாக நாளிதழ்களில், விளம்பரம் செய்யப்பட்டு அளிக்கப்பட்டு வருகின்றன. அரசாணை (ப) எண் 318/ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (சிஉதி1) துறை/நாள் 15-12-2009-ல் 2009-2010 ஆம் ஆண்டிற்கு கீழ்க்கண்ட பயிற்சிகள் வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

1. கடல்சார் பயிற்சி
2. ஆயத்த ஆடை வடிவமைப்புப் பயிற்சி, பிளாஸ்டிக் பொருட்கள் தயாரித்தல் பயிற்சி, காலணி மற்றும் தோல் பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி
3. திரைப்படம் சார்ந்த துறையில் பயிற்சிகள்
4. விமான பணிப் பயிற்சி
5. கல்வியியல் பட்டப் படிப்பு
6. ஆங்கிலப் பேச்சாற்றல் பயிற்சி
7. உதவி செவிலியர் பயிற்சி
8. ஜேசிபி இயக்குபவர் பயிற்சி
9. கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி
10. கண் சிகிச்சை உதவியாளர் பயிற்சி
11. ஏசி மெக்கானிக், டீசல் மெக்கானிக் பயிற்சி
12. கணினிப் பயிற்சி
13. தொழில் முனைவோருக்கு மூலதன உதவி
14. இதழியல் பயிற்சி
15. தொடக்கப் பள்ளி ஆசிரியர் பயிற்சி
16. மருத்துவ ஆய்வுக்கூட தொழில்நுட்பாளர் பயிற்சி
17. அழகுக் கலை பயிற்சி
18. தையல் கலை பயிற்சி

4—

மீன் விற்பனை நிலையம்

வினா எண் 120846—திருமதி பெ. கமலாம்பாள்: *மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காஞ்சிபுரத்தில் மீன் குஞ்சு விற்பனை நிலையம், மீன் விற்பனை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ)

மீன் குஞ்சு விற்பனை நிலையம்

காஞ்சிபுரம் மாவட்டத்தில் தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டம் (NADP) வாயிலாக மூன்று பயனாளிகளுக்கு மீன் விதைப் பண்ணை அமைக்க மானியத்துடன் கூடிய அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இம்மீன் குஞ்சு வளர்ப்புப் பண்ணைகள் இந்தாண்டு முதல் செயல்பட்டு மீன் குஞ்சுகள் விற்பனை செய்யும்.

மீன் விற்பனை நிலையம்

நீர்வள, நிலவள திட்டம் (IAMWARM) வாயிலாக காஞ்சிபுரம் மாவட்டம் ஓங்கூர் உப வடிநிலப் பகுதியில் ரூபாய் நான்கு இலட்சம் செலவில் மீன் விற்பனை நிலையம் அமைக்க அனுமதி பெறப்பட்டுள்ளது. நீர்வள, நிலவளத் திட்டத்தின்கீழ் அரசு நிதி ஒதுக்கீடு பெற்றவுடன் தகுதி வாய்ந்த பயனாளிகளிடம் ஒப்படைக்கப்பட்டு இந்த ஆண்டுக்குள் மீன் விற்பனை நிலையம் செயல்படத் தொடங்கும்.

95—

அலுமினியப் பாத்திரம் வழங்குதல்

வினா எண் 121376—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2010 நவம்பர் 12]

(அ) உடுமலைப்பேட்டை, மீன்வளக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நைலான் வலை, அலுமினியப் பாத்திரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை மீன்வளக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நைலான் வலை, அலுமினியப் பாத்திரம் வழங்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

96—

பால் குளிரூட்டும் நிலையம்

வினா எண் 117471—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் தனியார் பால் உற்பத்தியாளர் சங்கம் மற்றும் அரசு கடனுதவியுடன் பால் குளிரூட்டும் நிலையம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையில், தனியார் பால் பண்ணை மற்றும் கூட்டுறவுச் சங்கத்தினை அமைக்க யாரேனும் முன்வரும் நிலையில், தொடர்புடைய சட்டத்தின்கீழ் அவற்றைப் பதிவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2. மானாமதுரையிலிருந்து 18 கி.மீ. தொலைவிலுள்ள சிவகங்கையில் நாள் ஒன்றுக்கு 10,000 லிட்டர் பால் குளிர்விக்கும் திறனுள்ள பால் குளிரூட்டும் நிலையம் செயல்பட்டு வருகிறது. மேலும், மானாமதுரையிலிருந்து 8 கி.மீ. தூரத்திலுள்ள காரைக்குடியில் நாள் ஒன்றுக்கு 50,000 லிட்டர் பால் பதப்படுத்தும்

பால் பண்ணை ஒன்று செயல்பட்டு வருகிறது. மானாமதுரை மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் உற்பத்தியாகும் 3,000 லிட்டர் பால் சிவகங்கை பால் குளிரூட்டும் நிலையத்தில் குளிரூட்டப்படுகிறது. மேலும், 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட சிவகங்கை பால் குளிரூட்டும் நிலையத்தில் தற்போது 7,500 லிட்டர் பால் மட்டுமே குளிர்விக்கப்படுகிறது.

3. எனவே, மானாமதுரையில் பால் குளிரூட்டும் நிலையம் துவங்க தற்போது வாய்ப்புகள் இல்லை.

97—

தயிர் நிலையம்

வினா எண் 117475—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் ஆவின் தயிர் தயாரிக்கும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை மற்றும் அதன் சுற்றுப் பகுதிகளிலிருந்து நாளொன்றுக்கு சுமார் 2,000 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு, உள்ளூர் விற்பனை போக மீதமுள்ள பால் ஒன்றியத்திற்கு அனுப்பப்படுகிறது. ஒன்றியத்தால் நாளொன்றுக்கு சராசரியாக 33,000 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு, பதப்படுத்தப்பட்டு அனைத்து பாலும் உள்ளூர் தேவைக்கே விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அதனால், தயிர் தயாரிப்பதற்குத் தேவையான உபரிபால் இல்லாததால், மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் ஆவின் தயிர் தயாரிக்கும் நிலையம் அமைப்பதற்கு தற்சமயம் சாத்தியக் கூறுகள் இல்லை.

2010 நவம்பர் 12]

98—

கட்டட வசதி

வினா எண் 117476—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், கணக்கன்குடியில் மகளிர் பால் உற்பத்தியாளர்கள் சங்கத்திற்குக் கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், கணக்கன்குடியில் மகளிர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் பல ஆண்டுகளாக செயலிழந்த நிலையில் இருந்து தற்போது கலைக்கப்பட்டுள்ளது. மேற்படி கலைக்கப்பட்ட சங்கத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட வாய்ப்பு இல்லை.

99—

பால் உற்பத்தி

வினா எண் 119607—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டத்தில் ஆவின் பால் உற்பத்தியைப் பெருக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டத்தில் மொத்தம் 215 பால் உற்பத்தியாளர் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டு, இதில் 186 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. சிவகங்கை மாவட்டத்தில், பால் உற்பத்தி தற்போது நாளொன்றுக்கு 24,000 லிட்டராக உள்ளது. இதனை மேலும் அதிகரிக்க கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

[2010 நவம்பர் 12

(1) செயலிழந்த பால் உற்பத்தியாளர் சங்கங்களை புத்துயிரூட்டியும், புதிய பால் உற்பத்தியாளர் சங்கம் பதிவு செய்வதன்மூலமும் பால் உற்பத்தி அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(2) தற்போது 29 மகளிர் சுய உதவிக் குழுக்கள்மூலம் பால் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. இதனை அதிகரித்து, மேலும் பல மகளிர் சுய உதவிக் குழுக்கள்மூலம் பால் கொள்முதல் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(3) தீவிர பால் பெருக்குத் திட்டம் (IDDP) மற்றும் (RSVY) போன்ற திட்டங்கள்மூலம் பால் உற்பத்தியாளர்களுக்கு பால் பரிசோதனைக் கருவிகள், பால் கேன்கள், பால் கறவை பாத்திரம் போன்றவை இலவசமாக வழங்கப்படுகின்றன. கறவை மாடுகளுக்கு நோய் வராமல் தடுக்க கோமாரி நோய்த் தடுப்பூசி, மடிவீக்க நோய்த் தடுப்பு போன்றவை இலவசமாக செய்யப்படுகிறது.

(4) தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்மூலம் விவசாயிகளை குஜராத்திலுள்ள "ஆனந்த்" போன்ற நவீன பால் பண்ணைக்கு அழைத்துச் செல்லப்பட்டு அதன்மூலம் உந்துதல் ஏற்படுத்தி பால் உற்பத்தியைப் பெருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(5) அரசு மானியமில்லா கடன்கள்மூலம், கறவை மாடுகள் வழங்கப்பட்டு அதன்மூலமும் பால் உற்பத்தி அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

100—

பால் பண்ணைத் திட்டம்

வினா எண் 123156—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் காடையாம்பட்டி ஒன்றியத்தில் அண்ணா நூற்றாண்டு கிராமப்புற மகளிர் பால் பண்ணைத் திட்டம் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திலுள்ள, ஓமலூர் காடையாம்பட்டி ஒன்றியத்தில்

2010 நவம்பர் 12]

தற்போது, எலத்தூர், தளவாய்ப்பட்டி, கோம்பை, உம்பிவித்தம்பட்டி, பொம்மியம்பட்டி, கண்டக்காப்பட்டி, சின்னேரிக்காடு மற்றும் காடையாம்பட்டி ஆகிய இடங்களில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. ஓமலூர் காடையாம்பட்டி ஒன்றியத்தில் அண்ணா நூற்றாண்டு கிராமப்புற மகளிர் பால் பண்ணைத் திட்டம் செயல்படுத்த ஆய்வு செய்தபோது, மகளிர் சுய உதவிக் குழு மற்றும் மகளிர் மேம்பாட்டுத் திட்டம் மூலமாகவும், பால் சங்கம் ஏற்படுத்த எவரும் முன்வரவில்லை. இந்நிலையில், ஓமலூர் காடையாம்பட்டி ஒன்றியத்தில், அண்ணா நூற்றாண்டு கிராமப்புற மகளிர் பால் பண்ணைத் திட்டத்தைச் செயல்படுத்த இயலாத சூழ்நிலை உள்ளது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

(அ) கத்தார் நாட்டு சிறையிலுள்ள தமிழக மீனவர்களை மீட்க நடவடிக்கை

திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டி. ஜெயக்குமார்.

திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மாதம் இராமநாதபுரம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களிலிருந்து வயிற்றுப் பிழைப்பிற்காக வளைகுடா நாடுகளுக்கு மீன் பிடிக்கச் சென்ற 43 மீனவர்கள் தாயகக் கரை திரும்பவில்லை. அவர்கள் கத்தார் சிறையிலே அடைக்கப்பட்டு வாடிக்கொண்டிருக்கிற நிலைமைகளை எல்லாம் பார்த்த மாண்புமிகு அம்மா அவர்கள், "உடனடியாக தமிழக அரசு இதிலே தலையிட்டு கத்தார் சிறையில் இருக்கின்ற மீனவர்களை மீட்க வேண்டுமென்று" கண்டனம் தெரிவித்தும், இதுநாள்வரையில் அரசு